காஞ்சி

பொங்கல் மலர்

1965

எழிலுடன் இயைந்த ஆடையெனத் திகழ்வது

வனப்பு, வண்ணம்,
இழை, நீடித்த உழைப்பு
இவையாவும் ஒருங்கே
அமைந்தவை.

K E M. ABOOBACKER
CHANK
BRAND
HANDLOOM TEXTILES

சங்கு மார்க்
கைத்தறி புடவைகள்
சோளிகள் கைக்குட்டைகள்

முகம்மது அபூபக்கர் & கம்பெனி
95, தம்பு செட்டி தெரு,
மதருஸ்—1

84. கீழவெளி வீதி
மதுரை

65/11-12, லோயர் சிட்பூர் ரோடு
கல்கத்தா

மெயின் ரோடு
கொல்லம்

MAS-151-7

இதழ்கள்

அண்ணாதுரை

தம்பிக்கு
குடியாட்சிக் கோமான்
காலிழந்தான்
வேட்பாளர் வருகின்ருர்
விழுப்புரம் சந்திப்பு
பித்தனை அல்ல பொன்னேதான்
அவர் எழுதிய இரு கடிதங்கள்
உடை போட்டதும்
காடுடையார்
வழுக்கி விழுந்தவர்கள்
சுமார் சுப்பையா
கல்லும் கண்ணுடித் துண்டும்

மருதாணி — கலைஞர் கருணுநிதி எம். எல். ஏ.,

வங்கம் தந்த தங்கம் — கே. ஏ. மதியழகன் எம். எல். ஏ.,

மூடநம்பிக்கை என்ருல் என்ன? — நாவலர் நெடுஞ்செழியன் எம். எல். ஏ.,

புகழின் புகழ் — மா. கி. தசரதன்

பிள்ளை மனம் — பரிமளம்

தம்பி

பொற்காலம் காண!

தமிழக மக்கள் தனிச் சிறப்பளித்துக் கொண்டாடி மகிழ்வுபெறும் திருநாள், பொங்கற் புதுநாள். எங்கிருந்தோ ஓர் புத்தெழில், இந்த விழாவன்று அரசோச்ச வந்திடும் விந்தை, சிந்தைக்கு இனிப்பளிக்கக் காண்கின்றோம். இன்னல் மிகுந்த வாழ்வில் பின்னிக்கிடந்திடும் நிலையினிலுள்ள மக்களையும், இன்றோர்நாள், கன்னல் கண்டு பேசிட, செந்நெல் குவிந்திருக்க, செவ்வாழை அருகிருக்க, உழைப்பின் பயனாக உருவான பண்டமெலாம் நிறைந்திருக்க, மாடுகன்றுகளும் மேனி மினுக்குடனே, பொங்கிடுவது நாங்கள் தந்திடும் பாலன்றோ எனக் கேட்பதுபோல் உலவிவர, இந்நாள் இதயம் பாடிடும் நாள்! இஞ்சியும் மஞ்சளும் இயற்கை தந்த அணிகலன் என்பதனை உணரும் நன்னாள், என்றெண்ணி, மகிழ்வுதனைப் பெற்றுத் திகழ்தல் இயற்கை; பொருத்தமுங்கூட.

நிறைவாழ்வு, கனிச்சுவைபோன்றுளது; அதனை நித்தநித்தம் பெற்றிடும் வாய்ப்பு கிடைக்கப் பெறுதோரும், இன்றோர்நாள், எழில் மாளிகைதனை எட்டிப்பார்த்துக் களிப்படையும் 'இல்லாதான்' போல, இன்னவிதமெல்லாம் இருந்திட்டால், வாழ்வு சிறந்திடும், பயன் மிகுந்திடும், நாடு பொலிவு பெறும், வையகம் கண்டு பெருமைப்படும் என்று எவரும் எண்ணி மகிழத்தக்க இன்பநாள்.

இந்நாளில், தமிழ் மரபறிந்த எவரும், அறிதுயிலிலிருந்தபடி அண்டந்தனைக் காக்கும் அரி தங்கும் வைகுந்தம்; ஆடுவதில் வல்லவர் யார்! அறிந்திடுவோம் வந்திடு! என்று உமைதனை அழைத்து, மானுடமழுவாட முக்திக்கு வழிதேடும் பக்தர்கள் மனமாட ஆடிடும் சிவனாரின் கைலையும்; இவளழகா அவளழகா? எவள் இன்று எம்முனிவன் தவம் கலைக்க? என்று தேவர் பேசிப் பொழுதோட்டும் இந்திரபுரியும் பிறவும்பற்றிப் பேசிடுவதுமில்லை, எண்ணமுங்கொள்வதில்லை.

தாள ஒலிஅல்ல, தையலரின் சிலம்பு இசைக்கும் ஒலி தன்னோடு போட்டியிட்டு, கட்டழகி பெற்றெடுத்த இன்பவடிவத்தை எடுத்தணைத்து, முத்தமிடும் இளைஞன் எழுப்பிவிடும் இச் சொலிக்கும் போட்டி எழ, கண்டு கருத்தறிந்து, பண்டு நடந்ததனை எண்ணி எண்ணிப் பாட்டன் சிரித்திட இடையே விக்கல் இருமல் கிளப்பிவிடும் ஒலியும், இன்னோரன்ன ஒலியே, இசையாகிடக் காண்கின்றோம் இத்திருநாளில்.

இந்த யுகந்தினிலே, இந்த தேசந்தன்னில், இன்ன குலத்தினிலே அவதரித்த மன்னவனும், அவனைக் கெடுக்கவந்த அசுரனும் போரிட்டபோது, மன்னவன் முற்பிறப்பில் மாதவம் செய்தான் எனவே, அன்னவனை ரட்சித்து அசுரனைக் கொன்றிடுதல் முறை என்று, திருமாலும் 'சக்கரத்தை' அனுப்பிவைக்க, வந்தேன்! வந்தேன்! என்று துந்திபி என முழக்கி, வந்ததுகாண் திகிரி, அழிந்தான் அசுரன்; அந்நாள், இந்நாள்; பண்டிகைநாள்! இந்நாளில், பாகும் பருப்பும் பாலினிற் பெய்து பக்குவமாய்ச் சமைத்து, சக்கர வடிவமாக்கி, உண்டு உருசிபெறுவதுடன் உத்தமர்க்குத் 'தானமாக'த் தருவோர்கள் அடுத்த பிறவியிலே அரசபோகம் பெறுவார்கள், அத்திரி அருளியது ஆதி கிரந்தமொன்று, அதிலிருந்து பிரித்தெழுதி அளித்திட்டார் மாமுனிவர், அவர் வழியில் வந்தவரே இன்று புராணம் படிப்பவரும், என்றெல்லாம் கதைத்திடும் நாள் அல்ல. வலிந்து சிலர் இதற்கும் கதை கூற முனைந்தாலும், எவர்க்கும் அஃது இனிப்பதில்லை; நெஞ்சில் புகுவதில்லை; இஃது பொங்கற் புதுநாள்! தமிழர் திருநாள்! அறுவடை விழா! உழைப்பின் பெருமையை உணர்ந்து நடாத்தப்படும் நன்றி அறிவிப்பு விழா! என்ற இந்த எண்ணமே மேலோங்கி நிற்கிறது; பெருமிதம் தருகிறது; மகிழ்ச்சி பொங்கி வழிகிறது; அகமும் முகமும் மலருகிறது; வாழ்வின் பொலிவு துலங்கித் தெரிகிறது.



இந்த உலகத்தின் எழில் யாவும் பொய்யல்ல, மெய்! மெய்! எனும் உணர்வும், அந்த எழிலினையும் பயன்தனையும் நுகர்ந்திடவும், வளர்த்திடவும் முனைதல் மாந்தர் கடன் என்ற மெய்யறிவும், அந்தக் கடமையினைச் செம்மையாய்ச் செய்து முடிக்க ஆற்றல் மிகவேண்டும், அவ்வாற்றல், கூட்டு முயற்சியினால் மிகுந்து சிறப்பெய்தும் என்றதோர் நல்லறிவும், இருள் நீங்கி ஒளி காண்போர் இதயம் மலராகி இன்புற்றிருப்பது போல், நல்வாழ்வுதனைக் குலைக்கும் நச்சரவு போன்ற நினைப்புகளும், நிலைமைகளும், நிகண்டுகளும், அமைப்புகளும் நீடித்திருக்கவிடல் நன்றல்ல, நலம் மாய்க்கும் என்பதறிந்து, அறிவுக் கதிரினையே எங்கெங்கும் பரவச்செய்து எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடலே இயற்கை நீதி எனக் கொண்டு பணிபுரியும் ஆர்வமும், பெற்றிடப் பயன்படும், இந்தப் பொங்கற் புதுநாள்.

இயற்கைச் செல்வங்கள் என்னென்ன இங்குண்டு, அவை தம்மை புத்துலக நுண்ணறிவால் மேலும் பயன் அளிக்கும் விதமாக, திருத்தி அமைத்திட என்னென்ன முறை உண்டு என்பதெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்திடலாம், இந்நாள் நமக்களிக்கும் நற்கருத்தைப் புரிந்துகொண்டால். புனலாடி பொன்னார் இழை அணிந்து, பொட்டிட்டுப் பூமுடித்து, பாற்பொங்கல் சமைத்து அதில் பாகுகலந்து, பாலைச் சிரிப்புடனே பரிவுமிக்காள் தந்திட, சுவைத்திட இதழிருக்க வேறு தரும் விந்தைதான் ஏதுக்கோ என்று கேட்டிட இயலாமல் குறும்புப்பார்வையினால் அவன்கூற, பெற்றோர் அதுகண்டு பேருவகைதான்கொள்ள இல்லமுள்ளார் எல்லோரும் இன்புற்று இருந்திடுதல் பொங்கற் புதுநாளின் பாங்கு; மறுக்கவில்லை; ஆனால் முழுப்பாங்கு என்றதனை மொழிந்திட மாட்டேன் நான்; தித்திக்கும் சுவையுடனே, சிந்திக்கவும் வைக்கும் எண்ணங்கள் பற்பலவும் பொங்கி வருவதுதான் இந்நாளின் தனிச்சிறப்பு, முழுப்பாங்கு. மலரின் எழில் கண்டு மகிழ்வது மட்டும் போதாது, மணம் பெறவேண்டுமன்றோ! அதுபோன்றே பொங்கற் புதுநாளன்று மனைதொறும் மனைதொறும் காணப்படும் கவர்ச்சிமிகு கோலம்-புறத்தோற்றம்-கண்ணுக்கு விருந்தாகிறது. ஆனால் அது மட்டும் போதாது; கருத்துக்கும் விருந்து வேண்டுமன்றோ! உளது! உணர்பவர்களுக்கு. உணர்பவர்களே, பொங்கற் புதுநாளின் முழுப்பயனையும் பெற்றவராவர். உடன்பிறந்தோரே! நீவிர், அந்நன்னோக்கத்துடன் இத்திருநாளின் தன்மையினை உணர்ந்து பயன் பெறவேண்டுமெனப் பெரிதும் விழைகின்றேன்.

திருநாளின் தன்மையை மட்டுமல்ல, காணும் ஒவ்வோர் பொருளிலும், தெரிந்திடும் புறத்தழகு மட்டும் கண்டு போதுமென்றிருத்தல் ஆகாது; அப்பொருளின் உட்பொருளை, மெய்ப்பொருளை அறிந்திடுதல் வேண்டும்; அந்த நுண்ணறிவே, நாம் காணும் பொருள்களின் முழுத்தன்மையையும் துருவிக் கண்டிடவும், காண்பதனால், பயன் பெறவும் வழி காட்டுகிறது. பொருளின் புறத்தோற்றத்தை மட்டுமல்ல அவைகளின் தன்மையினையும் பயனையும் நுண்ணறிவுடன் கண்டவர் தமிழர்! இன்று தமிழ் பேசிடுவோர் என்று பொதுவாக எண்ணிவிடாதே தம்பி! நான் குறிப்பிடுவது, தமிழராக வாழ்ந்த் தமிழர்களை.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

என்று வள்ளுவர் கூறிச் சென்றார்.

காலைக் கதிரவன், மாலை மதியம், ஆடிடும் பூங்கொடி, பாடிடும் அருவி, கொஞ்சிடுங் கிள்ளை, துள்ளிடும் வெள்ளி மீன், மருண்டவிழி மான், ஒளிவிடு விண்மீன், சிரித்திடும் முல்லை, பேசிடும்புறுக்கள், பழமுதிர்ச் சோலை, வளமிகு வயல்கள், எதுதான், தம்பி! அழகாக இல்லை! எதுதான் தம்பி! இன்பம் தராதிருக்கிறது. வா!வா! என்று வாயால் அல்ல சிறு கரத்தால் அழைத்திடும் குழவி காண்போன் களித்திடுவதுபோலத்தான், முற்றிய கதிர்நிரம்பிய வயலின் ஓரத்தில் சென்றிடும் உழவனுக்கு காற்றால் அசைந்தாடும் பயிர் மகிழ்ச்சி அளிக்கிறது. அந்தி நேரத்துச் செவ்வானத்தைக் கண்டதுண்டா? கண்டிருப்பாயே! எப்படி அந்த அழகு? உன்னைப்போய்க் கேட்கிறேனே! உன்னை முதன்முதலாகக் கண்டபோது உனக்கு வாய்த்தவளின் முகம் வெட்கத்தால் சிவந்திருக்குமே, நீ அதை



அல்லவோ என்ணிக்கொண்டிருக்கிறாய்!! இருப்பினும் இதனைக் கேட்டிடு தம்பி! எழிலோவியம் நிரம்பஉளது நம்மைச்சுற்றி! ஒவ்வொன்றிலும் ஒவ்வோர்வகையான அழகுததும்புகிறது. ஆனால்அந்தப்புறத்தழகு மட்டுந்தான், அவை நமக்களித்திடுகின்றன என்றால், அவை பெருமைக்குரியனவாகா. புறத்தழகு காட்டி நமைமகிழ்விப்பதுடன்,அவைதமதுதன்மையின்காரணமாக நமக்கு மிகுந்த பயனையும் வழங்குகின்றன! நம் வாழ்வு சிறப்படைய அவை துணைசெய்கின்றன! சிறப்படையவா!! வாழ்வே, அவை நமக்கு வழங்கிடுகின்றன.

வானத்திலே தோன்றிடும் வண்ணக் குழம்பு, காணற்கரியதோர் ஓவியம்; ஆமாம்; ஆனால் கண்ணுக்காக மட்டுமோ அஃது உளது? இல்லை, தம்பி! கருத்துக்காக! என் அழகைக் கண்டிடு, இதயம் மலர்ந்திடும்! என்று மட்டும்கூறி மையல் ஊட்டிடும் 'சாகசக்காரி' அல்ல, இயற்கையாள்! என்னைக் கண்டிடு, அறிந்திடு,முழுவதும்உணர்ந்திடு, என் தன்மையினை ஆய்ந்து பார்த்திடு, பயன் பெறு!!— என்று கூறிடும் வள்ளல் அந்த வனிதை!



இயற்கையாள் நமக்களித்தஎண்ணற்றபொருள்கள் பெற்றோம்; இன்றவை மனையில் மங்கலம் தந்திடக் காண்கின்றோம் ஆயின் இப்பொருள் தம்மைப்பெற்றோர் எத்தனைபேர் என்ற கணக்கினை மறக்கலாமோ, அதற்கானகாரணம் அறியாதிருக்கப்போமோ! மண்மகள் தந்தாள் இந்த மஞ்சளும் மாபலாவும், வாழையும் வழங்கினாளே, செந்நெலும்பிறவும் அந்தச் செல்வியின் கரத்தால் பெற்றோம்; பெற்றதால் பெற்றோம் இன்பம்; பெறுகின்றனரோ அதனை மற்றோர் என்று எண்ணிடத் தவறல் தீது; ஏனெனில் இயற்கை அன்னை, இங்கு இவை தம்மைத் தந்தது, எவரும் இன்புற்றிருக்க; சிலருக்குப் பலவும், பலருக்குத் துளியுமற்ற பாழ்நிலைக்காக அல்ல. இத்தனை தந்த பின்னும், இத்தரைமீதில், எத்தனை எத்தனையோ மாந்தர், என் செய்வோம் என்றழுதும், இல்லையே என்று கூறி இடும்பையின் பிடியில் சிக்கித் தத்தளித்திடுதல்கண்டு, தாங்கிக் கொள்வதுதான் உண்டோ! மெத்தவும் கோபம் கொண்டு, சிற்சில நேரந் தன்னில், அடித்துக் கேட்கின்றாள் போலும், அட மடமகனே! உன்னை நம்பி நான் தந்தேன் எல்லாம்! நலிகின்றாரே பல்லோர்! இது உந்தன் கயமையாலே!! ஆகவே உன்னை உந்தன் கொடுஞ் செயலுக்காக வேண்டி தாக்குவேன், பார்! என் ஆற்றல்! என்று பெருமழை, பேய்க்காற்று, கடற்கொந்தளிப்பு, நிலநடுக்கம் எனும் கணைகளை ஏவிவிடுகின்றாள் போலும். இந்நிலையில், விழாவென்று சொல்லிடவோ இயலவில்லை, விழியில் நீர்த்துளிகள்-உனக்கும் எனக்கும், உள்ளம் படைத்தோர் அனைவருக்கும்.

விண்ணிருந்து மண்ணுக்கு வளமூட்ட வந்திடும் மாமழையைப் போற்றுகிறோம்; போற்றினார் இளங்கோ அன்றே! மண்மீது உள்ளனவும், அவை நம்பி வாழ்ந்திடும் மாந்தரும், அழிந்துபட, மலையென அலை கிளம்பி, பெருங்காற்றை உடன்கொண்டு பேரிழப்பை மூட்டினதே, பேச்சற்றுத் திகைத்துக் கிடக்கின்றோம், மூச்சற்றுப் போயினர் பல்லோர் என்றறிந்து.

கடல் சீறி எழுவானேன், கடுங்கோபம் எதனாலே, அந்தோ! ஒரு தீதும் செய்திடாத மாந்தர்களைக் கொல்வானேன்!

எத்தனையோ பிணங்கள் மிதந்தனவாம்; நோயால் தாக்குண்டு, மருந்து தேடித்தானுண்டும், பிழைத்தெழ முடியாமல், பிணமாவர்; தவிர்த்திட முடிவதில்லை. அது போன்றதோ இஃது? இல்லை! இல்லை! ஒரு துளியும் இது போல நடந்திடக் கூடுமென்று, எண்ணம் எழாநிலையில் இருந்தவர்கள், துயின்றவர்கள், பிணமானார்; அழிவதனை ஆழ்கடலும் ஏவியதால்.

முறிபடு தருக்களும், இடிபடு மனைகளும், உடைபடு அமைப்பும், ஓலமிடும் மக்களும், புரண்டோடி வந்திடு புனலும், இழுத்து அழித்திடு சுழலும், அம்மவோ! கேட்டிடுவோர் நெஞ்சு நடுக்குறு விதத்தன. என் செய்வர் அந்த மக்கள்; மூழ்கினர்; மூச்சற்றுப்போயினர்; சேதிகேட்டிடும் அனைவருக்கும் நெஞ்சில் பெருநெருப்பு! விழியில் நீர்க்கொப்பளிப்பு. எத்தனையோ இன்னல்களைக் கண்டு கண்டு, அவை தம்மால் தாக்குண்டு, எதிர்த்து நின்று வடுப்பெற்று, வாட்டம் ஓட்டிடுவோம், வாழ்வின்பம் பெற்றிடுவோம் என்று உழல்கின்றார், ஏழை எளியோர்கள். அறம் மறந்த நிலையினிலே சமூக அமைப்புள்ள காரணத்தால், ஆயிரத்தெட்டுத் தொல்லை, அவர்கட்கு. பிழைக்க வழியில்லாதார், உழைத்து உருக்குலைந்தார், நம்பிக்கைத் தேயத் தேய நலிவுற்றார், இத்தகையோர், மெத்த உண்டு; பெருமூச்செறிந்தபடி, உயிரோடிருக்கின்றார் ஓர்நாள் வாழ்வு கிடைக்கும் என்று. வறுமையின் தாக்குதலும், அகவிலையின் போக்கதனால் ஏற்படும் அலைக்கழிப்பும், நீதி கிடைக்காமல் அவர்கள் பாதி உயிரினராய்உள்ளதுவும் அறிவோம் நாம்; அறியும் அரசு. எனினும்பொழுது புலருமென்று பொறுத்திருந்து வருகின்றார்;அவர் போன்றார்க்கு, "வாழ்வுகிடைக்கு

371

மென வாடிக்கிடப்பதுமேன்! வற்றிய குளத்தினிலே வண்ணத்தாமரை காண்பதுவும் இயலுமோதான்! உழலுகின்றாய் உயிர்காக்க; உலவுகின்றாய் வாழ்வு கிடைக்குமென்று; உண்மையை நான் உரைக்கின்றேன், கேள்! உனக்கு வாழ்வளிக்கும் வழி காண, இன்றுள்ள உலகுக்கு நேரமில்லை, நினைப்புமில்லை; எதிர்பார்த்து ஏமாந்து இதயம் நொந்து செத்திடுவாய்; சாகுமுன்னம், அணு அணுவாய் உன் எண்ணந்தன்னைப் பியத்திடும், ஏமாற்றம் மூட்டிவிடும் வாட்டம்; அதனால் உழல்வானேன் வீணுக்கு; உருண்டோடி வந்துன்னை அணைத்துக் கொள்கின்றேன்; ஆவியைத் தந்துவிடு; அமைதி பெறு!'' என்று கூறியதோ, கொக்கரித்துப் பாய்ந்து வந்த கொடுமை மிகு அலையும்! வாழ வைத்திடுதல் எளிதல்ல; வல்லமை மிகவும் வேண்டும்; சாகடித்திடவோ எளிதிலே இயலும், வா! வா! என்றுகூறி கடல் கிளம்பி கொதித்துவந்த அலைகள், மாந்தர் உயிர் குடிக்கும் நச்சரவுகளாயின அந்தோ!! பிணமாகி மிதந்த அந்த மாந்தர் உள்ளந்தன்னில் என்னென்ன எண்ணங்கள் உலவி இருந்தனவோ, எவரறிவார்! மணவாளனுவதற்கு ஏற்றவர்தான் அவர்! பெற்றோர் என் மனதைக் கண்டறிந்தே செய்கின்றார் இந்த ஏற்பாட்டினை, பெறுவேன் நான் மன நிறைவு என்றெண்ணி மகிழ்ந்திருக்கும் மங்கையரும் இருப்பரன்றே கத்தும் கடல் அனுப்பப் பாய்ந்துவந்து அலை கொத்திக்கொண்டு சென்ற பல்லோரில்! பூவும் மஞ்சளுடன் போனவர்களும் உண்டே! காய் இது, கனியும் விரைவினிலே என்று கூறத்தக்க பருவமுடன் அழகு தவழ் உருவினரும், அலைக்கு இரையாகிப் போயிருப்பர்! அரும்புகள் பலப் பலவும் அழிந்திருக்குமே. தள்ளாடும் நடையெனினும், தாத்தா! என்றழைத்திடும் மழலை மொழிக் குழவியுடன் மாதரசியும் மகனும் இருக்கின்றான் என்ற எண்ணம் இனிப்பளிக்க இருந்து வந்த பெரியவர்கள் பற்பலரும், மடிந்திருப்பர், உயிர் குடியா முன் மடிந்திடேன் என உரைத்து எழும்பி வந்த அலைகளாலே. என்னென்ன நடந்திருக்கும், எத்தகு ஒலம் எழும்பியிருந்திருக்கும், உயிர்தப்ப ஏதேது முயற்சிகளைச் செய்திருப்பார், எல்லாம் பயனற்றுப் போயின என்றுணர்ந்து, இறுதியாய், இதயத்திலிருந்து அலறல் எவ்விதத்தில் பீறிட்டுக் கிளம்பி வந்திருக்கும் என்பதனை எண்ணிடும்போதே, நம் உள்ளம் நைந்துவிடுவதுபோலாகிறது. என் செய்வோம்; பேரிழப்பை எண்ணி, பொங்கிடும் கண்ணீரல்லால், தந்திட வேறென்ன உண்டு; பொறுத்துக்கொள்க என்று, இழந்தனனே என் மகனை! இழுத்துச் சென்றதுவேஎன் அரசை! வாழ்வளிக்க வந்தவனை வாரிக் கொடுத்துவிட்டுப் பாழ்மரமானேனே, பாவி நான்! என்றெல்லாம், பதறிக் கதறிடுவோர்க்கு அவர் ஓலம் கேட்டு காலம் மூட்டிவிட்ட கொடுமையிது எனக்கூறி, கண்ணீர் சொரிவதன்றி, பிறந்தவர் இறந்தேபோவர், இறப்பும் ஓர் புது வாழ்க்கையின் பிறப்பாம் என்றெல்லாம், 'தத்துவம்' பேசிடவா இயலும். நாமென்ன, முற்றுந்துறந்துவிட்டோம் எனமொழியும் முனிவர்களோ! இல்லையன்றே! இருந்தான் பலகாலும், பெற்றான் பலநலனும் நோய்வந்துற்று மறைந்தான், மறையுமுன் மாடுமனையுடனே மகிழ்ந்திருக்கும் விதமாக; பெரியதோர் குடும்பத்தை அமைத்தான் சீராக, என்று கூறிடத்தக்க நிலையினிலே இறந்துபடுவோர்க்காகக் கூட இதயமுள்ளோர் கண்ணீர் சிந்திடுவர், கவலைகொண்டிடுவர். தெற்கு முனையிலே நேரிட்ட பேரிழப்பு கண்டோம், மரணம் இயற்கை என்று கூறி எங்கனம் ஆறுதல் பெற:இயலும்! இது, எந்தமிழ் நாட்டினிலே, என்றும் நடந்திராத, சிந்தையை வெந்திடச் செய்யும் பெருவிபத்து, பேரிழப்பு: ஆறுதல் கூறுவதோ, பெறுவதுவோ எளிதல்ல.



கொடும் அலைக்குப் பலியானோர் விட்டுச் சென்ற குடும்பத்து மற்றவர்கள் தம்மை நம் உற்றார் உறவினர் என்று கொண்டு, அழித்தது அலை, அரசு அணைத்தது என்றவர் எண்ணும்வண்ணம், உயிர் குடித்தது அலை வடிவிலே வந்தகொடுமை, வாழ்வளித்தனர்அன்னையாகி இவ்வரசு எமக்கு என்று கூறத்தக்க விதத்தில்அரசு திட்டமிட்டுத் தக்கனவற்றை விரைந்து செய்தளிக்க வேண்டும். நாட்டினர் அனைவருமே, ஒருமித்துக் கேட்டிடுகின்றனர் அரசை, வீடிழந்து, தொழிலிழந்து, பெற்றோர் உற்றார் இழந்து, பெற்றெடுத்த செல்வந்தனை இழந்து அழுதுகிடக்கின்ற மக்களுக்கு புதுவாழ்வு, முழுவாழ்வு, நல்வாழ்வு அளித்திட, பொருள் அளவு அதிகமாமே என்றெண்ணி மருளாமல், பரிவுடன் அவர்நிலையைப் பார்த்து, நலன்தேட முனைந்திடுதல்வேண்டும் என்று. அழிவு ஒருநாள், அழுகுரல் ஆறுநாள், வேண்டுகோள் ஒருநாள், ஆகட்டும் பார்க்கலாம் என்று சிலநாள், பிறகு 'அதது அததன்' வழிப்படி சென்றிடும் என்ற முறையிலே எண்ணத்தை ஓடவிட்டுவிடாமல், தமிழகமக்கள் மனம் குளிர, பிறநாட்டவரும் கேட்டு மகிழத்தக்க விதத்தில், அரசு செயலாற்ற வேண்டுகிறோம். செய்வர் என்று எண்ணி, அந்த நம்பிக்கைதன்னையே, ஒளியாக்கிக் கொண்டு, இருண்ட கண்களில் அதனை ஏற்றி, விழாவினுக்குரிய இந்நாளில், தமிழகத்தோர்க்கு என் கனிவு மிகு வாழ்த்துக்களைச் செலுத்துகின்றேன்.

அணைத்த கரம் அடிக்கிறது, ஆனல் அடித்தது போதுமென்றெண்ணி மீண்டும் அணைத்துக்கொள்கிறது போலும். தம்பி! இயற்கையாள் தந்திடுவனவற்றை பெற்று, வாழ்வில் ஏற்றம் பெற்று, சிலர்மட்டும் வாழ்ந்திருத்தல், நன்றன்று. நாம் எவைஎவை பெற்று இன்புற்றிருக்கின்றோமோ, அவைதமை அனைவரும்

பெற்று மகிழ்ந்திடுவதே முறை. அதற்கே உளது இயற்கைச் செல்வம். பொங்கற்புதுநாளன்று இக் கருத்து நம் நெஞ்சில் ஏற்கவேண்டும், ஊறவேண்டும். கனியெலாம் சிலருக்கு, காய்சருகு பலருக்கு; ஒளியில் சிலர், பாழ் இருளில் பலர்; வாழ்வார் சிலர், வதைபடுவார் பலர்; எனும் நிலைகாண அல்ல; இத்தனைக்கோலம் காட்டி, எண்ணற்றவனவற்றை ஈந்து, என்றும் இளமையுடன் இயற்கையாள் கொலுவீற்றிருப்பது. அதிலும் தம்பி! இன்பத் தமிழகத்தினிலே, இயற்கையாள் தீட்டிவைத்துள்ள கோலம், எண்ண எண்ண இனிப்பளிப்பதாக உளது. நாமணக்கப்பாடிய நற்றமிழ் புலவோரின் பாக்களில் காண்கின்றோம், பற்பல படப்பிடிப்பு.



இயற்கைப்பொருள் ஒவ்வொன்றுபற்றியும், மிகுந்த நுண்ணறிவுத்திறனுடன் புலவர்கள் கூறியுள்ளனர்; மலை, மரம், மடுவு, அலை, அடவி, கலம், புலம், அருவி, வாவி, குளம், எனும் எவை பற்றியும் அந்நாளில் தாம் கண்டனவற்றைச் சுவைபட எடுத்துக்கூறியுள்ளனர் புலவர் பெருமக்கள். இயற்கையின் எழில், அந்த எழிலைக்காட்டும் பலவடிவங்கள், வகைகள் இவைமட்டும் காணக்கிடைக்கும்பட்டியலல்ல அந்தப்பாக்கள், விளக்கின் ஒளிகொண்டு வேறு பொருளைக்காட்டிடும் பான்மைபோல, இயற்கைப் பொருள்களைக்கொண்டு, இன்னுரை, நல்லுரை, வாழ்வுமுறை என்பனவற்றை எடுத்துக்காட்டியுள்ளனர். இவையாவும், தம்பி! அன்றோர் நாள்!! இன்று அந்த 'அந்நாள் சிறப்பினை' மீண்டும் கண்டிட ஓர் சீரிய முயற்சியினில் ஈடுபட்டுள்ளனர் இந்நாளில், விழுப்புற்ற, கற்ற தமிழ்மறவாத, மரபழிக்கும் மாபாதகம் வெறுத்திடும், தமிழ்ப்புலவோர். இடையிலேயோ! உயர உயரச் சென்றுவிட்டோம்! கொண்டுசென்றுவிட்டனர் தமிழர்களை! முல்லை பறித்திடச்சென்ற மங்கையை, வேழம் விரட்டி விருதுபெற்ற வீரன் கண்டனன் என்ற கதை கூறினரன்றோ அந்த நாள் புலவோர்! ஓ! ஓ! இது மட்டுந்தானே கூறஇயலும் இவர்களால், நாம் கூறுகின்றோம் கேளீர் 'மேல் உலக'க்காதை என்று அழைத்தனர் இடையில் வந்தோர்; பாரிஜாதம் காட்டினர், பாற்கடல் காட்டினர், பாசுபதம் காட்டினர், பற்பல விந்தைகளைக் காட்டினர், தமது கதைகளில்! உள்ளதை மறந்தனர் தமிழர், உருவாக்கப்பட்டனவற்றைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டனர். அதன் காரணமாகவே, பல்வேறு விழாக்கள்—பண்டிகைகள்—தமிழகத்திலே மேற்கொள்ளப்பட்டன. பொங்கற்புதுநாள் அதுபோன்றதல்ல; இது நமது விழா; நம்மை நாம் உணர உதவும் விழா; இடையிலே படர்ந்தனவற்றை நீக்கி, தமிழரின் உள்ளத்தை, மாசறு பொன்னாக்கி, ஒளிவிடு முத்து ஆக்கிடத்தக்க நந்நாள். பொங்கிற்று! பொங்கிற்று! பொங்கலோ பொங்கல்! என ஒலி எழுப்பி விடுவதினால் மட்டும் அல்ல! நான் முன்னம் கூறியுள்ளபடி, பொருள் உணர்ந்து பாடம் பெறுவதனால்!!

பெறவேண்டுவனவற்றைப் பெற்றிடும் முயற்சியில் ஈடுபடுவதிலே ஏற்படக்கூடியது ஆர்வம்; இருந்ததை, இடையில் இழந்ததை மீண்டும் பெற்றிட எடுத்துக் கொள்ளப்படும் முயற்சி இணையற்ற எழுச்சியை ஊட்டிவிடுமன்றோ. அந்த எழுச்சிபெற்ற நிலையினர், பொங்கற் புதுநாளை, புதுமையினைச் சமைத்திடும் பேரார்வம் பொங்கிடும் நாளாகக் கொண்டுள்ளனர். எனவேதான் தம்பி! நாட்டு வளம்பற்றி, மக்கள்நிலை குறித்து, அரசுமுறைபற்றி, அறநெறி குறித்து, தாழாத் தமிழகம் என்ன கருத்து கொண்டிருந்தது என்பதனைக் கண்டறியும் ஆர்வம் மிகுந்துளது. இந்த ஆர்வத்தை மேலும் பெற்றிடச் செய்திடவேண்டும், பொங்கற் புதுநாள். இயற்கைச்செல்வம் இத்துணைபெற்றிருந்தும் இன்பத் தமிழகத்தில் இன்னல் கப்பிக்கொண்டிருக்கக் காரணம் என்ன? என்று கண்டறிய வேண்டாமோ? கண்டறிய, உலகின் பல்வேறு இடங்களிலே இயற்கையாள் அளித்துள்ளன யாவை? ஆங்கு உள்ளோர் அவற்றினை எம்முறையில் பயன்படுத்தி ஏற்றம் கண்டனர்? அம்முறையில், நாம் பெறத்தக்க அளவு யாது? பெற்றிடும் வழி என்ன? என்பனவற்றை அறிந்திட வேண்டுமன்றோ. வேண்டுமாயின், உலக நாடுகளின் வரலாற்றினை ஓரளவாகிலும் நாம் அறிந்திட வேண்டுமே? அறிகின்றோமா? மாலைநேரத்தில் மாபெரும் நகரங்களில் கூடி மக்கள் கூட்டம் இதுபோது பல்வேறு நாடுகளின் வரலாறுபற்றிய விரிவுரையையா கேட்டுப் பயன்பெற்று வருகிறது? இல்லையே! போகப்போகும் இடம்பற்றிய கதைகளை அல்லவா இருக்கும் இடத்திலே இடரும் இழிவும் நீக்கிடும் முயற்சியை மேற்கொள்ளாத மக்கள் கேட்டு இன்புறுகின்றனர். இந்நிலையில் நாட்டவர் இருந்திடின், உலகின் நிலையினை உணர வழி ஏது, உணர்ந்து நம்நாட்டை நமக்கேற்ற நிலையினதாக்கிடும் முயற்சியில் ஈடுபடுவது ஏது!

இங்கு வயலின் அளவு மிகுதி, விளைச்சலின் அளவு குறைவு என்கிறார்கள்.

பொருள்கள் இங்கு மிகுதியும் பெற்றிடலாம், ஆனால் பெற்றோமில்லை என்கிறார்கள்.

பெருகிடும் பொருளைக்கூட, சீராகப் பகிர்ந்தளித்தால் சமூகநலன் மிகும்; செய்யக்காணோம் என்கின்றார்கள்.

முப்புரம் கடலிருக்கிறது, ஆனால் கப்பற்வாணிபம் தேவைப்படும் அளவு இல்லை; மிகமிகக் குறைவு என்கின்றனர்.

இரும்பு கிடக்கிறது புதைந்து; ஆனால் எஃகு ஆலைதான் அமைக்கப்படவில்லை என்கின்றார்கள்.

கத்தும் கடல்சூழ்ந்த இடம் இது; எனினும் மீன்பிடி தொழிலும் வளரக்காணோம் என்கின்றார்கள்.

பொதுஅறிவுவளம் மிக்கவர் இவர் என்கின்றார்கள், எனினும் புத்தறிவு பெற்றிடவில்லை என்று கூறுகின்றார்கள்.

(19-ம் பக்கம் பார்க்க)

குடியாட்சிக் கோமான்

ரஷிய நாட்டு மன்னர் மன்னன் பீடர் தன் பிள்ளைகளைக் கொன்றான்.

அதுபோன்ற கொலைபாதகம் செய்தான் பெர்ஷியப் பேரரசன் அபாஸ்.

இங்கிலாந்து நாட்டு எட்டாம் என்றி, தன் மனைவிமார்களைச் சிதைத்தான்.

அய்ரனி எனும் பேரரசி தன்மகனுடைய கண்களைச் சுட்டுப் பொசுக்கினாள்.

தியாபானோ எனும் பேரரசி தன் கணவனையே கொன்று விட்டாள்.

தங்கள் ஆதிக்கத்துக்கு உலைவைக்கக்கூடியவர்களை, ஒழித்துக்கட்டும் கெடுமதியால் கோலேந்திகள் பலர் இதுபோலக் கொலைகாரர்களாயினர்; குவலயம் அறிந்த உண்மை இது.

கொலை செய்பவன் தூக்கிலிடப்படுகிறான்; சட்டம் வேலை செய்கிறது.

இந்தக் கொலைபாதகர்களோ கொலுவீற்றிருக்க முடிகிறது. இவர்களின் ஆணையின்படி மக்கள் ஒழுக வேண்டும் என்று நிலை இருக்கிறது. இந்த நிலையை எதிர்ப்பவன் நாட்டுத்துரோகி என்று ஆக்கப்பட்டு விடுகிறான்.

படுகொலைகள் செய்து பட்டத்தரசன் என்ற நிலையைப் பாதுகாத்துக்கொள்ளும் மன்னனின் புகழ் பாட, மக்கள், அலுவலர்கள், கவிவாணர், வரலாறு கூட!!

படுகொலைதான்; பதைக்கப் பதைக்கத்தான் வெட்டிப்போட்டார்கள்; ஆனல் அரசன் ஆணையல்லவா! அதனை யார் மீற முடியும்! ஏன் என்று எப்படிக் கேட்க இயலும்? சட்டத்தின் பிறப்பிடமே மன்னன்! அவன் மீது சட்டம் பாயுமா!-என்று நடுக்குங் குரலில் பேசினர் மக்கள். துணிந்து எதிர்ப்புக்கிளப்புவான் ஒருவன்; அவன் தலைதுண்டிக்கப்படும்.

மன்னர்கள், தமது இயல்பு எங்கனம் இருக்கும் இருக்கிறது—இருக்கவேண்டும் என்பதனை உணர்த்துவதுபோல, அறிவிப்பதுபோல, கொடிகள், விருதுகள், பட்டப்பெயர்கள் கொண்டிருந்தனர்.

சிங்கம், புலி, கழுகு, பாம்பு, ஓநாய், முதலை, நரி, இன்னும் பல்வேறு கொடிய மிருகங்கள், இவர்களின் கொடிகளில் பொறிக்கப்பட்டிருந்தன; அல்லது உடைகளில் பொறிக்கப்பட்டிருந்தன.

கடவுளையே இழிவுபடுத்துகிறோம், மிகக்கொடியவர் என்று மறைமுகமாகக்கூறிக் காட்டுகிறோம் என்றுகூட உணராமல், சிவபிரானையே திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் என்று பாடிடவில்லையா! மன்னர்களையும் அது போன்றே புகழ்ந்தனர்.

நூறுயிரவரைக் கொன்ற கேசரி! எதிரிகளுக்குக் கூற்றுவன்! பகை நாடுகளுக்குப் பெருந்தீ!—என்று கூறினர் புகழ்பாடுவதாக எண்ணிக்கொண்டு. படுபாதகச் செயலைச் செய்தான் என்பதுதான் உண்மை; ஆனல் அதனையே அவனுக்குப் புகழாரமாக்கிச்சூட்டினர்.

"உலகை மிரட்டினேன்" என்பது அட்டில்லா என்பானுக்குச் சிறப்புப்பெயர்.

பெற்றோரை, உற்றார் உறவினரை, பெற்றெடுத்த மக்களை, உற்றமனைவியைக் கொன்ருகிலும், தனது அரசபதவியைக் காத்துக்கொள்ளத் துணிந்த கொடியோர் பலர் மன்னர்களாக இருந்துவந்தனர்; தூக்கு மரத்தின்முன்பு மண்டியிடவேண்டிய இந்தக் குற்றவாளிகள் முன்பு, மக்கள் மண்டியிட்டுக்கிடந்தனர்.

இங்கிலாந்து-அதிர்ச்சி, குழப்பம், கொடூரம், அதிக அளவு இல்லாமல், அமைதியைப் பெருமளவு காத்து வந்த அரசுமுறை நிலவிடும் நாடு! இங்கு மன்னர்களின் செயல் எப்படி எப்படி இருந்தது என்று ஆராய்ந்து பார்த்து ஒருகணக்கெடுத்தார்கள். முதலாவது வில்லியம் என்ற மன்னன்காலம் முதற்கொண்டு ஆருவது ஜார்ஜ் மன்னன் காலம் வரையில் கணக்குப் பார்த்தனர். மொத்தம் 43 மன்னர்களைப்பற்றிய தகவல்களைப் பார்த்ததில், அதிலே 20 மன்னர்கள், கொலைபாதகச் செயலில் ஈடுபட்டிருந்தவர்கள் என்பது தெரியவந்தது.

பைஜாண்டியம் பேரரசு பெரும் புகழ் வாய்ந்தது. வரலாற்று ஏடுகள் இந்தப்பேரரசு குறித்து வியப்பளிக்கும் விதமான சிறப்புகளை எடுத்துக் காட்டுகின்றன.

இந்தப் பேரரசில், 107-பேரரசர்கள் ஆண்ட காலத்தில் நடைபெற்ற கொடுமைகளை ஆராய்ந்து பார்த்தவர் கூறியிருக்கிருர். இந்த107-மாமன்னர்களில், 34 பேர்தான் இயற்கைமரணம் அடைந்தனராம்; எட்டுப் பேர் போர் அல்லது விபத்து இதனுல் இறந்துபட்டனர் – மற்றவர் அனைவரும்? சிலர் விரட்டப்பட்டனர், சிலர் விஷமுண்டு மாண்டனர், சிலரின் கழுத்து நெரிக்கப்பட்டு இறந்தனர், சிலர் குத்திக் கொல்லப்பட்டனர், சிலர் வெட்டி வீழ்த்தப்பட்டனர்.

பைஜாண்டியம் பேரரசின் அரண்மனை புனிதமானதாம்; புகழ்கிறது வரலாறு. ஆனல் இங்கு கொட்டப்பட்ட குருதி கொஞ்சமல்ல; இழைக்கப்பட்ட அநீதிக்கு அளவில்லை; கொடுமைக்கூடம் அந்த அரண்மனை.

அந்த அரண்மனையிலேதான் அரசி அய்ரனி தன் மகனுடைய கண்களை அழித்துக் குருடாக்கினுள். கண்ணிழந்தவன் கதறினுன்—பெற்றவள் கண்களைப் பறித்தாள்—மகனுடைய கண்களை! குழந்தை பிறந்தது அதே இடத்தில்; மகனுனன், மாதாவே அதே இடத்தில் மகனைக் குருடாக்கினுள்.

அய்ரனி கொடியவள்; ஆனல் என்னை மிஞ்ச முடியுமா என்று கேட்பதுபோல, அரசி தியோ பானே என்பாள், தன் கணவன் தலையை வெட்டி எடுத்து ஜன்னல் வழியாகக்காட்டினுளாம், படையினருக்கு, இரத்தம் சொட்டச் சொட்ட இருந்த வெட்டப்பட்ட தலையை! அதே அரண்மனையில்.

அரசுரிமையை அழித்துவிடக்கூடும் என்ற அச்சம் காரணமாக, உடன்பிறந்தோரை, பெற்றோரை, பிள்ளைகளைக்கொன்றது மட்டுமா, எத்தனை எத்தனை ஆயிரம் மக்கள், படுகொலை செய்யப்பட்டனர்.

புனிதப்போர் நடத்தியவன், இங்கிலாந்து மன்னன் இரண்டாம் ரிச்சார்டு என்பான்; அரிமா நெஞ்சினன் என்ற சிறப்புப் பட்டம்பெற்றவன்; ஏசுவின் புகழ்பரப்பிடப் போரிட்ட புனிதன்! அவனிடம் பிடிபட்டனர் 27,000 பேர், போரில்! விடுதலை செய்கிறேன் 200,000 பொற்காசுகள்தந்தால், என்ருனும்; தரவில்லை;





கொன்று குவித்தானும் அத்தனை ஆயிரம்பேர்களையும். புனிதப்போர் நடந்தியவன்!! மன்னவன்!!

இவ்வளவு படுகொலைகளைச் செய்தவர்களை, உலகு சுமந்துகொண்டிருந்தது. மணிமுடிதரித்திருந்தனர்,இம்மாபாவிகள். எனவே இவர்கள் செய்த கொடுஞ் செயல்களைக் கண்டிக்க மக்களுக்குத் துணிவு பிறக்கவில்லை.

கனி திருடியவனைக் கட்டிவைத்து அடிக்க, பொருள்களவாடினவனை புதைகுழியில் நிறுத்த, வழிப்பறி நடத்தியவனை வாட்டி வதைக்க, தாக்கினவனைத்தாக்க, கொலை செய்தவனைக் கொன்றுபோட மக்களுக்குத் தைரியம் இருந்தது, சட்டம் துணை நின்றது. மாபாதகம்பல செய்த மன்னர்களிடமோ, அண்ட முடியவில்லை; அரசன் ஆண்டவனின் அம்சம் என்ற அச்சம் ஒரு காரணம்; அரசன் எதையும் செய்திடும் அதிகாரம் பெற்றவன் என்ற நம்பிக்கை மற்றோர் காரணம்; படை இருக்கிறது அவனிடம் என்ற பயம் ஒரு காரணம். எனவே, மக்கள், வாயில்லாப்பூச்சிகளாகிக் கிடந்தனர். தன் எதிரிலேயே போட்டு அடிக்கக்கண்டாலும் மாடு, அடிபடும் மற்றோர் மாட்டுக்காகப் பரிந்துபேச முடிகிறதா! தடுத்து நிறுத்த முடிகிறதா! இல்லையல்லவா? அதே நிலைதான் அந்த மனித உருவங்களுக்கு. நமது தலைதப்பிற்றே அதுபோதும் என்று எண்ணிக்கொண்டனர்.

உலகின் பல்வேறு நாடுகளில் இத்தகைய கொடுமைகள் பலகாலமாக இருந்துவந்தன; மனம் வெதும்பிய மக்கள், இந்த மன்னன் செத்து இவன் மகன் பட்டத்தரசனானால் கொடுமை இருக்காது என்றெண்ணி இறைவனிடம் முறையிடுவர். இறைவன் புதுப்புது மன்னர்களைத்தந்து வந்தான்; ஆனால் பழைய கொடுமை ஒழியவில்லை, தொடர்ந்தது.

பொருள் பறித்திடும் மன்னன், கட்டழகிகளைக் கசக்கிப்பிழிந்திடும் காவலன், 'இம்' என்றால் இழுத்துச் சென்று வெட்டுங்கள் தலையை என்று வெகுண்டுரைத்த வேந்தன், போர்வெறி கொண்டலைந்து அழிவை மூட்டிவிட்ட அரசன், இப்படிப்பற்பலரைக் கண்டு கண்டு மனம் குமுறிக் குமுறி கிடந்தனர் மக்கள்.

அந்த மனக்குமுறலிருந்து தோன்றிய: எண்ணந்தான் முடியாட்சி; கொடுமைக்கு இருப்பிடம் என்பது.

இவன்மன்னன்!:நாட்டுக்குத் தலைவன் என்பது பொருளற்ற பேச்சு! பொறுத்துக்கொள்ள முடியாத அக்ரமம்!!

இவனை நாம் நாட்டுக்கு அதிபனாக, நமக்கெல்லாம் தலைவனாக ஏற்றுக்கொள்ள வேண்டுமாமே! ஏன்? நாட்டவரின் மதிப்பைப் பெறத்தக்க செயல் யாது இவன் செய்தனன்? பிறந்தானே, அதுதவிர இவன்செய்தது என்ன? நாட்டுக்காக என்ன பாடுபட்டான்?

அரசன் அமரும் இருக்கை அமருவோனின் மனதைக் கல்லாக்கிவிடுகிறது. எத்தனை இளகியமனதினனும் அந்த நிலை அடைந்துவிடுகிறான்.

மணிமுடி இருக்கிறதே, அதனைச் சூட்டிக்கொண்டதும். சூட்டிக்கொள்பவனின் மூளையை அப்படியே அதுஅழுத்தி அழுத்தி சிறியதாக்கிவிடுகிறது.



இவ்விதமாக,' திறந்த மடல்' வெளியிடப்பட்டது, பிரன்ச்சு மன்னனைக் கண்டித்து — 1790ம் ஆண்டில் — பாரிஸ் நகர இதழில்.

அத்துணை வெறுப்பு மக்களுக்கு — மன்னனிடம்! அரச ஆட்சிமுறை மீது.

கொடுமைக்கு ஆளாகி ஆளாகி, மக்கள் இனி எந்தக் கொடுமையையும் கொடுமை எனக்கொண்டு. அஞ்சிடத்தக்க மனம் அற்றவர்களாகிவிட்டனர். எனவேதான் அச்சமற்று, மன்னனைக் கண்டித்தனர்.

மன்னன் தன் குடும்பத்துடன் மாதா கோயில் கிளம்பினான் — எழில்மிக்க வண்டியில்.

மன்னன், மிகுந்த கடவுள்நம்பிக்கைகொண்டவன், தொழுகை நடத்தச் சென்றான்.

கண்டுவிட்டனர், மீன்விற்கும் பெண்கள், மன்னன் செல்வதை. வழிமறித்துக் கொண்டனர். வண்டி மேலால் செல்லமுடியாதபடி, பாதையிலிருந்த கதவை மூடிவிட்டனர். கண்டபடி ஏசலாயினர்! பன்றியே! பொதிமாடே! மன்னன் என்ற பட்டம் ஒரு கேடா! — என்பவை அந்த ஏசலில் சற்று கடுமை குறைவான பதங்கள். இரண்டு மணி நேரம் நடந்ததாம் இந்த போற்றி! போற்றி!!

மன்னன் மாதா கோயில் செல்லவில்லை; திரும்பி அரண்மனைக்கே சென்றுவிட்டான்.

எவரும் கேள்வி கேட்டிட, தடுத்து நிறுத்திட முடியாத நிலையிலே ஒருவனை, 'மன்னன்' என்று நாம் அமர்த்திவிட்டால், அவன் கொடுமை செய்ய ஏன் கூச்சப்படப் போகிறான்? யாரிடம் அவனுக்கு அச்சம் ஏற்படப்போகிறது? அவன் ஆணை கேட்டிடப் படை இருக்கிறது; பஞ்சைகள் பராரிகள் எதிர்த்திட முடியுமா!! எனவே கொடுமைகள் இருப்பதற்குக் காரணம், கெட்டவன் ஒருவன் மன்னனானான் என்பது அல்ல; முடியாட்சி முறையே, இக்கேட்டினை முளைவிடச் செய்கிறது. எனவே முடியாட்சிமுறை கூடாது — கட்டுப்பட்ட, கட்டுப்படுத்தக்கூடிய — நாமாக அமைத்த, நாமாகக் கலைத்துவிடத்தக்க—நம்மைப் புறக்கணிக்க முடியாத ஒரு அரசுமுறை, ஒரு அமைப்பு வேண்டும்



என்ற எண்ணம் துளிர்த்தது. அதன் விளைவே குடியாட்சி முறை என்பதாகும்.

அரசன் அரசாள்கிறான் என்ற முறை ஒழிக்கப்பட்டு, இவன் அரசாள அமர்த்தப்பட்டிருக்கிறான்; அரசாள இவனுக்கு உரிமை கொடுத்திருக்கிறோம் என்று மக்கள் கூறிடும், முறைபிறந்தது; குடியாட்சி அமைந்தது.

எமது குடிமக்கள்! — என்று மன்னன் கூறியது மாறி, எமது ஆளவந்தார்கள் என்று மக்கள் கூறிடும் முறை பிறந்தது.

'நாம்' கூறுகிறோம், என்று பேசிய மன்னன் மறைந்து, 'நாங்கள்' அனுமதி அளித்தோம் என்று மக்கள் கூறிடும் முறை பிறந்தது.

அரண்மனையில் அல்ல, அரசாங்கப் பணிமனையில் ஆட்சி செய்வோர் அமர்ந்தனர்.

அரசாள ஆண்டவன் பணித்தான்—என்ற பேச்சு மடிந்தது; அரசாளும் வாய்ப்பு அளித்துள்ளீர்கள் என்று குழைவாகப் பேசிடும் முறை வந்தது.

நான் மன்னன், ஏனெனில் என் தகப்பன் மன்னன்! நான் மன்னன் எனவே என்மகன் மன்னன்! என்ற பேச்சு பொருளற்றதாகி, நாம் ஆதரவு கொடுத்தோம், அதனால் இவர் ஆட்சி நடத்துகிறார்; நாம் ஆதரவு கொடுத்து வேறு ஒருவரை ஆட்சி நடத்த அழைக்கலாம் என்று மக்கள் பேசுவது பொருள் செறிந்த கோட்பாடாகிவிட்டது.

இந்தப் பயணம் மிக நீண்டது! நெடுங்காலம் பிடித்தது! கட்டுப்பாடுகள் அதிக அளவில்! இழப்புகள் நிரம்ப!

பயணம் தொடங்கி குடியாட்சி எனும் கட்டம் வந்தடைந்ததும், மக்கள் ஆறுதல் பெற்று, நம்பிக்கை துளிர்க்கப்பெற்று, இனிக்கொடுமை இருக்காது என்று எண்ணிக் களித்திடலாயினர்.

முடியாட்சிதான் மடிந்ததே தவிர, கொடுமை செய்திடும் இயல்பு மடிந்துவிடவில்லைஎன்று, குடியாட்சி கூறவில்லை; செயலும் விளைவுகளும் இந்த உண்மையை உணர்த்தலாயின.

மன்னன் உருட்டு விழி காட்டினான், முரட்டுப் போக்கில் நடந்தான் — குடியாட்சிக் கோமான்களோ, சிரித்துச் சித்திரவதை செய்திட, மயக்கி மதியை மாய்த்திட வழி கண்டுகொண்டனர்.

மன்னன் கொல்லும் புலி, உறுமும் வேங்கை என்றால் குடியாட்சிக் கோமான்கள், பசும் புற்றரையில் படுத்திருந்து நச்சுப் பல்லால் தீண்டி உயிர் குடிக்கும் பாம்புருப் பெற்றனர் — பாம்பியல்பு பெற்றனர்,

மன்னனை நாம் என்ன செய்திட இயலும் என்று முன்னம் எண்ணிக் கலங்கிக் கிடந்தனர் மக்கள்; இவன் என்ன செய்துவிடுவான்; நாம் பார்த்துக் கொடுத்த பதவியில் நாம் விரும்பும் வரை மட்டுமே இருந்திடவேண்டியவன் என்றுஎண்ணி எக்களித்தனர் மக்கள்.

சொல்கிறேன், கேட்டிடுவீர் என்று முழக்கினான் முடிதரித்தோன்; சொல்லுங்கள் கேட்டுக்கொள்ளுகிறேன் என்று மயக்குமொழி பேசிநின்றான் குடியாட்சி முறையைக் கருவியாக்கிக்கொண்டவன்.

மன்னன் இடிமுழக்க மெழுப்பினான்; குடியாட்சிக் கோமான்கள் இச்சகம் பேசியே காரியத்தைக் கச்சிதமாக முடித்துக்கொள்ளும் திறம் கொண்டவராயினர்.

முடியாட்சியோ குடியாட்சியோ - முறை எதுவாக இருப்பினும், எத்தன் ஏய்ப்பான், ஏமாளிகள் இரையாவர்; இந்த உண்மை மெள்ள மெள்ள இன்று உணரப்பட்டுவருகிறது,

கொடுமைகளின் வடிவம் வேறாகிவிட்டது; கொடுமை புரியும் முறைகளும் வேறு வகையினதாகிவிட்டன; கொடுமை அடியோடு ஒழியவில்லை.

முடி மன்னன் நடாத்திடும் கொடுமைகள் தாங்கொணாததாகிடும்போது, மக்கள் துணிந்தெழுந்து புரட்சி செய்து, அரண்மனைகளை இடித்துத் தரைமட்டமாக்கினர், மன்னன் குடும்பத்தினரை வெட்டி வீழ்த்தினர்; முடிந்தது. குடியாட்சியைத் தமது கருவியாகக் கொண்டவர்கள் மீது இதுபோன்றதாக்குதலை நடத்திட முடிவதில்லை, தேவையில்லை என்ற எண்ணம் எழுவதனால்.

முடியாட்சியில் மன்னனை மட்டுமல்ல அவன் குடும்பத்தையே தொலைத்தால்தான் கொடுமை ஒழியும்

என்று தோன்றிற்று; குடியாட்சியில் அவ்விதம் அல்ல; இவனைக் கீழே இறக்கிவிட்டால் கொடுமை ஒழிந்து விடும்; வெட்டுவானேன் குத்துவானேன், கொளுத்து வானேன் புரட்சி நடத்துவானேன்; அரசாள அனுமதி அளித்திடும்படிக் கேட்டிட வரும்போது முடியாது! என்று கூறிவிட்டால் போதும், முடி சாய்ந்துவிடும் என்று மக்கள் எண்ணிக்கொள்ள முடிந்தது.

இந்த எண்ணம் இனிப்பும் அளித்தது; தங்கள் ஆற்றலைப்பற்றி அதிக அளவில் நம்பிக்கையையும் தந்தது.

நாம் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்'— இவர்கள் நாம் பார்த்தமர்த்தியுள்ள அமைச்சர்கள்! என்ற நினைப்பு மக்களை, உற்சாகம் கொண்டிடச் செய்தது.

நமது கரத்தில் இருக்கிறது என்ற எண்ணமோ, நம்மாலே இது எளிதாகச் செய்யக்கூடிய காரியம் என்ற நம்பிக்கையோ ஒருவருக்கு இருக்கும்போது அவர் கவலையற்று இருப்பது இயல்பு. இதுபோன்ற ஓர் நிலையை, குடியாட்சி முறை, மக்கள் உள்ளத்தில் ஏற்படுத்திவிட்டது.



தன்னம்பிக்கைகொள்வதுஎன்பதுஒன்று, தன்னை மிஞ்சக்கூடியவர்கள் எவரும் இல்லை என்ற எண்ணம்கொள்வது முற்றிலும் வேறு. தன்னை மிஞ்சக்கூடியவர்கள் இல்லை என்ற எண்ணம் கொண்டு மெய்மறந்து இருக்கும் நிலை, ஒருவிதமான மதமதப்பை உண்டாக்கிவிடும்; குடியாட்சிக் கோமான்கள் இதனை நன்கு உணர்ந்து, தமது ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொண்டு விட்டனர்.

மன்னன், அரசாளப் பிறந்தவன், ஆண்டவனின் பிரதிநிதி என்ற நம்பிக்கையை மக்கள்கொண்டிருந்ததைத் தனக்குச் சாதகமானதாக்கிக்கொண்டான்.

நம்மவர்கள் — நல்லவர்கள் — வல்லவர்கள் — நமது ஆதரவை நாடிப் பெற்றவர்கள் என்று மக்களை நம்பும்படி செய்துவிடுவதன் மூலம் குடியாட்சி முறையைத் துணைகொண்டு ஆதிக்கம் செலுத்தும் வழியைப் பெற்றுவிட தந்திரமிக்கவர்களால் முடிந்தது.

“உலகம் அழியட்டும். கவலை இல்லை! எமது அரசு ஓங்கி வளரவேண்டும்! — என்று வெறிபேசி, போர் மூட்டிய இட்லரும், முசோலினியும், படைகொண்டு தாக்கி அல்ல, பயங்கரம் நடத்தி அல்ல, ஆயிரம் களங்களில் தமது ஆற்றலை எடுத்துக்காட்டி அல்ல, பதவி பெற்றது; குடியாட்சி முறையையே, தமக்குகந்த கருவியாக்கிக் கொண்டவர்களே! மக்களின் ஆதரவைத் தேடிப்பெற்றே அவர்கள்அரசோச்சலாயினர். பிறகோ? எப்படி எப்படியெல்லாமோ ஆட்டிப் படைத்திடும் சர்வாதிகாரிகள் ஆகிவிட்டனர்!

ஸ்பெயின் நாட்டு பிராங்கோவும், போர்ச்சுகல் நாட்டு சலாசரும், வெடிகுண்டுவீசி பதவி பிடித்தவர்கள் அல்லர்; மக்களே விரும்பி ஆதரவு தந்து அரியணை அமர்த்திடும் நிலையை, குடியாட்சி முறையின் துணை கொண்டே உருவாக்கிக்கொண்டவர்கள்.

முடியாட்சி முறையில் மன்னன் 'பவனி' வருவான்; மக்கள் பணிந்து நிற்பர்.

குடியாட்சியைத் தமக்கு ஆதிக்கம் தருவதற்கான தாக்கிக்கொள்ளும் கோமான்கள் 'உலா' வருகிறபோது நாடு விழாக்கோலம் கொள்கிறது, மக்கள் கோலாகலமான வரவேற்பு அளிக்கிறார்கள்: வாழ்த்துகிறார்கள்; வணங்குகிறார்கள்; சுட்டுவிரல் காட்டும் வழி சென்றிடுவோம் என்று முழக்கமிடுகிறார்கள்; இன்னுயிரையும் ஈந்திடுவோம் என்று கூறுகிறார்கள்.

அந்தவிதமான உணர்ச்சியை ஊட்டிவிடும் வழியும் திறனும் பெற்றவர்கள், குடியாட்சிக் கோமான்களாகி, முடிமன்னர்கள் பொறுமை கொள்ளத்தக்க அளவிலும் வகையிலும் ஆதிக்கம் பெற்றுக்கொள்கிறார்கள்.

நமக்காகச் சொல்கிறார் — நமது நன்மைக்காகச் செய்கிறார் — என்று மக்களை நம்பும்படிச் செய்துவிட்ட பிறகு, அவர்களைத் தமது விருப்பத்திற்கேற்றவிதமாகக் கோலம் கொண்டிடும் மெழுகுப் பொம்மைகளாக்கி விடும் குடியாட்சிக் கோமான்கள், முடியாட்சி முறையிலே காணப்பட்ட கேடுகளையும் கொடுமைகளையும்விட அதிக அளவில்துணிந்து செய்திடமுடிகிறது.

எனவேதான், முடியாட்சியா, குடியாட்சியா என்றமுறைபற்றி மட்டுமே கவனம் செலுத்தினால் போதாது, குடியாட்சி எனும் முறையைப் புகுத்திவிட்டால் மட்டும் போதாது, குடியாட்சிக் கோமான்கள் தோன்றாதபடி, தோன்ற முடியாதபடி, 'பாதுகாப்பு' தேடியபடி இருந்தாக வேண்டும்.

விழிப்புணர்ச்சி நிரம்ப வேண்டும்.

தெளிவும் துணிவும் பெருமளவுவேண்டும்.

ஆளவந்தார்களை அமர்த்தி விட்டதுடன் நமது பொறுப்பு தீர்ந்துவிட்டது என்ற எண்ணம் மனதைத் தாலாட்டும் நிலை ஏற்பட்டுவிடக்கூடாது.

நம்மாலே அனுமதிக்கப்பட்டு, நமக்காக நாடாள்பவர்கள், நமது நலனைப் பேணிடும் முறையில் ஆட்சி செய்துவருகிறார்களா என்று கவனித்துக் கொள்ளும் திறன் வேண்டும்.

மீண்டும் வாய்ப்பு அளிக்கக்கேட்டு, ஆளவந்தார்கள் நம்மை அணுகும்போது, கணக்குப் பார்க்கத் தெரியவேண்டும், தவறு இழைத்தவர்கள் என்று தெரிந்தால், அத்தகையோர்களைப் புறக்கணிக்கும் துணிவு வேண்டும்.

புன்னகைக்கோ பொற்காசுகளுக்கோ, பாசப் பிணைப்புகள் நேசத் தொடர்புகள் ஆகியவற்றினுக்கோ மயங்கிவிடாத மனப்பாங்கு வேண்டும். மழுப்பிப் பேசுவர், உண்மையைத் துருவிக் கண்டறியவேண்டும்! மனம் மகிழப் பேசுவர், மயக்கம் கொண்டு, உண்மையைத் தேடிப் பெறத் தவறிவிடக்கூடாது. நோக்கத்தை வேறு பக்கம் திருப்பிவிட முனைவர், இடங் கொடுத்திடலாகாது. இந்தச் செயலுக்கு இதுதான் பொருள்; இந்தச் செயலால் இன்னபலன் பெற்றோம்



என்று மெய்போலாக்கிக் காட்டுவர் பொய்யினை — ஏமாந்துவிடக்கூடாது.

இதற்கு, தெளிவும் துணிவும் வேண்டும் என்பதுடன், நாட்டு நடப்புகளைக் கூர்ந்து கவனித்து வரும் பழக்கமும், அவ்வப்போது நடைபெறுவன வற்றை ஆய்ந்து பார்த்து உண்மை அறிந்து, அறிந்ததை மறந்திடாது மனதினிற் கொண்டிடும் பயிற்சியும், செம்மையான முறை எது, எம்முறையில் செயலாற்றினல் சீர்மிகும் நலன் வளரும் என்பது பற்றிய அறிவும், அதற்கு ஏற்றபடி ஆட்சி முறையை அமைத்தாக வேண்டும் என்ற ஆர்வமும், நிரம்பவேண்டும்.

இந்தப் பழக்கம்—பயிற்சி—அறிவு — ஆர்வம் — துணிவு என்பவை எளிதாகப் பெறக்கூடியவை அல்ல; எல்லோருக்கும் கிடைத்திடக்கூடியவை என்றும் கூறிவிடுவதற்கில்லை; இவை நினைத்ததும் பெற்றுவிடக் கூடியவையுமாகா. எனினும் மெள்ள மெள்ளவாகிலும் மக்கள் இவைதமைப் பெற்றாக வேண்டும்; பெறாது போயின், குடியாட்சிக் கோமான்களின் பிடியினிற் சிக்கிச் சீரழியும் நிலை ஏற்பட்டுவிடும்; புலி வாயினின்றும் தப்பிப்புற்றரவால் தீண்டப்படும்நிலை ஏற்படும்.

முடியாட்சி முறையுள்ளபோது இருந்ததைவிட, அதிக அளவு அறிவும் தெளிவும், துணிவும் மக்களிடம் இருந்தாலன்றி, குடியாட்சி முறையின் பயனை முழுவதும் பெற்று, மக்கள் நலனடைய முடியாது.

முடியாட்சி மறைந்தது, குடியாட்சி பிறந்தது என்பதனை இருள் மறைந்தது, ஒளிவிளக்கு கிடைத்தது என்பதற்கு ஒப்பானது என்று கொள்ளலாம்; ஆனால் திரியும் எண்ணெயும் இருந்திடுதல் வேண்டும், தூண்டிவிடும் முறையும் தேவை, விளக்கு அணையாதபடி பார்த்துக் கொள்வதும் வேண்டும்.

இதனால்தான், அரசியற் கருத்துகளை விளக்கிடும் வித்தகர்கள், குடியாட்சி முறை என்பதனை, ஆட்சி முறைகளிலே ஒன்று என்றுமட்டும் கொள்ளக்கூடாது, மக்களின் வாழ்க்கை நெறியிலே ஒரு கூறு என்று கொள்ளவேண்டும் என்றுரைத்தனர்.

பெற்றெடுத்த குழவியும், வளர்த்திடும் முறையினைப் பொறுத்தே பயனுள்ள மகனாகவோ, பண்புள்ள மகளாகவோ ஆகிட முடியும்! குடியாட்சி முறையும் அதுபோன்றே; மக்களின் கவனிப்பு எத்தனை நேர்த்தியானதாக இருக்கிறதோ அதற்கு ஏற்ற எழிலும் ஏற்றமும் பெற்று, பயன் அளிக்கும்.

பொதுத்தேர்தலை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் நிலை விரைந்துவந்து கொண்டிருக்கும் இதுபோது, குடியாட்சிக் கோமான்களின் பிடியினிற் சிக்கிடாதிருக்க வேண்டும் என்ற எண்ணம் மிகுதியும் எழுதல் வேண்டும். குடியாட்சி முறையினைச் செம்மையானதாக்கிடும் திறம் பெறுதல் வேண்டும்.

பொதுத்தேர்தல் வந்ததும் மக்களிடம் வந்து நிற்போர் ஏதேது பேசுவர், என்னென்ன கோலம் புனைவர் என்பதனைப் புலவர் குழந்தை, அரசியலரங்கம் எனும் தமது நூலில் அழகுபடக் கூறியுள்ளார்.

மஞ்சள் மண்டிக்காரர் எங்கள்—சின்ன
மாமனூர் தம்பிக்கு மச்சான்.
பஞ்சுக் கடைக்காரர் மாமன்—எங்கள்
பாட்டியார் தம்பிக்குப் பேரன்.

கூட்டுறவுக் கடைத்தலைவன்—என்
கொழுந்தியின் தங்கைக்கு மச்சான்
விட்டு வரியதிகாரி—எங்கள்
வேலைக்காரி தம்பி பையன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்—எங்கள்
மைத்துனன் சொல்லை மறுக்கார்
திவட்டி தள்ளிய நடுவர்—எங்கள்
சின்னக்கண்ணு மாமி தம்பி.

இவ்விதமாகச் சொந்தம் பேசிடுவார்கள், மயக்கமூட்ட; மயங்கினல், குடியாட்சி முறை மூலம் பெறவேண்டிய பெரும் பலனை இழந்தவர்களாவோம்.

குடியாட்சி முறையைத் தமது ஆதிக்கத்திற்கான வழியாக மாற்றிக்கொள்ளும் இயல்பினர், வாக்குகளைப் பெற்றிட வருகிறபோது, வளைவர், இடம் உறுதிப்பட்டு விட்டதும் நிமிர்ந்து நிற்பர்.

வாக்கு கேட்கும்போது மக்களுக்கு மாலை மரியாதை செய்துநிற்பர். வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட பிறகோ, அவரை மக்கள் பேட்டி காணக் கார்த்துக் கிடக்கவேண்டும், மாலையுங் கையுமாக.

தேர்தல் நேரத்துத் தோற்றமும் போக்கும் தேர்தல் முடிந்த பிறகு, வெற்றி கிட்டிய பிறகு, அடியோடு மாறி விடுவதைக் காணலாம்! கண்டு, மனவாட்டம் கொண்டுள்ளனர் மக்கள். ஆனால், மீண்டும் மயக்கத்திற்கு பலியாகிவிடுகின்றனர். அதனால்தான் இன்று குடியாட்சிக் கோமான்கள் கொலுவிருந்துகொண்டு கொட்டமடித்திடும் கொடுமை காணப்படுகிறது.

உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை.
நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும்,
என்னசெய்யவேண்டும் என்று ஒருவார்த்தை
சொல்லுங்கள்; அதன்படி நடந்துகொள்
கிறேன்.

என்று பணிவுடன் பேசி ஓட்டுகளைப்பறித்துக்கொண்டு வெற்றி பெற்று, ஆளவந்தார்களாகிவிட்ட பலர், பிறகு,

விஷயம் தெரியாமல் பேசுகிறாய்! விவரம்
தெரியாது உளறுகிறாய்!

என்று ஏசிப் பேசிடக் கேட்கிறோம். அவ்விதம் பேசிடும் இயல்பு சிலருக்கு இருக்கிறது. என்பதல்ல உண்மை; அவ்விதமான 'இயல்பு' எவ்வளவு நல்லவர்களுக்கும் வந்துவிடுகிறது.

கலகம் செய்தார்கள், அடக்க வேண்
டாமா?

தடியால் அடித்தார்கள் கலையவில்லை;
அந்த நிலையில் துப்பாக்கியால் சுட்டார்கள்.
வேறு என்ன செய்ய முடியும்!

துப்பாக்கிக் குண்டடிபட்டதால்செத்தார்
கள், அதற்கு என்ன செய்யலாம்! சுட்டால்
சிலர் பிணமாகத்தான் ஆவார்கள். அதற்காக
என்ன செய்யச் சொல்கிறீர்கள்? அதிகாரி
களின் தலையை வெட்டிப் போடச் சொல்லு
கிறீர்களா?

அந்த இடத்திற்குப் போலீசே வேண்
டாம் என்கிறீர்களா?

"அய்யா! அநியாயமாகச் சுட்டுத் தள்ளுகிறார்களே!" என்று முறையிடுபவர்களைப் பார்த்து இவ்விதம் முதலமைச்சர் பேசுகிறார். அவ்விதம் பேசிடுபவர் துடுக்குத்தனமானவரா? இல்லை! வேளாண் பெருங்குடி மகன், சாந்தசீலன் என்று கருதப்படத்தக்கவர் பக்தவத்சலனார்!!

அப்படிப்பட்டவராலேயே இப்படித்தான் பேசமுடிகிறது என்றால், இடம்தரும் இயல்பு, நிலைதரும் நினைப்பு என்பதன்றி வேறென்ன கூறமுடியும்?

அவ்விதமான குடியாட்சிக் கோமான்களைப் பெறுவதற்காகவா, முடியாட்சி முறையை எதிர்த்தொழித்தது?

குடியாட்சி வெற்றி பெற வேண்டுமென்றால், அதனுடைய மாண்புக்கு ஊறு நேரிடாதபடி பாதுகாத்திடும் திறம், மக்களுக்கு இருக்கவேண்டும்; வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆளவந்தார்களாகச் சிலர் அமருவதே நம்முடைய தயவினால்தான் என்று எண்ணி மகிழ்ந்து மயங்கிக் கிடப்பது கூடாது; அவர்கள் தவறாக நடந்திடின், தடுத்திட, அடக்கிட, தேவைப்பட்டால் நீக்கிட, அறிவாற்றல் பெறவேண்டும். அப்போதுதான் குடியாட்சி முறையினால் பெறத்தக்க நற்பயனைப் பெற்று, சமூகம் சீரும் சிறப்பும் காணமுடியும்.

குடியாட்சி முறையைச் செம்மையாகப் பயன்படுத்தத் தவறியதனால், எந்தத் தலைவர்கள், குடிமகனுக்கு மரியாதை காட்ட, மாலையுங் கையுமாக வந்தனரோ அதே தலைவர்கள் ஆளவந்தார்களாகி, குடிமகனுடைய குரவளையை நெறிப்பது போன்ற முறையிலே நடந்துகொண்டனர்; கண்டோம்.

மிக மிகப் பணிவுடன், கூனிக் குறுகி குடிமகனைக் கண்டு அவன் ஆதரவைப் பெறவந்த தலைவர்களையும் பார்த்தோம், வெற்றி கிட்டியதும், வேலை முடிந்துவிட்டது, இனி வெட்டிப் பயல்களிடம் தொடர்பு எதற்கு என்ற எண்ணத்தில், மிக முடுக்காக தலைவர்கள் நடைபோட்டதையும் கண்டோம். நமக்காகப் பணியாற்றப் போகிறார்கள் இந்த நல்லவர்கள் என்ற நம்பிக்கை கொண்ட மக்கள், தலைவர்கள் வெற்றி பெற்றதற்காக விழா நடாத்தியதையும் கண்டோம்,—பிறகு அந்தத் தலைவர்களிலே சிலர் மகிழ்ச்சி பொங்கிடும் நிலையில் அரியணை அமரக் கண்டோம். காடென்றும் மேடென்றும் பாராமல்; இரவென்றும் இருளென்றும் பாராமல், வேண்டியவர்களைத் துணைக்கு அழைத்துக்கொண்டு வாக்காளர்களை நாடிவந்ததையும் பார்த்தோம்; பிறகு பதவியில் அமர்ந்த பிறகு, போலீஸ் படையின் துணையுடன் வந்து வாட்டத்தைத் துடைக்கச் சொல்லி முறையிடும் மக்களை மிரட்டிடக் கண்டோம். கொடிதூக்கிய தொண்டர்கள் புடைசூழ வந்த காட்சியையும் கண்டோம்; வருகிறார் அமைச்சர்! என்று அறிவித்து அச்சமூட்ட போலீஸ் வீரர்கள் மக்களை நோக்கிப் பாய்ந்து வரவும் கண்டோம்; சிரித்துப் பேசியவர் சீறிவிழக் கண்டோம்; குடியாட்சிக் கோமான்கள் கொலுவிருக்கக் காண்கிறோம்.

உணவு போதவில்லை என்றால் வயிற்றைக் கட்டு! வாயைக் கட்டு! என்று பேசுவோரும், பசி! பஞ்சம்! பட்டினி! என்று பதறினால், உயிர் தானேபோகும்! இதற்கு ஏன் பயப்படுகிறீர்கள் என்று துணிவுடன் கேட்டிடும் தூயவர்களும் ஆட்சி செய்திடக் காண்கிறோம். ஐயனே! இது அக்ரமம்! என்று மனம் நொந்து கூறிடும் மக்களைப் பார்த்து, "ஏதேதோ ஏன் பேசுகிறாய்! உன்னுடைய 'ஓட்டு' வேண்டுமானால் எனக்குப் போடாதே, அடுத்த முறை!! என்றே கூடப் பேசிடும் பெரியவர்களையும் பார்க்கிறோம். இவ்வளவு கண்டபிறகாகிலும், கருத்திலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் பிறந்திட வேண்டாமா? குடியாட்சிக் கோமான்களின் கொட்டத்தை அடக்கிடத் துணிந்து செயலாற்றவேண்டாமா? முடியாட்சியின் போதிருந்த வாளேந்தியை விரட்ட, குருதி கொட்டவேண்டிய அவசியம்இருந்தது. குடியாட்சிக்கோமான்களின்கொட்டத்தை அடக்க, வாள் வேண்டாம் போர் வேண்டாம், தீயில் இறங்கவேண்டாம் ஆபத்தை அணைத்துக் கொள்ளவேண்டாம், தெளிவு, துணிவுஇவைபோதுமே.



தேர்ந்தெடுக்க வேண்டிய நேரத்தில் தெளிவும் துணிவும் இருந்திடுமானால், குடியாட்சிக் கோமான்கள் குடல் தெறிக்க ஓடிவிடுவார்களே, இனி நாம் கொட்டமடிக்க முடியாது என்று.

குடியாட்சி முறையைப் பயன்படுத்திக்கொண்டு கோலோச்ச வந்துவிட்டால், மக்களின் நலன் குறித்த அக்கரை எத்துணை வேகமாக மறைந்துவிடுகிறது என்பதனைக் கண்டுவருகிறோம்; கவலை மிகக் கொள்கிறோம். இந்தக் கவலை நம்மைச் செயலற்றவர்களாக்கிப் பிறகு சிந்தனையுமற்றவர்களாக்கி விடுவதுடன், வாழ்வே பெரும் சுமை என்ற தத்துவத்தை அணைத்துக் கொண்டுவிடச் செய்துவிடுகிறது.

கோலோச்சும் நிலையினைப் பெறுவதற்காக, கோமான்கள் நம்மை அணுகிய நேரத்தில், நமது நல்வாழ்வுக்காக என்னென்ன செய்தளிக்கப் போவதாக, வாக்களித்தனர்; எத்துணை ஆவேசம் காட்டிப் பேசினர்! நாடகமோ, நடனமோ என்று வியந்திடத்தக்க விதமாக அல்லவா இருந்தது அவர்களின் பேச்சு!! பிறகு?

வெற்றி பெற்றதும், அவர்களை வாழ்த்தி வரவேற்க மாலை அணிவித்து மகிழ்ந்திட, கோலாகல விழா நடத்துகிறோம்.

அப்போதே, உழைத்தவர்களை அருகில் வைத்துக் கொண்டிருப்பதிலே கோமான்கள் கொண்டிருந்த பரிவு குறைந்துவிடுகிறது. கோமானின் வெற்றிக்காக பட்டினி கிடந்தபடி பணியாற்றியவர் அல்ல, பகட்டுக்காரர் கூட்டத்து சீமாட்டியின் வரவேற்பும் மாலையும், அவருக்குக் கிடைக்கிறது; பெருமிதமடைகிறார்.

கோமான் கொலுமண்டபத்தில் இடம் பெற்ற பிறகு, முற்றிலும் புது மனிதராகி விடுகிறார். புது மனிதரா! பெரிய மனிதராகி விடுகிறார்.

அவருக்கு, சிலை கண்டு மகிழ, கலை கண்டு களித்திட, நேரம் கிடைக்கும், ஆனால் கவலையே உருவெடுத்தது போலாகிவிட்ட மக்களைக் காண நேரம் கிடைக்காது! தவறி அவர்களைக் காணவேண்டி வந்துவிட்டாலோ, பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்—பொழுது புலருவதற்கு முன்பு மையிருட்டாகத்தான் இருக்கும் என்று சமாதானம் கூறிவிட்டு, நழுவிவிட முனைவர். அந்த நேரத்தில் ஆத்திரம் பொங்கிடும் பலருக்கு; அதிலே பொருளும் இல்லை, பயனும் கிடைக்காது; எப்படிப்பட்டவர்களை அரசாள அமர்த்திவிட்டோம் என்பதனை உணர்ந்து, மீண்டும் ஓர் வாய்ப்பு எழும்போது, அதே தவற்றினைச் செய்யக்கூடாது என்ற உறுதி பிறந்து, அந்தக் கட்டம் வரும்போது, செயலில் முனைந்து நின்று குடியாட்சியில் கோமான்களாகி விட்டவர்களை வீட்டுக்கு அனுப்பிவைக்கும் கடமையைச் செம்மையாகச் செய்து காட்டவேண்டும்.

இந்த மக்களை இனியும் நாம் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது; விழித்துக்கொண்டு விட்டனர். இது நமது வலையில் விழமாட்டார்கள் என்பதனை அறிந்நி,

குடியாட்சி முறையைக் கெடுத்தவர்கள், தலை குனிந்து செல்வர்.

குடியாட்சி முறை என்பது, முற்றுப்பெறாத ஒரு செயல்திட்டம்; விறுவிறுப்பான சிந்தனையுடன் அந்தச் செயல் திட்டம் இணைந்திருக்கவேண்டும். குடியாட்சி, முடியாட்சியை நீக்கிவிட்ட இடத்திலே புகுத்தப்பட்டுள்ள ஒரு ஆட்சிமுறை மட்டுமல்ல; மக்களின் அறிவைக்கொண்டு நடத்தப்படவேண்டிய நேர்த்திமிக்க வாழ்க்கை முறையாகும்.

குடியாட்சி எனும் முறை, கிரேக்க நாட்டிலேதான் முதலில் மலர்ந்தது என்று அரசியல் முறைகள்பற்றிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது மேனாடுகளைப் பொறுத்தவரையில் பொருத்தமான உண்மைதான் என்றாலும், பழந்தமிழகத்தில் முடியாட்சி இருந்த நிலையிலேயும் குடியாட்சி முறைகள்—குறிப்பாக சிற்றூர்களிலே — செம்மையாக இருந்து வந்தன என்பதற்கான சான்றுகள் காணக்கிடக்கின்றன. சிறப்பானதோர் சான்று என்கின்றனர், உத்திரமேரூர் கல்வெட்டுகளைக் காட்டி.

குடிமக்கள், பல குழுக்களாக அமர்ந்து, தமது வட்டாரக் காரியங்களைக் கவனித்துக்கொண்டனர் என்றும், இத்தகைய குழுக்களில் எவரெவர் இடம் பெறுவது என்பதற்குக் 'குடஓலை' முறை இருந்து வந்ததென்றும் தெரிகிறது.

குடஓலைமுறை என்பது, இன்று நடைபெறும் தேர்தல் முறை போன்றதே முழுக்க முழுக்க என்று கூறுவதற்கில்லை. எவரெவர், அந்தக்குழுக்களில் இடம் பெறலாம் என்பதற்கான சில தகுதிகள் குறிக்கப்பட்டிருந்தன. அவர்கள், ஒழுக்கமிக்கவர்களாக இருக்க வேண்டும் என்று பொதுவாகக் கூறிவிடுவதுடன் அமைந்துவிடவில்லை. அவர்களின் நெருங்கிய சுற்றத்தார்கூட, அழுக்கு இழுக்கு அற்றவர்களாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனராம்.

நான் என்ன செய்வேன்! எல்லாம் என் மகனால் வந்தது! என்று கூறிடும் கெய்ரான்கள் எழக்கூடும் என்று அறிந்திருந்தனர் போலும்.

எனவே மேனாட்டிலிருந்து குடியாட்சி முறை தமிழகத்துக்கு வந்தது என்று கூறுவதற்கில்லை.

ஆனால் தேர்தல்முறை, கட்சிக்கண்ணோட்டம் ஆகியவைகள், மேனாட்டிலே தொடங்கித்தான் பல்வேறு இடங்களிலும் பரவிற்று.

குடியாட்சி என்பதற்கான ஆங்கிலச் சொல்லான (Democracy) டெமாக்ரசி என்பதே இரு கிரேக்க மொழிச் சொற்களின் கூட்டு அமைப்பாகும்.

டிமோஸ் (Demos) என்ற கிரேக்கச் சொல்லுக்குப் பொருள் மக்கள்—குடிகள்—என்பதாகும்.

கிரேட்டின் எனும் கிரேக்கச் சொல்லுக்கு ஆட்சி என்பது பொருள்.

இந்த இரண்டு கிரேக்கச் சொற்களின் கூட்டு அமைப்பாகவே டெமாக்ரசி (Democracy) என்ற ஆங்கிலச் சொல் எழுந்தது.

கிரேக்கர், நகர அரசுகளை அமைத்திருந்தனர். ஒரு நகரத்து மக்கள் அனைவரும் சந்தைச் சதுக்கத்தில் கூடி ஆட்சிமுறைபற்றியும், அலுவல்கள் குறித்தும், பேசி, முடிவெடுப்பர். எளிதாக முடிந்தது. ஆனால், அரசு விரிவடைய விரிவடைய, மக்கள் தாமே தம்மை ஆட்சி செய்துகொள்வது என்பது இயலாததாகி விடவே, மக்கள் ஆட்சி செய்திட தமக்குள் சிலரைத் தேர்ந்தெடுக்கும் முறையை மேற்கொண்டனர்.

பொதுவாக, குடியாட்சி என்றதும், நாம் அதனுடைய துவக்கமும் முடிவும் தேர்தலிலேதான் இருக்கிறது என்று எண்ணிக்கொள்கிறோம்—தவறாக.

தேர்தலின்போது சிலரை நமக்காகத் தேர்ந்தெடுத்து விடுவதுமட்டுமல்ல, குடியாட்சி. அவர்கள் எவர்? ஏன் அவர்களிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்புவிக்கவேண்டும்? பொறுப்பை மேற்கொண்ட பிறகு அவர்கள் அதனைச் செம்மையாக நிறைவேற்றுகிறார்களா என்றெல்லாம் தெரிந்து கொள்ளும் தெளிவும், விழிப்புணர்ச்சியும், அவர்கள் தவறாகச் சென்று விடுவரேல், அவர்களை நீக்கிடும்துணிவும் இருக்கவேண்டும். இது தேர்தலுக்குத் தேர்தல் முளைத்து, தேர்தல் முடிந்ததும் மடிந்துவிடுவதாக இருந்தால், குடியாட்சி கெடும்-கோமான்கள் கிளம்பிக் கொட்டமடிப்பர்.

மக்களுடைய எண்ணத்திலேயே, குடியாட்சிக் கோட்பாடு இழைந்திருக்கவேண்டும்.

மக்கள், தமது செயலிலெல்லாம், குடியாட்சிக் கோட்பாட்டை மேற்கொண்டு ஒழுகவேண்டும்.

பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளும் தெளிவும், தமது கருத்துக்களை எடுத்துக்கூறும் பயிற்சியையும், அதற்குமாறான கருத்து கூறப்படும்போது கேட்டுக்கொள்ளும் பொறுப்புணர்ச்சியும், நிரம்பவேண்டும். சொல்லாலும், செயலாலும் எவர்மீதும், தனது ஆதிக்கத்தைப் புகுத்தக்கூடாது, ஏனெனில், அது மனித தர்மத்துக்கு, அடிப்படை உரிமைக்கு உலைவைக்கும் என்ற உணர்வு இருந்தாக வேண்டும்.

ஏனெனில், குடியாட்சி என்பது அரசாட்சிக்கான முறைகளிலே ஒன்று என்பதுமட்டுமல்ல, மனித மேம்பாட்டை, அனைவரும் சமம் என்ற நெறியைச் செயல் படுத்தும் முறையாகும்.

"நான் எவ்வாறு ஒரு அடிமையாக இருக்கமாட்டேனோ அவ்வாறே ஒரு எஜமானனாகவும் இருக்கமாட்டேன்" என்றார் ஆப்ரகாம்லிங்கன்.

இந்த தத்துவத்தின்மீது கட்டப்படுவதே உண்மையான குடியாட்சி.

எது நல்லது எது கெட்டது என்பதைக் கண்டறியும் திறமை, எல்லோருக்கும் உண்டு என்ற நம்பிக்கையின்பேரில், குடியாட்சி முறை அமைக்கப்படுகிறது.

குழந்தாய்! நீ அறியமாட்டாய்!! — என்று குரு



கூற, "உண்மைதான் மகானே!" என்று கூறி, கட்டளைக்குக் காத்துக்கிடக்கும், சமூக அமைப்பிலே குடியாட்சி நிலைத்து நிற்காது.

நாம் கூறுகிறோம்! என்ற மிரட்டிடும் மேலோன் குரல் கேட்டு, அடிபணிவோர் நிரம்பிய சமூகத்திலும் குடியாட்சி முறை நிலைத்து நிற்க முடியாது.

நான் கருதுகிறேன் — சரி எனப்பட்டால் ஏற்றுக் கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்; தவறு என்றால் எடுத்துக்காட்டு கேட்டுக்கொள்கிறேன் என்ற பேச்சும் மனப்பாங்கும் உள்ள இடத்திலேதான் குடியாட்சி முறை பயன் தரும்.

எனவே, தேர்தல் காரியமாக மட்டும் இதனைக் கொள்ளாது, நேர்த்தியானதோர் சமூக அமைப்பைக் காணும் முறையாகவும் கொண்டிடல் வேண்டும்.

குடியாட்சி முறை செம்மையாக நடைபெற்று, சீரிய பயன் தரவேண்டுமானால், அது ஆட்சிமுறை யாக மட்டுமின்றி, சமூக வாழ்வு முழுவதிலும், அது போன்றே ஒவ்வொருவரின் தனி வாழ்விலும் கலந்து, இழைந்து, இருந்திட வேண்டும்.

இதற்கு, என்னைப்போலத்தான் அவரும்; எனக்கு உள்ள உரிமை அவருக்கும் உண்டு; என்று எண்ணிடும் மனப்பாங்கு இருந்திடவேண்டும்.

இந்த மனப்பாங்கு, ஜாதி, மதம் போன்றவை களாலோ, செல்வத்தின் காரணமாகவோ, பிளவுபட்டு, பேதப்பட்டு, பல பிரிவுகளாகி உள்ள சமூகத்தில் எழாது; புகுத்தினாலும் நிலைக்காது.

எனவேதான், குடியாட்சி முறை அரசியலில் வெற்றி அளிக்கவேண்டுமென்றால், அதற்கேற்ற சமூக அமைப்பு பேதமற்ற சமூக அமைப்பு ஏற்பட்டாக வேண்டும் என்று உணர்ந்து, மெள்ளமெள்ள அந்த பேதங்களைப் போக்கிடும் முயற்சியிலும் அறிவாளர்கள் முனைந்து பணியாற்றி வருகின்றனர்.

மனித மேம்பாட்டை மாய்த்திடும் பேதம் நிரம்பிய சமுதாயத்தில், 'ஆளுக்கு ஒரு ஓட்டு' என்ற அளவுக்கு மட்டும் குடியாட்சிக் கோட்பாட்டைப் புகுத்தி நடை முறைப்படுத்திப் பார்ப்பது, பச்சை மண்பாண்டத்தில் தண்ணீர் பெய்திடும் பேதமை போன்றது.

'ஓட்டு' பெற்றிருப்பதில் மட்டும், நாம் அனைவரும் சமம் — மற்றமற்றவற்றில் பேதங்கள் இருக்கலாம் — இருக்கிறது — இருக்கட்டும் — என்று கூறிக்கொண்டு, குடியாட்சி முறையை நடைமுறைப்படுத்தும் போக்கு, ஒன்றின்மேல் ஒன்றாகச் செங்கற்களை வைத்துவிட்டால் நெடுஞ்சுவர் அமைந்துவிடும் என்று எண்ணிடும் போக்காகும். ஒன்றோடொன்று பொருந்தி நிற்க, தனித் தனிக் கற்களின் வலிவும் கூட்டாகி பொது வலிவு காண, சாந்து இடவேண்டும்.

ஆகவே, குடியாட்சி முறையை மேற்கொள்ளும் நாடு, பேதமற்ற சமூக அமைப்பையும் பெற்றாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது.

இன்று அத்தகைய சமூக அமைப்பு இல்லை; ஆனால் அத்தகைய சமூக அமைப்பு ஏற்பட்டாக வேண்டும் என்பதனை வலியுறுத்தாத முற்போக்காளர் இல்லை; அவர்கள் இன்னமும் முழுவெற்றி பெற்றிட வில்லை, ஆயினும் அவர்களின் பணி பயனளித்துக் கொண்டுவரத்தான் செய்கிறது.

எல்லோருக்கும் மேலாக ஒருவன் மன்னன் என்று இருப்பானேன்! அப்படி ஒருவன் பிறப்பானேன்!! — என்று கேட்டிடும் துணிவு பிறந்தானபிறகு; என்னை விட மேலான வகுப்பு என்று கூறிக்கொள்ள உனக்கென்ன உரிமை; உனக்கு அடங்கிப்போக வேண்டும் என்ற நிலையை நான் எப்படி ஏற்றுக் கொள்வேன் என்று கேட்பதிலே, குற்றமுமில்லை, மிகப் பெரிய துணிவும் தேவையில்லை. மன்னனை மறுத்திட்ட மனப்போக்கின் தொடர்ச்சியே அது.

ஆனால் அந்தத் தெளிவு எல்லோருக்கும் ஏற்பட வேண்டுமானால், பிறப்பால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றொன்று இல்லை, என்ற கருத்தினைப் பெறத்தக்க விதமான கல்வி பரவிடவேண்டும். ஆக, குடியாட்சிக் கோட்பாட்டுக்குத் தேவையான கல்வி முறையை மேற்கொண்டாக வேண்டும். பேதத்தைப் புகுத்தும் ஏடுகள், எண்ணங்கள், ஏற்பாடுகள் நீக்கப்பட வேண்டும். இதன் பொருள் என்ன? சமூகத்திலே பல்வேறு துறைகளிலும் புரட்சி பூத்திடுவது என்பதாகும்.

குடியாட்சி என்பது மன்னனின் மணிமுடியைப் பறித்துவிடுவது மட்டுமல்ல, மனிதன், வேறு எந்த விதமான பிடியிலும், பேதத்திலும் தன்னைச் சிக்கிக் கொள்ளவிடாமல் பாதுகாத்துக்கொள்வதுமாகும்.

ஆகவேதான், குடியாட்சி என்பது ஒருமுறை மட்டுமல்ல. ஒருநெறி என்றனர் அறிவாளர்.

குடியாட்சியின் முழுப் பொருளையும் வடிவத்தை யும் காணக்காணத்தான் அதனுடைய மேம்பாடு நன்கு விளங்கும்; விளங்கும்போதுதான், நான் குடியாட்சிக் காகத் தொண்டாற்றுகிறேன் என்று கூறிக்கொள்வ திலே பெருமிதம் பிறக்கும்.

வெறும் தேர்தல் முறையாக மட்டும், குடியாட்சியைக் கருதிக்கொள்வோர் தேர்தல் முறையிலே நெளியும் கேடுபாடுகளை மட்டும் கண்டு வெகுண்டும் வெதும்பியும், குடியாட்சியாவது மண்ணாவது என்று பேசுகின்றனர்.

குடியாட்சி என்பது ஒரு நெறி என்பதனை உணர்ந்து அதற்காகப் பணியாற்றும்போது ஏற்படும் பெருமிதம் வெறும் தேர்தலிலே மட்டும் கவனம் செலுத்தும்போது ஏற்படத்தான் செய்யாது.

அதிலும், நம்முடைய சமூக அமைப்பு, முற்றிலும் குடியாட்சி நெறியின் அடிப்படையில் மாற்றி அமைக்கப் படாத நிலையில் இன்றைய தேர்தல்களில், பல்வேறு ஈர்க்கும் சக்திகளும் தேய்க்கும் சக்திகளும், முளைத்து நிற்கத்தான் செய்கின்றன; மறுப்பதற்கில்லை ஆனால், இஃது, குடியாட்சியின் குறையோவென்றால், இல்லை; குடியாட்சிமுறையை மட்டும் மேற்கொண்டு, அந்த நெறியை மேற்கொள்ளாததால் வந்த கேடு என்பதனை உணர வேண்டும். உணரும்போதுநெறிபரவிட நிலைத்திடப் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம் நிச்சயமாக எழும்.



குடியாட்சி நெறியைக்குலைத் திடத்தக்க பேத உணர்ச்சிகளை எதிர்த்துப் போராடி ஒழித்துக்கட்டும் பணி குடியாட்சிக் கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்கள் மேற்கொண்டாக வேண்டிய திருத் தொண்டாகும்.

தேர்தல்களின்போது மயக்க மொழிகள் பேசப்படும் அறிந்து நீக்கிடவும், தெரிந்து தெளிவு பெறவும் அறிவாற்றல் வேண்டும்.

தேர்தல்களின்போது பிரச்சினைகள் குழப்பப்படும்; உண்மையைக் கண்டறியும் திறன் வேண்டும்.

பழிபோட்டுத் தலை வாங்குதல், இழித்துப் பேசி கழித்துக் கட்டுதல், சிண்டு முடித்தல் வல்லடி செய்தல் போன்ற முறைகள் மேற்கொள்ளப்படும். இவைகள் நமது நோக்கத்தைக் கெடுத்திடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

தமக்குக் கிடைத்துள்ள வசதிகள் காரணமாக, தொடர்ந்து மக்களை அணுகி, அவர்கள் ஆதரவைக் கேட்டிட சிலருக்கு இயலும்; அவர்கள் அதுபோதும் என்றிராமல், மற்றவர் அதேபோலே, மக்களை அணுகி ஆதரவு தேடிடும் வாய்ப்பினைப் பெற விடாமல் தடுப்பதிலும் முனைவர்.

இவற்றினுக்கெல்லாம் மேலாக—மேலாக என்றால் வரிசையில், தரத்தில் அல்ல!—மக்களின் ஆதரவைப் பெற, பணபலத்தைப் பயன்படுத்தும் அக்ரமம் வேறு நடக்கும்.

இத்தனைக்கும் தப்பிப் பிழைக்கவேண்டும், குடியாட்சி முறை.

இன்று ஆளவந்தார்களாக்கப்பட்டிருக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கு இந்த முறைகளிலே கிடைத்துள்ள வசதிகளையும் வலிவு வகைகளையும், எண்ணிப் பார்த்தால் போதும், எதிர்த்து நிற்கும் துணிவு பலருக்கு எழாது. பலர், இந்த நடுக்கம் காரணமாகவே, எதிர்த்துப் பயன் இல்லை, எடுபிடி ஆகிவிடுவோம் என்ற நிலைக்குச் சென்றுவிட்டனர். சரிந்து விட்டனர். திராவிட முன்னேற்றக் கழகம் துணிந்து நிற்கிறது, இத்தனை பெரிய வலிவினையும் எதிர்த்தபடி. காரணம் என்ன? திராவிட முன்னேற்றக் கழகம், குடியாட்சியை நடைமுறையாக மட்டுமல்ல, நெறியாகக் கருதுகிறது; எனவே அந்த நெறிக்காகப் பணியாற்றுவதிலே ஆர்வமும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறது; அந்த ஆர்வமும் நம்பிக்கையும், மலைகளைக் கடக்கவும், மடுக்களை நீந்தவும் வைக்கிறது.

முடியுமா? வெற்றி கிட்டுமா? என்பதல்ல கழகத்தின் முன் உள்ள கேள்விகள்—குடியாட்சி எனும் நெறி பரவவேண்டாமா? அதற்காகப் பணியாற்ற வேண்டாமா? என்பவைகளே!

வெற்றி—எப்படியும் வெற்றி—எதைச் செய்தாகிலும் வெற்றி—என்று மட்டும் கருதுபவர்கள், எதிர்த்து நிற்பதைவிட இணைந்து பலன் பெறலாம் என்கின்றனர். அதிலே அவர்கள் வெற்றியும் காண்கின்றனர். ஆனால் அந்த வெற்றி அவர்களுக்குச் சுவைதரும்; சமூகத்திற்குப் பலன் கிடைத்திடாது. கழகம் மேற்கொண்டுள்ள பணி, சமூகத்திற்கு, குடியாட்சி நெறிக்கு வெற்றியைத் தேடித்தரும் பெரு முயற்சியாகும்.

இந்த நோக்கத்துடன் பணியாற்றுவதால்தான், கழகம் தேர்தல் வரட்டும் அப்போது பார்த்துக் கொள்ளலாம், அதுவரையில், தேர் திருவிழா பார்க்கலாம், தோட்டம் துரவு அமைக்கலாம், வட்டி வாடகை திரட்டலாம், காடு கழனியாக்கலாம் என்று இருப்பதில்லை; தொடர்ந்து பணிபுரிகிறது; ஆட்சி முறையை விளக்கியபடி இருக்கிறது; எழும் பிரச்சினைகளை எடுத்து விளக்கிக் காட்டுகிறது; மக்களுக்கு ஊறுவிளைவிக்கும் எந்தச் செயலை ஆட்சியினர் மேற்கொண்டாலும் கண்டித்து வருகிறது.

அப்போதைக்கப்போது எடுத்துக்காட்டுவானேன், மொத்தமாகக் கூட்டிவைத்து, தேர்தலின்போது எடுத்துக்காட்டலாமே என்று கூறுவார் உளர்; கழகத்தில் அல்ல!

தேர்தல் நேரத்தில் துவங்கி, எல்லாப் பிரச்சினைகளையும் விளக்கிக் காட்டி, மக்கள் தங்கள் வாக்குகளைச்

சரியான முறையில் பயன்படுத்தும்படிச் செய்வது, முடியாதது மட்டுமல்ல, கூடாததுமாகும்.

இன்று பிரச்சினைகள் பலப்பல; பல்வேறு வகையின! இவைகளை எல்லாம் ஆர அமர சிந்தித்துப் பார்த்து முடிவெடுக்கத்தக்க நிலையில் எத்தனைபேர் இருக்கமுடியும்? வாழ்க்கைச் சுமை அழுத்துகிறது; காலக் கணைகள் துளைக்கின்றன, எனவேதான், பிரச்சினைகள் எழும்போதே, கழகம், அவைகளைச் சந்தித்து, நன்மை, தீமை கண்டறிந்து மக்கள் மன்றம் சென்று எடுத்துக் கூறி வருகிறது.

தொடர்ந்து இதுபோலப் பணியாற்றிவரும் நிலையிலேயே தேர்தலின்போது, புதிர் போடவும், அதிர்வேட்டு விடவும், சாகசச்: சதிராடவும் காங்கிரசார் முனைந்துவிடுகின்றனர்; வெற்றியையும் தட்டிப் பறித்துக்கொள்கின்றனர் என்றால், ஓய்வு எடுத்துக் கொண்டு தேர்தலின்போது பார்த்துக் கொள்ளலாம் என்று கழகம் இருந்துவிடுமானால், நிலைமை என்ன ஆகும்!!

தெளிவு, துணிவு தேவை — குடியாட்சிக் கோமான்களின் கொட்டம் அடக்க — இந்தத் தெளிவும் துணிவும் திடீரென்று பெற்றுக்கொள்ளக் கூடியதல்ல — மக்கள் இந்தத் தெளிவையும் துணிவையும் பெறுவதற்காக நாம் ஓயாமல், தொடர்ந்து பணியாற்றியபடி இருந்தாகவேண்டும். அந்தப் பணியின் தரத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது, குடியாட்சி ஒரு நெறியாகி மக்களை வாழவைக்கப்போகிறதா, அல்லது வெறும் முறையாக மட்டும் இருந்து குடியாட்சிக் கோமான்கள் கொட்டமடிக்கும் நிலையை நீடிக்கச்செய்யப்போகிறதா என்பது.

நமது மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்

கலைகள் சிறந்த காஞ்சியில்!
கண்ணைக் கவரும் வண்ணவண்ணப்
பட்டுச் சேலைகள், நூல் & மில்
ஜவுளிகள் வாங்க சிறந்த இடம்

கற்பகம் & கோ,
பட்டு, நூல் & மில்
ஜவுளி வியாபாரம்
177, காந்திரோட்,
காஞ்சிபுரம்

6-ம் பக்கத் தொடர்ச்சி

விழி உண்டு பார்வை இல்லை; வாயுண்டு பேசும் திறனில்லை; வளமுண்டு, வாழ்வு இல்லை; இதுபோல, நம் நாடுபற்றிப் பேசிடக் கேட்கின்றோம்.

ஏன் இந்தநிலை? எதனால் இம்முரண்பாடு? எவர் செய்த செயலால் இந்தச் சீரழிவு? என்பதனைக் கண்டறிய வேண்டாமோ? வளரவேண்டிய முறையிலும் அளவிலும் பயிர் வளரவில்லை என்றதும், உழவன், தம்பி! என்னென்ன எண்ணுகிறான்? என்னென்ன கேட்கின்றனர் அவனை, பூமிநாதர்கள்!!

நாடுமுழுவதிலும் இன்று உள்ளதோர் நலிவுநிலை குறித்து, காரணம் கண்டறிய, கேடு களைந்திட, நலம் விளைவித்திட நன்முயற்சியில் ஈடுபட வேண்டாமோ? இல்லையே. அந்த நன்முயற்சியும், ஒருவரிருவர், சிறு குழுவினர் மேற்கொண்டால் பலன் மிகுந்திராது, கிடைப்பதும் அவர்க்கு மட்டுமன்றோ போய்ச் சேரும். நாடு வளம்பெற, பெற்றவளம் அனைவருக்கும் பயன் பட, பயன்படும் முறையை எவரும் பாழாக்காதிருந்திட, தனித்தனியாக முயற்சி செய்யப்படுவது, வளர்ந்து விட்டுள்ள சமுதாயத்திலே முடியாததாகும்; இதற்கான முயற்சியினை மேற்கொள்ள வேண்டுவது, அரசு.

அரசு, தம்பி! அமைந்துவிடுவது அல்ல, நாம் அமைப்பது. அரசு நடாத்துவோரும், இதற்கென்று எங்கிருந்தோ எல்லாவிதமான ஆற்றலையும் பெற்றுக் கொண்டு இங்கு வந்தவர்கள் அல்லர்; நம்மில் சிலர்; நமக்காக, நம்மாலே நமைஆள அமர்த்தப்பட்டவர். பொருள் என்ன? விதைக்கேற்ற விளைவு! அரசு அமைத்திடும் திறம்நமக்கு எவ்விதம் உளதோ அதற்கு ஏற்பவே அரசு! எனவே நாட்டு வளம்காண அரசு முயற்சியில் ஈடுபடல்வேண்டும் என்று கூறிவிட்டு, நாம் கைகட்டி வாய்பொத்திக் கிடந்திடின் பயன் இல்லை; வல்லரசு அமைத்திடும் முயற்சியினைத் திறம்பட மேற் கொண்டு அதிலே நாம் வெற்றி பெற்றிடல் வேண்டும். உழவன்பெற்ற வெற்றிகளன்றோ உன்னைச் சுற்றி இன்று! செந்நெலும், காயும்கனிவகையும், உண்பனவும் உடுப்பனவும், பூசுவனவும் பூண்பனவும்!! அவன் பெற்றவெற்றிக்காக எத்துணை உழைப்பினைநல்கினன். நாடு முழுதும் வளம்பெற, ஓர் நல்லரசு அமைத்திட வேண்டுமே, அந்தப் பணிக்காக நாம் எத்தனை அளவு உழைத்துள்ளோம்? அதுகுறித்து நம்மக்கள் எந்த அளவு தமது சிந்தனையைச் செலவிடுகின்றனர்? சிந்தனையில் எந்த அளவு தெளிவு பெற்றுள்ளனர்? தெளிவு பெற்றிடத்தக்க நிலையில், எத்தனை பேர்களுக்கு வாழ்க்கை அமைந்திருக்கிறது? எண்ணிப்பார்த்திடும் போது, தம்பி! ஏக்கம் மேலிடும். ஆனால் ஏக்கம் மேலிட்டு ஏதும் செய்ய இயலாநிலையினராகிவிடின் நாடு காடாகும்; மக்கள் பேசிடும் மாக்களாவர். எனவே அந்த ஏக்கம், நம்மைச் செயல்புரிய வைத்திடும் வலிவாக மாறிடவேண்டும்; மாற்றிடவேண்டும். உலகிலே பல்வேறு நாடுகளில், இடர்ப்பட்ட மக்கள், இழிவு நிலையினில் தள்ளப்பட்ட மக்கள், துக்கத்தால் துளைக்கப்பட்டு, ஏக்கத்தால் தாக்கப்பட்டு, இதயம் வெந்து, இடுப்பொடிந்து ஏதும் செய்ய இயலாத நிலையினராகி விட்டவர்போக, சிலர்-மிகச்சிலர்-துணிந்து எழுந்தனர், எதிர்த்துநின்றனர், வெற்றிகண்டனர். பெருமூச்சிலிருந்து புன்னகை பிறந்தது! சிறைக்கோட்டங்களிலிருந்து மக்களாட்சி மன்றங்கள் அமைந்தன. வெட்டுண்ட தலைகளிலிருந்து கொட்டிய இரத்தத் துளிகள், கொடுமையை வெட்டி வீழ்த்தும் கூர்வாளாயின!

இதுபோல் ஆகும் என்பதனை அன்றே உணர்ந்து உரைத்தார் பொய்யா மொழியார்.

ஏழை அழுத கண்ணீர் கூரியவாளொக்கும்

என்பதாக. கொடுமைக்கு ஆளான மக்கள் கொட்டிய கண்ணீர், ஆதிக்கக் கோட்டைகளைத் தூளாக்கிடும் வெடிகுண்டுகளாயின. வரலாறு காட்டுகிறது, வல்லூறை விரட்டிய சிட்டுக்குருவிகளின் காதையை! நமது மக்களுக்கு இதனை எடுத்துக்கூறுவார் யாருளர்! கூறுவதுமட்டுமோ! கருங்குருவி மோட்சம் பெற்ற காதையும், கரிவலம் வந்த சேதியுமன்றோ அவர்கட்கு இசைநயத்துடன் கூறப்பட்டு வருகிறது.

தம்பி! ஊர்ந்து செல்லும் ஆமையைக்கூட, பாய்ந்து செல்லும் புரவிகள் பூட்டிய வண்டியில் வைத்தால், போய்ச்சேரவேண்டிய இடத்திற்கு விரைவாகவும் எளிதாகவும் போய்ச்சேரும். இங்கு நாம் ஆமைகள் பூட்டிய அலங்கார வண்டியில் பாய்ந்தோடவல்ல குதிரையை ஏற்றிவைத்து, ஒரு விந்தைப்பயணம் நடத்திப்பார்க்கிறோம். கனிபறித்துச் சாறு எடுத்துப்பருகிடுவார் உண்டு; முறை; தேவை; இங்கு நாமோ, கனி எடுத்துச் சாறுபிழிந்து, அந்தச்சாற்றினைக் காய்கள் மேல்பெய்து தின்று பார்க்கின்றோம்.

இந்த நாட்டிலேதான் தம்பி! இந்த இருபதாம் நூற்றாண்டில், இத்தனை திரித்துக் கூறுவதும் இருட்டடிப்பிலே தள்ளுவதும், இட்டுக்கட்டுவதும், இழிமொழி பேசுவதும், தாராளமாக நடத்திச்செல்லமுடிகிறது, ஆதிக்கக்காரர்களால். இங்கு நாம் மனிதத் தன்மைக்காகவும் பகுத்தறிவுக்காகவும் வாதாடினால், நாத்தீகப்பட்டத்தைச் சுமத்திவிடுவதும்,

ஒற்றுமைப்படவேண்டும், பேதம் கூடாது, அதனை மூட்டிடும் ஜாதிகள் கூடாது என்று பேசினால், சமுதாயக் கட்டினை உடைக்கிறோம் என்று பழி சுமத்துவதும்,

பெண்ணை இழிவுபடுத்தாதீர் என்று பேசினால், ஒழுக்கத்தைக் கெடுக்கிறோம் என்று ஓலமிடுவதும்,

ஏழையின் கண்ணீரைத் துடைத்திடுக! என்று கூறினால், வர்க்கபேதமூட்டி புரட்சி நடத்தப்பார்க்கிறான் என்று பேசி பகைமூட்டியும்,

ஆட்டிப்படைக்கும் அளவுக்கு அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்துவைத்துக் கொள்வது நல்லதல்ல; அதிகாரத்தைப் பரவலாக்கிடுக! என்று கூறினால் அரசு அமைப்பை உடைக்கப்பார்க்கிறான் என்று கொதித்தெழுந்து கூறியும், நாம் மேற்கொள்ளும் முயற்சிக்கு மக்களின் நல்லாதரவு கிடைத்திடுவதைத் தடுத்திடும் நோக்குடன் செய்துவருகின்றனர்.

தம்பி! தம்பி! தூய தமிழுக்காகப் பேசிப்பார்! ஓ! இவனுக்கு 'மொழிவெறி' என்று கூறிக் கிளம்புவர் கோலோச்சும் குணாளர்கள்.

சங்கத் தமிழ் மணக்கும் தமிழகத்தவர்க்கும் சேர்ந்தா இந்தியெனும் ஆட்சிமொழி என்று கேட்கின்றோம்; தேசபக்தி அற்றவர்கள் என்றன்றோ தூற்றப்படுகின்றோம்?

கண்ணீர் வடித்திடுகின்றனரே பல லட்சம் தமிழர் கடல் கடந்து சென்றுள்ள நாடுகளிலே; கொடுமையாளர்களால்; என்று பேசும்போது, இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் பகைமூட்டுகிறான்; பாதுகாப்புச் சட்டத்தின்படி இவனைப் பிடித்தடைக்கவேண்டும் என மிரட்டுகின்றனர்.

தொழில்கள் மிகுதியாக நாட்டின் ஓர் பகுதியில் குவிந்திடல், பொருளாதார ஏற்றத்தாழ்வை உண்டாக்

கிடும்; எனவே, புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கும் தென்னகத்தில் புதுப்புதுத் தொழிலைத் துவங்கிடுக! என்று கூறிடுவோரை 'பாரதப் பண்பு' அற்ற மாபாவி என்று ஏசுகின்றனர்.

தொழிலில், பெருத்தவருவாய் தரத்தக்கனவற்றை எல்லாம் முதலாளிகளிடம் விட்டுவிடுகின்றீர்களே! இதுவோ சமதர்மம் என்று கேட்டிடின் இவன் தொழில் வளர்ச்சியைக் கெடுக்க முயலுகிறான் என்று கூறுகின்றனர்.

சர்க்கார் துவக்கி நடத்தும் தொழில்களில், தக்க வருவாய் பெறவில்லையே! இது முறையல்லவே! என்று பேசிடின், இவன் சர்க்கார் துறையை வெறுப்பவன், சுதந்திரக் கட்சியினனாகிறான் என்று கலகப் பேச்சை மூட்டிவிடுகின்றனர்.

கண்மண் தெரியாமல் கடன் வாங்கிக்கொண்டு போகிறீர்களே, இது பெருஞ்சுமையாகிவிடுமே, எதிர் காலச் சந்ததி இடர்ப்படுமே! என்று கூறிடின் நாடு வளம்பெற வழிதேடினால் இவன் குறுக்கே நிற்கிறான் என்று குறைகூறுகின்றனர்.

விலைகள் ஏறியபடி உள்ளனவே என்றால், இதைக் கூறி, அரசியல் இலாபம் தேடப் பார்க்கிறான் என்கிறார்கள்.

ஊழல் மலிந்திருக்கிறதே, ஊடுருவிக்கிடக்கிறதே என்றால், எத்தனையோ நாடுகளில் இதுபோல என்று சமாதானம் கூறுகின்றனர்.

தம்பி! எடுத்துரைக்கும் எதனையும் மதித்திட மறுக்கின்றனர்; திரித்துக்கூற முற்பட்டுவிடுகின்றனர். ஏடுகளிலே மிகப்பல இதற்குத் துணைசெய்கின்றன. இந்நிலையில், இவ்வளவு பேர்களாகிலும், துணிந்து பேசுகின்றனரே, என்பது உள்ளபடி பாராட்டி வரவேற்கப்படவேண்டியதே.

நாடே போர்க்கோலம் பூண்டுவிடும் நேரத்தில், நானும் அதில் கலந்திருந்தேன் என்று கூறிக்கொள்வதிலே கிடைத்திடும் பெருமை அதிகமில்லை; இன்று நம்முடன் நாட்டவரில் பலர் இல்லை, நல்லறிவு கொளுத்தி நல்லாட்சிகாணப் பாடுபடும் கடமையுடன் பணியாற்ற வேண்டிய இதழ்களில் பல இல்லை என்ற நிலையில், எவர்வரினும் வாராதுபோயினும், இன்னலுடன் இழிவு சேர்ந்து வந்து தாக்கினும், இவன் நமக்காகப் பாடுபடுகிறான் என்பதனைக் கூறிடவும் பலருக்கு நினைப்பு எழாது போயினும், எத்தனை சிறிய அளவினதாக இப்படை இருப்பினும், இதிலே நான் இருந்து பணி புரிவேன்; என் இதயம் இடும் கட்டளையின்படி நடந்திடுவேன்; என் நாட்டைக் கெடுக்கவரும் எதனையும், எவரின் துணைகொண்டு வந்திடுவதாயினும், எதிர்த்து நிற்பேன், சிறைக்கஞ்சேன், சிறுமதியாளர்களின கொடுமைக்கஞ்சேன், செயலில் வீரம், நெஞ்சில் நேர்மை, உறுதிகொண்டிட்டேன், செல்வேன் செருமுனை நோக்கி என்று சென்று அணிவகுப்பில் சேர்ந்துளரே அவர்க்கே பெருமை அளவிலும் தரத்திலும் மிகுதி! மிகுதி!

அத்தகைய அணிவகுப்பில் தம்பி! நீ உள்ளாய்; அகமகிழ்ச்சி எனக்கு அதனால்; உன் ஆற்றல் நானறிவேன், நானிலம் அறியும் நாளும் வந்தேதீரும். பூத்த மலரிலெல்லாம் வாசம் உண்டு; நுகர்வோர் குறைவு என்றால், மலர்மீது அல்ல குற்றம். இதோ இந்தப் பொங்கற் புதுநாளன்று, எத்தனையோ இல்லமதில், என் அப்பா சிறை சென்றார்! என் அண்ணன் சிறை சென்றான்! என் மகன் சிறை சென்றான்! செந்தமிழைக் காத்திடவே, சிறை சென்றான் என் செம்மல்! என்று பேசிப் பெருமிதம் அடையத்தான் செய்வர். பலப் பல இல்லங்களில், பாற்பொங்கல் இன்றிங்கு, பண்பற்ற ஆட்சியாளர் என் மகனை இங்கிருக்க விட்டாரில்லை; இருட்சிறையில் அடைத்திட்டார்; இருப்பினென்ன! கண் கசிய மாட்டேன் நான், கடமை வீரனவன்! காட்டாட்சி போக்குதற்குப் போரிட்டான்; மகிழ்கின்றேன்! என்று கூறிடுவர்; தமிழ் மரபு அறிந்ததனால்.

பொங்கற் புதுநாளில் எத்தனையோ இல்லமதில், இணைந்து நம்மோடு இல்லாது போயிடினும், நம்மைப் பற்றி எண்ணாதார், இல்லை என்று கூறிடலாம். மக்களைத்தாக்கிடும் கேடு எதுவானாலும், கேட்டிட முன்வருவோர் கழகத்தார்! ஆமாம்! அவர்கள் கேட்ட உடன், பாய்கின்றார் அரசாள்வோர், எனினும் பயமும் கொள்கின்றார்; பாவிமகன் கழகத்தான் பற்பலவும் கூறித்தான், அம்பலப்படுத்தி நம் ஆட்சிக்கு ஆட்டம் கொடுத்தபடி இருக்கின்றான் என்றஞ்சிக்கிடக்கின்றார் ஆளவந்தார் எனப்பேசிச் சிரித்திடுவர். புள்ளினம் கூவினதும், பூக்கள் மலர்ந்ததும், புறப்பட்டான் கதிரவனும்,புறப்படுவோம் துயில்நீங்கிஎன்றுஎல்லா மாந்தருமா கிளம்புகின்றார்? கிளம்பாதுள்ளோர் கண்டு கதிரவன் கவலை கொள்ளான். பாடிடவோ மறவாது புள்ளினந்தான், மலர்ந்து வரவேற்கும் பூக்களுமே! தம்பி! கதிரவனாய், கானம்பாடிடும் வானம்பாடியாய், மணம் பரப்பிடும் மலராக நீ இருக்கின்றாய். மட்டற்ற மகிழ்ச்சி எனக்கு, மாசற்றது உன் தொண்டு என்பதனால். நாம் ஈடுபட்டுள்ள பணி எதனையும் எடுத்தாய்ந்து பார்த்திட்டால், தூயது அப்பணி, அறிவாளர் வழிநின்று ஆற்றுகின்றோம் அப்பணியினை என்பதனை அறிந்திடலாம். வந்து புகுந்துகொள்ளும் இந்தியினை எதிர்க்கின்றோம்; இடரில் தள்ளுகிறார் இந்திக்குத்துணை நிற்போர்; இழித்துப் பேசிவிட்டு, எனக்கென்ன சுவைப்பண்டம் என்று கேட்டு நிற்கின்றார் மாற்றார் தொழுவத்தில், மரபழித்தார்; ஆயினுமென்! நம் கடமைதனை நாம் செய்தோம் என்ற மனநிறைவு நமக்கு இன்று; நாளை வரலாற்றில் அதனைப் பொறித்திடுவர். எதிர்த்தாய் என்னபயன்? இந்தி ஏறும் அரியாசனம் என்பது உறுதியன்றோ! என்று கேட்பாரும், உளர்; கெடுமதியால் நடமிடுவோர். கேட்டிடட்டும். கேலியாம் அம்மொழியும். நம் விலாவை வேலாகக் குத்தட்டும்; ஈட்டியாய் அப்பேச்சு நம் இதயத்தில் பாயட்டும்; இருக்கும் வீரம் பன்மடங்கு கொப்பளித்து எழட்டும்; தூற்றுவோர் தூற்றட்டும், தொடரட்டும் நமது பணி! என்போம் நாம். மலக்குழி கண்டேன் நான், ஒதுங்கி நடக்கின்றேன், மலமே உனக்கு மணமளிக்குதே அந்தோ! என்றுகூட நாம் அன்னவரைக் கேட்டிடல் வீண்வேலை. எதிர்த்து வந்த சிறுத்தையினை எதிர்த்து நின்றேன் வீரமாய் நான்; என் உடலில் அதன் கீறல், பற்கள் படிந்துள்ள நிலைதான்; குருதி கசிகிறது உண்மை; கொல்ல நான் துடிதுடித்தேன், எனைத்தாக்கி ஓடிப் பதுங்கி, உறுமிக்கிடக்கிறது அச்சிறுத்தை; கூடி அதனைத் தாக்கிக் கொன்றுபோட வாராத கோழையே! என்னை நீ கேலிவேறு செய்வதுவோ! சிறுத்தையின் வாயினிலே கசியும் செந்நீரைப் பானமாய்ப் பருகும் ஈ, எறும்பு, பூச்சி, நீ! என்று கூறிடலாம், ஏசித்திரிவோரை! வீண்வேலை! நேரம் இல்லை! நம்மாலானவற்றை நாம் செய்தாக வேண்டும்; நாமிருந்தும் இந்திக்கு எதிர்ப்பு இல்லை என்ற பேச்சு எழவிடோம், இது உறுதி.

மொழித் துறையினிலே புகுத்தப்படும் அக்ரமம் நிறைந்த ஆதிக்கம், அத்துடன் நில்லாது. காலிலோ கரத்திலோ எந்த இடத்திலே கருநாகம் தீண்டினும்,

உடலெங்குமன்றே விஷம்பரவி உயிர் குடிக்கும். அஃதே போல, மொழித் துறையினிலே ஆதிக்க நச்சரவு பதித்திடும் பல்லினின்றும் கக்கிடப்படும் நஞ்சு, தமிழரின் உடல் முழுவதிலும் பரவும்; வாழ்வு அழியும்.

மொழி ஆதிக்கம், நிர்வாக ஆதிக்கத்துக்கு இட மேற்படுத்தும், அஃது பொருளாதார ஆதிக்கத்திற்கு வழி கோலும், பிறகோ தமிழர் அரசியலில் அடிமைகளாகி, அல்லற்படுவர். இதனை அறிந்தோர் கூறி வருகின்றனர்; ஆலவட்டம் சுற்றிடுவோர் மறுத்துப் பேசி, ஆளவந்தார்களை மகிழவைக்கின்றனர்.

எமக்கேன் விடுதலை!! விடுதலை பெற்றால் நம்மைக் காத்திடும் பொறுப்பினை எவர் ஏற்றுக்கொள்வர்? வேலைக்கு வழி ஏது? சோற்றுக்கு வழி ஏது? செத்து விடத்தான் இது வழி. ஆகவே விடுதலை வேண்டாம்!! வெள்ளை எஜமானர்களின் பாதமே நமக்குப் பாதுகாப்பு ...என்று நீக்ரோக்களில் சிலரைப் பேசவைத்தனர் வெள்ளை வெறியர்கள்...விடுதலைக் கிளர்ச்சியை துவக்கிய நாட்களில்.

இங்கு நம்மிடையே உள்ளோரில் சிலர் இந்தி ஆட்சி மொழியானால் என்ன என்று கேட்கும்போது தம்பி! எனக்கு அந்தப் பழய நிகழ்ச்சிதான் நினைவிற்கு வருகிறது. உடலிலேயேதான் நோய் தங்கி இருந்து, உடன் இருந்தே கொல்லுகிறது; பாசி, குளத்திலேயே தான் உண்டாகிறது; களை, வயலிலேயேதான் முளைக்கிறது, காட்டிக் கொடுப்போரும் அதுபோன்றே நமது சமுதாயத்திலேயே உள்ளனர். மினுமினுப்புடன், முடுக்குடன், துரைத்தனத்தாரின் மேய்ப்புத் தேய்ப்புப் பெற்று!! காட்டுக்குதிரைக்கு ஏது, தங்கமுலாம் பூசப்பட்ட கடிவாளம்? இல்லையல்லவா! நாட்டிலே, பூட்டு கிறார்கள் விலையுயர்ந்த கடிவாளம் குதிரைக்கு. எதற்கு? தாம் ஏறிச் செல்லும் வண்டியை அக்குதிரை இழுத்துச் செல்ல வேண்டுமே! காண்போர் எப்படிப்பட்ட விலையுயர்ந்த குதிரை என்று கண்டு, அதனை உடையவரைப் பாராட்டவேண்டுமே...அதற்காக! அதுபோல, தமிழரில் சிலர் உளர்.

தம்பி! மொழிப் பிரச்சினைபற்றி நான் குறிப்பிட்டதற்குக் காரணம் இந்த ஆட்சி, எப்படி யெப்படி ஆதிக்கத்தைப் புகுத்துகிறது என்பதனை எடுத்துக் காட்டிட மட்டுமல்ல; வித்தகர்களின் பேச்சுக்கும் மக்களின் மனக் குமுறலுக்கும் ஒரு துளியும் மதிப்பளிக்காத மமதை கொண்டதாக இருக்கிறதே இந்த அரசு, இதனிடமிருந்து எவர்தான் எந்த நியாயத்தைத்தான் எதிர்பார்த்திடமுடியும்!...என்பது குறித்து எண்ணிடும் போது ஏற்படக்கூடிய திகைப்பையும் எடுத்துக் காட்டத்தான்.

தம்பி! அதோ காண்கிறாயே, கொதி வந்ததும். கிளறிப் பார்க்கிறார்கள்; அரிசி, சோறாகி இருக்கிறது. அரிசிதானே! அதனுடன் கலந்த கல்லுமா? இல்லையே! கல், கல்லாகவேதான் இருக்கிறது, எத்தனை தீ அதனைத் தாக்கிடினும். வேகக்கூடியதைத்தான் வெந்திடச்செய்யலாம். அடுக்களை எடுத்துக்காட்டும் இந்தப் பாடம் அரசியலுக்கும் பொருந்தக்கூடியதே. இந்த 'அரசு' வேகும் பண்டம் கொண்டதல்ல; இது வெந்து சுவைதரும் பண்டமாகும் என்று எத்தனை நேரம் அடுப்பை எரியவிட்டாலும் வீணுகித்தான் போகும், வேகாது. எனவே இந்த வேகாச்சரக்கை எடுத்து வீசிவிட்டு, வேறுகொள்ளவேண்டும். இன்றுள்ள போக்குடனும் இயல்புடனும் இவ்வரசு இருந்துவருமானால் — இருக்க விட்டுவைத்திருப்போமானால் — எந்தஒரு பிரச்சினைக்கும், சிக்கு நீக்கப்பட்டு, மக்கள்மகிழத்தக்க 'பரிகாரம்' கிடைத்திடாது.

உணவுப் பிரச்சினை, விலை ஏற்றப் பிரச்சினை, தொழில்வளம் சீராக அமையும் பிரச்சினை, வறுமையை ஓட்டும் பிரச்சினை, உரிமைப் பிரச்சினை எனும் எதுவாக இருப்பினும், ஒரு ஆணவம், ஒரு அலட்சியப் போக்கு, எல்லாம் எமக்குத் தெரியும் என்ற முடுக்கு, எவர் எம்மை என்ன செய்துவிடமுடியும் என்ற இறுமாப்பு, இவைதான் தலைவிரித்தாடுகின்றன. இதனை ஒவ்வொன்றிலும் பார்க்கிறோம் தம்பி! இலங்கைவாழ் மக்களைக் காட்டிக்கொடுக்கும் ஒப்பந்தமும், பர்மாவாழ் மக்களைப் பதைக்கப் பதைக்க அந்த அரசு இங்கு ஓட்டிவிட்ட தனைப் பார்த்துக்கொண்டு சிறுவிரலையும் அசைக்காது இருக்கும் போக்கும், எதனைக் காட்டுகின்றன? இந்த அரசு மக்களின் நலன்களை, உரிமையினை, வாழ்வை, துச்சமென்று கருதித் துவைத்திடும் இரும்புக்கால் கொண்டது என்பதைத்தானே!!

இங்கிலையுள்ள ஓர் அரசு, நான் குறிப்பிட்டுள்ள முறைப்படி இயற்கைப் பொருளை நுண்ணறிவுடன் விஞ்ஞான முறைப்படி பயன்படுத்தி செல்வம் பெருகிடச் செய்து, பெருகிடும் செல்வத்தை அனைவரும் சீராகப் பெற்று, இல்லாமை, போதாமை எனும் கேடு களையப்பெற்று, எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடத் தக்க புதுமுறையை, பொற்காலத்தை அமைத்திடவா முனையும்! வீண், அந்த எண்ணம். அதற்கு ஏற்றது இந்த அரசு அல்ல! சாறு, கரும்பில் கிடைக்கும்! மூங்கிற் கழியில் கிடைத்திடுமோ!

இதனை இன்று உணர்ந்து, சமுதாயத்தின் அழுக்குகளும் இழுக்குகளும் நீக்கப்படத்தக்கதான முறை கண்டு நடாத்தும் ஓர் அரசு அமைத்திடும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

ஓடப்பர் உயரப்பர் என சமுதாயம் பிளவுபட்டிருக்கும் நிலையை மாற்றிடவேண்டும், எல்லோரும் ஒப்பப்பர் ஆகிடவேண்டும் என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

"அதைத்தானே நாங்கள் செய்து வருகிறோம், சமதர்ம திட்டமிட்டு'! என்கிறார்கள் ஆளவந்தார்கள்.

இவர்கள் மேற்கொள்ளும் சமதர்மத்தைக் கண்டு நாம் கவலைப்படத் தேவையில்லை, இவர்களின் சமதர்மம் நமது உரிமைகளையும் நமக்குள்ள சலுகைகளையும் பாதுகாத்திடும் சமதர்மம்! ஆகவே, முதலாளிகளே! சமதர்மம் என்ற சொல் கேட்டு மிரண்டிடாமல் இந்தியாவில் எத்தனை எத்தனை ஆயிரம் கோடி முதலையும், அச்சமின்றிப் போட்டுத் தொழில் நடத்திடுவீர்!... என்று அமெரிக்க நாட்டு முதலாளிகளுக்கு, அந்நாட்டு அரசியற் பெருந்தலைவர்கள் கனிவாகக் கூறுகிறார்கள்; அமெரிக்கக் கோடீஸ்வரர்கள், இந்தியா போன்ற 'சந்தை' வேறு இல்லை என்று கூறி பேரானந்தம் கொள்கின்றனர்.

அமெரிக்க 'முதல்' வேறு எங்கும் ஈட்டிக் கொடுத்திடாத அளவு 'வருவாய்' இந்தியாவிலே அவர்களால் பெறமுடிகிறது. பெயர் சமதர்மம்!!

நாற்பதனாயிரம் தொழில் வணிகக் கோட்டங்கள் இணைந்த பிரிட்டிஷ் தொழில் அமைப்பு, இதுபோன்றே, "நாம் இந்தியா மேற்கண்டுள்ள சமதர்ம திட்டம்பற்றிக் கவலையோ அச்சமோ கொள்ளத் தேவையில்லை. சமதர்மம் என்று அவர்கள் சொல்லுவதாலே நாம் தொழிலிலே போட்டிருக்கும் முதலுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்பட்டுவிடாது." என்று கருத்தறிவித்திருக்கிறது.

பொருள் விளங்குகிறதல்லவா தம்பி! நோஞ்சான், பயில்வான் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறான், அவ்வளவுதான்! முதலாளிகளின் முகாம் இந்தியா...அதற்குப் பெயர், சமதர்மம்!!

உண்மை நிலை இதுபோல இருப்பதனால்தான் இவர்கள் நடத்திக்கொண்டுவரும் திட்டம், பணக்காரர்களுக்கே பெரிதும் பயன்பட்டு விட்டிருக்கிறது. மகனலோபீஸ் குழு (துரைத்தனமே அமைத்தது) இதனை எடுத்துக்காட்டியும் விட்டது. ஆகவே, ஏழையை வாழவைத்து, எல்லோரும் பொங்கற் புதுநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிடத்தக்கதோர் நிலையைக் காண வேண்டுமானால், இன்றுள்ள அரசை நம்பிக் கொண்டிருந்தால், ஏமாற்றமடைவோம். கவனித்துப் பார், தம்பி! இஞ்சி போடவேண்டிய இடத்தில் மஞ்சளைப் போடுகிறார்களா என்று! அந்தப் பக்குவத்தைக் கவனி! ஒரு வேளைச் சோற்றுக்கு இவ்வளவு பக்குவம், முறை, தெளிவு, முயற்சி வேண்டும். முந்தானை கொண்டு அந்த வியர்வை முத்துக்களைத் துடைத்துக் கொள்ளக்கூட நேரமின்றி உன் குயிலாள் வேலை செய்த பிறகுதான் தம்பி! உனக்குப் பொங்கல், பால், பழம் உழைப்பு! முறையான உழைப்பு! பக்குவமான முறை! இடமறிதல்! நேரமறிதல்! அளவறிதல்!...இத்தனையும் வெறும் சொற்கள் அல்ல!! இவைகளின் வடிவங்களே, மனையிலே காண்கின்றாட்! புதிய சமுதாயம் படைத்திட, இவைகளைக்கண்டுகருத்தறிதல் வேண்டும்.

கண்டு கருத்தறிதலே கடினம்; ஆனால் தேவை; மிகமிகத் தேவை. அறிந்ததை மற்றவர்கட்கு எடுத்துரைத்தல் அதனினும் கடினம்; மிகமிகத் தேவை.

நாடு வாழ்ந்திட, மக்கள் ஏற்றம்பெற, நம் ஆன்றோர்கள் சான்றோர்கள் கூறியனயாவை என்பதனை ஆய்ந்தறிய இவ்விழா நாளில் முயன்றிடவேண்டும்.

இன்றுள்ள புத்தறிவினர் கூறியுள்ளனவற்றினை அன்றிருந்த நம் ஆன்றோர்கள் கூறியுள்ளனர் என்பது, கண்டு, கண்சிமிட்டி மகிழ்ந்திருப்பது மட்டும் பயன் தராது. அன்று முதற்கொண்டு சொல்லியும் இன்று வரை அம்மொழி வழி நாம் நடந்தோமில்லையே என்றெண்ணி வெட்கித் தலைகுனிதல் வேண்டும்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே நமக்கு வள்ளுவர் கூறியுள்ளார். கூறி? ஜாதிகள் இல்லையடி பாப்பா! என்று இந்நாளில் பாரதியார் கூறிக் காட்டவேண்டியதாயிற்று. அதற்குப் பிறகும், ஜாதிப் பிடிப்பும் பித்தமும் நீங்கியபாடில்லையே!! பேழையில் பொருளை அடைத்து பேதை யொருவன் அதன்மீதே, பட்டினி கிடந்த நிலையில் சாய்ந்திருந்தான் என்றால்—அப்படி ஒரு கதை சொன்னால்—வியப்படைகின்றோம். அறிவுப் பேழை இங்கு...ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே!! எனினும் எத்தனை பேதம், பிளவு, மதியற்ற போக்கு, குருட்டுப் பிடிவாதம், முரட்டு வாதம், சே!!

தம்பி! இதனை எண்ணிடும்போது உள்ளபடி வெட்கம் விலாவினைக் குத்திடுகிறது.

ஆகவே அன்றிருந்தோர் கூறிச் சென்ற அரிய கருத்துக்களையும் இன்றுள்ள நூலோர் தந்திடும் நற் கருத்துக்களையும் அறிந்து, மற்றவர்க்கும் அறிவித்து அதற்கேற்ப, நமது முறைகளை, ஏற்பாடுகளைத் திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும். மாக்கோலம் போடக் காண்கிறாயே, உன் மனதை வென்றாள்! வெண்குழம் பினைக்கலயத்திட்டு, தரைதனைக் கூட்டித்துப்புரவாக்கி, என்ன வரைவது எனத் தேர்ந்தெடுத்துத் திட்டமிட்டு, கோலம் போட்டிடக் காண்கிறாய்—வெண் குழம்பைக் கீழே கொட்டிவிட்டு நடப்போர் கால்பட்டுப் பட்டு ஏதேனும் ஓர் கோலம் உண்டாகட்டும் என்றா இருந்து விடுகின்றாள் உன் ஏந்திழை! இல்லையே! சமுதாயம் புதுக்கோலம் கொள்ள, நீயும் நானும் இன்னமும் என்ன வண்ணக் குழம்பு தேவை? எத்தகைய வட்டில் இடுதல் வேண்டும்? என்பது குறித்தே கூட, ஒரு திட்டவட்டமான எண்ணம் கொண்டிடத் தயக்கப்படுகிறோமே! புத்துலகு சமைத்திட எங்கனம் இயலும்?

நமக்கு நெடுங்காலத்துக்குப் பிறகு, அடவி நிலையினின்றும் விடுபட்டு, நாடு கண்ட இனத்தவரெல்லாம் இன்று தத்தமது நாட்டினைப் புதுமைப் பூங்காவாக்கிப் பொலிவுடன் திகழ்கின்றனர். நாமோ, வித்திடும் செயலைத் தானும் முறையாக மேற்கொண்டோமில்லை. சமூக அமைப்பிலும் செயலிலும் நெளியும் கேடுகளைக் கண்டித்திடும் துணிவுடன் நம் பேச்சும் எழுத்தும் உள்ளனவா? இல்லை! ஒரு சிலர் துணிவு பெற்றிடினும், பாய்கின்றனர் அவர்மீது;பாவி!பழிகாரன்! பழைமையை அழிக்கின்றான்! பாபக் கருத்தைப் புகுத்துகின்றான்! நாத்தீகம் பேசுகிறான்! வகுப்பு வெறி ஊட்டுகிறான்!! என்றெல்லாம் கதைக்கின்றனர். ஜாதிப் பிடிப்புகளையும் அவைகளுக்கான மூடக் கோட்பாடுகளையும், 'புதிய நாடுகள்' என்று நாம் வெகு எளிதாகக் கூறிவிடுகின்ற இடங்களில், எத்தனை காலத்துக்குமுன்பே, எத்துணைத் துணிவுடன் தாக்கினர்; தகர்த்தனர்; என்பதனை அறியும்போது, வியப்படைகிறோம்.

ஏழையர்க்காக வாதாடினவர்கள், செல்வபுரிக் கோட்டைகள்மீது தாக்குதல் நடாத்தியவர்கள்; மூட நம்பிக்கைகளை முறியடித்தவர்கள் அங்கெலாம் இருநூறு ஆண்டுகட்குமுன்பே வீரஞ்செறிந்த பாக்களை இயற்றினர்; புரட்சிக் கருத்தினை அளித்தனர்.

இங்கோ, அந்த முனையில் பணியாற்றத் துணிபவனை, பாரதப் பண்பாட்டை அழிப்பவன், பக்தி நெறியைப் பழிப்பவன் என்றெல்லாம் ஏசிப் பேசிடக் கிளம்புகின்றனர்.

1873-ம் ஆண்டு பிறந்தவர் ஆங்கிலக் கவிஞர் ஜான்மேஸ்பீல்டு என்பார். சங்கத்தில் பயின்று, சீமான்களின் அரவணைப்பு பெற்று கவி பாடி அரங்கேற்றினவர் அல்ல! கப்பலில் கூலி வேலை செய்துவந்தவர்; மற்றும் பல கடினமான உழைப்புகளைச் செய்து பிழைத்து வந்தவர்- அவர் "நான் கவி பாடுவேன்! யாருக்காக? ஏழைக்காக!" என்ற கருத்துப்பட ஒரு கவிதை இயற்றினார். அன்று இருந்த அறிவாளர்களிடையேயே அக்கவிதை புரட்சியை மூட்டிவிட்டது என்கிறார்கள்.

எவரைப்பற்றிப் பாடப் போவதில்லை என்பதனை முதலிலேயே தெரிவித்து விடுகிறார் மேஸ்பீல்டு:

வாழ்வின் சுவைதன்னை
வகையாய்ப் பல்லாண்டு
உண்டு உடல் பெருத்து
ஊழியர் புடைசூழ
தண்டு தளவாடமுடன்
தார் அணிந்து தேரேறும்
அரசகுமாரர், அருளதிபர்
தமைக் குறித்து அல்ல!

புலவர் கவிபாடுகிறார் என்றால், அது, மன்னனை அல்லது அருளாளனைப் புகழ, போற்றத்தானே இருக்க முடியும் என்ற எண்ணம் அழுத்தமாக இருந்திருக்கிறது... 1873-ம் ஆண்டல்லவா! அதை அறிந்து, மேஸ்பீல்டு

நான் உங்களுக்குப் பழக்கமான கவிஞன் அல்ல, நான் புதுமைக் கவிஞன்—நான் மன்னனைப் பற்றியுமல்ல, தேவாலயத்து அதிபனைப்பற்றியும் அல்ல பாடப் போவது!!—என்று தெரிவிக்கிறார்.

“அரசகுமாரர்
அருளாலய அதிபர்
தமைக்குறித்து அல்ல!

என்ற துவக்கமே, துணிவு நிரம்பியது. கவிவாணர்கள் நெடுங்காலமாகப் பாடிக்கொண்டு வந்த முறையை நீக்கிவிட்டு, நீ புது முறையில் பாடப்போகிறாயோ? எவரைப்பற்றி? என்று கேட்பார்கள் அல்லவா! கூறு கிறார்!!

இன்னல்தரு ஈட்டிவளையத்துள்
ஆண்டுபல இருந்தோர்
ஏனைதானைக்கள்
எச்சிற் கலையங்கள்
சாவுவரும் வரையில்
சளைக்காது போரிட்ட
கந்தலுடைக்காரர்
களம் கிளப்பும்
தூசி ஓசையுடன்
ஓலம் உளம்மருட்ட
மண்டை உடைபட்டோர்
கண் புண்ணானோர்

இவர்களைப்பற்றித்தான் நான் பாடப்போகிறேன் என் கிறார். இவர்கள் இன்னலைக் கண்டவர்கள், இழிநிலையில் தள்ளப்பட்டுள்ளவர்கள், இவர்களை மற்றவர்கள் கவனியாமல், பூபதிகளைப் பாடிக்கொண்டிருந்து வந்தனர், நான் இந்த

ஏனைதானைக்கள்
எச்சிற்கலையங்கள்

என்று ஒதுக்கிவிட்டிருக்கிறீர்களே, அவர்களைப்பற்றித் தான் பாடப் போகிறேன் என்று தெரிவித்துவிட்டு, மேலும் எந்தவிதமான ஐயப்பாடும் ஏற்படக்கூடாது என்ற எண்ணத்துடன்,

மார்பகம் தன்னில்
விருதுகள் மின்னிட
பரிஏறிப் படை காண
பவனி வரும்
படைத்தலைவனும்
மன்னனின் செல்லப்பிள்ளை

இருக்கிறானே, அவனைப்பற்றிப் பாடப்போவதில்லை என்று கூறுகிறார்; மன்னன் தனக்கு விருப்பமான ஒருவனைப் படைத்தலைவன் ஆக்கிவிடுவான்; வீரன் என்பதற்காக அல்ல! அவன் மன்னனின் செல்லப் பிள்ளை என்பதால்! அந்த படைத்தலைவன், விருதுகள் பதித்த ஆடம்பர உடை அணிந்துகொண்டு, கெம்பீர மாகக் குதிரை மீதமர்ந்து வருவான், படைவரிசையைப் பார்வையிட! வழக்கமாகக் கவிஞர்கள், இவர்களைப் பாராட்டுவர் புகழ் பாடுவர்.

இவர்கள்அல்ல உள்ளபடி பாராட்டுப்பெற வேண்டி யவர்கள். போரிட்டு மடிந்தவர்கள் வேறு வேறு! இந்தத் தலைவன் காட்சிப்பொருள்! இவனையா நான் பாடுவேன்! இவனை எனக்குத் தெரியாதா! வீரனா இவன்? இவன் மன்னனின் செல்லப் பிள்ளை! என்று கேலிமொழியால் துளைக்கிறார் மேஸ்பீல்டு—துளைத்துவிட்டுக் கூறுகிறார்; நான் பாடப்போவது எவரைப்பற்றித் தெரியுமா?

எவர், அவர்? என்று
எவரும் அறியா நிலையினர்!
ஏறு நடைபோட்டு
வெற்றி கண்டார்!
இளைஞர்!

இவர்களைப் பற்றி என் கவிதை! என்கிறார். ஏன்? ஒரு போரிலே மும்முரமாக ஈடுபட்டு, குருதிகொட்டி, வெற்றி ஈட்டியவர்கள் இந்த இளைஞர்கள்—ஆடம்பர உடையுட னுள்ள படைத்தலைவன் அல்ல! நான் அந்தப் ‘போலி’ யைப் புகழமாட்டேன் என்கிறார்.

கொலு இருக்கும்
கோவை அல்ல!

என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விடுகிறார். போர் குறித்த புகழ்ப் பாட்டு என்றால், கொலு இருக்கும் மன்னனைப் பற்றித்தான் மற்றவர்கள் பாடியிருக்கிறார் கள்—இது நாள்வரை. நான் அப்படி அல்ல!

குடிமகனாய் உள்ளோன்
ஊர்சுற்றும் உழைப்பாளி
தோள்குத்தும் முட்கள் நிறை
மூட்டைதனைச் சுமப்போன்,
தாங்கொணாப் பாரந்தனைத்
தூக்கித் தத்தளிப்போன்
கலத்தில் பணிபுரிவோன்
உலைக்கூடத்து உழல்வோன்
ஏதோ இசை எழுப்பி அதனால்
இனிமைபெற எண்ணுபவன்
ஏரடிப்போன்!
தூக்கம் தொட்டிழுக்கும்
துயர் கக்கும்
கண்கொண்டான்.

இவர்களைப்பற்றி நான் பாடுவேன் என்கிறார். இனி மேலா பாடவேண்டும்; இதோ பாடியே விட்டாரே,

தூக்கம் தொட்டிழுக்கும்
துயர் கக்கும்
கண்கொண்டான்

என்ற வரிகள் அந்த ஏழையின் நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டிவிடுகிறதே! மேஸ்பீல்டுடைய இதயம் தன்னில் எவரெவர் இடம்பெற்றுள்ளார் என்பது விளக்கமாகிறதே. இந்தக் கனிவு, மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டுப்போன, ஏழை எளியோர்க்காக, உழைத்து உருக்குலைந்தோருக்காக! ஏழையிடம் இந்தக் கனிவு காட்டாத கவிவாணர்களை அலட்சியமாகக் கருதுகிறார்; ஒதுக்கித் தள்ளுகிறார்;

மற்றவர் பாடட்டும்
மகிழ்ச்சி தரும்
மாடு மது குறித்து!

என்று இடித்துரைக்கிறார். செல்வவானைப் பற்றி அவனு டைய சிங்கார வாழ்வு பற்றி, அவன் மந்தகாசம் பற்றி, அவன் மாளிகையிலுள்ள மதுவகை பற்றிப் பாடுகிறார் களே அவர்களைக் குறித்து மேஸ்பீல்டுவுக்கு அத்துணை எரிச்சல். அவர்கள் பாடட்டும் அவை பற்றி என்று ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்.

என் பாடல்
குப்பை கூளம் பற்றி
குப்பன் சுப்பன் குறித்து

என்று அறிவிக்கிறார். இவர்களைப் பற்றிய கவிதை யிலே கவர்ச்சி இருக்காதே, மெருகு இருக்காதே என்று கேட்பவர் உளர் என்பது தெரியுமல்லவா இந்தப் புதுமைக் கவிஞனுக்கு?

அவர்கள் இசையினிலே
வண்ணம் புகழுடன்
பொன் மின்னும்,

என்றுகூறுகிறார். பளபளப்பு, மெருகு, இவைதேவையா! அவர்கள் இசையிலே கிடைக்கும், போய்ப் பெற்றுக் கொள், அவைதான் பெறத்தக்கன என்று கருதினால்— என்ற கருத்துப்படக் கூறுகிறார்; கூறிவிட்டு,

பிடிசாம்பல்
வாய்க்கரிசி
இவைபற்றி என் பாடல்!
குளிர்கொட்ட
மழைவாட்ட
குமுறிக்கிடப்போர்
விழி இழந்தோர்
முடமானோர்
இவர்பற்றி என்கவிதை!
இஃதே என் காவியம் காண்!

என்று தெரிவிக்கிறார்.

தம்பி! 1873-ம் ஆண்டு பிறந்த ஆங்கிலக் கவிஞர் இந்த அளவுக்கு ஏழைக்காகப் பரிந்துபேசிட முனைந்திருக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டில் இருக்கின்றோம்; இந்தக் காலத்திலாவது நாம் இடர்பட்டு, இழிவு படுத்தப்பட்டு இல்லாமையால் தாக்கப்பட்டுக்கிடக்கும் எளியோர்க்கு நல்வாழ்வு கிடைப்பதற்கான முறையில் ஓர் அரசுமுறை அமைத்திடும் முயற்சியில் ஈடுபட வேண்டாமா!

செங்நெல் மணியினைக் காணும்போது தம்பி! சேற்றிலே இறங்கி உழுது அதனை விளைவித்த வறியவனை நினைவிற்கொள்ளவேண்டும். பாலையும் பாகையும் பழத்தையும் சுவைத்திடும்போது, இவற்றைப் பெற முடியா நிலையிலுள்ள எளியோர்களை வாழ வைத்திட வேண்டும் என்ற எண்ணம் தோன்றிவிடவேண்டும். உழைப்பின் உயர்வுபற்றிப் பேசிவிடுதல் மட்டும் போதாது, உழைப்பவன் உருக்குலைய அவன் தரும் செல்வத்தில் சிலர் புரண்டுகிடந்திடும் சீர்கெட்ட நிலையை மாற்றிட வழிகாண வேண்டும். இயற்கை வழங்கிடும் பொருளின் அளவும், தரமும், வகையும் மிகப்பெரிது. அரசுமுறை நேர்மையானதாக்கப்பட்டால், எல்லோரும் இன்புற்றிருக்கும் பொற்காலம் கண்டிடலாம். இந்தத் திருநாளன்று, அந்தக் குறிக்கோளைக் கொண்டிட வேண்டுகிறேன்.

இன்னல் பலபின்னிக்கிடந்திடும்; எனினும் இன்றோர் நாளாகிலும் அவைதமை மறந்து, இன்புற்று விழா நடாத்தி மகிழ்ச்சி பெற்றிட வேண்டுகிறேன். உனக்கும் உன் மனையுளாருக்கும் என் இதயம் கனிந்த நல் வாழ்த்துக்களை வழங்கி மகிழ்கிறேன். வாழ்க நீ வளமெலாம் பெற்று! வாழ்க தமிழகம் உன் வல்லமைத் தொண்டினாலே!!

அண்ணன்,



தென்னகத்தின் தனிப்பெரும் திருவிழா
பொங்கல் பெருநாளில்

பட்டு என்றாலே முன் நிற்பது காஞ்சிபுரம்

ஜவுளிக்கடை என்றாலே முன்நிற்பது கருப்பண்ணா ஸ்டோர்

ஆம், அதுவே நீங்கள் சொல்லும் செல்லப் பெயர்
"காஞ்சி" பனாரஸ்
பட்டு சேலை, சோளி பாவாடைகளுக்கு ஒரே விலைக் கடை
கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்கு தெரு, சென்னை 1. போன்: 34614

மருதாணி

நகைநட்டு ஏதுமின்றி எழில் சொட்டும் பருவத்தாள். பகையொத்த கொடிபோல நெளிந்தாடும் உருவத்தாள். இடையோ ஒருபிடிக்குங் காணுத இளம்பிடி! இதழ்களிலோ தேன் ஒருபடி!......இல்லை இவளுக்குக் குறையெனும் புகழ்பெற்ற முல்லை. பேச்சிலோ கிள்ளை! ......அவளை விடுமோ காதல் தொல்லை!

✲

அமுதம் உண்ணப் பிறந்தவன் ஒருவன்....அவன் பேர் மருதன். குமுதம் சிரித்திடக் கோல நிலவென வந்திடும் குமரன். வேலெடுத்தால் உந்தன் விழிநினைவு வாட்டுதடி; வாளெடுத்தால் முத்துப் பற்கள் ஒளி தலைகாட்டுதடி; வேழம் ஏறிவிட்டால் மத்தகந்தான் மெத்தகந்தான் மெத்த தொல்லை அளிக்குதடி! எனக்கொஞ்சிப் பஞ்சணையில் அஞ்சுகத்தைப் புலன்மாற்றிப் போடுகின்ற பொல்லாக்காளை! போர்முகத்துப் பெருவீரன்! தானைத் தலைவன்!

✲

அவன் ஒருநாள் பகைப்புலத்தினை அழிப்பதற்கு அரசின் ஆணை -காதல் அரசியாணைப் பெற்றுச் சென்றுன். பத்து கிழமை சென்ற பின்பும் வந்தானில்லை. பசலை நிறம் படர்ந்ததாலே பாவை வாட, பருவமெய்திய நாள் நோக்கும் தோழிக் கூட்டம் கேலிபாட "தருணமிதே தாகந்தீர்க்க; வருவீ"ரென்றே அவளும் ஓடி, நிழல் கண்டு ஏமார்ந்து — ஏங்கி நின்றுள்.



ஆலையிட்ட கரும்பாக ஆனமனம் தேறுதற்கு மாலையிட்ட கண்ணுளன் வரைந்த ஓலை மட்டும் கிட்டியது அவள் கையில்!...,... அதில்,

"குளிர்தருவே! பனிமலரே! வெற்றியுடன் திரும்புகிறேன். கொற்றவனைக் காணுதற்கு முன்பாக கொவ்வைக் கனி கொத்துதற்கு வருகின்றேன்."

—எனக்கண்ட எழுத்தெல்லாம் நனைந்தன முத்தம் பெற்று!.....உயர்வான நெஞ்சகத்தில் ஒட்டிக்கொண்ட ஓலைக்கு ஊமைக்குணம் இல்லையேல்....ஓராயிரம் கதை சொல்லும் உவமை காட்டி!

✲

தோழிகள் வந்தனர், கோழிபோல் குடிலுக்குள் அடைகாக்க வேண்டாம்; காலையில் ஆடிப்பெருக்கிற்கு ஆற்றினிலே விழா எடுக்க வருவாய் என்றனர். காலையில்தான் அவர்வருவார்; ஆடிப்பெருக்கினும் அன்பைப் பெருக்குபவர் என்றுள் முல்லை. "அடகிறுக்கே! ஆளன் எப்போதும் இருப்பான்; ஆடிப்பெருக்கு ஆண்டுக்கு ஒருமுறைதான்" எனக்கூறி காவிரியை வாழ்த்துகின்ற கவிதை யொன்றை இசை கூட்டிப் பொழியலானுர். பாட்டியொருத்தி பவளம் என்பாள்; அவள் நீட்டி முடுக்கிக் கூறலுற்றுள்; ஆடிப்பெருக்கிற்குத் தடையின்றிப்போக வேண்டுமென்ற அறிவுரையை! ...முல்லையும் வருவேன் என்றுள்...அனைவருமே அடுத்த கொல்லையிற் சென்று மருதாணி இலை பறிக்கப் பறந்துவிட்டார்.

✲

கிள்ளிவந்த மருதாணி கொழுந்துகளை அள்ளிவைத்து அறைத்தெடுத்து அம்மாவின் துணையோடு, அழகான கைகளிலும், அந்தமிகுந்தக் கால்களின் நுனிகளிலும் தடவிக் கொண்டாள். உள்ளங்கைதனிலே உதயசூரியன்போல் மருதாணி! வீணை மீட்டும் விரல்களிலே.......குறிபதிக்கும்::நகங்களிலே மருதாணி! கண்ணகியின் சிலம்புபோல் காலினிலே மருதாணி! இங்கெல்லாம் இட்டுக்கொண்டு மருதாணி இடாமலே சிவந்து நிற்கும் கன்னத்தில் இனமறியா வெட்கம் தேக்கிப் படுத்துக்கொண்டாள். "இரவெல்லாம் மருதாணி ஈரம் காய்ந்து காலையிலே உதிர்ந்துவிட்டால்,

—புது எழிலோடு வரவேற்போம்; போர் முடிந்து வருகின்ற காதலனை......" என நினைத்து மகிழ்ந்து கொண்டாள்.

✲

உறங்காமல், ஒருபுறமும் அசையாமல் மருதாணி கலையாமல் படுத்திருக்கும் அவள் காதில் மருதன் அழைக்கின்ற குரல் கேட்க...எழுந்து நின்றுள்; அவன் எதிரே நின்றுன். அசைவற்றுள். "பாய்ந்து வந்து

(28-ம் பக்கம் பார்க்க)

ALL KINDS OF

PAPER AND BOARD

T. CHELVARANGA MUDALIAR & SONS

PIONEERS IN THE PAPER TRADE

Distributors for

The Titaghur Paper Mill Co Ltd.,
The Mysore Paper Mills Ltd.,
Seshasayee Paper & Boards Ltd.,
Ganges Printing Ink Factory Ltd.,

PHONE :-
OFFICE 22141
RESIDENCE 84783

GRAMS :-
CHELVAM
MADRAS

289, STRINGERS ST, MADRAS - 1

395

ஆனந்தன்

வங்கம் தந்த தங்கம்

"பெற்ற தாயிருக்க பிள்ளை ஏங்கலாமா'' என எழுத்துக் கெழுத்து சோகம் ததும்பும் பாடலை காளி பக்தன் ஆனந்தன் பாடிக்கிடந்தான். அனுதை ரட்சகை யாகிய காளி ஆனந்தனிடம் அனுதாபம் காட்டவில்லை. ஆனந்தன் ஆவேசமானுன். லோகமாதாவின் சந்நிதியில் "ஆயிரம் கண்ணுடையவள் என்று உன்னை அர்ச்சிக் கிருர்களே! என்னை ஒரு கண்ணுல் பார்க்கக்கூடாதா?'' என்று புனல் வழியும் கண்களைத் துடைத்துக்கொண்டு கனல் கக்கும் விழிகளுடன் காளியிடம் சீறினுன்,

மயிர்க் கூச்செரியும் அந்தக் காட்சிகள் மறுமலர்ச்சி நாடக சகாப்தத்திற்கு முன்னுேடியாக இருந்தன. நமது நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் தனது கானமழையால் இதயம் உருகப்பாடும் கீதமும், கணீ ரென்று சாட்டைபோல் பேசி, துடி துடிப்புடன் அவர் நடித்த அபாரநடிப்பும் இன்னமும் நமக்குச் சலிக்கவில்லை.

தமிழகத்து நாடகமேடையில் "வேலைக்காரி'' எத்த கைய செல்வாக்கைப் பெற்றதோ, அதைபோல், வங்க நாட்டு திறந்தவெளி நாடக அரங்கில் ஓர்நாடகம் வெற்றி பவனி வந்தது! அதன் பெயர் "தியாகம்''. தீட்டியவர் வங்கத்தின் தங்கம், கவிஞர், நாடகமேதை, ரவீந்திரநாத தாகூர்,

காளியை மையமாகக் கொண்டிருந்த அந்தக் கதை யில், ரகுபதி என்ற பூஜாரி காளி பக்தன்; அவன் சீடன் ஜெய்சிங்; காளிக்கு ரத்த பலியை வற்புறுத்திய பூஜாரி ஒருபுறம்; மனிதாபிமானம் துளிர்த்த சீடன் மறுபுறம்— காளியின் சிலையை தூக்கியெறியும் சீடன். தவிடு பொடி யாகும் பழைமைத் தத்துவம். "காளி: நீ பேசமாட்டாய். நீ கல், நீ ஊமை; நீ குருடி. நீ செவிடு'' என்று குருபீடத்தி லிருந்த ரகுபதியே புத்தி பெறும் சம்பவம். இந்தக் காட்சிகளைக் கொண்ட நாடகத்தை தாகூர், மக்கள் மன்றத்திற்கு அளித்தார். "ஈதென்ன புதுமை, இதனை எம்மிடமிருந்து இத்தனை நாளும் மறைத்த தருக்கரெங்கே?; என்று ஆரவாரம் செய்தனர் மக்கள். ஆனுல் மதிவாணர்கள் என்று தங்களுக்குத் தாங்களே மகுடம் சூட்டிக்கொண்டிருந் தோர் வேருேர் பக்கம்: தாகூர் தீட்டும் எழுத்துக்கள் அங்காடிக் கடைமொழி என்று தூற்றித்திரிந்தனர். இலக்கணப் பிழை கண்டுபிடிப்பதற்காக இவரின் கட் டுரைகளை வகுப்புகளிலே மாணவர்களுக் குக்கொடுத்தனர். தாகூருக்கு சிறப்பு அளிக்க வங்கப் பல்கலைக் கழகம் டாக்டர்பட்டம் வழங்க வேண்டும் என்று துணைவேந்தராய் இருந்த ஆசுதோஷ் முக்கர்ஜி சொன்னுர். அவருக்குப் பைத்தியக்காரப் பட்டம் கிடைத்தது. வங்க மொழிக்கு தாகூர் தொண்டு செய் வதைப்பாராட்டி பத்தாவது வகுப்பு பரிட்சைத் தாள் திருத் தும் பொறுப்பை இவருக்குக் கொடுக்கவேண்டும் என்ற



யோசனையை ஒரு உறுப்பினர் சொன்னுர், வங்கப் பத்திரி கைகள் தொடுத்த எதிர்ப்புக் கணைகள், அரசியல் பிரச் சனைகளுக்கு காட்டும் அக்கறையைவிட மிஞ்சின.

அவரது இலக்கிய சேவையைப் பாராட்டி நோபல் பரிசு கொடுக்கப்பட்டது. மாளிகையில்தான் பிறந்தார்: ஆனுல் சாளரக் கதவுகளுக்கு அப்பாலிருந்த மண்குடிசை கள்மீது அவரது பார்வைக் கதிர்கள் பாய்ந்தன.

அழகு அவரது ஆராதனைக் கோயிலாகியது. சிந்து பாடும் சிற்ருரும் புள்ளினங்களின் மதுரகீதமும் அவரது மனத்திரையில் துள்ளி விளையாடின.

பழமையும் சம்பிரதாயமும் அவரது எழுதுகோல் முன் படுசூரணமாயின...மகளிர் கூட்டம் மந்தைகளாகக் கருதப்படும் காட்டுமிராண்டித்தனத்தின் முன் அவரது கோபபிரவாஹம் பெருக்கெடுத் தோடியது, குடும்ப விளக் கடா அவள், குருடர்களே'' என்று கோபித்துக்கொண் டார். கண்களில் நீர் வழியும் விதவைகளுக்காக அவர் உள்ளத்தில் உதிரம் சொட்டியது. கல்கத்தா "கல்யாணச் சந்தை'' குறித்து அவரது கவிதைக் கணைகளைக் கண்ட வைதீகர்கள் "துள்ளி வருகுது வேல் தூர விலகி நிற்க வேண்டும்'' என்றனர்.

அவரது நாடகங்கள் பழமைக்குப் பல்லவி பாட வில்லை. புதிய சேதிகளைச் சொல்வதாய் அமைந்தன, ஒன்றிரண்டை கவனியுங்கள்,

"இயற்கையின் பழி'' என்ற நாடகத்தில் இல்லறத்தை வெறுத்த பால சந்நியாசி ஒருவன் பனி நிறைந்த இமாலயக் குகையில் தவத்தில் ஈடுபடுகிருன். தனிமையில் ஓர் சாரமுள்ளது என்று தன்னைத்தானே ஏமாற்றிக்கொள் கிருன், பற்று, பாசம், பந்தம் இவைகளை அறுத்தெறிகிருன், மனிதவாடையையே அவன்விரும்பவில்லை. அந்த நிலையில் ஒரு தளிர்க்கொடி அவன் வாழ்விலே பிரவேசிக்கிருள், அவன்தத்துவ மெல்லாம் தவிடுபொடியாகிறது. "அவனும் அவளும்'' ஆகின்றனர். மலரொளியில், பனியின் வெண்மையில், தடாகத் தூய்மை யில் புதிய பொருளைக் காண்கின்றனர்.

"ராஜாவும் ராணியும்'' என்ற நாடகத் தில் அரசு கட்டிலின்மேல் இருந்த ஆத்திர மும், ஆதிக்கக்காரரின் வெறியாட்டமும் தீட்டப்பட்டுள்ளது. கொடுமை, மூட நம்பிக்கை, அரசு ஆதிக்கம் ஆகியவை வலிவுபொருந்திய அவரது பேனுவில் சிக்கி அவதிப்பட்டன.

"நீரோட்டம்'' என்ற நாடகத்தில் கதாநாயகன் கிராம மக்களுக்காக ஆதிக்கக்காரர்களை எதிர்க்கிருன். ஆதிக்கக் காரன் கிராமமக்கள் பெற்றுவந்த நீரூற்றுக்களை அடைத்து விட்டான், அதனைஎதிர்த்துப்போராட்டம் நடைபெறுகிறது.

"நர்த்தகி பூஜை'' என்ற நாடகத்தில் நாட்டியப் பெண்ணெருத்தி புத்த மார்க்கத்தைச் சேர்ந்தவள். நாட்டு

ALL

KINDS OF

PAPER AND BOARD

T. CHELVARANGA MUDALIAR & SONS

PIONEERS IN THE PAPER TRADE

Distributors for

The Titaghur Paper Mill Co Ltd.,

The Mysore Paper Mills Ltd.,

Seshasayee Paper & Boards Ltd.,

Ganges Printing Ink Factory Ltd.,

PHONE :-
OFFICE 22141
RESIDENCE 84783

GRAMS :-
CHELVAM
MADRAS

289, STRINGERS ST, MADRAS - 1

ஆனந்தன்.

வங்கம் தந்த தங்கம்

"பெற்ற தாயிருக்க பிள்ளை ஏங்கலாமா" என எழுத்துக் கெழுத்து சோகம் ததும்பும் பாடலை காளி பக்தன் ஆனந்தன் பாடிக்கிடந்தான். அனுதை ரட்சகையாகிய காளி ஆனந்தனிடம் அனுதாபம் காட்டவில்லை. ஆனந்தன் ஆவேசமானுன். லோகமாதாவின் சந்நிதியில் "ஆயிரம் கண்ணுடையவள் என்று உன்னை அர்ச்சிக்கிருர்களே! என்னை ஒரு கண்ணுல் பார்க்கக்கூடாதா?" என்று புனல் வழியும் கண்களைத் துடைத்துக்கொண்டு கனல் கக்கும் விழிகளுடன் காளியிடம் சீறினுன்,

மயிர்க் கூச்செரியும் அந்தக் காட்சிகள் மறுமலர்ச்சி நாடக சகாப்தத்திற்கு முன்னேடியாக இருந்தன. நமது நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் தனது கானமழையால் இதயம் உருகப்பாடும் கீதமும், கணீரென்று சாட்டைபோல் பேசி, துடி துடிப்புடன் அவர் நடித்த அபாரநடிப்பும் இன்னமும் நமக்குச் சலிக்கவில்லை.

தமிழகத்து நாடகமேடையில் "வேலைக்காரி" எத்தகைய செல்வாக்கைப் பெற்றதோ, அதைபோல், வங்க நாட்டு திறந்தவெளி நாடக அரங்கில் ஓர்நாடகம் வெற்றி பவனி வந்தது! அதன் பெயர் "தியாகம்". தீட்டியவர் வங்கத்தின் தங்கம், கவிஞர், நாடகமேதை, ரவீந்திரநாத தாகூர்,

காளியை மையமாகக் கொண்டிருந்த அந்தக் கதையில். ரகுபதி என்ற பூஜாரி காளி பக்தன்; அவன் சீடன் ஜெய்சிங்; காளிக்கு ரத்த பலியை வற்புறுத்திய பூஜாரி ஒருபுறம்; மனிதாபிமானம் துளிர்த்த சீடன் மறுபுறம்—காளியின் சிலையை தூக்கியெறியும் சீடன். தவிடு பொடியாகும் பழைமைத் தத்துவம். "காளி: நீ பேசமாட்டாய். நீ கல், நீ ஊமை; நீ குருடி. நீ செவிடு" என்று குருபீடத்திலிருந்த ரகுபதியே புத்தி பெறும் சம்பவம். இந்தக் காட்சிகளைக் கொண்ட நாடகத்தை தாகூர், மக்கள் மன்றத்திற்கு அளித்தார். "ஈதென்ன புதுமை, இதனை எம்மிடமிருந்து இத்தனை நாளும் மறைத்த தருக்கரெங்கே?; என்று ஆரவாரம் செய்தனர் மக்கள். ஆனுல் மதிவாணர்கள் என்று தங்களுக்குத் தாங்களே மகுடம் சூட்டிக்கொண்டிருந்தோர் வேருேர் பக்கம்: தாகூர் தீட்டும் எழுத்துக்கள் அங்காடிக் கடைமொழி என்று தூற்றித்திரிந்தனர். இலக்கணப் பிழை கண்டுபிடிப்பதற்காக இவரின் கட்டுரைகளை வகுப்புகளிலே மாணவர்களுக்குக்கொடுத்தனர். தாகூருக்கு சிறப்பு



அளிக்க வங்கப் பல்கலைக் கழகம் டாக்டர்பட்டம் வழங்க வேண்டும் என்று துணைவேந்தராய் இருந்த ஆசுதோஷ் முக்கர்ஜி சொன்னுர். அவருக்குப் பைத்தியக்காரப் பட்டம் கிடைத்தது. வங்க மொழிக்கு தாகூர் தொண்டு செய்வதைப்பாராட்டி பத்தாவது வகுப்பு பரிட்சைத் தாள் திருத்தும் பொறுப்பை இவருக்குக் கொடுக்கவேண்டும் என்ற யோசனையை ஒரு உறுப்பினர் சொன்னுர், வங்கப் பத்திரிகைகள் தொடுத்த எதிர்ப்புக் கணைகள், அரசியல் பிரச்சனைகளுக்கு காட்டும் அக்கறையைவிட மிஞ்சின.

அவரது இலக்கிய சேவையைப் பாராட்டி நோபல் பரிசு கொடுக்கப்பட்டது. மாளிகையில்தான் பிறந்தார்: ஆனுல் சாளரக் கதவுகளுக்கு அப்பாலிருந்த மண்குடிசைகள்மீது அவரது பார்வைக் கதிர்கள் பாய்ந்தன.

அழகு அவரது ஆராதனைக் கோயிலாகியது. சிந்து பாடும் சிற்ருரும் புள்ளினங்களின் மதுரகீதமும் அவரது மனத்திரையில் துள்ளி விளையாடின.

பழமையும் சம்பிரதாயமும் அவரது எழுதுகோல் முன் படுசூரணமாயின...மகளிர் கூட்டம் மந்தைகளாகக் கருதப்படும் காட்டுமிராண்டித்தனத்தின் முன் அவரது கோபபிரவாஹம் பெருக்கெடுத் தோடியது, குடும்ப விளக்கடா அவள், குருடர்களே" என்று கோபித்துக்கொண்டார். கண்களில் நீர் வழியும் விதவைகளுக்காக அவர் உள்ளத்தில் உதிரம் சொட்டியது. கல்கத்தா "கல்யாணச் சந்தை" குறித்து அவரது கவிதைக் கணைகளைக் கண்ட வைதீகர்கள் "துள்ளி வருகுது வேல் தூர விலகி நிற்க வேண்டும்" என்றனர்.

அவரது நாடகங்கள் பழமைக்குப் பல்லவி பாடவில்லை. புதிய சேதிகளைச் சொல்வதாய் அமைந்தன, ஒன்றிரண்டை கவனியுங்கள்,

"இயற்கையின் பழி" என்ற நாடகத்தில் இல்லறத்தை வெறுத்த பால சந்நியாசி ஒருவன் பனி நிறைந்த இமாலயக் குகையில் தவத்தில் ஈடுபடுகிருன். தனிமையில் ஓர் சாரமுள்ளது என்று தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கிருன், பற்று,பாசம், பந்தம் இவைகளை அறுத்தெறிகிருன், மனிதவாடையையே அவன்விரும்பவில்லை. அந்த நிலையில் ஒரு தளிர்க்கொடி அவன் வாழ்விலே பிரவேசிக்கிருள், அவன்தத்துவமெல்லாம் தவிடுபொடியாகிறது. "அவனும் அவளும்" ஆகின்றனர். மலரொளியில், பனியின் வெண்மையில், தடாகத் தூய்மையில் புதிய பொருளைக் காண்கின்றனர்.

"ராஜாவும் ராணியும்" என்ற நாடகத்தில் அரசு கட்டிலின்மேல் இருந்த ஆத்திரமும், ஆதிக்கக்காரரின் வெறியாட்டமும் தீட்டப்பட்டுள்ளது. கொடுமை, மூட நம்பிக்கை, அரசு ஆதிக்கம் ஆகியவை வலிவுபொருந்திய அவரது பேனுவில் சிக்கி அவதிப்பட்டன.

"நீரோட்டம்" என்ற நாடகத்தில் கதாநாயகன் கிராம மக்களுக்காக ஆதிக்கக்காரர்களை எதிர்க்கிருன். ஆதிக்கக்காரன் கிராமமக்கள் பெற்றுவந்த நீரூற்றுக்களை அடைத்துவிட்டான், அதனைஎதிர்த்துப்போராட்டம் நடைபெறுகிறது.

"நர்த்தகி பூஜை" என்ற நாடகத்தில் நாட்டியப் பெண்ணுெருத்தி புத்த மார்க்கத்தைச் சேர்ந்தவள். நாட்டு

மன்னன் புத்த மார்க்கத்தைத் தடைசெய்கிறான். நர்த்தகி தடையை மீறி புத்தர் சிலை முன் நடனம் ஆடுகிறாள். மன்னனின் வீரர்கள் நர்த்தகியைக் கொலைசெய்கின்றனர். நர்த்தகியின் தியாகம் மன்னனையும் அவன் மாதேவியையும் மனம் மாறுதல்கொள்ளச் செய்கின்றது. இருவரும் புத்த மார்க்கத்தை பின்பற்றுகின்றனர்.

"கல்யாணமாகாதவர்கள் கழகம்" என்ற நாடகத்தில் நகைச்சுவை ஏராளமாக உண்டு. பெண் குலத்தையே திரும்பிப் பார்க்கமாட்டோம் என்று பிடிவாதம் செய்த ஆடவர் கூட்டத்திற்குப் பெண்ணின்ஸ்பரிசம் பட்டவுடன் ஏற்பட்ட கதியை வேடிக்கையாக விவரிக்கிறார்.

பிறைச்சந்திரன், மேகக் கூட்டங்கள், பட்சி ஜாலங்கள், ஆரண்ய வெளிகள், மாமலைகள், மலர்க் காடுகள் — இவையெல்லாம் அமைந்த வண்ணத்திரைகள் அவரது நாடகங்களுக்கு தேவைப்படவில்லை, கவிதை ஆற்றலிலேயே கற்பனைத்திரையில் வரைந்து காட்டினார்.

"வசந்தம் வந்தது" என்று நாடகத்தில் கூறுகிறார். "நமக்கு வண்ணத் திரைகள் தேவையில்லை. நமக்குத் தேவையெல்லாம் கற்பனைகொண்ட மனப் பின்னணி தான். அந்த மனத்திரையில் சங்கீதம் என்னும் தூரிகை கொண்டு வண்ணம் நிறைந்த காட்சிகளை அமைக்கலாம்" என்று கூறினார்.

"மந்திர உச்சாடனைகள் உச்சரிப்பதை உதறி எறியுங்கள்."

"ஜெபமாலைகள் உருட்டுவதை நிறுத்துங்கள்."

"கதவுகளைத் தாளிட்டு கோவிலின் இருட்டறையில் யாரை பூஜிக்கிறீர்கள்"

"உங்கள் கண்களை அகலத் திறப்து பாருங்கள்."

"ஆண்டவன் உங்கள் முன்னாலே இல்லாதது தெரியும்"

"பின் எங்கே இருக்கிறார் ஆண்டவன்"

"கட்டாந்தரையில் ஏர் ஓட்டுகிற ஏழை உழவனிடம்; கல்லுடைக்கும் பாட்டாளியின் மத்தியில் இருக்கிறார்." கதிரொளியிலும் கார்மழையிலும் அவர்களுடனிருக்கிறார். அவரது ஆடைகள் புழுதி படிந்துள்ளன. உங்கள் புனிதப் போர்வையைக் கழற்றி வீசுங்கள்; அந்தப் புழுதிமேட்டுக்கு வாருங்கள்"

இத்தகு கருத்துக்கள் கீதாஞ்சலி முழுதும் ஒளிவிடுகின்றன.

25-ம் பக்கத் தொடர்ச்சி

தழுவிடுவாய்; படைமுகத்துச் சேதியொன்றும் சொல்லுதற்கு வழியின்றி வாய்மூடி இதழ் பதிப்பாய்! என நினைந்து ஓடிவந்தேன்; ஏன் முல்லை தயக்க"மென்றான், காதல் மயக்கத்தால் சுழலுகின்ற மனமுடையோன்.

"காலையிலே வருவீர் என்று மருதாணி பூசிக் கொண்டேன்-ஓலையிலே விபரம் இல்லை...ஓடிவந்து தழுவிக்கொண்டால்; மருதாணி கலைந்துவிடும்—ஊர் முழுதும் தோழிகள், நாளைக் காலை முதல் நமைப்பற்றி தம்பட்டம் போட்டிடுவார்; அதனால் தான் தயங்குகிறேன்; தழுவாமல் இதழ் குவிப்போம் இப்போதே"ன்றாள். தடையா சொல்வான்-முத்தமிட்டுத் தனியாக முற்றத்திலே படுத்துக்கொண்டான். கலையாத மருதாணி—கலங்கி நின்ற இளம்நெஞ்சம்—இங்கிலையில் உறங்காமல், புரளாமல் விடிவெள்ளி வருவதெப்போ என எண்ணி விண்ணோக்கி வீழ்ந்திருந்தாள், விழியழகி முல்லைப் பெண்ணாள், ஓரிரவு போயின் என்ன; நாளை உண்டு—என்னருகே அந்தக்காளையுண்டு—இனி நாளெல்லாம் தேன் மொழிகளும் இன்பமுண்டு—எனச் சொன்னாள், அழுகின்ற இதயத்துக்கு ஆறுதலாய் ஒரு வார்த்தை!

✼

விடிந்தது பொழுது:வெண்சக்கரச் குடையானைக் காணுதற்கும், வெற்றிச்சேதி கூறுதற்கும் காதலிபால் விடைபெற்று வேந்தனது தலைநகரம் பயணப்பட்டான் வீரர் தலைவன் வெள்ளி நிலவு முளைப்பதற்குள் வருவதாக வாக்களித்து, மருதாணி உலர்ந்ததாலே... உதிர்த்து விட்டு அழகான கைகளையும், கால்களையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டாள் மங்கை நல்லாள். செங்கோடு—சிலம்புக்கோடு சித்திரக்கோடு—இவைகளோடு—பத்தரை மாற்றுத் தங்கமேனி பொலிவு சிந்த புறப்பட்டாள் ஆறு நோக்கித் தோழிகளுடன்!... விழா எடுத்தனர்—ஆடினர்! பாடினர்!...விரிந்த பகல் இரவாய்ச் சுருங்குவதெப்போ என விழைந்தனள் முல்லை!

✼

இருண்டது உலகம்—ஒளி பெற்றது அவள் உள்ளம்!...வெள்ளி நிலவே வாராயோ என்றாள். அதுவும் வந்தது... "அவரெங்கே...வந்தவுடன் அணைத்து மகிழ்வதற்குத் தடையில்லை; மருதாணி இலையில்லை; ஈரமில்லை...அது தந்த எழிலுண்டு கையில்!... இன்ப விருந்துண்டு இரவெல்லாம் கழிப்போம்..."

முல்லை பாடினாள் நிலவு நோக்கி...புரவியொன்று வேகமாக தலைவாயில் பக்கம் வருவது கண்டாள். அவரேயென்று கூவினாள். ஆவி நிகர் ஆளனுக்குப் பதிலாக அவன் தந்த ஓலைகொண்டு தூதன் வந்தான் அதில்;

"தமிழே! தண்பொழிலே!... கடாரத்தில் படையெடுப்பு! கடல் கடந்து செல்லுகின்றேன். உடல் மெலிந்து வாடாதே...ஓராண்டில் திரும்புகின்றேன்"

—என்ற எழுத்துக்களை நனைத்தாள் கண்ணீரால்! ......கட்டிலிலே குப்புற வீழ்ந்துவிட்டாள்...வீணாக்கி விட்டேனே நேற்றிரவை...விரலுக்கும் காலுக்கும் அழகு தேவையென்று விருந்துண்ண மறுத்தேனே—இனி ஓராண்டு யாருக்கு அழகு காட்ட இந்த மருதாணி தேவையென்று...கசக்கிக் கொண்டாள். கைகளையும் கால்களையும்!...

இதுபோல நேற்றிரவே ஈர மருதாணியைக் கலைத்திருந்தால் அது கலைந்திருக்கும்...கலவி நடந்திருக்கும். இன்று கலையுமோ?...கலையவில்லை!..."ஓராண்டு!"எனச் சொல்லி கொட்டிவிட்டாள் மழைக் கண்ணீர்!...அப்போது 'கலகல' சிரிப்புக் கேட்டு 'மளமள' என எழுந்தாள்—எதிரே மருதன் நின்றான்...ஏனத்தான் அழவிட்டீர் எனக்கேட்டபடி அணைத்துக்கொண்டாள். கடாரம் போவதுண்டோ எனக் கதறியழும் பாவை நோக்கி; "மருதன் பெரிதோ—மருதாணி பெரிதோ?......இதற்கு விடை தேவை" எனச் சிரித்தான் வீரர்குலத்தான்.

"மன்னிப்பீர்; கலைகின்ற வண்ணக்கோடு மருதாணி—கலையாத சித்திரந்தான் தாங்கள் எனக்கு"

—எனச் சொல்லி விம்மிட்டாள்—விம்முகின்ற வடிவழகில் மனம் பறிகொடுத்து முத்தம் பதித்துவிட்டான் கணக்கின்றி! முல்லைமணம் குடிலெங்கும் கமழ்ந்தது! காதல் வாழ்ந்தது!

✼

3919

கைதேர்ந்த நெசவாளர்களைக்கொண்டு

நேர்த்தியான முறையில்

பல டிசைன்களில் தயாரிக்கப்பட்ட

காஞ்சிபுரம் பட்டு சேலைகள்

குறைந்த விலையில் கிடைக்குமிடம்

காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்

G. 2054

207-B, காந்திரோடு (தேரடி அருகில்)

காஞ்சிபுரம்.

★

குறிப்பு:- ஆர்டர் சேலைகள் குறித்த காலத்தில் சப்ளை செய்யப்படும்.

புகழின் புகழ்

மா.கி. தசரதன்

புகழ் பெறவேண்டும் என்ற ஆசை யாருக்கு இல்லை? 'எனக்கு அந்த ஆசையே இல்லை' என்று யாராவது சொன்னால், ஒன்று முயன்று தோற்றுவிட்டார்கள் அல்லது உள்ளதைமறைத்துப்பேசுகிறார்கள் என்பதுதான் உண்மை. பெயர் விளங்குவதற்கு, ஒரு பிள்ளை பிறக்க வேண்டும் என்று சாதாரண பேச்சு வழக்கிலேகூட சொல்வது இல்லையா? தம் பெயரை இந்த உலகத்திலே நிலை நிறுத்துவிட்டுப் போகவேண்டும் என்பது ஒவ்வொருவருக்கும் உள்ள ஆசைதான். அதனால்தான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் தாங்கள் உட்காரும் மேசை நாற்காலிகளில் கூறிய கத்தியால் தங்கள் பெயரைச் செதுக்கி வைத்துவிட்டுப் போகிறார்கள். மாமல்லபுரம் போன்ற இடங்களுக்குப் போகிறவர்கள் அங்கிருக்கும் சிற்பம் செதுக்கப்படாத இடங்களில், வெறும் கற்களில் தங்கள் பெயரைப் பொறித்துவிட்டு வருகிறார்கள். பக்தர்கள் கோயில் படிக்கட்டுகளிலும், விளக்குகளிலும் தங்கள் பெயர் விளங்குமாறு 'அறம்' செய்கின்றார்கள். யாராக இருந்தாலும் சரி, புகழ் வேண்டும், பிறரால் புகழப்படவேண்டும் நில்லாத இந்த உலகத்தில் தம் புகழை நிறுத்திவிட்டுப் போகவேண்டும் என்று நினைக்கிறார்கள்.

மனிதனை ஈர்க்கும் பேராற்றல் கொண்ட இந்தப் புகழ் என்பதுதான் என்ன? நிலைத்த தன்மை உடையது என்கிறார் புகழ் என்ற சொல்லுக்குப் பொருள் கூறும் பரிமேலழகர், நிலைத்து நிற்கும் தன்மை என்றால்; எது? பெயரா, செயலா? சிலருடைய பெயர் நிலைத்து நிற்கும்— சிலர் செய்த செயல்கள் நிலைத்து நிற்கும். இதிலே எதைப் புகழ் என்பது? இரண்டும்தான் என்று சொல்வதாக வைத்துக்கொண்டால், நல்ல மனிதன் பெயரும் நல்ல மனிதனின் நல்ல செயலும் நிலைத்து நிற்பதைப் போலவே, தீய மனிதனின் பெயரும் அவன் செய்த தீச்செயல்களும் கூட இந்த உலகத்தில் நிலைத்த வாழ்வு பெற்று விடுகின்றன. காந்தியடிகளாரின் பெயரும் விளங்குகின்றது; அவர் செய்த அருஞ் செயல்களின் நினைவுகளும் நிலைத்து நிற்கின்றன. அதேபோல் அவரைக் கொன்ற கோட்சே என்ற கொடியவனின் பெயரும், அவன் செய்த கொடுஞ் செயலும் கூட நிலைத்து நிற்கத்தான் செய்கின்றன. இவற்றுள்ளே எதனைப் புகழ் என்பது? இரண்டையும் சொல்வது அழகு ஆகுமா? ஆகையால் பரிமேலழகர் சொல்வதுபோல் இறவாது (நிலைத்து) நிற்கும் தன்மையுடையது என்று மட்டும் புகழைப் பற்றிச் சொல்வதற்கில்லை.

ஆங்கிலத்தில் பேமஸ் (Famors) என்றும் நொட்டோரியஸ் (Notorious) என்றும் இரண்டு சொற்கள் உள்ளன. 'பேமஸ்' என்பது நல்லதனால் பெயர் பரவும் சிறப்பும் 'நொட்டேரியஸ்' என்பது கேட்டினால், தீமையுடைமையால், பெயர் நிலைக்கும் தன்மையும் என்று கூறப்படுகிறது. தமிழ் மொழியில் அதுபோல் 'நல்ல புகழ்,' 'கெட்ட புகழ்' என்று கூறுவது இல்லை புகழ் என்றாலே அதுநற்குண, நற்செயல்களால்தான் விளையவேண்டும் என்று திடமாகக் கருதியிருந்தனர், தீய செயல், "தீய குணங்களால் பெயர் பெறும் தன்மையை பழி (இகழ்ச்சி) என்று தனியே குறித்துள்ளனர்.

நல்லது தீயது என்றால் அது இது என்பது இல்லையா? எது நல்லது? எது தீயது? இன்னது இன்னது என்று பட்டியல் போட்டுக் காட்டமுடியுமா? உலகம் பொதுவாகச் சில சங்கதிகளை நல்லது என்றும் சிலவற்றைத் தீயது என்றும் ஒருவரையறை செய்துள்ளது. கற்றல், கொடுத்தல் முதலியவற்றைப் பொதுவாக உலகம் நல்லது என்று ஏற்றுக்கொண்டிருக்கிறது. 'கல்லாதபேர்களேநல்லவர்கள்' என்று பாட்டு இருந்தாலும்கூட, உலகம் 'கற்றல் நன்று' என்று நம்புவதால்தான் நாள்தோறும் பள்ளிக்கூடங்கள் திறக்கப்படுகின்றன. எனவே இது போன்ற நல்ல செயல்களால் பெறும் பெயரையே, (பெரும் பெயராக) புகழ் என்று சொல்லவேண்டும்

எதனால் பெறுவது புகழை? உலகத்தில் புகழ் பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள், கபிலர், பரணர், கோவூர் கிழார், சேக்கிழார், கம்பர், இளங்கோ பாரதியார் என்று சிலருடைய பெயர் நம் நினைவில் நிலைக்கிறது. ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன், கரிகால் பெருவளத்தான், என்று சிலருடைய பெயர் நம் நெஞ்சில் இடம் பெறுகிறது. பாரி, காரி குமணன், அதியமான் என்று பின்னும் சிலரை நாம் மறக்காமல் போற்றுகின்றோம். இவர்கள் எல்லாரும் புகழ் பெற்றவர்கள்தாம். எல்லாரும் ஒரே துறையில் புகழ் பெறவில்லை, ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் ஈடுபட்டனர், பெயர் பெற்றனர். ஆகவே புகழ் பல வழிகளில் வரும் போல் தெரிகிறது அல்லவா?

தொல்காப்பியர் சொல்கிறார், பெருமிதம் என்ற மெய்ப்பாடு புகழ் கல்வி கொடை, வீரம் ஆகிய நான்கினால் தோன்றும் என்று. பெருமிதம் என்பது திமிர் என்று சொல்லப்படும் செருக்கு அல்ல; தன்னிறைவு, இயன்றதுசெய்தேன் என்றுகருதும் நிறைவானஎண்ணம். அதில் புகழ் என்பது மற்ற மூன்றினால் பெறத் தக்கது என்று சொல்வதே பொருத்தமாக இருக்கிறது, கபிலர், திருவள்ளுவர் போன்றவர்கள் கல்வியால், அறிவால் புகழ் பெற்றிருக்கிறார்கள்; பாண்டியனும், சேரனும் சோழனும் தங்கள் வீரத்தால் பெயர் பெற்றார்கள்; பாரியும் அதியமானும் கொடையால் புகழ் பெற்றிருக்கிறார்கள்.

இன்னும் நுட்பமாக எண்ணிப்பார்த்தால் இந்த மூன்றும் இரண்டு இரண்டாகப் பிரிக்க இடம் தருகின்றன.

கல்வி என்பது பெறுவது, என்ற நிலையில் பெறப்பட்டுப் பின் பிறர்க்குத் தரப்படும்போது சொல்லால் சிறப்பும், எழுத்து வகையால் சிறப்பும் தருகின்றது. டாக்டர் சேதுப்பிள்ளையின் பேச்சிலே மயங்கி சொல்லின்பத்திலே சொக்கிப்போய் அவரைப் புகழுகின்றோம், திரு வி. க. அவர்களின் எழுத்தால், சிறப்பைத் தருகின்றோம். அதேபோல், கொடையால் வரும் சிறப்பும் இரண்டு வகையாக விளங்குகின்றது. பச்சையப்பர், ராசாசர். அண்ணாமலைச்செட்டியார், அழகப்பர் போன்றவர்கள் தாங்கள் ஈட்டிய செல்வத்தை ஈந்து புகழ் பெறுகிறார்கள், சிலர் செல்வம் ஈட்டமுடியாத நிலையினராக இருந்தும், ஈட்டியிருப்போரை அணுகி அவரை ஈவோர் ஆக்கி, அதன்வாயிலாகப் புகழ் பெறுகின்றார்கள். வீரமும் அதேபோல் இரண்டு வகையாகின்றது. ஈட்டிக்கு

முன்னே நின்று தளராமல் தயங்காமல் எதிர்ப்பதும் வீரந் தான்; பிறர் ஈட்டியை எடுக்காமலே இருக்கச் செய்வதும் வீரம்தான். சுபோஸ் சந்திர போசின் வாழ்க்கையும் வீரம் செறிந்தது; காந்தியடிகளின் வாழ்க்கையும் வீரம் செறிந் ததுதான்.

இத்துணை சிக்கலான சங்கதியாக இருக்கிறது இந்தப் பாழாப்போன புகழ். இதன்மீது எனக்கு ஆசை வந்துவிட் டது. எப்படிவந்தது அந்தஆசை எனக்கு? 'சிவனே' என்று 'சும்மா' உட்கார்ந்திராமல் திருக்குறளை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தேன், ஒருநாள்; புகழ என்ற அதிகாரம் கண்ணில்பட்டது. "ஈதல், இசைபட வாழ்தல், அது அல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்று திட்டவட்ட மாகச் சொல்லிவிட்டிருந்தார் திருவள்ளுவர் அன்றுதான் நான் சம்பளம் வாங்கிக்கொண்டுவந்திருந்தேன். இதோ திருவள்ளுவர் உயிருக்கு ஊதியம் என்கிறாரே, இது என்ன? நான் வாங்கிவந்த சம்பளம் எதற்கு? என்ற கேள்வி பிறந்தது, நான் வாங்கிவந்திருந்த சம்பளம் உடலுக்குத் தரப்பட்டது, உடல் உழைப்புக்காகத் தரப் பட்டது. அந்தச் சம்பளத்தைப் பெறும் நான், என் உடலுக்காக உழைக்கும் உயிருக்கு ஏதேனும் சம்பளம் தரவேண்டாமா? திருவள்ளுவர் சொல்கிறார், இசைபட வாழ்தல் அல்லது உயிருக்கு வேறு ஊதியம் இல்லை என்று! உயிருக்கு ஊதியம் இசை (புகழ்),

அந்தப் புகழ் என்ற ஊதியத்தைத் தராமலே உயி ரிடம் வேலை வாங்கலாமா? (உயிரை வாங்குவது அல்ல!) என்று எண்ணினேன். உடனே அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன். ஏன்? அடுத்தபக்கத்திலே இன்னொரு குறள் ஒரு அறிவுரை சொல்லியது; "தோன்றின் புகழொடு தோன்றுக, அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று." நான் தோன்றியாகிவிட்டது. தோன்றாமை நன்று என்று இனிமேல் எண்ண இயலாது, எண்ணுவதற்கு நான் யார்? அதனால் புகழொடு தோன்றி விடலாம் என்று முடிவுசெய்தேன். அதுதான் எதுபுகழ் என்ற ஆராய்ச்சியில் என்னை இறக்கிவிட்டது.

புகழ் என்பதைத் தெரிந்து கொண்டேன், ஆனால் அதை எப்படிப்பெறுவது? சொர்க்கவாசல் தெரிகிறது. ஆனால் அதற்குப்போகும் வழி எது? என்று கேட்டது போல், புகழ்வாயில் தெரிகிறது. அதை அடையும் வழி?

புகழ் பெறத்தக்க கல்வி; வீரம், கொடை இருந்தால் மட்டும் போதாது. இது இருக்கிறது என்பதைப் பிறர் தெரிந்து கொண்டால்தான் புகழ் வந்து சேரும். மல்லி கைப்பூ தோட்டத்திலே மலர்ந்தால்தான் தான் பறித்துக் கூந்தலில் சூடிக்கொள்வர்; காட்டிலே பூக்கும் பூவைச் சூடுவது யார்? முற்றத்திலே நிலவு காய்ந்தால் பயன் துய்க்கலாம். ஆனால் ஆளற்ற நடுக்கடலில் நிலவு காய்ந்து நிகழ்த்தும் பயன் என்ன? அப்படி இந்த உலகத்தில் எத்தனைபேர் அறியமுடியாத வகையில், பிறர்க்குத் தெரி யாத வகையில் புகழ்மிக்க, புகழ்பொதிந்த செயல்களைச் செய்து மறைந்து போனார்களோ?

புகழை ஈட்டலாம், தேடிப்பெறலாம் என்றால்இத்தனை சங்கடம் இருக்கிறது! அதனால்தான் போலும் சிலர் ஈட்டும் புகழை நாடாமல் ஒட்டும் புகழை நாடுகின்றனர். இன்னார் மகன், என்பதால், தம்பி என்பதால் சிலரிடம் புகழ் சென்று ஒட்டிக்கொள்கிறது. அவர்கள் தாங்களே கூட புகழ் பெறத்தக்கவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் நினைக்கும் முன் புகழ் அவர்களிடம் வந்து ஒட்டிக்கொள்கிறது ஒட்டும் புகழை மேலும் வளர்த்துக் கொள்ளவேண்டும். ஒட்டும் புகழ் போதும் என்று இருந்து விடல் ஆகாது.

ஈட்டுகிறோமோ, ஒட்டிக்கொள்கிறோமோ, எப்படிப் பெற்றாலும் அது புகழ்தான் ஆனால் அந்தப்புகழ் நிலைத்து நிற்கிறதா என்று பார்க்கவேண்டும். நஞ்சு குடித்துச் செத்துப்போன சாக்ரடீசை இன்னும் புகழ்ந்து கொண்டிருக்கிறோம்; எத்தனையோ பேர் வாழ்க்கைச் சுமை தாங்காமல், தாங்க இயலாது என்று தவறாக நினைத்துக் கொண்டு நஞ்சுண்டு சாகின்றார்கள். அவர்களுடைய பெயரும் படமும் இரண்டு நாட்கள் பத்திரிகைகளில் அடி படுகின்றன; பிறகு அடியோடு மறைந்து போகிறது; அந்தப் பத்திரிகையே மறைந்து போகிறதே அதற்கு என்ன செய்ய! ஓங்கி வளர்ந்திருக்கும் ஒதியனும், சவுக் கும் அடுத்தடுத்து வளர்ந்திருந்தாலும் பயனற்றது என்று ஒதியனை ஒதுக்கி விடுகிறோம்; சவுக்கை விறகாகப் பயன் படுத்துகிறோம். புகழிலேயும் கூட அப்படி உண்டு சில ருடைய புகழ் ஒதியன்போல் ஒன்றுக்கும் ஆகாது, சில ருடைய புகழ் விறகாய் எரிந்து பயன்படும் அந்தப் பய னுடைய வாழ்க்கையே வாழ வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

'உங்களைப்போல் உண்டா? என்கிறான் ஒருவன் நம் எதிரில் நின்று முதுகுக்குப் பின்னால் நின்று ஏதேதோ சொல்கிறான் அது அல்ல புகழ். அது வஞ்சனை நிறைந்த புகழ்; வாஞ்சையுள்ளது அன்று, தாய், தான் பெற்ற குழந்தையைப் புகழுகின்றாளே, அது வாஞ்சை நிறைந்த புகழ் ஈயாத ஒருவனைப்பாரி என்று பாட்டிலே புகழுகின் றானே புலவன் அது வஞ்சனை; இல்லை வயிற்றுக் கொடுமை!

எத்தனை தொல்லை! இவ்வளவுக்குப்பிறகு புகழ்பெற வேண்டும். அப்புறமாவது நிம்மதியாக 'ஒரு தூக்கம் போட' முடியுமா? அது எப்படி முடியும்? பொருளைத் தேடிச் சேர்த்தபிறகு அதைவைத்துக் காக்கவேண்டாமா? தேடும்போது செய்த முயற்சியைவிட காக்கும்போது மிகுதியான முயற்சி செய்யவேண்டும், புகழும் அப்படித் தான், அதைப் பெறுவதற்குத் தேவைப்படும் முயற்சியை விட அதைக் காப்பதற்கு மிகுதியான முயற்சி வேண்டும்; விழிப்பு வேண்டும்.

கணம் தவறாது கவனமாக இருந்து காத்தால் உண்டு, இல்லையேல் ஓர்நொடியில் எல்லாம் 'பொக்' கென்று போய்விடும். இவ்வவவு கஷ்டப்பட்டு நான் புகழ் தேடிவிடுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்புறம் ஒருபுலவர் பெரியோரை வியத்தலும் இலமே' என்று என்னைப் புகழாமல் விட்டுவிடுவார்; என்னைப் புக ழாதுபோனால் போகட்டும், பிறரை இகழுவாரா என்றால் அதுவும் இருக்காது; 'சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' என்பார். அப்புறம் புகழும் இகழும் ஒன்றே! சே!

வேண்டாம் இந்தப் புகழ்!

★

சிட்டாடல்
பெருமையுடன் அளிக்கும் புத்தாண்டு பரிசு !
இரு புதுமுகங்கள் நடிக்கும்
இரவும் பகலும்
ARUNA
புரொட்யூஸர் ஜோஸப் தாமஸ்
டைரக்டர் ஜோஸப் தளியத் Jr.

காலிழந்தவன்

"நானோர் குருடன்! இடறி விழுந்தேன்'' — என்று அவன் சொன்னபோது, என்னால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. பிறர் படும் துன்பம் கண்டு மனம் இளகாத போக்கினன் அல்ல நான். எவர்க்கேனும் இடர் ஏதேனும் ஏற்படும்போது, ஏளனம்செய்யும் வழக்கமும் கொண்டவன் அல்ல. என்றாலும் என்னால், அவன் பேச்சைக் கேட்டுச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

அவனை நான் அதற்கு முன்பு கண்டதில்லை. ஊருக்குப் புதியவன் போலிருக்கிறது; உருக்குலைந்த நிலை; அழுக்கேறிய ஆடை; மிரட்சி காட்டும் பார்வை!

ரயிலடியில் அன்று நிரம்பக்கூட்டம். என் நண்பனை வரவேற்கக் கூடிற்று, நானும் அதற்காகவே சென்றேன். என் நண்பன் என்னை எதிர்பார்த்திருப்பானா என்பது எனக்குத் தெரியாது. வரவேற்பு வைபவமும், நகர மண்டபத்தில் அவன் சொற்பொழிவும் ஏற்பாடாகி இருந்தது—விளம்பரத்தைக் கண்டுதான் நான் சென்றேன், அவன் என்னை அடையாளம் கண்டுகொண்டானா என்பதுகூட எனக்குத் தெரியாது—பார்த்ததும் எனக்கு அவனை நன்றாக அடையாளம் கண்டுகொள்ளமுடிந்தது—போர்க்களத்திலே உழன்றவன்—ஆனால் முகத்திலே இருந்த அந்தப் பழைய பொலிவு குறையவில்லை.

பார்த்து மகிழ்ந்தேன்—பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்தவர்கள் என் நண்பனை அவன் மனைவியுடன் மோடாரில் அழைத்துச் சென்றனர். பெண் அடக்கமும் அழகும் ஒருசேரக் காணப்பட்டாள்.

படம் எடுக்க வந்திருந்தோரும், பத்திரிகை நிருபர்களும், பேசிச் சிரித்தபடி நடந்தனர்.

"போர்க்களத்திலே மெத்தத் துணிச்சலோடு போரிட்டவன்.''

"சுரங்க வெடி இருப்பது தெரிந்து, அதனை அகற்றிட முனைந்தான்.''

"அவன் வீரத்தினால்தான், பலர் உயிர் பிழைத்தனர்.''

என் நண்பனைப்பற்றி இவ்விதம் அவர்கள் பாராட்டிப்பேசியது கேட்கக் கேட்க எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

அவன் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே, துணிச்சலுள்ளவன்; நன்றாக நினைவிலிருக்கிறது; ஒரு நாள் முரட்டுக் காளையொன்று எங்கள் ஆசிரியரைத் துரத்திற்று—அலறி ஓடினார்—நாங்களும் ஓடினோம்—துணிந்து சென்று, அதன் வாலைப் பிடித்து இழுத்து, அதனைத் தன்பக்கம் பாயும்படிச் செய்தவன் என் நண்பன் கண்ணப்பன்தான்—அவனைக் காளை பலமாகத் தாக்கிவிட்டது.

"நான் பரவாயில்லை, வாலிபன் வலி எடுத்தால்கூடத் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால் அவர் பாபம் ஐம்பது வயதுக்குமேல் ஆனவர், வலிவற்றவர்; அவரை அந்த முரட்டுக்காளை முட்டித் தள்ளிக் கீழே உருட்டிவிட்டால் அவருக்கு பலத்தகாயம் ஏற்பட்டுவிடும் — அவரால் தாள முடியாது.''

என்று சொன்னவன் கண்ணப்பன்.

பள்ளிக்கூடத்தில் 'போக்கிரி' என்ற பெயரெடுத்த மாணவர்கள் சிலர் உண்டு; அவர்கள் யாருக்கும் இந்தத் துணிச்சல் வந்ததில்லை; குனிந்த தலை நிமிராதவன் என்ற பெயரெடுத்திருந்த கண்ணப்பனுக்குத்தான் வந்தது அந்த வீரம்.

அதே வீர உணர்ச்சியைத்தான், போர்க்களத்திலே காட்டி இருக்கிறான். பாராட்டுக்கு உரியவன், இதிலென்ன சந்தேகம்.

இதை எண்ணிக்கொண்டு வழிநடந்தேன்—பாதை ஓரமாகச் சென்றுகொண்டிருந்தவன், கீழே விழப்போனான்—ஏதோ இடறி—ஏதோ நினைவாக நடந்து

சென்றுகொண்டிருந்தான் போலிருக்கிறது. அவன் கீழே விழவிடாமல் நான்தான் காப்பாற்றினேன்— இல்லையென்றால் பாதையையொட்டி இருந்த, பத்தடிப் பள்ளத்திலே விழுந்து விட்டிருப்பான். அப்போதுதான் அவன், "நானோர் குருடன், இடறி விழுந்தேன்,'' என்று முணுமுணுத்தான்; எனக்குச் சிரிப்பு வந்தது, அடக்கமுடியாதபடி; ஏனெனில் நானோர் குருடன் என்று சொன்னானே அவன் நொண்டி—ஒரு காலிலே ஒரு பகுதி முழங்கால் அளவுக்குத் துண்டிக்கப்பட்டுப்போய்விட்டிருந்தது—தடி ஊன்றிக்கொண்டு, தத்தித்தத்தித்தான் நடக்க முடிந்தது.

கண்களிலே ஒரு பழுதும் இல்லை. கால்தான் நொண்டி. ஆனால் அவன் நானோர் குருடன் என்றல்லவா சொன்னான்—அதனால் எனக்குச் சிரிப்பு வந்தது, சிரித்துவிட்டேன்—ஆனால் அடுத்த கணமே மனம் என்னமோ போலாகிவிட்டது-பாபம், என்ன எண்ணிக் கொள்ளுகிறானோ அவன், என்று. எனவே அவனிடம், மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன்.

ஓஹோ! நொண்டி நான், அதனால் இடறி விழுந்தேன் என்று சொல்லியிருக்க வேண்டும்; குருடன் என்று சொல்லிக்கொண்டது வேடிக்கையாக இருந்தது என்பதற்காகச் சிரித்தீர்களா! பரவாயில்லை. காலிழந்தவன் நான்; அது ஊருக்கும் உலகுக்கும் தெரிகிறது. ஆனால் நான் கண்ணிழந்தவன் என்பது உங்களுக்குக் கூடத் தெரியாது. எனக்கே இப்போது ஒரு அரை மணி நேரத்துக்கு முன்புதான் தெரிந்தது; நான் ஓர் குருடன் என்பது.''

நொண்டி இதுபோலப் பேசினான்; கண்களை உன்னிப்பாகக் கவனித்தேன்;—பழுதுபட்டில்லை; ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. குருடன் அல்ல. ஆனால் தன்னைக் குருடன் என்று திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்கிறானே, இது என்ன விந்தை. புரியவில்லை. தத்தித் தத்தி அவன் என்னுடன் நடந்துவந்து கொண்டிருந்தான்.

"கோபிக்கக்கூடாது; கண்கள் சரியாக இருப்பதாகத்தான் தெரிகிறது. ஏன் குருடு என்று உங்களை நீங்களே குறைகூறிக் கொள்கிறீர்கள்''

என்று நான் கேட்டேன், மரியாதை கலந்த குரலில்.

"ஒருசமயம், எனக்குப் புத்திக்கோளாறு என்று எண்ணுகிறீர்களோ, என்னவோ! என் பேச்சும் போக்கும் அப்படித்தான் நினைக்கச் சொல்லும்.''

என்று அவன் கூறினான். ஏதோ பெரும்பாரம் நெஞ்சிலே சுமந்துகொண்டிருக்கிறான், அதனாலேதான் தன்னை வெறுத்துப் பேசுகிறான் என்று புரிந்தது; அவனிடம் எனக்கு மேலும் இரக்கம் ஏற்பட்டது.

அரை மணிக்கு முன்புதான்,

நானோர் குருடன் என்பது எனக்கே புரிந்தது என்றேன், விளங்கி இருக்காது. என் கதையைக் கேட்டாலொழிய அது விளங்காது. ஆனால், ஏதோ வேலையாகச் செல்லக்கூடும், உமக்குத் தொல்லைதரலாமா என் நெஞ்சோடு இருந்துபோகட்டும் அந்தக் கதை...

எனக்கொன்றும் வேலை இல்லை. இன்று விடுமுறை எடுத்துக்கொண்டிருக்கிறேன். நேரே நகர மண்டபம்தான் போகிறேன். இப்போது வரவேற்பு கொடுத்தார்களல்லவா, லெப்டினன்ட் கண்ணப்பாவுக்கு-அவருடைய சொற்பொழிவு, அங்கே......

அப்படியா! கண்ணப்பா வரவேற்புக்காகத்தான் வந்தீர்களா...என்னைப்போலவே! உங்களுக்கு கண்ணப்பாவை...

தெரியுமா என்கிறீர்களா, நாங்கள் இருவரும் ஒரே பள்ளிக்கூடத்திலே ஒன்றாகப் படித்தவர்கள், நண்பர்கள்; பழைய நண்பர்கள்......

"அப்படியா......அப்படியானால், என் கதையை உங்களிடம் கூறுவது அவ்வளவு சரியாக இருக்காது...ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்! ஆசாமிக்கு நிச்சமாக புத்தி கோளாறுதான் என்றுதானே! பயப்படாதீர்கள்-எனக்கொன்றும் பைத்தியம் இல்லை; புத்திக்கோளாறு இல்லை; புத்தி இல்லை, அவ்வளவுதான். அதிலும் பொதுவாக, பெண்களைப் புரிந்துகொள்கிற புத்தி இல்லை — நம் நாட்டுப் பெண்குலத்தின் குணத்தைத் தெரிந்துகொள்ளும் புத்தி இல்லை. அது இருக்கட்டும், லெப்டினன்ட் கண்ணப்பாவிடம் இப்போது பேசினீர்களா...?

இல்லை, இல்லை. நான் தொலைவிலே இருந்துதான் பார்த்தேன். அவனுக்கு என்னை அடையாளம் தெரிகிறதோ இல்லையோ......

அவ்வளவுதானா! ஒருவருக்கொருவர் நெருக்கம் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டேன்.

நானும் லெப்டினன்ட் கண்ணப்பாபோலத்தான், போர்க்களம் சென்று திரும்பியவன்தான். அங்குதான் கால்போனதும், கண்ணப்பாவுக்குப் போனதுபோலவே. ஆனால் அவன் வேறு ஒரு முனையிலே, நான் மற்றோர் முனையிலே. இருவரும் சந்தித்ததே இல்லை.

தங்கம் — அவன் மனைவி — இனி என் தங்கை, ஆனால், போர்க்களம் போகுமுன்பு நான் அவளை மணம் செய்துகொள்ள விரும்பினேன். அவள் மறுக்கவில்லை, பெற்றோர்கள் ஒப்புக்கொண்டபோது......

போர்க்களம் போகுமுன்பே திருமணம் செய்து கொள்ள திட்டமிருந்தது.

ஒருநாள் மாலை, அந்த ஊர் குளத்துப் பக்கம் சென்றிருந்தேன்—பொழுது சாய்ந்துவிட்ட நேரம்,

இரண்டு பெண்கள் தண்ணீர்க் குடத்துடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்கள். நான் வருவதை அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை; பேச்சிலே அவ்வளவு ஈடுபட்டுப் போயிருந்தனர். சிறிதளவு உரத்த குரலிலேயே பேசிக்கொண்டனர், என் காதில் விழும் அளவுக்கு. அவர்கள் சென்ற பக்கமே நானும் செல்ல வேண்டி இருந்ததால், அந்தப் பேச்சைக் கேட்டுத் தொலைக்க வேண்டி நேரிட்டது; செவிடாக இருந்திருந்தால், நான் குருடனாகி இருந்திருக்கமாட்டேன்.

"தங்கத்துக்குக் கலியாணமாமே, அடுத்த வாரம்."

"ஆமாம் பட்டாளத்தானுக்குக் கொடுக்கப்போகிறார்களாம்..."

"பாரேண்டி, வேடிக்கையை. தங்கம் பெரிய பயந்தாங்கொள்ளி! அவளுக்கு வரப்போகிறவன், பட்டாளத்துக்காரன்! எப்படி பொருந்தப் போகுது."

"தங்கத்தோட, சித்தாத்தா கொடுமைக்காரியாச்சே. இவ, மூத்தா பொண்ணுதானே. அதனாலே எந்தப் பாழும் கிணற்றிலேயாவது பிடித்துத் தள்ளிவிட்டாத்தான் நிம்மதின்னு தீர்மானிச்சு, பட்டாளக்காரனை ஏற்பாடு செய்துவிட்டா."

"பட்டாளத்துக்காரர்னா கேவலம் ஒண்ணும் இல்லே; சொல்லப்போனா, பெருமைதான்."

"அதுக்குச் சொல்லலேடி. ஏன், இப்ப அவசர அவசரமாக் கலியாணம்? அவன் பட்டாள வேலையை முடிச்சிகிட்டு, வரட்டுமே —ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ ஆகப் போகுது. அதற்குள்ளே என்ன குடிமுழுகிப் போகும். ஏன் அவசரம்."

"நல்ல காரியத்தை ஏன் தள்ளிப் போடணும்."

"அதுக்காகச் சொல்லலே. இவன், தங்கத்துக்குத் தாலிகட்டிவிட்டு, கிளம்பப் போறான், சண்டைநடக்கற இடத்துக்கு. அட அவனுடைய தலை எழுத்து எப்படி இருக்குதோ, காலே போகுதோ, கையேபோகுதோ, உயிரேதான்போகுதோ. அப்படி எதாச்சும் ஒண்ணு அவனுக்கு நேரிட்டுவிட்டா, தங்கம் தானே தலையிலே கையை வைத்துக் கொண்டு, காலமெல்லாம் கதறிக்கொண்டிருக்கவேண்டி இருக்கும்."

"அதுக்காகச் சொல்றியா! அது நிஜந்தான், கொஞ்சம் பொறுத்துச் செய்யலாம்"

"அட, அது அந்த ஆம்பிள்ளைக்குத் தெரியவேண்டாமா? நாமபோறதோ சண்டை நடக்கிற இடத்துக்கு, அங்கே என்ன ஆகுதோ ஏது ஆகுதோ நாம எதுக்கு அவசரப்பட்டு ஒருத்தி கழுத்திலே இப்ப தாலி கட்றது, சண்டை முடிந்ததும், கைகால் கண்ணுக்கு ஊனமில்லாம வந்து சேர்ந்தா, அப்பப்பார்த்துக்கொள்ளலாம் கலியாணத்தைப் பத்தின்னு தோணவேணுமா!"

"புத்திகெட்ட ஆளுபோல இருக்கு"

"அவசரம்...தங்கத்தை வேறே எவனாவது கட்டிக்கொள்ள வந்துவிட்டா என்ன செய்கிறது என்ற பயம்......"

"இருக்கும், இருக்கும். தங்கத்துக்கு என்னடி குறை; கண்டேன் கண்டேன்னு ஓடி வருவான் நூறுபேர், கட்டிக்கொள்ள......"

"அழகா இருக்காளேன்னு சொல்றயா......! அழகைப் பார்த்தா, எவனுக்கும் ஆசைவரும், கட்டிக்கொள்ளலாம்னு; ஆனா தரித்திரம்பிடிச்சவ என்கிற சங்கதி தெரிஞ்சா, கிட்டேவரப் பயப்படுவாங்க, விவரம் தெரிந்தவங்க......"

"எது எப்படி இருந்தாலும், சண்டைக்குக் கிளம்பற சிப்பாயி இப்படி ஒரு பெண்ணு கழுத்திலே தாலிக்கயிற்றைக் கட்டிவிட்டுக் கிளம்பறது சரியில்லை. இதைவிட ஒரு தூக்குக் கயிற்றையே போட்டுவிடலாம்......"

அதற்குமேல் என்னால் அவர்கள் பேசிக்கொள்வதைக் கேட்க மனம் இடம்தரவில்லை. அதிலும் பேசிவிட்டு, அந்த இரண்டு பெண்களும் சிரித்த சிரிப்பு உண்டே, அப்பப்பா! என் நெஞ்சைப்போட்டு அறுத்துவிட்டது. உண்மைதானே, அவர்கள் சொல்வது என்று என் நெஞ்சம் உறுத்திற்று. என்னையும் அறியாமல் நான் ஒரு பெரிய கேடு செய்துவிடுகிறேன் என்ற பயம் ஏற்பட்டது. அந்தப் பெண்கள் பேசிக்கொண்டபடி எனக்கு, போர்க்களத்திலே ஏதேனும் ஏற்பட்டுவிட்டால்......தங்கத்தின் கதி என்ன ஆகும்! மனம் என்ன பாடுபடும்! சித்தி என்ன சொல்லுவாள். எவன் தலையிலாவது கட்டித் தொலைத்துவிட்டு நிம்மதியடையலாம் என்று நினைத்தால், நடக்கிறதா! இவளுடைய 'ஜாதகம்' அப்படி. மறுபடியும் என்காலைவந்து சுற்றிக்கொண்டுவிட்டது இந்தச் சனியன்! — என்றெல்லாம் பேசுவாளே, எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுபவள்—எனக்கே தெரியும்.

தங்கம், என் மனதுக்குப் பிடித்தமானவள் — அவளை இழக்க நான் விரும்பவில்லை. ஆனால் என்னால் அவளுக்கு இழிவும் பழியும் தொல்லையும், துயரமும் ஏற்படக்கூடாது என்றும் விரும்பினேன். எதற்கும், போர்க்களம் சென்று திரும்பிய பிறகு, திருமணம் செய்துகொள்வதுதான் நியாயம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். விவரமாககாரணங்களைவிளக்கிக் கொண்டு இருக்க முடியுமா? அப்போது யாரார் என்னென்ன புதுப் பேச்சுப் பேசி என் மனதைமாற்றிவிடுவார்களோ என்று வேறு பயம்.



நிச்சயதாம்பூலம் நடத்திவிட்டு, கலி

யாணம் பிறகு என்று கூறிவிடலாம். எடுத்த எடுப்பிலே இது எனக்கு நல்லதாகத்தான் தெரிந்தது. தங்கம் எனக்கேதான் என்ற உறுதியும் கிடைக்கிறது; அதே போது, சண்டைக்குக்கிளம்பும்போது ஒரு பெண்ணின் கழுத்திலே சுருக்கு மாட்டிவிட்டுப் போனான் என்ற பழியும் ஏற்பட வழியில்லை.

ஆனால், யோசித்த பிறகு அந்த ஏற்பாடு அவ்வளவு சரியில்லை என்று தெரிந்தது. எவ்வளவு காலமாகுமோ, நான் திரும்பிவர! அதுவரையிலே தங்கம், சித்தியிடம் கொடுமைப்பட்டுக்கொண்டு வருவதா!! எப்போது வருவானோ தெரியவில்லை அந்த யோக்யன்! நிச்சயதாம்பூலம் வேறு நடத்திவிட்டுப் போய்விட்டான்.

வேறு எவன் கையிலும் பிடித்துக் கொடுப்பதற்கும் இல்லை. இவள் இங்கு குத்துக்கல் மாதிரி இருந்து கொண்டு தொல்லை கொடுக்கிறாள் — என்றெல்லாம் ஏசுவாள், தங்கத்தின் சித்தி.

அதனாலே, அந்த யோசனையையும் விட்டுவிட்டேன், சரியில்லை என்று.

நிச்சயதாம்பூலத்துக்கு நாள்வைக்கச் சொல்லி வற்புறுத்தினார்கள்; நான் ஏதேதோ சாக்குப்போக்குகளைச் சொல்லிக்கொண்டிருந்தேன். இதற்குள் நான் போர்முனைக்குப் புறப்படவேண்டிய நாளும் வந்துவிட்டது.

தங்கத்திடம் எப்படியாவது தனியாகச் சந்தித்து, விவரம் சொல்லி, அவளுடைய மனதைச் சமாதானப்படுத்தி விட்டால் போதும், என் மனம் நிம்மதியாகும் என்று எண்ணினேன். அதற்கு வழி? சித்தி கோபக்காரி ஒழுக்கம் கூடக்கெடக் கூடாது என்பதிலே மிகுந்த கண்டிப்பானவள். நான் என் யோசனையைச் சொன்னாலே சீறுவாள், "நான் ஒருத்தி இருக்கிறேனே, செத்துப் போகல்லேயே! என் கிட்டச் சொல்லு; அவ கிட்ட என்ன தனியாப் பேச்சு! அது இந்த இடம் இல்லா, நடையைக் கட்டு! — என்று பேசுவது மட்டுமல்ல, ஊரையே ஒரு கலக்குக்கலக்குவாள். ஒருவருக்கும் தெரியாமல், தங்கத்தைப் பார்க்கலாம் என்றாலோ, பெண் குனிந்த தலை நிமிராதவள் குளத்துப் பக்கம் கூட வருவதில்லை. என்ன செய்வது.

ஜோதிடக்கார ஐயரைப் பிடித்தேன்.

"தெரியும்டா — நோக்கு ஒரு ஆபத்து வார்போது, என்னைத்தான் தேடுவேன்னு நன்னாத்தெரியும் எனக்கு" என்று பேச்சை ஆரம்பித்து, உலக விவகாரம் அத்தனையையும் பேசி முடித்துவிட்டு, ஒருவாறு எனக்கு உதவி செய்ய ஒப்புக்கொண்டார். இன்னும் ஒரு மூன்று மாதத்துக்கு, நிச்சயதாம்பூலம் நடத்தக் கூடாது. கிரஹபலன் சரியாக இல்லை, இந்த ஜாதகக் காரனுக்கு!—என்று சித்தியிடம் கூறிவிட ஒப்புக் கொண்டார். எனக்கு உதவி செய்யத்தான் ஒப்புக்கொண்டாரே தவிர, நான் சொன்ன காரணங்களை, காரணங்கள் என்று கூட அவர் ஒப்புக் கொள்ளவில்லை. கிளறிக் கிளறிக்கேட்டார்.

"ஏண்டா சோமு! வேறு எவளாவது...?"

"சே, சே! அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க"

"இருந்தாச் சொல்லுடா; இது சகஜம்தானே. ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்ன்னு பெரியவா சொல்லியிருக்காடா. இந்தக் காலத்திலே இல்லா, சகல சாஸ்திர விற்பன்னாளாவும், சத்யத்துக்குக் கட்டுப்பட்டவளாகவும், இருந்த பெரியவா காலத்திலேயே ஆசை அறுபதுநாள், மோகம் முப்பது நாள் தான்! இப்ப மணிக்கணக்கிலே கூட இல்லை, நிமிஷக் கணக்கிலே மாறிவிடுது..."

"அப்படியெல்லாம் என்னைப் பற்றி எண்ண வேண்டாம்." "அடே! அப்பா! சரி என்ன அவ்வளவு உறுதி படைச்சவனா! கண்களை இறுக்கி மூடிண்டா, பத்து வருஷம் பதினாறு வருஷம் கூடத் திறந்து பார்க்கமாட்டார், விசுவாமித்திர மகரிஷி, என்ன ஆனார் பார்த்தயோ, மேனகை வந்து, தா, தைன்னு ஆடின உடனே..."

என்னசெய்வது, எனக்கு அவரைவிட்டால் வேறே, வழியில்லை, அவருடைய உதவி வேண்டும்; அதற்காக பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாக இருந்தேன் அவர் பேச்சைக்கேட்டுக் கொண்டு.

அவர் எடுத்துச் சொன்னதை நம்பித்தான், நிச்சயதாம்பூல ஏற்பாட்டை நிறுத்திக்கொண்டார்கள். ஆனால் தங்கம் எனக்குத்தான் — நான் திரும்பி வருகிற வரையில் வேறு இடம் பார்ப்பதில்லை என்று வாக்களித்தார்கள். மகிழ்ச்சி எனக்கு. அந்த மகிழ்ச்சியோடுதான் போர்முனை சென்றேன்.

ஜோதிடர் சொன்னதைக் கேட்டுக் கொண்டார்களே தவிர தங்கம் வீட்டுக்கு மனம் முழு சமாதானமாகி விடவில்லை. இந்த இலட்சணத்தில், தன்னுடைய சாமர்த்தியத்தை ஊர்மெச்ச வேண்டும் என்ற அற்ப ஆசை இந்த ஜோதிடருக்கு. அதன் காரணமாக அவர் சிலரிடம், நிச்சய தாம்பூலம் நடைபெற இருந்ததை நான் கேட்டுக்

கொண்டதற்காக சாமர்த்தியமாகப் பேசி, நிறுத்தி விட்டதாக வேறு பேசினுர்—இது தங்கம் வீட்டாரின் காதிலே விழுந்தது.

"நான் என்ன அந்த ஐயன் சொன்னதை அப்படியே நம்பி விட்டேனு என்ன! எனக்குத் தெரியாதா அந்த நாக்கு எப்படியும் வளையும் என்கிற விஷயம். இவதலே எழுத்து அப்படி." என்று சித்தி பேசியதாகச்கூடக் கேள்விபட்டேன்.

"போர் முனையிலே, எதிரித் தாக்குதலால், நான் ஒரு டாங்கியில் சிக்கிக் கொண்டேன்-உயிரே போயிருக்க வேண்டியது. எப்படியோகாலோடுபோயிற்று.

கால் துண்டிக்கப்பட்டது கூட எனக்குத் தெரியாது; மயக்க மருந்து கொடுத்து விட்டிருந்தார்கள். நினைவு வந்து கண்களைத் திறந்து பார்த்தேன். வலியும் எரிச்சலும் கால் உள்ள பக்கமாக இருந்தது; பார்த்தேன், வயிறு பகீர் என்றது; பாதி கால் இல்லை ஐயோ! என்று அலறினேன். அந்தக் கூச்சலிட்டதான் மறுபடியும் களைப்பு, மயக்கம்.

தெளிவு பெற்ற பிறகு, என்னுல் துக்கதத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இனி நான் ஓர் நொண்டி! ஆமாம்! தத்தித் தத்தி நடக்க வேண்டியவன் ஊர்பேர் அறியாதவனுகத் தான் இருக்கிறேன். இனி ஊரே பேசும், சோமு நொண்டி! என்று. சிறிது கோபம் ஏற்பட்டால் போதும், சோமு எங்கே? என்று கேட்கமாட்டார்கள், "எங்கே அந்த நொண்டிப்பயல்? என்றுதான் பேசுவார்கள். "குழந்தைகள் பெரியவர்களுக்குக் காட்டக் கூறும், பாவம்! தாத்தா! நொண்டி பாரு!" என்று. பெரியவர்கள் குழந்தைகளுக்குச் சொல்வார்கள், "ஜாக்ரதையா ரோடிலே, வண்டி ஏதாவது வருதான்னு பார்த்து நடக்கணும்; இல்லையானு, அதோ பார்த்தாயா நொண்டி, அது போல ஆகிவிடும்" என்பார்கள்.

பரிதாபம்! பரிகாசம்! எச்சரிக்கை! இவை கிளம்பும் நான் நடமாடும் இடத்தில்.

என் இளமை, கட்டுடல், அழகு, எதுவும் உலகத்தின் கண்களுக்குத் தெரியாது—நான் ஒரு நொண்டி—அது மட்டும் தான் தெரியும்.

சோமு நல்லவன் — பட்டாளத்திலே பணி புரிந்தவன் —கெட்ட நடவடிக்கை எதுவும் இல்லாதவன்—பழகுவதற்கு ஏற்றவன்—என்ற எதைப்பற்றியும் இனி இந்த உலகம் பேசாது — சோமு ஒரு நொண்டி என்பதுபற்றி மட்டுந்தான் பேசும், அப்படிக்கூடப் பேசாது-சோமு ஒரு நொண்டி என்று பேசாது! அதோ பார் ஒரு நொண்டி! அவன் பெயர் சோமு!!–என்று பேசுவார்கள். சோமு அல்ல இனி நான்! நொண்டி!!

என்மனம் படாத பாடுபட்டது—துக்கம் பிய்த்தது என் நெஞ்சை.

ஆனுல் தங்கம்! அவளைப்பற்றிய நினைப்பு வந்ததும் என் துக்கம் ஆயிரமடங்கு அதிகமாகிவிட்டது மட்டுமல்ல, என்னைப்பயம் பிடித்து உலுக்கி விட்டது.

குளத்தருகே அந்தப் பெண்கள் — குறும்பாகப் பேசினது-உண்மையாகப் போய் விட்டதே. தங்கத்தின் கணவன், ஒரு நொண்டி! ஐய்யய்யோ! தங்கம், ஒரு நொண்டியையா நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும். உலகம் ஏளனம் செய்யுமே! எப்படித் தாங்கிக் கொள்வாய்.

அவ தலை எழுத்து ஒரு நொண்டிக்கு வாழ்க்கைப்பட நேரிட்டு வீட்டது.

நொண்டியைக் கட்டிக்கொண்டு. அவ பாவம், என்ன கஷ்டப்படுகிருளோ...

ஏழையா இருக்கட்டும், மூட்டை சுமப்பவனு இருக்கட்டும், கை காலுக்கு ஊனமில்லாமல் இருந்தாப்போதும்—ஓடி ஆடி பாடுபட்டு பிழைப்புக்கு வழி தேடிக்கொள்ள முடியும். குடும்பத்தைக் காப்பாத்த முடியும்.

தங்கம், இவனைக் கட்டிக்கொண்டு நிம்மதியா எப்படி இருக்க முடியும். நொண்டியாலே, என்ன ஆகும் எவன் வேலை கொடுப்பான். இனி, குடும்பத்தைக் காப்பாத்தறதும் தங்கம் தலையிலேதான்.

இந்த நொண்டியை அங்கே இங்கே அழைத்துக்கொண்டுபோற வேலையும், இடறி விழாமப் பார்த்துக்கொள்ளும் வேலையும் எல்லாம் இந்தத் தங்கத்தோட தலையிலேதான் வந்து விடியும்......

இப்படியெல்லாம் பேசிக் கொள்வார்களே! எப்படித் தாங்கிக் கொள்வாள், தங்கம்.

ஏன் அவளுக்கு இந்த இழிவு! போடா, உங்க அப்பன் காலை ஒடிச்சுப் போட்டது போல உன் காலை ஒடிச்சிக் கழுத்திலே மாட்டிடுவேன், தெரியுமா......

என்று போக்கிரிச் சிறுவர்கள் பேசுவார்கள் — என் மகனிடம்...!

இவ்வளவு ஏன், நானே வேலை தேடும் போது உலகுக்குச் சொல்ல வேண்டும், "நொண்டி என்று நினைக்காதீர்கள் ஐயா! ஓட நடமாட முடியாதே தவிர, உட்கார்ந்த இடத்திலிருந்து, சலிக்காமல் வேலை செய்ய முடியும், திறமையாகச் செய்வேன். நாணய மாக நடந்து கொள்வேன்"

குறும்புக்காரனாகவும், பிறர்மனம் புண்படப் பேசக் கூடாது என்பதிலே நாட்டமில்லாதவனாகவும் இருந்தால், என்ன சொல்லுவான்.

"நாணயமாக நடந்துகொள்ளுவேன் என்று சொல்றயே, அப்பா! நாணயம் இருக்கட்டும், உன்னாலே, சரியாக நடக்கவே முடியாதே!"

என்று சொல்லுவான். உடன் இருப்பவர்கள் அந்த நகைச்சுவை கேட்டு சிரிக்கவேண்டும், அதை நான் கேட்டுச் சகித்துக்கொள்ளவேண்டும்...ஐய்யோ! எப்படி முடியும்...எப்படி......

என் புருஷன் நொண்டிங்க......ஏதோ, இருந்த இடத்திலே இருந்து கடைவைத்து பிழைப்புக்கு வழி தேடப்பார்த்தார்......முடியல்லே, அதனாலேதான் உங்கடனைத் திருப்பித் தரமுடியல்லே.....கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்க......

என்று தங்கம் கெஞ்சவேண்டும்; நான் தத்தித்தத்தி நடந்தபடி அதைக் கேட்டுக்கொண்டு உயிர் வாழ வேண்டும்!! இதையெல்லாம் எண்ணும்போது, வந்த ஆபத்து ஏன் காலோடு நின்றுவிட்டது என்று கூடத் தோன்றிற்று. புழுவாய்த் துடித்தேன், படுக்கையில். டாக்டர்கள், வலிதாளாமல் துடிக்கிறேன் என்று எண்ணிக்கொண்டு ஏதேதோ மருந்து போட்டார்கள்; வலி இருக்கும் இடம் தெரியாமல்.

இவ்வளவு தொல்லைகளையும் இழிவுகளையும் ஏளனங்களையும் என்பொருட்டுத் தங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்......

ஆமாம்......அவள் என் தங்கம் ஆனால்தானே இதெல்லாம். கன்னிதானே அவள்...எனக்காகக் காத்திருக்கிறாள்...ஆனால், இப்போது? காலிழந்தவன் என்று தெரிந்தால்? அப்போதும் 'சரி' என்று சொல்லுவாள்...திருமணத்துக்கு சம்மதிப்பாளா......?

எப்படி மனம் வரும் ஒரு இளமங்கைக்கு, ஒரு நொண்டியைக் கலியாணம் செய்துகொள்ள......குளத்திலே குட்டையிலேயாவது விழுந்து உயிரைப் போக்கிக்கொள்ளலாமே தவிர, ஒருநொண்டியைக்கொண்டு காலமெல்லாம் கஷ்டப்படுவதா.........

என்னென்ன எண்ணுவாளோ, தங்கம்! எப்படியெப்படிக் கதறுவாளோ!

கண்ணில்லையா, உங்களுக்கு—கருணை கடுகளவும் இல்லையா......என்னை ஒரு நொண்டிக்குப் பலி கொடுக்கிறீர்களே! இது தர்மமா? உன் மகளாக இருந்தால் இப்படிச் செய்வாயா...என்று புலம்புவாளே...

அழ அழ, பிடித்திழுத்துவந்து மண அறையில் அவளை உட்காரச்செய்து, என்னிடம் தாலிக்கயிறு கொடுத்து கட்டச்சொன்னால், என் கரம் நடுங்குமே! அவள் உயிர் துடிக்குமே! பலருக்குக் கண்ணீர்துளிர்க்குமே! நமக்குத் தாலிகட்டப்போகிறவன், ஒருநொண்டி! என்று நினைக்கும்போதே, எதிரே மூட்டப்படும் ஓமத்தீ, அங்கா இருக்கும்? அவளுடைய இதயத்தில் அல்லவா புகுந்து, அவளைத் தீய்த்துக்கொண்டிருக்கும். கெட்டி மேளம்! கெட்டிமேளம்! என்று கூறுவார்கள்—மேளம் காது செவிடுபட கொட்டப்படும்—அவள் செவியிலே என்னவிழும்? இசையா? இழவு ஒலிபோல அல்லவா இருக்கும்—ஐயய்யோ......ஆஹாஹாஹா......! இப்படியல்லவா செவியில் விழும்......

மாப்பிள்ளை, மெதுவா மெதுவா எழுந்திருங்கோ......

ஆசாமிக்கு என்னய்யா, சோல்ஜர் இல்லாவா...வாட்டசாட்டமாத்தான் இருக்கிறான் ...கால்நொண்டி...இருந்தா என்ன...ஆசாமி கெட்டிக்காரன்...சமாளித்துக்கொள்வான்...

கலியாண ஜோர்லே மாப்பிள்ளைக்கு, காலு இல்லை என்கிற கவனம்கூட போய்விட்டது போலிருக்குதே...ஒரே தாவாத் தாவுவார் போல இருக்குதே......

இப்படி எல்லாம் கேலிப்பேச்சு நடக்கும்; அதைக் கேட்டுப் பலர் சிரிப்பார்கள். அவர்கள் மனதிலே ஒரு கெட்ட எண்ணமும் இல்லாமல் பேசுவதால், நான்கூடக் கோபித்துக்கொள்வதற்கில்லை. சந்தோஷம் ஏற்படாவிட்டாலும், பல்லைக்காட்டவேண்டி இருக்கும். ஆனால், தங்கம்? அவள் என்ன எண்ணுவாள்! அவள் மனம் என்ன பாடுபடும்!

ஆனால், தங்கம், ஒப்புக்கொண்டால்தானே இதெல்லாம். அவள் எப்படி ஒப்புக்கொள்வாள்? எவ்வளவு சாதுப்பெண்ணாக இருந்தாலும், எதிர்த்துப் பேசாமல் இருக்கமுடியாதே. ஒப்புக்கொள்ளமாட்டாள் அவளுடைய சித்திகூடத்தான், எவ்வளவு கொடுமைக்காரியாக இருந்தாலும், இந்த விஷயத்தில் வற்புறுத்த மாட்டாள்......வேறு எதற்காக இல்லாவிட்டாலும், ஒரு நொண்டியை வீட்டு மருமகனாகக்கொள்வது இலாபமில்லாதது, வீணான கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்ற காரணத்துக்காகவாவது, என்னைக் கலியாணம் செய்துகொள்ளச் சொல்லித் தங்கத்தை வற்புறுத்த மாட்டாள்.

எல்லாம் இருக்கட்டும்......எனக்குத்தான் எப்படி மனம் துணியும், திருமணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்க! முன்பு நான் இருந்ததற்கும் இப்போதைக்கும், ஒரு காலிலே அரைபாகம் குறைவு வேறு ஒன்றும் இல்லை என்று சொல்லுவதா! நான் என்ன மனித மிருகமா!

போர்க்கள வேலையெல்லாம் முடித்துக்கொண்டு, மாலை சூட வந்திருக்கிறேன், என்று தத்தித்தத்தி நடந்துபோய், அவள் எதிரே நிற்கவா! இதயமேவா போய்விட்டது எனக்கு? கால் மட்டுந்தானே!!

நொண்டியாகி நான் போய் அவள் எதிரே நின்றால் அந்தக் கண்கள் நெருப்பல்லவா கக்கும்.

நொண்டிப்பயலுடைய குறும்பைப்பார்த்தீர்களா! கலியாணம் செய்துகொள்ள வேண்டுமாம், தங்கத்தை......

பாரேன் துணிச்சலை.....இவன் சம்மதிப்பானா, ஒரு குருட்டுப் பெண்ணைக் கட்டிக் கொள்ள......

முன்பே ஏற்பாடு நடந்ததுதானே, என் கிருனும்.

என்ன ஏற்பாடு நடந்ததாம், நான் பட்டாளத்துக்குப் போய், ஒத்தைக்காலனுகி வருவேன், அதுவரையிலே பொறுத்துக் கொண்டிரு; வந்த உடனே கலியாணம் என்ரு ஏற்பாடு...

புத்தி இருக்க வேண்டாமா? நமக்குத் தான் இந்தக்கதி ஏற்பட்டதென்ருலும் நம் மாலே மற்றவர்களுக்கு ஒரு பொல்லாங்கும் இழிவும் ஏற்பட, நாம் காரணமாக இருக்கக் கூடாது என்ற புத்தி இருக்கவேணுமா......

அப்படிப்பட்டவன் குணசாலி மனஷன்.

இவன் மிருகம், வெறிப்பய, நொண்டிப் பய......

இன்னும் என்னென்ன நடக்குமோ அர்ச்சனே!

இவ்விதமாகவெல்லாம் பலப்பல எண்ணிக்கொள் வேன்.

ஒருநாள், மனதைத் திடப்படுத்திக்கொள்வேன். நாம் இருக்கும் நிலேயில், தங்கத்தைத் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று.

மறுநாள், ஆசை பிய்த்துவிடும்; இருந்தால் என்ன? கேட்டால், ஒப்புக்கொள்வார்கள் என்று நினேப் பேன்.

உடல் உறுப்பா, வெட்டி எடுத்து எறிந்துவிட! உள்ளத்திலே ஊறும் எண்ணம்!! எடுத்து எறிந்து விடத்தான் முடிகிறதா, அல்லது எழாதபடி தடுக்கத் தான் முடிகிறதா!

பெரிய டாக்டர், காலிழந்த எனக்கு, ஊன்றுகோல் கொடுத்து நடக்கப் பயிற்சி அளித்தார்—இனிக் கவலே யில்லே, பயமில்லே; கால் இருப்பதுபோலவே எண்ணிக் கொள்ளலாம், ஊன்றுகோல் கொண்டு, நன்ருக நடக் கலாம்; ஓட்டப்பந்தயத்துக்குக்கூடப் போகலாம், என்ருர்; என்னே உற்சாகப்படுத்த.

பெரிய டாக்டரை அனேவரும் பாராட்டினர்கள்; அவர் சரியான நேரத்தில், சரியான முறையில் என் காலேத் துண்டாக்கி, என்னேப் பிழைக்கவைத்தாராம்! சிறிது திறமைக் குறைவாக இருந்திருந்தால்கூட அழுகிக்கிடந்த காலில் இருந்து விஷம் உடல் பூராவும் பரவி, நான் செத்துப்போயிருப்பேனும். இப்போது நான் வாழுகிறேன் என்று எண்ணிக்கொண்டார்கள்!

நானுந்தான் பாராட்டினேன்—நன்றி தெரிவித் தேன்—டாக்டருக்கு.

உனக்குக் கால் போச்சு, மிஸ்டர் சோமு! எனக்கு பேர் வந்தாச்சி!! — என்று அந்த டாக்டர் வேடிக்கை பேசினுர்.

போட்டோ கூட எடுத்தார்கள்—டாக்டரை—டாக் டருடன் நான்-நான் மட்டும்-ஊன்றுகோல் இல்லாமல்—ஊன்றுகோலுடன்-இப்படிப்பல போட்டோக்கள், தங்கத்துக்கு அனுப்ப வேண்டாமா!! அதற்காக!!

குழம்பிக் கொண்டிருந்த எனக்குத் தெளிவு ஏற் படச் செய்தார் பெரிய டாக்டர், என் விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, புத்தி கூறி அல்ல; தற் செயலாக.

“மிஸ்டர் சோமு! உங்களுக்குத் திருமணமாகி விட்டதா?” என்று கேட்டார் பெரிய டாக்டர்.

“இல்லே, டாக்டர், கலியாணம் ஆகவில்லே” என்று கூறினேன். பெரிய ஆறுதல் அடைந்தவர் போலானுர் பெரிய டாக்டர் “நல்ல வேளே!” என்ருர்.

எனக்குத் தெளிவும் திடமும் ஏற்பட்டுவிட்டது; எங்கே எனக்குத் திருமணமாகி விட்டிருக்கிறதோ, நான் நொண்டியாகி விட்டதால் என் மனேவி என் னென்ன அல்லல்படுகிருளோ என்று எண்ணிக் கொண்டிருக்கிருர் டாக்டர்; திருமணம் ஆகவில்லே என்றதும், அவர் மனதுக்கு ஆறுதல் ஏற்பட்டது.

பொருள் என்ன? நான் கலியாணம் செய்துக் கொள்ளக்கூடாது என்று, பெரிய டாக்டர் கருதுகிருர்! டாக்டர் மட்டுமா, பெரியமனம் உள்ளவர்கள் எல்லோ ருமே அப்படித்தான் எண்ணுவார்கள். நான் என்ன சிறுமதிகொண்டவனு, என்மனமும் பெரியதுதான், என் இன்பம் அல்ல முக்கியம் என்னுல் ஒரு பெண்ணுக்கு இழிவும், இன்னலும் ஏற்படக்கூடாது. அதற்கு நான் இடந்தரக்கூடாது. அந்தப் பழியைத் தேடிக் கொள்ள

சல்லா கண்ட சீசர்

“யார் இந்த வாலிபன்?” என்று கேட்டார் சல்லா—ரோம் நாட்டின் சர்வாதிகாரியாக இருந்து வந்தவர்.

ரோம் நாட்டுப் படை வீரர்கள் பலரைப் பிடித்திழுத்துச்சென்றுகொண்டிருந்தனர்-தூக் கிலே போட-அவர்கள் குற்றம் செய்தவர்கள் என்ப தால்.

தூக்கிலிடப்படுவதற்காகக் கொண்டு செல்லப் பட்டவர்களிலே இருந்த ஒரு வாலிபனுடைய தோற்றம் சல்லாவின் உள்ளத்தைக் கவர்ந்தது.

என்ன எண்ணிக்கொண்டாரோ தெரியவில்லே, யார் இவன்? என்று கேட்டார். விவரம் கூறினுர்கள். அதைக் கேட்ட சல்லா, “இவனே விடுதலே செய்து விடுங்கள்!” என்று உத்திரவிட்டார். வாலிபன்-தூக்கில் தொங்கவேண்டியவன் விடுவிக்கப்பட் டான்.

அப்படி விடுவிக்கப்பட்டவன்தான், ஜூலியஸ் சீசர்-பின்னர் ரோம் நாட்டின் புகழ்க் கொடியை எட்டுத்திக்கிலும் ஒளிவிட்டுப் பறந்திடச் செய்த மாவீரன்.

தூக்கிலே போடக் கொண்டு சென்றனர்-சல்லாவின் மனக்கண்கள் அவனுடைய எதிர்காலத் தைக் கண்டனபோலும்-சீசர் விடுவிக்கப்பட்டான். உலகப் பெரும் புகழ்பெற்ற மாவீரனுனன்.

ஆனுல் மாவீரன் சீசர் புகழின் உச்சியில் நின்ற போது, பொருமைக் கொண்டோர்களின் சதியால் சந்தைச்சதுக்கத்தில், குத்திக் கொல்லப்பட்டான். கொடுமையான முடிவு அவனுக்கு.

சல்லாவின் கண்களில் சீசர் படாதிருந்திருந் தால், வாலிப வயதிலேயே தூக்கிலிடப்பட்டிருப் பான்.

இறுதியில் சீசர் கொல்லப்பட்டுத்தான் இறந் தான் என்ருலும், இடையில் அவன் ஈட்டிய வெற்றி யும் புகழும் அவனே இன்றும் வரலாற்றில் இடம் பெற்றவனுக்கிவிட்டிருக்கிறது.

மாட்டேன். அவள் இருக்கும் பக்கமே, என் கால்கள் செல்லாது...... கால்களா ...... ஒன்றும் மற்றொரு பாதியும்!!

ஐயா! இந்த முடிவுக்கு நான் வந்த பிறகுதான், ஓரளவுக்குத் தூக்கம் பிடித்தது, பசி எடுத்தது.

ஆசாமி பிழைத்துக்கொண்டான்; தேறிவிட்டான் என்று என்னுடன் இருந்தவர்கள் கூறினர், களிப்புடன்.

நான், பட்டாளப் பணியிலிருந்து விலகினேன்—விலக அனுமதி எளிதிலே கிடைத்தது. எங்கெங்கோ அலைந்தேன் — பல ஊர்—பல இடம்—துக்கம் என்னை அண்டாதபடி, கேளிக்கையாக இருக்க முயற்சித்தேன். குடித்துப் பழகியவனல்ல; புதிய தோழனாக்கிக் கொண்டேன், போதைப்பொருளை! சூதாடுவது, சுற்றித் திரிவது, சுருண்டு கீழேவிழுவது மயக்கம் ஏறிய நிலையில். இதுதான் என் வாழ்க்கை முறையாக அமைந்தது. கைப்பொருளை வேகமாகக் கரைத்தபடி இருந்தேன். எல்லாம், தங்கத்தை இழந்துவிடவேண்டி நேரிட்டதே கால் போனதனால், என்ற துக்கத்தைப் போக்கிக்கொள்ள ஊர் விஷயம் உலகவிஷயம் எதைப்பற்றியும் நான் அக்கரைகொள்ளவில்லை; எழவில்லை. ஒண்டிக்கட்டை நான்! திருமணமாகிவிட்டால் வீட்டோடு வந்து இருந்துவிடுவேன் என்றுகூட சித்தி நினைத்ததுண்டு.

அவர்களைப்பற்றிய நினைப்பெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டேன். உதிர்ந்துபோன மலரை எடுத்துச் செடியிலே ஒட்டிவிட முடியுமா! நான் கொண்டிருந்த எண்ணங்கள் பலவும் உதிர்ந்த மலர்களாகிவிட்டன; இதயத்தில் மீண்டும் அவைகளுக்கு இடமில்லை.

எப்போதாவது, தங்கம் எப்படி இருக்கிறாள் என்று பார்க்கவேண்டும் என்ற ஆசை மட்டும் எழும். ஆனால் அதற்காக அந்த இடம் சென்று மறுபடியும் சிக்கலை ஏற்படுத்திக்கொள்ளக் கூடாதே. அதனால் சில காலமாவது அந்தப்பக்கமே போகக்கூடாது—தங்கத்துக்கு ஒரு கலியாணமாகி, அவள் குடியும் குடித்தனமுமான பிறகு வேண்டுமானால் அந்தப்பக்கம் போகலாம், அதற்கு முன்பு போகக்கூடாது என்று தீர்மானமாக இருந்துவந்தேன்.

போன செவ்வாய்க்கிழமை மறைந்துபோயிருந்த பழைய எண்ணங்கள் எல்லாம் குதித்துக் கிளம்பிக் கொண்டு என் மனதைக் குடையும் நிலை ஏற்பட்டது. தற்செயலாக ஒரு பத்திரிகையைப் பார்த்தேன்-பழைய பத்திரிகை—அதிலே தங்கம் தன் கணவனுடன்—லெப்டினன்ட் கண்ணப்பாவுடன் நின்றுகொண்டிருக்கும் படம் வெளியிடப்பட்டிருந்தது. மகிழ்ச்சி மருட்சி இரண்டும்! திருமணமாகிவிட்டது தங்கத்துக்கு! ஒரு லெப்டினன்டு அவள் மணவாளன்! நிம்மதிதான்! மகிழ்ச்சிதான்! விவரம் ஆறாம் பக்கம் பார்க்க என்று பத்திரிகையில் இருந்தது; ஆனால் ஆறாம்பக்கம் இல்லை; அது பழைய பத்திரிகை, மெத்தக் கிழிந்துபோன நிலையில் இருந்தது. அதை எடுத்து பத்திரமாக, மடித்து, என் சட்டைப்பையில் வைத்துக்கொண்டேன்; எந்தப் பொருளையும், அவ்வளவு அக்கரையுடன் நான் பாதுகாத்ததில்லை.

விவரம் தெரிந்துகொள்ளும் ஆர்வம் எனக்கு—குடி, சூதாட்டம், எதுவும் என்னைத்தடுக்கமுடியவில்லை. பத்திரிகைகளைத் தேடிக் கண்டுபிடித்து, நாலுநாள் பசியோடு இருப்பவனுக்கு உணவு கிடைத்தால் எவ்வளவு ஆவலுடன் அவசரத்துடன் தின்பானோ, அந்த நிலையில் விவரங்களைப் படித்துத் தெரிந்துகொண்டேன்.

இன்று இந்த ஊருக்கு வருகிறீர்கள் என்று தெரிந்தது — காண ஓடோடி வந்தேன்—கண்குளிரக் கண்டேன்......

சோமுவின் கதையின் உருக்கத்தில் நான் என்னை மறந்து போயிருந்தேன். எவ்வளவு நல்ல மனம் இந்தச் சோமுவுக்கு. ஒரு பெண்ணின் வாழ்வை வதைக்கக் கூடாது என்பதிலே அவ்வளவு பெருந்தன்மையைக் காட்டி இருக்கிறான்.

“சோமு! நான் உம்மை வணங்க விரும்புகிறேன். உத்தமராய்யா, நீர்! ஒரு பெண்ணின் வாழ்வு பாழாகக் கூடாது என்பதற்காக எத்தனை பெரிய தியாகம் செய்திருக்கிறீர். யாருக்கு வரும் இந்தப் பெருந்தன்மை” என்று நான், உள்ளபடி உருக்கமாகத்தான் உரைத்தேன்.

சோமு என்னை வெறிக்க வெறிக்கப் பார்த்தான்.

“சோமு! இவ்வளவு தூய்மை நிறைந்த தாங்கள், ஏன் தங்களைக் குருடர் என்று கூறிக் கடிந்துகொண்டீர்கள் என்பதல்லவா எனக்கு விளங்கவில்லை”

என்று நான் கேட்டேன். சோமு, என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு,

“ஐயா! நான் உம்மிடம்சொன்னது நினைவிருக்கிறதா! நான் கண்ணிருந்தும் குருடன்! பெண்களின் குணத்தின்பெருமையினை உணராததால் தவறான பாதைசென்று இடறி விழுந்தேன் என்றேனே, நினைவிலிருக்கிறதா?”

“நன்றாக நினைவிலிருக்கிறது. மறந்து போகவில்லை. ஆனால் சோமு! தாங்கள் அப்படிக் கூறுவதுதான் தவறு. தவறான பாதை செல்லவில்லை; தியாகப்பாதை சென்றீர்கள். இடறி விழவில்லை, ஒரு மங்கையின் வாழ்வுக்கு இடராகக்கூடாது என்று தியாகம் செய்தீர்கள்.”

“நொண்டியாகிவிட்ட நான் தங்கத்தை மணந்துகொள்வது கொடுமை; அவளே அதற்குச் சம்மதம் தரமாட்டாள்—அப்படிச் சம்மதித்தாலும் நான் அவளை அடைய எண்ணுவது கொடுமை, என்பதால்தானே, நான் அவளைத் திருமணம் செய்துகொள்ள முயற்சிக்காமல், தெருச்சுற்றலானேன், உருமாறிப் போனேன்......”

"உத்தமராகி இருக்கிறீர் — உருக்குலைந்தது உடல் அளவு; உள்ளம் மிகப்பெரிது..."

"அவள் உள்ளத்தை அறிந்துகொள்ள முயற்சித்தேனு...!"

"அதுதான், உம்முடைய தியாகச் சிறப்பிலேயே, உச்சக்கட்டம்! மகுடத்தில் பதித்துள்ள ஒளிவிடு வைரம்..."

"என் நிலை இது; இந்த நிலையில் என்னைத் திருமணம் செய்துகொள்ளச் சம்மதமா என்று நான் தங்கத்தைக் கேட்காதது, என் தியாக குணத்திலேயே சிறப்பான பகுதி! ஒளிவிடு வைரம்......!! என்னைவிடக் குருடு ஐயா! நீர்! நான் நொண்டியாகிவிட்டேன் — என்னை மணம் செய்துகொண்டால் தங்கம் இழிவும் பழியும் பெறுவாள் என்று எண்ணியும், நொண்டியாகிவிட்ட என்னைத் திருமணம் செய்துகொள்ள அவள் சம்மதிக்கமாட்டாள், கேட்கவும்கூடாது என்று எண்ணியும்தானே, நான் வேறு பாதை சென்றேன், இந்தக் கோலம் பெற்றேன், ஐயா! கண்ணிருந்தும் நான் குருடனுகிவிடவே நமது நாட்டுப் பெண்குலத்தின் பெருமையை அறியாது போய்விட்டேன் என்பதை உணர்ந்துகொண்டேன்—அரைமணி நேரத்துக்கு முன்பு......நொண்டி, தங்கத்தின் கணவனுகக்கூடாது என்பதற்காக நான் தியாகம் செய்தேன்; ஆனுல் அவள் திருமணம் செய்துகொண்டிருக்கிருளே, "லெப்டினன்ட் கண்ணப்பா, அவனும் என் போலத்தான் — போர்க்களத்திலே காலிழந்தவன்—நொண்டி!"

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நொண்டியாகிப் போனவனை மணம் செய்துகொண்டால் எவளுடைய வாழ்க்கை நொந்துபோகும் என்பதற்காக, தியாகம் செய்தானே சோமு, அந்தத் தியாகத்துக்கே துளியும் பொருள் இல்லாமற் போய்விட்டதே! தங்கம், கடைசியில் மற்ருெரு நொண்டியைத்தானே கணவனுகப் பெற்ருள். சோமு மனக்குழப்பத்தில் பேசுகிருனு, அல்லது உண்மை அதுதானு! நான் பதறிப் போனேன்.

"என்ன? என்ன? கண்ணப்பாவுக்குக் கால இல்லையா?"

என்று கேட்டேன். நொண்டி என்று சொல்லக்கூட எனக்குக் கூச்சமாக இருந்தது.

"ஓ! உங்களுக்கு அது தெரிந்திருக்க முடியாது, கண்ணப்பாவுக்கு ஒரு காலில் எனக்கு இருப்பது போலத்தான் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டுப் போய்விட்டது."

"இல்லையே! இரண்டு காலாலும்தானே நடந்துவந்தான்."

"அதிலே ஒன்று, பொய்க் கால்! அவ்வளவு நேர்த்தியாக விஞ்ஞான முறைப்படி அமைத்து இயங்க வைத்திருக்கிருர்கள்"

"துளிகூடத் தெரிந்துகொள்ள முடியவில்லையே."

"எனக்கு மட்டுந் தெரிந்ததா முதலில்? அவனும் நிரம்பப் பயிற்சி செய்திருக்கிருன் போல இருக்கிறது. நடக்கும்போது, கால் ஊனமாகிவிட்டது என்பது துளிகூடத் தெரியவில்லை. நிருபர்கள் விவரமாகச் சொன்னுர்கள்."

எனக்கு எதுவுமே சொல்லத் தோன்றவில்லை. சோமுவேதான் பேசினுன்; நான் திகைத்துப் போய்விட்டேன்.

"நான் தங்கத்தைப் பற்றி நினைத்தது தவறு. நம்முடைய பெண்குலமே தனியான குணம் கொண்டு விளங்குவது எனக்கு அப்போது புரியாமல் போய்விட்டது. நான் கால் மட்டுமல்ல, கண்ணை இழந்துவிட்டிருந்தேன், கருத்தை இழந்துவிட்டிருந்தேன். நொண்டி என்று தெரிந்ததும், என்னை வெறுத்து ஒதுக்கிவிடுவாள் தங்கம் என்று எண்ணிக் கொண்டேன். கண்ணப்பா, அப்படி அல்ல; கால் போயிற்றே தவிர, கருத்து இருந்தது தெளிவாக. உண்மையை மறைக்கவுமில்லை, எடுத்துச் சொல்லப் பயப்படவில்லை, கூச்சப்படவில்லை. தங்கத்தை ஏமாற்றவில்லை, அவன். ஏமாற்றி, அவளை மணம் செய்து கொண்டிருந்தால்...நான் கொலைகாரனுகக் கூட ஆகிவிட்டிருப்பேன்...ஆத்திரம் பொல்லாதல்லவா! கண்ணப்பன், புத்தியுள்ளவன்.

'மக்கு' மாணவன்!

சர்ச்சில், இலக்கியச் செறிவுள்ள எழுத்தோவியம் தீட்டிப் புகழ்பெற்றவர்; உலகில் சிறந்ததாகக் கருதப்படும் பரிசு பெற்றவர், அவருடைய ஆங்கில நடை மிக நேர்த்தியானது.

சர்ச்சில், ஆங்கில மொழியில் அவ்வளவு புலமைபெற்றதற்குக் காரணம் என்ன தெரியுமோ! மாணவனுக இருந்தபோது, ஆசிரியர்கள், அவனை 'மக்கு' என்று கருதியதுதான்!

அந்த நாட்களில், இங்கிலாந்து நாட்டில் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், கெட்டிக்காரர்கள் என்று ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற வேண்டுமானுல், லத்தீன் மொழியிலே திறமை பெறவேண்டும்.

சர்ச்சில், லத்தீன் மொழியிலே திறமை பெற முடியவில்லை.

புலமைக்கு ஏற்ற மொழி லத்தீன் என்ற எண்ணம் வலுவாக இருந்த காலம் அது.

லத்தீன் மொழியிலே திறமை காட்ட முடியாத மாணவர்களை 'மக்கு' என்று ஆசிரியர்கள் கருதுவார்கள்.

அப்படிப்பட்ட 'மக்கு' மாணவர்களுக்குத்தான் ஆங்கிலப் பாடம் கற்றுக்கொடுப்பார்கள்,

இந்தக் காரணத்தால், பள்ளியில் அதிக நேரம் ஆங்கில மொழி படித்திடவேண்டி நேரிட்டது சர்ச்சிலுக்கு.

தண்டனை என்று கருதிக்கொண்டு, இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. இதுவே சர்ச்சிலுக்குப் பெரிய வாய்ப்பாகிவிட்டது. நேரத்தையும் நினைப்பையும், லத்தீன் மொழியிலே திறமை பெறுவதற்காகச் செலவிட வேண்டிய அவசியம் இல்லாததால் முழு நேரமும் ஆங்கில மொழிக்கே செலவிட்டு, பெரும் புலமை பெற்ருன் சர்ச்சில்.

கிழமை

ஒரு கிழமை(வாரம்)க்கு 7-நாட்கள்; அனைவரும் அறிவர்.

ஆனால் இதுபோல என்றென்றும் இருந்து வந்ததா? இல்லை!

ஒவ்வொருநாட்டில் ஒவ்வொருவிதமாக முன்பு இருந்து வந்திருக்கிறது.

ரோம்நாட்டவர், வாரத்தில் 8-நாட்கள் என்ற முறை வைத்துக்கொண்டிருந்தனர்.

நார்வே-ஸ்வீடன் நாட்டவர் வாரத்திற்கு 5-நாட்கள் என்று கணக்கிட்டு வந்தனர்.

தென் அமெரிக்கப் பகுதி நாடொன்றில் வராத்திற்குப் பத்துநாட்கள்!

மேற்கு ஆசியப் பகுதியில்தான் வாரத்திற்கு 7-நாட்கள் என்ற கணக்கு போடப்பட்டது.

ஒரு மாதத்தில் சந்திரன் நாலுவிதமான போக்குகொள்ளவும், ஒவ்வொரு போக்குக்கும் 7-நாட்கள் பிடிப்பதாகவும்கொண்டு கிழமைக்கு 7-நாட்கள் என்று கணக்கு வகுத்துக்கொண்டனர்.

நிலைமையை மறைக்காமல் எடுத்துச் சொல்லி இருக்கிறான். விஞ்ஞான உதவியால், செயற்கை கால்பெற்றிருப்பதைக் காட்டினான்—தங்கம் இசைவு அளித்தாள், திருமணம் நடைபெற்றது. எனக்கு ஏற்படவில்லையே அந்தத் தைரியம்—களங்கமற்ற போக்கு — கோழைத்தனமல்லவா மேலிட்டு விட்டது. உண்மையைச் சந்திக்கப் பயந்துகொண்டு ஓடி ஒளியலானேன்; உருமாறிப் போனேன். அவன் வீரன், பிரச்சினையை நேரிடையாகவே சந்தித்தான்—நல்ல முடிவு கிடைத்தது. கால் போய்விட்ட உடனே நான் என் காதல் போய்விடுகிறதே என்று கவலை மேலிட்டு, கலங்கிப்போனேன்; தங்கத்தைப் பெறமுடியாது என்று எண்ணம்ஏற்பட்டதும், எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய் விட்டது. பொறுப்புகள் எதனையும் மேற்கொள்ளாமல் இருந்துவிட்டேன். எனக்குக் கூடத்தான் தெரியும், செயற்கை முறையில் கால் அமைத்துக்கொள்ள முடியும் என்பது. செய்துகொள்ள முயற்சி எடுக்கவே இல்லை. ஏன்? எதற்காக எடுக்கவேண்டும்; தங்கமோ நமக்குக் கிட்டமாட்டாள், நொண்டி நொண்டி நடந்தால் என்ன ஊர்ந்துகொண்டு போனால் என்ன என்று எண்ணும் அளவுக்கு மனம் வெறுத்துவிட்டது. கண்ணப்பா அப்படி இல்லை. நடக்கக்கூடாதது நடந்துவிட்டது, அதற்காக என்ன செய்யலாம். அதையே எண்ணி மனம் உடைந்து போவதா? அது தான் கூடாது. உள்ளதைக் கொண்டு திருப்திஅடைய வேண்டும் — இருப்பதையே மேலும் எப்படிச் செம்மைப்படுத்திக் கொள்வது என்று கண்டறிய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது, அவன் கோழையாகிவிடவில்லை. துன்பத்தின் பிடரியைப் பிடித்திழுத்து அடித்து விரட்டி, வெற்றிபெற்றான்.''

“நிருபர்கள் விவரமாகச் சொன்னார்களா?''

“ஆமாம்! அப்போதுதான் தெரிந்தது எனக்கு; நான் ஓர் குருடன் என்று. விவரமான கட்டுரையே வெளியிடுகிறார்கள் இன்று...ஒரு விஷயம் தெரியுமா......அதை நினைக்கும்போதே என் மனச் சங்கடம்யாவும் பறந்தே போகிறது. புது மகிழ்ச்சிகூடப் பிறக்கிறது. ஒரு நிருபர் — சற்று துணிச்சலுள்ள ஆசாமிபோலிருக்கிறது-எக்கச்சக்கமான கேள்வியைக் கேட்டிருக்கிறார், தங்கத்திடம். என்ன கேள்வி தெரியுமா? லெப்டினன்ட் கண்ணப்பா நொண்டி என்று தெரிந்தும் திருமணம் செய்துகொள்ளச் சம்மதித்த காரணம் என்ன? என்று...''

“போக்கிரித்தனமான கேள்வியாக இருக்கிறதே...''

“அப்படித்தான் நானும் கருதுவேன்... சச்சரவே ஏற்பட்டிருக்கும். ஆனால், தங்கம் என்ன பதில் கூறினாள் தெரியுமா?''

“இதற்குப் பதில் வேறு கூறிற்று அந்தப் பெண்.''

“நான்தான் கோழை, ஐயா! என் தங்கை, தங்கம், மிகுந்த தைரியமுள்ளவள். லெப்டினன்டின் மனைவி அல்லவா! என்ன பதில் தந்தாள் தெரியுமா தங்கம்! **நாட்டுப் பாதுகாப்புக்காக காலிழந்தவரைக் கணவராகக் கொள்வதிலே நான் பெருமை அடைகிறேன்,** என்றாள்.''

அதற்குமேல் அவனாலும் பேச முடியவில்லை; என்னாலும் முடியவில்லை. இருவரும் நகர் மன்றம் சென்றோம். சோமு, ஊன்றுகோல் இல்லாமல்கூட நடப்பான் போலிருந்தது, அப்படி ஒரு புதிய வலிவு, எழுச்சி, உற்சாகம், பெருமிதம்!!

★

வேட்பாளர் வருகின்றார்

வேட்பாளர் வருகின்றார்
வேழமுகன் தொழுது
காழ்ப்பாளர் கண்டிடினும்
கைகூப்பி நின்றிடுவார்
தாழ்ப்பாளிடாதீர் என்றுரைப்பார்.

ஏழெட்டு சதுரங்கள்
எல்லாம் அயன் நஞ்சை
மொத்தமாய் முன்னூறு
ஏகர் அளவினது.

முன்னோர்கள் தேடினதை
மும்மடங்காக்கிவிட்டார்
புன்னைவன நாதரவர்
புள்ளியில் பெரிய புள்ளி!

கடல்போல வீடென்பார்
காண்பதற்குக் காட்சி என்பார்
கட்டி முடித்திட்ட
கொத்தனார் கைத்தடிக்கு
வெள்ளிப் பூணிட்டு
விழாவன்று விருதளித்தார்
புதுமனை புகுந்த புன்னைவனநாதர்.

பூர்வீகத் தொழிலான
போதைக்கடை தன்னால்
பொருள்குவியக் கண்டவரும்
புதுத்தொழில்கள் பல கண்டார்.

வட்டிக்குக் கடன் தருதல்
வாங்கிவைத்து விற்றிடுதல்
கோயில் புதுப்பித்தல்
கூலவாணிபம் செய்தல்
ஒன்றல்ல, பல உண்டு
இலாபம் வந்ததுகாண், உருண்டு!

பொருள் உடையாரானாலும்
போதைக் கடையாரை
போற்றுவார் பலரில்லை;
பொருட்படுத்தத்தானில்லை
பொன்னுத்தாய் சொல்லும்வரை.

காந்தி மகாத்மாவைக்
கடவுளெனத் தொழுகின்றார்
அவருக்குச் சீடன் என்
அருமந்தத் தம்பியுந்தான்;
ஊரெல்லாம் நல்லபேர்
உருகுவார் உரைகேட்டு;
புகழ்தேடிப் பெற்றிட்டான்
இதழ் பலவில் அவன் உருவம்!



விழுப்புரம் சந்திப்பு



"இன்னும் ஒரு அரை மணி நேரத்திலே வண்டி விழுப்புரம் வந்துவிடும், சூடாக காப்பி வாங்கிக் கொடுங்கள், இருமல் கொஞ்சம் குறையும்.''

"அரை மணி நேரத்திலா...இல்லேயே...ஒரு மணி நேரத்துக்குமேல் ஆகுமே...வண்டி 'லேட்'டாக அல்லவா போகிறது.''

"லேட்டோ, சுலோவோ, வண்டி ஓடுகிறதே அதைச் சொல்லும்...''

"எல்லா இடத்துக்கும் மின்சார வண்டி போடப் போகிருர்களாமே...அந்த வண்டி வேகமாகப்போகும்''

"ஆமா...இந்த இருமல் இவருக்கு எத்தனை நாட்களாக......?''

"நாட்களா! ராமா! ராமா! மூணு வருஷமா உயிரை வாட்டுது இந்த இருமல்...''

"கோழை நிறைய வர்ரதோ...''

"ஒரு பொட்டுகூடக் கிடையாது,''

"புகைஞ்சி புகைஞ்சி இருமறது...''

"என்ன வைத்தியம் செய்தும்...''

"கொஞ்சம் சுமார்னு, சொல்லுவா......அவ கல் நெஞ்சக்காரி...கற்பகம்—எனக்கென்று வந்து வாய்த்த சனி......''

"நோய் உம்மை வாட்டினு, உம்மோட 'பார்யா' என்ன செய்யமுடியும்...மனம் நொந்து பேசலாமோ... நீர் படுகிற கஷ்டத்தைப் பார்த்து, அந்த அம்மாவோட கண்களிலே நீர் தளும்பறது...''

"தலைப்பாடா அடிச்சிண்டேன், வேண்டாம் பட்டணத்து வாசம், என் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாதுன்னு...கேட்டாளோ...மகன் படிக்கக் கிளம்பினுன், இவ கிளம்பிட்டா, என்னையும் இழுத்துண்டு...''

"சில பேருக்கு, பட்டணத்து வாசம் பிடிக்கறதில்லை. எனக்கேகூட, நாலு வருஷம், விட்டு விட்டு காய்ச்சல்...நானும், என் மகனுடை படிப்புக்காகத்தான் பட்டணம் போனவன்...''

"ஏதோ கடவுளோட கடாட்சம், உமக்கு ஒண்ணும் இல்லை......''

"எனக்கு எதாவது நோய் ஏற்பட்டா தேவலியே ...என் மகளுக்கு, உடம்பு சரியில்லே...''

"இதேபோல இருமலா?''

"இருமலா இருந்தா பரவாயில்லேயே...நல்ல மருந்தெல்லாம் இருக்கே...இன்ன வியாதின்னு கண்டுபிடிக்கவே, டாக்டர்கள்பாடு கஷ்டமாக இருக்கு. இந்த இலட்சணத்திலே, என் மகனே ஒரு டாக்டர்......கெட்டிக்காரன் என்றும் பேர்... வருமானமும் நிறைய ......''

"அவராலேயே சொல்ல முடியலியா, என்ன வியாதி இது என்ற விவரம்...?''

"விவரம் சொல்ருன், விளக்கம் சொல்ருன்...... அதிலே ஒரு குறைச்சலும் இல்லே...வியாதி போகலியே...''

"வயற்று வலியோ...''

"உடல் பூரா...தேள் கொட்டின மாதிரி...துடியாத் துடிக்குது...ஒரு பத்து நிமிஷம்...பிறகு ஒரு மணி நேரம் மயக்கம்...''

"இப்படி எத்தனை நாளா...?''

"வருஷம் நாலு ஆகுது...''

"நாலு வருஷமாகவா, அவ்வளவு பெரிய பட்டணத்திலே ஒரு நல்ல டாக்டர் கிடைக்கல்லே. இந்த வியாதியைப் போக்க...''

"இது வியாதியே அல்ல என்கிருளே அத்தனை டாக்டர்களும்...என் மகனும், டாக்டர் பாஷை பேசருன்...எல்லாம், மனம்தான் காரணமாம்... மனதிலே வியாதி இருக்கே தவிர, உடலிலே இல்லைஎன்கிருன்...''

"அதிசயமா இருக்கே...''

"அனியாயமா இருக்கேன்னு சொல்லுங்கோ... நரம்புகளுக்கு வலிவு ஏற ஏற, மனதுக்குத் தெம்பு வருமாம், மனதுக்குத் தெம்பு வந்தா, மயக்கம் தன்னுலே போயிடுமாம்...இதைத்தான் சொல்ரு...''

"அதாவது, இது ஒருவகையான இஸ்ட்டீரியா... வலிப்பு வியாதி...''

"என் மகன் இதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கான். எத்தனை நாளைக்கு இதைக் கேட்டுக்கொண்டிருக்க முடியும். அதனுலேதான், அவனேடு விஷயத்தைச் சொல்லாமல், நான் கிளம்பினேன்...என் சொந்தக் கிராமம், திருச்சி பக்கம், துறையூர் பாதையிலே... அங்கே, இரண்டு மூன்று தலைமுறையா, 'மாந்திரீக'த்திலே கியாதி பெற்ற குடும்பம் ஒன்று இருக்குது... கேள்விப்பட்டிருக்கலாம் சிலபேராவது, திரிசூலம்பிள்ளை என்பவரைப்பற்றி. அவர் நாற்பது நாள் 'விபூதிஅடித்து' மந்திரம் போட்டா, இந்த வலி, மயக்கம் எல்லாம் மாயமா போய்விடும். பலருக்கு குணமானது எனக்கே தெரியும். இப்ப நான், அவரைப் பார்த்துப் பேசி, கையோடு பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டு போகத்தான் வந்திண்டிருக்கேன்...''

"மாயம் மந்திரம், முடிக்கயறு இதிலே எல்லாம் நம்பிக்கை யாருக்கு இருக்குது, இந்தக் காலத்திலே...''

"இப்படிச் சொல்லுவான் என்றுதான், என் மகனிடம் விவரம் சொல்லாமல் புறப்பட்டேன். அவனே டாக்டர்! அவன் ஒத்துக்கொள்வானே, மாந்திரீகத்தை ....''

"எப்படியோ ஒண்ணு கொழந்தைக்குக்குணமானு போதும்......"

"பெரியவாளோட ஆசீர்வாதமும் கிடைக்கறது. எனக்கு என்னமோ, திரிசூலம் பிள்ளேயோட மாந்திரீக பலத்திலே நிறைய நம்பிக்கை. என்னதான் காலம் மாறிவிட்டது என்று சொன்னுலும், ஒரே அடியா எல்லாவற்றையும் மறந்துவிட முடியுமா..."

"நான்கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன், அந்த மந்திரக்காரர் விஷயமா...மூணு மாடி வீடு இருக்காமே அவருக்கு..."

"முப்பது நாற்பது ஏக்கர் அயன் நஞ்சை போன வருஷம்தான் வாங்கினுர். பலருக்குக் குணமாகி இருக்கு. டாக்டர் படிச்ச பையனுேட இதைச் சொல்ல லாமோ! சொல்லல்லே! குணமான பிறகு, அவனே தெரிந்துகொள்ருன்."

"இந்தக் காலத்து வைத்தியப் படிப்பு என்னதான் அதிசயமானதாக இருந்தாலும், மூலிகை, மாந்திரீகம், இதிலே இன்னமும் பலன் இருக்கத்தான் செய்யுது..."

"இல்லாமலா, திரிசூலம் பிள்ளேயோட தேவதா விலாசத்தைத் தேடி, மாதம் முன்னூறு பேருக்குக் குறையாம வருகிருங்க. நல்ல கைராசிக்காரர். வெள்ளிக்கிழமை மௌனவிரதம். மகமாயி ஒவ்வொரு இராத்திரியும் பிரசன்னம், அவருக்கு. இந்தக் காலத் திலே நம்பமாட்டா. ஆனு, அவரை நேரிலே பார்த்தா, தெரியும். வயது கிட்டதட்ட அறுபது இருக்கும், ஒரு நோய்நொடி வரணுமே. கிட்டே வருமா! காலேயிலே ஆற்றுத் தண்ணீர்லே குளிக்கிருர், ஆறு மணிக்கு முன்னே. ஒருநாள் காய்ச்சல்னு படுத்தாரா..."

"ஆமாம்...கொழந்தையை அழைத்துக்கொண்டு போய் காட்டாம, நீங்க மட்டும் போறிங்களே..."

கொழந்தையை அழைத்துக்கொண்டு கிளம்பினு, என் மகன் கேட்கமாட்டானே, எங்கே? எதுக்கு? என்



றெல்லாம். அதனுலே ஒரு நிலத்து விஷயமா, கிராமம் போயிட்டு வர்ரேன்னு சொல்லிட்டு, கிளம்பிவிட்டேன். திரிசூலம் பிள்ளே எனக்கு ரொம்ப வேண்டியவர். நிலேமையைச் சொல்லி, அவரையே பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டு போகப் போகிறேன்."

"அவர் கிராமத்திலே இல்லாது போனு, மத்த வங்க......"

"அவருடைய மகனுக்கும் மாத்திரீகத்திலே, பயிற்சி அவன் பார்த்துக் கொள்வான்..."

வண்டி, விழுப்புரம் சந்திப்பிற்கு வந்து சேர்ந்தது, பேச்சும் நின்றது.

இருமலால் அவதிப்படும் கணவனுக்குக் காப்பி வாங்கிக் கொண்டு வர, மனேவி ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள்.

மகளுடைய 'மயக்கம்' போக்க மாந்திரீகரைத் தேடிச் செல்பவர், வண்டியிலிருந்து கீழே இறங்கி நின்ருர்.

திருச்சியிலிருந்து கிளம்பிய ரயில், எதிர் வரிசை யில் வந்து நின்றது.

இரு இரயில்களிலுமிருந்து பலர், வேகமாக, காப்பி விடுதிக்கு விரைந்தனர். பலர் போவதைக் கண்டதும், இவருக்கும் காப்பி சாப்பிடலாம் போலத் தோன்றிற்று சென்ருர். காப்பி வாங்கி, ஆற்றிக்கொண்டிருக்கும் போது, அங்கு ஓர் புறத்தில், இவர் போலவே காப்பி ஆற்றிக் குடித்துக் கொண்டிருந்த ஒரு இளேஞனேப் பார்த்தார், அடையாளம் கண்டு கொண்டு மெத்த ஆவலுடன் அவனே நோக்கிச் சென்ருர். அவனும் இவரைக்கண்டு, ஆச்சரியமும் மகிழ்ச்சியும் கொண் டான்.

"கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல, நீங்க வந்தீர்களே...அடா! அடா! இதல்லவா தெய்வ சங்கல்பம்."

"பத்து நிமிஷம் கூட ஆகல்லே, உன் னேப்பத்திப் பேசி, நீயே வந்துவிட்டாயே. பலே! பலே! எங்கே இப்படி?"

"பட்டணத்துக்குத்தான், உங்களேப் பார்க்கத்தான். உங்களுடைய உதவியைத் தேடித்தான்"

"உங்க குடும்பத்துக்கு உதவி செய்ய நான் எப்பவும் கடமைப் பட்டவன். என்ன அவ்வளவு அவசரமான காரியம்?"

"அவசரம் மட்டுமில்லிங்க, ஆபத் துன்னு சொல்லணும், காலேயிலே சென்னே போனதும், உடனே, பெரிய ஆஸ்பத்திரி யிலே சேர்த்தாகணும், உங்க மகன் இருக் காரே, டாக்டரு, அவரோட தயவலேதான் இந்தக் காரியம் ஆகணும். இருதயவியாதிங்க அப்பாவுக்கு......"

"யாருக்கு? திரிசூலம் பிள்ளேக்கா, இருதய வியாதியா?"

"ஆமாங்க, ஒரே மயக்கம்;"

"மயக்கம் மந்திரிச்சா போயிடும்னு..."

“ மாந்தீரிகம், பேய் பிசாசு விஷயத்துக்குப் பலன் கொடுக்கும்ங்க. அப்பாவுக்கு வந்திருப்பது இருதய வியாதிங்க......”

“ ஆயிரத் தெட்டு பேருக்கு, அவர் மயக்கம் போக்கி இருக்கருரு......”

“உங்களிடம் சொல்றதிலே தவறு கிடையாதுங்க. அதெல்லாம், இந்தக் காலத்துக்கு ஒத்துவராதுங்க. மாந்திரீகத்திலே நம்பிக்கை இருந்தாதானுங்க பயன்......”

“ நம்பிக்கை உங்களுக்குக் கிடையாதோ......?

“இருந்ததுங்க...முன்னே...போனவருஷம் சின்னவரு, உங்க மகன், டாக்டரு வந்திருந்தாரு பாருங்க, அப்ப, விவரமா இதுபற்றி பேசினருங்க மயக்கம் என்ரு ஏதோ கெட்ட தெய்வத்தோட வேலே என்று நாங்க சொல்றது...அவரு அது ஒரு விதமான வியாதின்னு சொன்னரு. அப்பாவுக்கு அப்ப, இலேசா மயக்கம் பரிசோதனே செய்து பார்த்து, இது இருதய சம்பந்தமானதுன்னு சொன்னரு. ”

“ என் மகன் சொன்னதாலே...”

“ மாயம், மாந்திரீகம் இதெல்லாம், விவரம் தெரியாதிருக்கிற வரையிலேதான் பலிக்கும் என்ற முடிவுக்கு வந்தோம். அது மட்டுமில்லிங்க மற்றவங்களுக்கு, மயக்கம் போக, அப்பா சொல்கிற அவ்வளவும்-பூஜை முடிக்கயிறு - விபூதி அடிக்கறது-எல்லாம் செய்து பார்த்தாச்சி— ஒரு பலனும் இல்லே கடைசீயிலே, சின்னவரைப் பிடிச்சி பெரிய ஆஸ்பத்திரியிலே சேர்த்தாகணும். கிளம்பி விட்டோம். அப்பா, முதல் வகுப்பிலே இருக்கருரு. வாங்க உங்களேப் பார்த்தா, அவருக்கு ஒரு தெம்பு பிறக்கும் ”

முதல் வகுப்பில், முகத்தில் பயம் கப்பி கொண்ட நிலேயில், திரிசூலம் பிள்ளே படுத்துக் கொண்டிருந்தார்- அவருக்குத் தைரியம் கூறிவிட்டு, அவருக்குத் துணேயாக இருந்து பெரிய மருத்துவ மனேயில் சேர்த்து விடும்படி, மகனுக்கு, அவசர அவசரமாக ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு, திருச்சி செல்லும் இரயிலில் வந்து ஏறிக் கொண்டார், சோமசுந்தரம்.

குறும்புக்கார மாணவன்

கல்லூரி நீச்சல் குளம்! ஒரு மாணவன் இடுப்பில் ஒரு துண்டுமட்டும் கட்டிக்கொண்டு, கரைமீது நின்றுகொண்டிருக்கிருன், மற்ருேர் மாணவன் ஓசைப்படாமல் வருகிருன்— நின்றுகொண்டுள்ளவனேப் பிடித்துக் குளத்திலே தள்ளிவிடுகிருன், வேடிக்கையாக. இதுபோல வேடிக்கை செய்வதிலே விருப்பம் அந்த மாணவனுக்கு.

நீச்சல் குளத்திலே தள்ளப்பட்ட மாணவன், மிகுந்த கோபம்கொண்டான், நீந்திக் கரைசேர்ந்து, தன்னே தள்ளிவிட்ட மாணவனேப்பிடித்து, நீச்சல் குளத்தில் ஆழமான இடத்திலே தள்ளிவிட்டான்.

நம்அளவுக்குத்தானே இருக்கிருன்; சொல்லப்போனல் நம்மைவிட மெலிந்தவனுகத் தெரிகிருன் என்று எண்ணிக் கொண்டு விளேயாடியது, பிறகு விபரீதமாகப் போய்விட்டதை எண்ணி, வேடிக்கைகார மாணவன் வருத்தப்பட்டான்.

பல மாண்வர்கள் வந்து அவனேச் சூழ்ந்துகொண்டார்கள்-பரபரப்படைந்த நிலேயில்.

“பயலே! என்னகாரியம் செய்தாய்! பிடித்துத்தள்ளிஞ்யே குளத்தில். யார் தெரியுமா ‘அந்த மாணவன்? உன்னே’ விட மேல் வகுப்பிலே படிப்பவன்! வகுப்பிலே அவன்தான் சட்டாம்பிள்ளே; உடற்பயிற்சியிலே வல்லவன்; அவனிடம் வைத்துக்கொள்ளலாமா உன்னுடைய குறும்புத்தனத்தை’ என்று மாணவர்கள் கூறினர்கள்.

அச்சத்துடன் அந்த மாணவன், பெரிய வகுப்பு மாணவனிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

அந்த இரண்டு மாணவர்களும் பெரியவர்களானபிறகு, பிரிட்டனில் மந்திரிகளாக, ஒன்ருகப் பணியாற்றினர்கள்!

பெரிய வகுப்பு மாணவன் அமெரி! கீழ்வகுப்பிலே படித்துக் கொண்டு குறும்பாக நடந்துகொண்ட மாணவன்தான், உலகப்புகழ்பெற்றுள்ள சர்ச்சில், இப்போது அவருக்கு வயது 90!

பித்தனோ அல்ல! பொன்னேதான்!!

“முத்து! முத்துசாமி! முத்து”

“அப்பா! ஏம்பா அழறிங்க, அப்பா”

“முத்து! நான் பாவிடா! நான் பாதகண்டா!”

“அப்பா! அழாதீங்கப்பா. நான் இனி இப்படிப்பட்ட தப்பு வழி போகமாட்டேம்பா... சத்யமாச் சொல்றேம்பா”

“என்னைக் கொல்லாதடா, முத்து! என்னைக் கொல்லாதே...”

“என்ன கஷ்டம் வந்தாலும், அப்பா! திருடக்கூடாதப்பா... திருட்டுத் தொழில், ஈனத் தொழில் அப்பா. அப்பா; கூலி வேலை செய்யலாம்... நாலு இடம் பிச்சைகூட எடுக்கலாம்... திருடமட்டும் கூடாதப்பா... அப்பா!’!

“ஐய்யோ! முத்து! நான் என்னடா சொல்லுவேன்... எப்படிடா இதைத் தாங்கிக் கொள்வேன்... முத்து! உன்னை இந்த நிலைக்கு...”

“அப்பா! நான் திருந்திவிடுவேம்பா! ... கவலைப்படாதீங்க... தங்கச்சிக்குச் சொல்லுங்க...!’

இவ்வளவு பேசுவதற்கு, போலீஸ்காரர் அனுமதி கொடுத்ததே ஆச்சரியம் — அவர்களுக்கும் குடும்பம், பிள்ளை, பாசம், இருக்கிறதல்லவா, அதனாலே, ஆறுமாதம் ஜெயில் தண்டனை பெற்று ‘வண்டியிலே’ ஏறப்போகும் மகனிடம், தகப்பன், சிறிது நேரம் கதற அனுமதி கொடுத்திருந்தனர்.

கோர்ட்டிலே கொஞ்சம்கூட அச்சம் அடக்கம் காட்டாதவன் அப்பனைக் கண்டதும் இப்படி அழுகிறானே, சத்தியம்கூடச் செய்கிறானே இனி திருடமாட்டேன் என்று. இது அல்லவா ஆச்சரியம் என்று போலீஸ்காரர்கள் எண்ணிக்கொண்டனர்,

திருட்டுக் குற்றத்துக்காகத் தன் மகன் தண்டிக்கப்படுவதைக் காணும் தகப்பன் தத்தளிக்காமலிருக்க முடியுமா. பாபம், இந்தப் பெரியவர் அதனால்தான் கதறுகிறார் இப்படி, என்று பேசிக்கொண்டனர், அருகே நெருங்கி வந்திருந்தவர்கள்.

“அம்மா சொல்லும்னு சொன்னயேப்பா, கவனமிருக்குதா. எனக்குத் தங்கக்காப்பு செய்து போடணம்னு — இதோ, பார்த்தயா, மாட்டிவிட்டாங்க, இரும்புக் காப்பு... இதைப் பாரப்பா. இதைப்பாரு! திருடினை இதுதான்... இதுமட்டுந்தானா ஊரே காரித்துப்பும்..... ஜெயிலுக்குப் போனவனை என்கிற கேவலம். உள்ளத்து நாளைக்கும் இருக்கும்...”

முத்து! என்று கதறியபடி அந்த முதியவர் தன் மகன் எதிரே விழுந்து அழுதார்.— அவருடைய கரங்கள் அவன்காலருகே சென்றன-போலீஸ்காரர்தடுத்துநிறுத்தி முதியவரை அப்புறப்படுத்திவிட்டு, அவனைப் போலீஸ் வானில் ஏறச் செய்தனர். ஏறுவதற்கு முன்பு அவன், சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு புளிய மரத்தடியில், ஒரு பெண் நின்றுகொண்டு, முந்தானையால் தன் கண்களைத் துடைத்துக்கொண்டிருக்கக் கண்டான், புன்னகை செய்தபடி, அந்தப்பக்கம் பார்த்தான். முத்து! முத்து! என்று முதியவர் கதறினர், போலீஸ் வண்டி கிளம்பிவிட்டது.

“குடும்பத்துக்குக் கேவலத்தைத் தேடி வைக்கத்தானேடா, நீ பிறந்தே. உப்புப் போட்டுத்தானே சாப்பிடறே, உணர்ச்சி, மானபிமானம் இருக்கவேண்டாமா... இந்தக் குடும்பத்தைக் காப்பாத்த நான் மாடா உழைக்கிறேன்... உனக்கு ஆகுது வயது இருவது, ஒருவேலைக்கு இலாயக்கா, நீ. உடம்பு வணங்கி ஒரு வேலை செய்தது உண்டா. உன் தங்கச்சி வயசுக்கு வந்து வருஷம் மூணு ஆகுது. அதுக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து வைக்கணுமே, எவன் கிடைப்பான் என்று நான் தவியாத் தவிக்கிறேன். உன்னுடைய யோக்யதை ஊர் சிரிக்கறதாலே ஒரு பயலும் வரமாட்டேன் என்கிறானே, அவளைக் கட்டிக்க.





ஏண்டா என் வயத்தெறிச்சலைக் கொட்டிக் கொள்றே."

மளமளவென்று வளர்ந்துவிட்டான் முத்துச்சாமி, ஆனால் ஒரு இடத்திலும் நிலைத்து வேலைக்கு இருப்பதில்லை. படிப்பு இல்லை, கூலி வேலை செய்வதுதான் என்று நிலை என்றாலும், யாராவது நாலு வார்த்தை ஏசிவிட்டால், அவனால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. கோபம் கோபமாக வரும். கண்மண் தெரியாமல் நடந்து கொள்வான்.

"வீட்டுக்கு அடங்காததை ஊர்தான் அடக்க வேண்டும்,"

என்று பலர், அவன் காதில் விழுகிறபடி சொல்லுவார்கள். அவர்கள் இருந்த குப்பத்தில், மற்ற வீடுகளில், தங்கள் பிள்ளைகளை, முத்துசாமியுடன் மட்டும் பேசக்கூடாது என்று கண்டிப்பான உத்திரவு போட்டிருந்தார்கள். அவனிடம் பேசவே, அவனை ஒத்த வாலிபர்கள் கூச்சப் படுவார்கள். அவனிடம் அந்த நிலையிலும், அன்பு காட்டி, சிரித்து விளையாடிப் பேசி வந்தது, அவனுடைய 'தங்கச்சி'தான் — கூடப் பிறந்தது அல்ல — கூடப் பிறந்தது தனக்குக் கலியாணம் ஆகாமலிருப்பதற்குக் காரணமே, தன் அண்ணன்தான் என்று எண்ணிக் கொண்டு, முத்துவைக் கண்டவுடன் சீறும் சுபாவம் கொண்டுவிட்டிருந்தது. முத்துவிடம் பாசம் காட்டிப் பழகியது எட்டு வயதுத் தங்கை – அப்பாவின் இரண்டாந் தாரத்துக்குப் பிறந்த பெண்.

"அவ புண்ணியவதி, இந்தக் கண்றாவியைப் பார்க்காமல் பூவோடும் மஞ்சளோடும் நல்ல கதிக்குப் போய்விட்டாள்"

என்று சில நேரத்திலும்,

"அடிப் பாவி! என்தலையிலே இந்தச் சனியனைக் கட்டிவிட்டு, பாடுபடுடாப் பாவின்னு சொல்லி விட்டு நீ கண்ணை மூடிட்டே"

என்று சில வேளைகளிலும் முத்துவின் தகப்பனார் அப்பாசாமி கதறுவார்.

அப்பாசாமி, முப்பது வருஷங்களாக ஒரே இடத்தில் ஒழுங்காக, நாணயமாக வேலை செய்து அடக்கமானவர் என்று பெயரெடுத்தவர். எட்டு ரூபாய் சம்பளத்தில் துவங்கி அறுபது ரூபா வாங்கும் நிலைக்கு வந்திருக்கிறார், எளிதாக எவரையும் நம்பாத எம்பெருமாள் செட்டியாரிடத்தில்.

முதல்மனைவி, முத்து, மாணிக்கம் என்ற இரண்டு செல்வங்களைத் தந்துவிட்டு, மறைந்துவிடவே, அப்பாசாமி வள்ளியை இரண்டாந் தாரமாகக் கொள்ளவேண்டி நேரிட்டது. எத்தனையோ நல்ல நல்ல இடமெல்லாம் வந்துது, எங்க அப்பன் வக்குவகை இல்லாம, என்னை இரண்டாந் தாரமாகக் கொடுத்து விட்டாரு என்று வள்ளி, கோபமாக இருக்கும்போதெல்லாம் குறை கூறிப் பேசுவதுண்டு. அப்பாசாமி, அவள் சொல்வதிலேயும் உண்மை இருக்கிறது என்று மனதுக்குள் எண்ணிக் கொள்வார். வள்ளியின் பெண்தான் எட்டு வயது பட்டு. அந்தப்பட்டுவுக்குத்தான் முத்துவிடம் அவ்வளவு பாசம்.

"அண்ணாத்தை! வா! அப்பா, இல்லே, வா! சும்மா!"

என்று வரவேற்கும் குரலே பட்டுவுடையதுதான்.

"அக்காவுக்குக் கூட உன் பேர்லே கோவம் அண்ணாத்தை, என்னைக்கூட, உன் கூடப் பேசக்கூடாதுன்னு சொல்லி இருக்குது..."

என்று 'சேதி' சொல்லுவதும் பட்டுதான். பட்டுவை ஒரு நாள் பார்க்காவிட்டால்கூட, முத்துவுக்கு மனது சங்கடமாக இருக்கும். அவ்வளவு அன்பு வைத்திருந்தான் அந்தச் சிறுமியிடம். வள்ளியால் ஆனமட்டும் மிரட்டிப் பார்த்தாகிவிட்டது, அடித்தும் பார்த்தாகிவிட்டது, பட்டு, கட்டுப்படவே இல்லை. முத்துச்சாமியின் குரல் கேட்ட உடனே துள்ளிக்கொண்டு ஓடிப்போய், அவன் கழுத்தைப் பிடித்துக்கொண்டு வருவாள். முத்துவுக்கும் அந்தக் குடும்பத்திற்கும், தொடர்பு அடியோடு அறுபட்டுப் போகாமலிருந்ததே, பட்டு காட்டிவந்த பாசத்திலேதான்.

முத்துச்சாமி, படிப்பிலே நாட்டம் காட்ட முடியாது போகவே, தச்சுத் தொழில், அச்சுத் தொழில், கட்டடத் தொழில் என்று பலவற்றிலே நுழைந்தான். எந்த இடத்திலும், தன்னிடம் அன்போ அக்கறையோ எவரும் காட்ட முன்வராததையும், எதற்கெடுத்தாலும் ஏளனம் பேசவும் ஏசவும், அடிக்கவும் உதைக்கவுமே பலரும் துடித்தனர் என்பதையும் கண்டுகொண்ட பிறகு, முத்துவுக்கு ஒரு வெறுப்புணர்ச்சியே வளர்ந்துவிட்டது, இந்த உலகத்தில தன்னை வாழவைக்க ஒருவருக்கும் மனம் இல்லை என்று

முடிவுக்கு வந்தான். ஈ, எறும்பு இவைகளைக் கண்டவர்கள் அடிக்கவாவது செய்கிறார்கள், இல்லை என்றால் எப்படியோ ஆகட்டும் என்று விட்டுவிடுகிறார்கள். அது போல, மனித உருவத்தில் தன்னைக் காண்கிறார்களே தவிர, ஈ எறும்புக்குச் சமம் என்றுதான் ஒதுக்கித்தள்ளுகிறார்கள் என்று எண்ணிக்கொண்டான், முதலில் கோபம், வருத்தம் ஏற்பட்டது. பிறகு அந்த உணர்ச்சிகள் மறைந்துவிட்டன. ஒரே வெறுப்பு, உலகத்திடம். ஒரு விதமான துணிவு! எவரும் தன்னை எதுவும் செய்ய முடியாது என்ற துணிவு.

மூங்கிலை, பயன்படும்படியாக வளைத்துவைக்க, அது இளசாக இருக்கும்போது, முயற்சி எடுத்துகொள்ள வேண்டும் என்பார்கள் அல்லவா. சிறுவனாக இருக்கும் போதே முத்துச்சாமியைப் பக்குவப்படுத்தி இருக்க வேண்டும். அதற்கா, அப்பாசாமிக்கு நேரம் இருந்தது. எலும்பு முறிய, விடியற் காலையிலிருந்து விளக்கு வைக்கும் வரையில் பாடுபட்டாலும், சோம்பேறி! தடிக் கழுதை! என்று ஏசுகிறார், நேரம் ஏது, மகனுக்கு நல்வழி இது, தீது இது என்று எடுத்துக்காட்ட. முறையாக எடுத்துச்சொல்ல, திறமை உண்டா அப்பாசாமிக்கு என்பதேகூடச் சந்தேகம். உருட்டி மிரட்டி, தட்டி தடவி, மகனை வளர்க்கவே நேரம் கிடைப்பதில்லை.

உன் மகன் செய்த அக்ரமத்தைக் கேட்டயா... என்று வள்ளி சொல்ல வருவாள், 'உன் பிரசங்கத்தைக் கேட்க எனக்கு நேரமில்லை' எஜமானர் எலுமிச்சம் பழம் வாங்கிவரச் சொல்லிவிட்டார், இலுப்பூர் சந்தைக்குப் போயாகணும் என்று கூறிக்கொண்டே அப்பாசாமி ஓடுவார். இரண்டொரு தடவை 'நல்லபடி' சொல்லியும் பார்த்தார்; அடித்தும் பார்த்தார்; முத்துச்சாமி திருந்துவதாகக் காணோம்.

அப்பாசாமியை எஜமானர் எம்பெருமாள், கேவலமாகப் பேசுவதும், கொடுமைப் படுத்துவதும், சிறுவன் முத்துச்சாமிக்கு அடக்கமுடியாத ஆத்திரத்தைக் கொடுத்து வந்தது.

பெரியவர்களிடம் மரியாதையாகப் பேசவேண்டும் என்று தனக்கு அப்பாசாமி புத்தி கூறி வருகிறார். எம்பெருமாளுக்கு முப்பது வயதுதான் இருக்கும்; அப்பாசாமிக்கு ஐம்பதுக்குமேல் ஆகிறது; ஆனால், அப்பாசாமியை எம்பெருமாள், எவ்வளவு கேவலமாகப் பேசுகிறான் — பேசலாமா — மரியாதை காட்ட வேண்டாமா, வயதில் பெரியவர் என்பதற்காக. காட்டக் காணோமே! அடிக்கக்கூடச் செய்கிறானே! இது அக்ரமம் அல்லவா! இதை யாரும் கேட்கமாட்டேன் என்கிறார்களே! — என்று முத்துச்சாமியின் பிஞ்சு உள்ளம் எண்ணிக் குமுறும். பணம் படைத்தவர்களானால், அவர்கள், பொது நீதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியதில்லை என்ற தெளிவு முத்துச்சாமிக்கு பதினெட்டு வயதுக்குத்தான் பிறந்தது.

சோம்பேறி! தடிக் கழுதை! என்று ஒருநாள் எம்பெருமாள் அப்பாசாமியைத் திட்டியதைக் கேட்டுக் கொண்டிருந்த முத்துச்சாமியால் கோபத்தை அடக்கவே முடியவில்லை. நீதான் கழுதே! நீதான் சோம்பேறி! என்று எம்பெருமாளைப் பார்த்துக் கூச்சலிட்டுவிட்டான். என்ன சொன்னே? என்று எம்பெருமாள் கூச்சலிட்டார், பாய்ந்து சென்று முதுகு பிய்ந்துவிடும்படி அடித்துவிட்டான் அப்பாசாமி, எட்டு வயது முத்துச்சாமியை. போதும்! விட்டுத் தொலை! சிறுவன்! என்று ஒப்புக்குக்கூடச் சொல்லவில்லை எம்பெருமாள். பிள்ளையை வளர்க்கற இலட்சணம் இது தானா! இது, உதைபட்டு அடிபட்டு, ஊர்ப் பொறுக்கி ஆகப்போகுது பார்! என்று சாபமே கொடுத்தார் எம்பெருமாள்.

அடங்கிஒடுங்கி அப்பாசாமி, எம்பெருமாள் எதிரே நிற்பதைப் பார்க்கும்போதெல்லாம், முத்துச்சாமிக்கு, அடக்க முடியாத கோபம் வரும். ஒருநாள் பக்கத்துச் சாவடியில் சிலபேர் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள், அதை வேடிக்கைப் பார்த்துக்கொண்ருந்தான் முத்து, என்று கேள்விப் பட்டு அப்பாசாமி அன்று சிறுவனை அடி அடி என்று அடித்தார். முத்து பார்க்கிறான், எம்பெருமாள் சீட்டாடுகிறார் நண்பர்களுடன். அவருடைய மகன், எட்டு வயதுச் சிறுவன், இதைப்போடு! அதைப்போடதே! என்று சொல்லுகிறான், மகனுடைய அறிவை மெச்சி எம்பெருமாள் முத்தம் கொடுக்கிறார். என்ன உலகமடா இது! எனக்கு எதெது கூடாது என்று அப்பா சொல்லுகிறாரோ, எதை எதைத் தவறு என்று சொல்லி என்னைத் தண்டிக்கிறாரோ, அவைகளெல்லாம், எம்பெருமாளின் உலகத்திலே, நடக்கின்றன, கண்டிப்பார் இல்லை, தண்டனை தருவார் இல்லை! நீதி நியாயம் என்றால் எல்லோருக்கும் பொதுவாக அல்லவா இருக்கவேண்டும் என்று முத்துச்சாமி நினைத்துக்கொண்டு, கோபம் அடைவான். வெகுநாளைக்குப் பிறகுதான், நீதி நியாயம் இப்படி இருக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்ல



எம்பெருமாளின் உலகமும், கேட்டு நடந்திட அப்பாசாமியின் உலகமும் இருக்கிறது என்ற உண்மையைத் தெரிந்துகொண்டான். இந்த இரண்டு உலகங்களிலும் தனக்கு இடம் இல்லை என்று கண்டுகொண்டான் முத்து! மூன்ருவது உலகத்தில் இடம் பெற்ருன்; போக்கிரிகளின் உலகத்தில்.

நான் எத்தனை அன்பு காட்டினுலும் இந்த உலகம் நம்பவாப் போகுது, மூத்தாளோட பிள்ளைகளை இளையா கொடுமை செய்கிளு என்றுதான் சொல்ல போகுது. தப்பு செய்யும் போது அடிக்க வேணும். தொட்டா போதும் தெருக்கோடி கேட்கிறபடி கூச்சலிட்டுக் கொண்டு ஓடுவான். ஊர் என்னைச் சபிக்கும் நமக்கு வேண்டாம் அந்தக் கெட்ட பேரு. அவங்க அப்பாரே பார்க்கட்டும், கேட்கட்டும், வெட்டிப் போடட்டும். நான் தொட்டு அடிக்கவே மாட்டேன். ஒரு நாள் அடிச்சதுக்கு, பக்கத்து வீட்டு பொக்கைக் கிழவி வந்து விட்டாளே, எனக்கு புத்தி சொல்ல; வள்ளி! முத்து தாயில்லாதபையன். கொடுமைசெய்யாதேம்மா என்று, நமக்கு எதுக்கு வீண் வம்பு, அது என் வயத்திலே பொறந்ததா இருந்தா, உடம்புத் தோலை உறிச்சி உப்புத் தடவுவேன், அடங்காதது, இருந்தா என்ன செத்தா என்ன?

சலிப்பு, கோபம், எறிச்சல், ஏழ்மை இத்தனை நோய்களுக்கு ஆளான வள்ளியால் இப்படித்தான் பேச முடிந்தது.

ஆகவே முத்துச்சாமி கெட்டுப் போவதைத் தடுக்கத் தக்க சூழ்நிலை ஏற்படவில்லை. பட்டுவுக்காக மட்டுமே முத்து வீட்டுக்கு வருவான்-ஏதாகிலும் விளையாட்டுச் சாமான், தின்பண்டம் கொடுத்து விட்டுப் போய் விடுவான்; இதைத் தடுக்கப் பார்த்து, முடியாது என்பதால், விட்டுவிட்டாள் வள்ளி. மேலும், முத்து கொண்டுவந்துக் கொடுத்த விளையாட்டுச் சாமான்கள் நன்ருகவும் இருந்தன! போக்கிரி! ஊர் சுற்றி! வீட்டுக்கு அடங்காததுஎன்று பெயரெடுத்தானே தவிர, முத்து, திருடன் என்ற பெயர் மட்டும் எடுத்ததில்லை. வள்ளி மட்டும் கோபம் அதிகமாகும்போது கூச்சலிடுவாள், அது திருடிவிட்டு ஜெயிலுக்குப் போகாவிட்டா என் பேரை மாத்தி வைச்சிக்கறேன், பாரு, நீ வேணுமானு' என்று.

வேலை வெட்டி ஒழுங்காகச் செய்யாமல், வீட்டுக்குஅடங்காமல்இருந்து வந்த முத்து, எம்பெருமாள் செட்டியார் வீட்டில், நாலு தங்க வளையல்கள் திருடிவிட்டு, பிடிபட்டு, ஜெயிலுக்குப் போனது பற்றி, அந்த ஊரில் யாரும் ஆச்சரியப்படவில்லை. அப்படித்தான்நேரிடும்என்று ஊர் பேசிற்று, முத்துவும் குற்றத்தை மறுக்கவில்லை,

"திருடினதை ஒப்புக் கொள்கிருயா?

"ஆமாம் திருடினேன்"

"ஏண்டா, திருடினே?"

"என்ன கேள்வியய்யா இது! எப்படித் திருடினேன்னு கேட்டாலும் அர்த்தம் இருக்கும்; ஏன் திருடினேன்னு ஒரு கேள்வியா! இல்லை திருடினேன். அங்கே, இருந்தது திருடினேன். வேணும் திருடினேன். கேட்டா, கொடுக்கமாட்டாரு, திருடினேன்"

கோர்ட்டிலே பலர் சிரித்தே விட்டார்கள் முத்துச்சாமியே இதைக் கேலிக் குரலில் சொன்னுனே தவிர கோபக் குரலில் அல்ல, அப்பாசாமி தலையைத் தொங்க போட்டுக் கொண்டு, ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தார்.

இது முதல் குற்றம் என்பதால் ஆறு மாதம் கடுங்காவல் என்று மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பளித்தார். முத்து, கண்ணீர் சிந்தியபடி நின்று கொண்டிருந்த அப்பாசாமியைப் பார்த்து, அழாதே! அழாதே! என்று கூறுவது போலத் தலையை அசைத்தான்.

எம்பெருமாள் செட்டியார் வீட்டு தோட்டத்தில் மரம் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றியும் மாடு கன்றுகளை மேய்த்துக்கொண்டும் இருந்த மொட்டையன் பெண் குட்டி அம்மாள், முத்துச்சாமியிடம் மனதைப்பறி கொடுத்துவிட்டிருந்தாள். அவளைக் காண, ஒருவரும் அறியாமல் முத்து, தோட்டத்துக்குப் போவான்; அவள் போடும் பழைய சோற்றை, பால் பாயாசம் போலச் சுவைத்துச் சாப்பிடுவான்; அவள் சொல்லும் புத்திமதிகளைக் கோபப்படாமல் கேட்டுக்கொள்வான்.

இத்தனை பெரிய உலகத்திலே, உனக்கு மட்டுந்தானு கிடைக்கல்லே ஒரு வேலை. கட்டிக்க, கட்டிக்கன்னு சொல்றியே, உன்புருஷன் என்ன வேலை செய்யருருன்னு யாராச்சும் கேட்டா என்ன சொல்ல?

எம்பெருமாளு போலத்தான், எம்புருஷனும் ஒரு இடத்திலே, கைகட்டி வேலை செய்யறதில்லேன்னு சொல்லு.

நல்லா இருக்குது உன் பேச்சு. அவருக்கு இருக்குது இலட்ச இலட்சமாப் பணம், உட்கார்ந்துகிட்டு ஒரு வேலையும் செய்யாம சாப்பிட முடியும். நீ அப்படியா...?

அப்ப, இருக்கறவங்களுக்கு ஒரு நியாயம், இல்லாதவங்களுக்கு வேறே ஒரு நியாயம்னு சொல்லு,

இதெல்லாம் பேச எனக்குத் தெரியாது— என்னைக் கட்டிகிட்டா, நல்லபடி வாழவைக்க உனக்கு வகை இருக்குதா இல்லையா, அதைச் சொல்லு.

இவ்விதமான பேச்சு நடக்கும் முத்துச்சாமிக்கும் குட்டி அம்மாளுக்கும்; கோபம் துளியும் வராது முத்துவுக்கு— அந்தப் பெண்ணின் பேச்சிலே அவ்வளவு பாகு கலந்திருக்கும்.

அன்று இரவுகூட, அவளிடம் பேசிக்கொண்டிருக்கத்தான் முத்து சென்றான்; யாரோ தோட்டத்துப் பக்கம் வருவது தெரிந்ததும், வேறுபக்கம் ஓடாமல், வீட்டின் மொட்டை மாடிமீது தாவினான் — அங்கு ஒளிந்துகொள்ள இடம் வசதியாக இல்லாததால், அங்கு இருந்த அறைக்குள் நுழைந்தான் — அது எம்பெருமாளுடைய, படுக்கை அறை. பதறிப்போனான் முத்து. காலடிச் சத்தம் கேட்டதும், மேலும் பயந்து, அங்கு போடப்பட்டிருந்த கட்டிலடியில் படுத்துக்கொண்டு கட்டைபோலாகிவிட்டான். உள்ளே ஒருவர் நுழையக்கண்டு, தீர்ந்தது. பிடிபட்டுவிடுவோம் என்று எண்ணிக்கொண்டான்; பயத்தால், வியர்த்துவிட்டது. உள்ளே நுழைந்த உருவமோ, கதவை மெதுவாகச் சாத்திக்கொண்டு, பதுங்கிப் பதுங்கி, நடந்து அங்கு இருந்த இரும்புப் பெட்டியைத் திறக்கக்கண்டான். முத்துவுக்கும் சிரிக்கலாம்போலத் தோன்றிற்று. அந்த உருவம், இரும்புப் பெட்டியிலிருந்த நகைப்பெட்டியை எடுத்து, அதிலிருந்து நாலு தங்க வளையல்களை எடுத்து, மடியில் பத்திரப்படுத்திக் கொள்ளக் கண்டான், உற்றுப் பார்த்தான் முகத்தை. பதறிப்போனான். இரும்புப் பெட்டியைப் பழையபடி பூட்டிவிட்டு, அந்த ஆள் வெளியே சென்றுவிட்டான் சில விநாடிகள் முத்து, எழுந்திருக்கக்கூட இல்லை; திகைத்துப் போயிருந்தான். பிறகு, மெள்ள எழுந்திருந்து, இரும்புப் பெட்டியிலிருந்து வளையல்களைக் களவாடியவன், அவசரத்தில் அங்கு போட்டுவிட்ட, மேல்துண்டை எடுத்துக்கொண்டுவெளியே சென்றான். ஒருவரும் தன்னைப் பார்க்கவில்லை என்பது முத்துவுக்குத் தெரிந்தது என்றாலும், உடனே அந்த இடத்தைவிட்டு சென்றுவிடாமல், ஏதோ யோசித்தபடி இருந்தான். சில விநாடிகளில். ஏதோ ஓர் முடிவுக்கு வந்து, அங்கு கிடந்த ஒரு நாற்காலியைத் தூக்கிக் கீழே போட்டான். சத்தம் பலமாகக் கிளம்பவே, யார்? யார் அங்கே? என்ற குரல் கிளம்பிற்று. எம்பெருமாளின் குரல் என்பது முத்துவுக்கு விளங்கிவிட்டது. அவன் முகத்திலே ஒரு தனியான ஒளி பிறந்தது. மாடிமீது இங்கும் அங்கும் ஓடலானான். திருடன்! திருடன்! என்று எம்பெருமாள், கூவினார்—வேலையாட்கள், எங்கே? எங்கே? என்று கேட்டபடி, மாடிப்பக்கம் ஓடிவந்தனர்—முத்து, தோட்டத்துப்பக்கம் குதித்தான்—அதோ! அதோ! என்று கூவினர் வேலையாட்கள்; முத்து ஓடலானான் — வேலையாட்கள் துரத்தினர்—அவர்கள் தன்னைத் தொடர்ந்து வருவதைப் பார்த்தபடி, முத்து வேகமாக ஓடியபடி இருந்தான். இதற்குள், தெருவில் ஒரே பரபரப்பாகி விட்டது; போலீசும் வந்துவிட்டது; முத்துவைப் போலீஸ் துரத்திற்று. முத்து, குறுக்குச் சந்துகளிலே நுழைந்து, ஏரிக்கரைப் பக்கம் சென்றுவிட்டால், தப்பித்துக் கொள்ளலாம்; ஆனால் அவன் நேரே, நெடுஞ்சாலை வழியே ஓடிக்கொண்டே இருந்தான்; போலீசின் பார்வை அவன்மீது பட்டபடி இருந்தது. முத்து, நேரே, தன் வீட்டுக்குள் நுழைந்தான், கதவைத் தாளிட்டுக் கொண்டான். அப்பாசாமி அவனைக் கண்டதும் அலறிக்கொண்டு எழுந்தார்; அவருடைய கரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு, கூடத்து அறைக்குள்ளே போனான்; ஒரு மேல் துண்டை அவர் முன் வீசி எறிந்துவிட்டு, "உடனே! உடனே! போலீஸ் வந்துகொண்டே இருக்கிறது, எடு! எடு!" என்றான், அப்பாசாமி திகைத்திடக் கண்டு, "அப்பா! போலீஸ் வந்துவிட்டது; அதோ, கேள் சத்தம், தெருக்கதவைத் தட்டுகிறார்கள்.' என்று கூறினான்; அப்பாசாமியின் கண்களில் நீர் தளும்பிற்று. ஒரு பழைய துணி மூட்டையைக் காட்டிவிட்டு, தலையின் மீது கைவைத்துக்கொண்டு ஒருமூலையில் உட்கார்ந்துவிட்டார்! மூட்டையிலிருந்து, வளையல்களை எடுத்து தன் மடியில் வைத்துக்கொண்டு முத்துசாமி, தெருக்கதவைத் திறந்தான், போலீஸ்காரர்கள், அவன்மீது பாய்ந்தனர். பதறவுமில்லை, பயப்படவுமில்லை முத்து. நிதானமாக, அவர்களைப் பார்த்து, "ஏன்! என்னைத்தானே தேடிகிட்டு வந்திங்க. சரி, வாங்க" என்று கூறினான் போலீஸ் கொட்டடி சென்றதும், வளையல்களை அதிகாரியிடம் கொடுத்துவிட்டு, களவாடியது உண்மைதான் என்று ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தான்,

"ஏன்யா! அப்பாசாமி! நான் சொன்னனே கேட்டயா. அந்தப் பயலை, வீட்டிலே சேர்க்காதே, உனக்கு அவமானத்தைத் தேடிவைத்து விடுவான்னு சொன்னனே, கேட்டயா. இங்கேயே காட்டிவிட்டானே. அவனுடைய கைவரிசையை, பார்த்தயா......எவ்வளவு கேவலம் உனக்கு, எவ்வளவு தலை இறக்கம்...இப்படிப் பட்டதுகளை, வெட்டிப் போடணுமய்யா, இந்த மாதிரியா ஒரு பிள்ளை இருக்கறதைவிட, சாகட்டுமே..."

என்று எம்பெருமாள் ஆத்திரத்துடன் பேசினார். அப்பாசாமி அவர் காலில் விழுந்து,

"ஐயோ! வேண்டாமுங்க, உங்க வாயினாலே பையனை ஒண்ணும் சொல்லிவிடாதிங்க"

என்று கெஞ்சினார். எம்பெருமாள், பிள்ளைப் பாசம் இருக்க வேண்டியதுதான். ஆனா இதுபோல இருக்கிற திருட்டுப் பயல்களை, பிள்ளைன்னு சொல்லிக்கொள்வதுகூட, உன்னைப்போல நாணயஸ்தனாக வாழ்ந்து வருகிறவனுக்

குக் கேவலமய்யா...'' என்று கூறினர். அப்பாசாமி தலை தலை என்று அடித்துக்கொண்டு அழுதார்.

எவ்வளவு பேசினுலும் வள்ளியை ஒருநாளும் கை நீட்டி, அப்பாசாமி அடித்ததில்லை; கோர்ட்டிலிருந்து வீட்டிற்கு வந்த அன்று, குடும்பத்துக்குத் தீம்பு தேடிவிட்டானே முத்து என்று வள்ளி ஏசிப் பேசியபோது ஆத்திரம் கொண்டு அப்பாசாமி அவளை அடித்துவிட்டார்.

"ஒரு வார்த்தை பேசாதே அவனைக் குறித்து...அவனை ஏச, உனக்கு என்னடி யோக்யதை இருக்குது...அவன் திருடி ஜெயிலுக்குப் போனுன்னு, கேவலமாப் பேசாதே......முத்து வைப்பத்தி ஒரு வார்த்தைகூடக் கேவலமாப பேச, நான் இடம் கொடுக்கமாட்டேன்...''

என்று அப்பாசாமி ஆவேசம் வந்தவன்போலப் பேசக் கேட்ட வள்ளி, மகன் திருடிவிட்டு ஜெயிலுக்குப் போனதாலே மனது குழம்பிப்போய்விட்டது என்று எண்ணிக் கொண்டாள்.

ஒருவரிடம் ஒன்றும் பேசாமல், அப்பாசாமி, கண்ணீர் சிந்தியபடி மூலையில் உட்கார்ந்துகொண்டார். வள்ளிக்கோ, அவரிடம் சொல்லியே தீரவேண்டிய முக்கியமான விஷயம் இருந்தது. சமாதானமாகப் பேசிப் பார்ப்போம் என்று,

"அழாதிங்க......என்னமோ நம்மோட போருத வேளைதான், முத்துவுக்கு கெட்டபுத்தியைக் கொடுத்தது. கலங்காதிங்க...நம்மோட கஷ்டம் இத்தோட போயிடும் பாருங்க. அவனும் திருந்தி நல்லவனுயிடுவான்.''

என்று கூறி, அப்பாசாமிக்கு காப்பி கொடுத்தாள். அப்பாசாமி அதைச் சாப்பிடக்கூட இல்லை,

"ஒரு விஷயம் தெரியுமுங்களா...நம்ம வீட்டிலே, பழைய சாமான்களிலே, சின்ன தாம்பாளத்தட்டு இல்லிங்க, அக்கா, பூஜைக்கு உபயோகப்படுத்தும்னு சொல்லிங்களே, பித்தளைத்தட்டு, அது, பித்தளை இல்லிங்க, பொன்னுங்க, பொன்னு ....

அப்பாசாமி, வள்ளியை உற்றுப் பார்த்தான், வள்ளி உள்ளே இருந்து, பளபளப்பான தாம்பாளத்தட்டைக்கொண்டுவந்து, அவனிடம் காட்டி,

பித்தளைத் தட்டுன்னு எண்ணிக்கொண்டமே, அதுதானுங்க, இது. எங்க அண்ணன் வந்துது, அது நகை கடையிலேதானே வேலை பார்க்குது; அது பார்த்துவிட்டு, வள்ளி! வள்ளி! இது பித்தளைன்னு யாரு சொன்னது, உனக்கு? இது அசல் தங்கமாச்சே; மெருகு போடாததாலே இப்படி பித்தளைபோல இருக்குதுன்னு சொல்லி, எடுத்துகிட்டுப்போயி, மெருகு போட்டுகிட்டு வந்து கொடுத்தது. தங்கம்ங்க, இந்தத் தாம்பாளம், இதைப்போயி, நாம பித்தளைன்னு எண்ணிக்கொண்டு, ஏமாந்துகிடந்தமே இத்தனை காலமா.''

என்று விவரம்கூறினள்.

தாம்பாளத்தைத் தன் கரத்தில் வாங்காமலேயே அப்பாசாமி மெல்லிய குரலில், ஆனுல் மிக உருக்கமாகச் சொன்னர்,

"ஆமாம் வள்ளி! அசல் தங்கம்தான்—எதை நாம் பித்தளை என்று எண்ணிக்கொண்டு இருந்தமோ, அது பித்தளை இல்லை, அசல் தங்கம்.''

வள்ளிக்கு ஒன்றும் புரியவில்லை.

அக்காலத்தில்!

ஒரு காலத்தில், உழைத்து உண்பவர்கள் தாழ்ந்தவர்கள்; உழைக்காமல் இருந்து உண்பவர்கள் உயர்ந்தவர்கள் என்று நமது சமுதாயம் கருதிற்று. அக்கால எழுத்தாளர்கள், வானுலகத்தில் தேவர்கள் உழைப்பின்றிக் கற்பகச் சோலையில் இனிது வாழ்ந்தது காட்டியும், மண்ணுலகில் மெய்யுழைப்பின்றி இருந்துண்போரைப் பூதேவர் என உயர்த்திக் கூறியும் உழைப்போரைத் தாழ்ந்தோராக நினைக்கச் செய்தனர்.

பேராசிரியர்.
அவ்வை. சு. துரைசாமி.

அவர் எழுதிய இரு கடிதங்கள்

உள்ளத்தை வென்றவளே!

உயிருக்குயிரானவளே!

ஓராயிரம் முழு நிலவு உருண்டு திரண்டு ஓருருவாகி வந்ததென உலகோர் வியந்துரைக்கும் வடிவழகி!

பெண் வேண்டேன், வாழ்வில் இன்பம் வேண்டேன், பெம்மானின் அருள்பெறவே வழி காண்பேன். பருவ எழிலைப் பொழியும் விழியாளே! எனை மயக்கிட, மானெனத் துள்ளி, மயிலென ஆடி, கிள்ளையும் குயிலும் வெட்கிடப் பேசி, கொடியோ இடையோ, கொவ்வையோ இதழோ, திங்களோ முகமோ, தேனோ, சொல்லோ, பிறையோ புன்னகையோ என்றெல்லாம் எண்ணிடத்தக்க மையல் ஊட்டி, மாலை மதியம் எழுந்திடும் வேளையில் என்னை வந்து அணுகிடினும், மயங்கிடேன் மாதே! குழம்பிடேன் குமரி! நெருங்கிடேன் நேரிழையே! என்று உறுதியுடன் கூறி, இமையவனே! எனக்கருள் பாலித்திடு! முக்கண்ணனே! எனதிரு கண்களில் பட்டிடும் இப்பாவை என் இதயம் புகாதிருக்கப் பணித்திடு! என்று இறைஞ்சி, இளமையெனும் இடர்க் குழியில் விழமாட்டேன், அழகெனும் பாசவலை சிக்கமாட்டேன், அரனடி பற்றிடுவேன் என்றே கூறி, அடவிக்குள் ஓடோடிச் சென்றுவிடும், முற்றுந் துறந்திடும் உறுதிகொள் முனிவனும், உனைக்கண்ணால் கண்டதும், உருகி, உடல் கருகி உள்ளீறல் பற்றி எரிவது அவியாது என் செய்வேன்! எம்மானே! உனை அடையும் நிலை, பிறகு!! இன்று இம் மடமாது மடிதனிலே, "சாலோக சாமீப சாயுச்யம் எலாம் கண்டிடுவேன், காதலமுதுதனை உண்டிடுவேன், கைலைநாதா! இதுதீது என்றுகூற, உமையொரு பாகனும் உன் மனமும் இடந்தராது! என்று கூறிவிட்டு, அடைந்தால் ஆரணங்கை! இன்றேல் தேடிப் பெறுவேன் மரணமதை! என்று கூறிடத்தக்க பேரெழில் கொண்ட பெண் பாவாய்!

உனைக் காணமல், உன் உரை கேளாமல், உன் மலரடி வருடிடும் பேறு பெருமல், உன் மதுரமொழி பருகிடும் நிலை இழந்து, தவித்துக் கிடக்கின்றேன்; கார்காணப் பயிராய்! நீர்காண மீனய்!! நெருப்பில் வீழ்ந்த நெஞ்சினனய்!

செல்கின்றேன் என்பதனல் சிந்தை மிகவும் நொந்து நைந்திடாதீர்–செல்லும் நான் சிறிது நாட்கள், எனை மகளாய்ப் பெற்றோர்கள் மனம் மகிழ இருந்துவிட்டு சிட்டாகப் பறந்தோடி வந்திடுவேன்; உன் காதல் நான் அறிவேன், என் மனமும் நீ அறிவாய் எனக்கூறிச் சென்றயே! எத்தனையோ காலமடி! என்னரசி! நீ சென்று, ஆகிறது.

பூக்கள் உதிர்ந்தனவே! புனல்வற்றிப் போயிற்றே! பார்க்கும் இடமெல்லாம் பச்சை இல்லை, பாங்கு இல்லை! கருகிக் கிடக்குதடி, கட்டழகி! நீ இல்லா இடமதுவும் நானிருக்கும் இடமாமோ! நடமாட இயலுந்தானே! உன் அன்பே எனக்குயிராம், அஃதின்றேல் நான், இருந்தும் இறந்தவனே! இன்பவல்லி! நீ அறியமாட்டாயோ இந்த உண்மையினை. ஏன் இந்த நிலையில் எனை இருக்கவிட்டு. ஏகிவிட்டாய் — செல்லு முன்னம், செத்தான் அவன் என்று செப்பிடச் செய்துவிட்டுச் சென்றிருந்தால் எனக்கிந்த சித்ரவதை இருந்திடாதே! சேல்விழியே! செல்கிறேன், விரைவில் வந்திடுவேன் என்றன்றே சொல்லிச் சென்றய். விரைவில் என்பதற்கு நீ கொண்ட பொருள்தான் யாதோ? உலவிய நான் ஊர்ந்து கிடக்கின்றேன்! பருகியதை இழந்ததனல் நாவுலர்ந்து சாகின்றேன்! எனைப்பார்த்து, பெடையுடன் கூடி மகிழ்ந்திடும் புள்ளினமும் எள்ளி நகையாடக் கண்டு வெதும்பிக் கிடக்கின்றேன்; வேறென்ன நிலைபெறுவேன்.

பெற்றோரைக் காணச் சென்றேன் என்கின்றயே, பேசும் பொற்சித்திரமே! உனைப்பெற்றர்-மறுக்கவில்லை. ஆனல் அவர் இன்று எனை மாய்த்தார்—மறுத்திடாதே! அவர் உள்ளம் மகிழ்ந்திடவே, அன்னமே! ஆங்கு இருக்கின்றய்! நான் என்ன கண்டு உய்வேன். உச்சிதனை மோந்து உன் பெற்றோர் உள்ளம் மகிழ்ந்திருப்பார்; உணர்கின்றேன்: ஆயினுமென்! ஆலவிழி மாதரசி! உனை ஆரத்தழுவிடத் துடித்திடும் எனை அகதியாக்கி, அகமகிழ்ச்சி அவர் பெறுதல் அறம்தாமோ! ஒருவேளை மென்காற்று வீசிட மறந்திடுமேல் மலரும் வாடிடக் கண்டதுண்டே. என் இதயம் உன் பிரிவால், புயலிடைப் பூவாகிச் சிதறுதந்தோ.

வாட்கண்ணி! என்றுன்னை நான் அழைத்தேன்—வாளால் இதயம் பிளந்திடவோ! வேல் விழியே! என்றுன்னை நான் அழைத்தேன் — இதயத்தை வேலால்

பிய்த்திடாதே! வா கண்ணே! வா, வா! விரைந்து நீ வாராயேல் வந்திடும் நான் இறந்த சேதி! வார்த்தை இது, வீண் மிரட்டல் என்றெண்ணுதே, வந்திடுவாய் நான் வாழ, வண்ணக்கிளியே!! வட்ட நிலவதுவும் தேய்ந்திடும் நிலை இங்கு. முழுதும் மாய்ந்திடா முன்னம் வந்து, காரிருளை ஓட்டிவிடு. காதலின்பம் ஊட்டிவிடு.....

நகரவும் முடியாத நிலையினில் உள்ள உன்,

நாதன்.

O

சௌ. சாரதாவுக்கு,

சௌக்கியம். சௌக்கியம் எழுதவும். உன் அம்மாவுக்கு இப்போது காய்ச்சல் குறைந்திருப்பதாகவும், இன்னும் ஒரு வாரத்தில் புறப்பட்டு வரப்போவதாகவும் எழுதிய கடிதம் கிடைத்தது. அம்மாவின் காய்ச்சல் குறைந்தால் போதுமா? அது, விட்டுவிட்டு வரக்கூடிய காய்ச்சல். குறைந்தால், குணமாகிவிட்டது என்று நம்பிவிடக்கூடாது. பழையபடி உன் அம்மா எழுந்து நடமாடும் நிலை வரவேண்டாமா? அதுவரையில் நீ அங்கிருந்து அவர்களைக் கவனித்துக்கொள்வதுதான் நியாயம். இந்தமாதிரி சமயத்தில் நான் ஈவு இரக்கம் இல்லாமல் உன்னை இங்கே அழைத்துக்கொண்டேன் என்ற கெட்ட பெயர் கூடாது. இரண்டு மாதமாகும் என்று டாக்டர் சொன்னதாகத் தெரிகிறது! அதுவரையில் அங்கு இருந்து அம்மாவின் மனம் மகிழும்படி நடந்துகொள். அவசரப்பட்டு வரவேண்டாம். இங்கு நான் எப்படி இருக்கிறேனோ என்ற கவலையும் வேண்டாம். எல்லாவற்றையும் வீராச்சாமி நன்றாகக் கவனித்துக்கொள்கிறான். என் உடம்புக்கும் ஒன்றும் இல்லை. பசுமாடு கன்றுபோட இன்னும் ஒரு மாதமாகுமாம். பாத்திரக் கடைக்காரன் பாக்கியில் பாதி கொடுத்துவிட்டேன். எதைப்பற்றியும் கவலைவேண்டாம். அம்மா படுத்த படுக்கையாக இருக்கும்போது, நீ இங்கு வருவது ஊர் பழிக்கு இடம் கொடுக்கும். அதை அறிந்து நடந்துகொள்.

இப்படிக்கு,

கிட்டு.

மூன்று கோப்பை காப்பி! எட்டு சிகரட்டு! நாலு முறை வெற்றிலைப் பாக்கு! ஆறு தடவை இங்கும் அங்கும் உலவுவது! இரண்டு பேனாக்கள் ஒடிந்து போகும் நிலை! காகிதக்குப்பை காலடியில்!

இவ்வளவுக்குப் பிறகு, இந்த இரண்டு கடிதங்களை எழுதி முடித்தார்—'கிட்டு' என்ற வீட்டுப் பெயரும், 'சிட்டு' என்ற புனைபெயரும் கொண்ட கிருஷ்ணசாமி, B. A.,

முதல் கடிதம், எண்ணற்றவர்களின் இதயத்தைத் தொடும் விதமாக அவர், இரண்டாண்டுகளாக, 'எழிலின்பம்' எனும் இதழில் எழுதிக்கொண்டு வரும், "அவளுக்காக நான்" எனும் நெடுங்கதையில், காதலியை விட்டுப் பிரிந்து பத்து நாட்கள் கழிவதற்குள், காதலன் தீட்டிய மடல்.

இரண்டாவது கடிதம், தாய்வீடு சென்று இரண்டு மாதங்களாகத் தங்கியிருக்கும் 'தர்மபத்தினி' சாரதாவுக்கு, கிட்டு எழுதியது.

முன்னது எழுத்தாளர் 'சிட்டு' அளித்திடும் காதல் ஓவியம்.

இரண்டாவது குடும்பத் தலைவன் கிட்டு எனும் கிருஷ்ணசாமி அனுப்பிய கடமைக் கடிதம்.

முதல் கடிதம் தீட்டிய 'சிட்டு'—சிறகடித்துப் பறந்தான் கற்பனையில்.

இரண்டாவது கடிதம் எழுதும்போது, குடும்பத்தின் சுமையைத் தாங்கித் தாங்கி ஏற்பட்ட தொல்லையை நினைத்துக் கொண்டிருந்தான்.

முதல் கடிதத்தைப் படித்து ஆயிரமாயிரம் இளம் உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்கிடும்.

இரண்டாவது கடிதத்தைப் படித்திடும் சாரதாவுக்குச் சந்தேகம் மனதைப் பிய்த்துத் தின்றிடும்—உள்ளபடி மனம் உருகி எழுதுகிறரா, அல்லது......பொருத்தமாக இரு கடிதங்களை எழுதிமுடித்தோம் என்ற எண்ணம் தாலாட்ட சிட்டு என்ற புனைபெயர் கொண்ட கிட்டு, என்கிற கிருஷ்ணசாமி, பி. ஏ., துயில்கிறார்.

உடை போட்டதும்

A. சாந்தகுமாரி. A. கலைச்செல்வி.

"என்னடி செய்யச்சொல்றே...கடன் கொடுத்தவனை விட அதிகமாக, நீ என்னைக் கொடுமைப் படுத்தறியே......"

"அவன் என்னை என்ன கேவலமாகப் பேசருன் என்கிறது உமக்கு என்ன தெரியறது... எத்தனை தவணைதான் நானும் சொல்றது... அவனுந்தான் எத்தனை தவணைகளைக் கேட்டுக்கொள்ளுவான்..."

"அவனோட பணத்தைத் திருப்பிக் கொடுக்காமலா இருக்கப் போகிறோம். அவனுந்தான் வாங்காமல் விட்டு விடப் போகிருனு? இத்த நேரம் பணம் கைவசம் இல்லை; கொஞ்சம் பொறுத்துக் கொள்ளச் சொல்லிக் கேட்டுக் கொள்கிரோம்.........இதிலே தவறு என்ன இருக்குது..."

"உம்மை விட அழகா, மரியாதையா, நான் அவனுக்குப் பதில் சொல்லிக் கொண்டு தான் இருக்கிறேன். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளப்பா, பணத்துக்கு அவர் ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிருர், வந்ததும் உன்னோட பணத்தைப் பூமேல வைத்துக் கொடுத்து விடுகிரோம்னு சொல்லாமலா இருக்கிறேன். எத்தனை நாளைக்கு அவனுக்கு இனிக்கும்—இந்த வெறும் பேச்சு; இல்லை, இல்லை, என்கிற பல்லவி. கோபம் வராமல் இருக்குமோ..."

"கோபம் வந்து என்ன செய்து விடுவான்? தலையை வாங்கி விடுவானோ"

"தலையை வாங்குவானேன்! தெருவிலே நின்று கொண்டு நம்மோட யோக்யதையை உரக்கக் கூவி மானத்தை வாங்கினுப் போதாதா...வாங்கி விட மாட்டானோ..."

"செய்துதான் பார்க்கட்டுமே! துணிவு இருந்தா!! மறுநாளே மானநஷ்ட வழக்கைத் தொடரமாட்டனு! கடனைத் திருப்பி வாங்க என்ன வழி உண்டோ அதைச் செய்வதா, கேவலமாகப் பேசுவதா! சட்டம் உனக்கு தெரியாது...அவனுக்கு என்ன தெரியும்..."

"வாங்கின கடனைத் திருப்பித்தரச்சொல்லி ஒருவன் வற்புறுத்தினு, அவன் பேரிலேயே வழக்குப் போடுவது தான் சட்டமா?"

"இப்போது இல்லை...இன்னும் ஒரு வருஷம் ஆகும்...மொத்தமாகத் தர முடியாது, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தர முடியும்.........என்று இப்படி எல்லாம் வாதாட முடியும். உனக்கு என்ன தெரியும் சட்டத்தின் நுணுக்கம்? பைத்யம்! உனக்கு நான் கடனே தர வேண்டியதில்லை என்று கூட வாதாட முடியும்...தெரியுமா?"

"கை நீட்டி அவனிடம் பணம் வாங்கிவிட்டு..."

"கை நீட்டிப் பணம் வாங்கினது யாரு? நானு?"

"உங்க அப்பா பேராலே வாங்கினது; தெரியும்..."

"எனக்கும் எங்க அப்பாவுக்கும், சொத்து சம்பந்தமாக ஒரு விதமான தொடர்பும் கிடையாது. நான் விடுதலை எழுதிக் கொடுத்து மூன்று வருஷம் ஆகி விட்டது என்று ஒரு 'பாயிண்ட்' கிளப்பினு, அசடு! வருஷம் ஆறு ஆகும், வழக்கு தீர! தெரியுமா?"

"அப்ப, கொடுத்தவன் கடனைத் திருப்பித்தரச் சொல்லிக் கேட்கக் கூடாது...அது உம்மோட நியாயம்..."

"கேட்கலாம் மரியாதையாக! தாராளமாகக் கேட்கலாம்; ஆனல் தரக் குறைவாகப் பேசக் கூடாது சட்டம் அதற்கு இடம் கொடுக்காது."

ஃ—ஃ—ஃ

"வாங்கின கடனை மறுக்கவில்லை. திருப்பித் தர முடியாது என்று சொல்லவுமில்லை..."



“வாங்கின கடனை எப்படி மறுக்க முடியும்? திருப்பித்தர முடியாது என்று சொல்ல சட்டம் எப்படி இடம் கொடுக்கும்? தம்முடைய கட்சிக்காரருக்காக வாதாடவேண்டும் என்பதற்காக என் நண்பர் இத்தனை வருஷ அனுபவத்துக்குப் பிறகு இவ்வளவு சொத்தையான வாதம் செய்வதைக் கேட்டு நான் ஆச்சரியப் படுகிறேன்...பரிதாபப் படுகிறேன்!”

“என் கட்சிக்காரர், தவணைதான் கேட்கிறார்; கடனைத் திருப்பித்தர...”

“தவணை! தவணை! எத்தனை தவணைகள்! ஜூலை என்றார்—என் கட்சிக்காரர் சரி என்றார் — செப்டம்பர் வரையில் காத்திருந்தார்; பணம் வரவில்லை; மறுபடியும் தவணை கேட்டார்; கொடுக்கப்பட்டது. இதுவரையில் மொத்தம் 12 முறை தவணை கொடுத்தாகிவிட்டது. இனியும் என் கட்சிக்காரரை தவணை கொடுக்கச் சொல்லிக் கேட்பது தர்மமுமல்ல...சட்டமும் அல்ல...,

“இந்த முறை தவணை கொடுத்தே ஆகவேண்டும் போன மாதம் என் கட்சிக்காரர் தன் மகளுடைய கலியாணத்துக்காகப்பட்ட சிரமம் கூடத் தீரவில்லை......அவருக்கு உடல்நலமும் சரியாக இல்லை...”

“உடல் நலத்தைக் கவனித்துக்கொள்ள நல்லடாக்டரிடம் போகட்டும்... இங்கு என்ன வேலை! தவணை தருவதற்குஇல்லை என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவிடுகிறேன் தவணைகள் கேட்டு வாங்கி வாங்கி, ஏமாற்றிவிட அந்தக் கட்சிக்காரர் திட்டமிடுகிறார். அவருக்கு உள்ளது ஒரே வீடு — அதை விற்றுப் பணமாக்கிக் கொண்டு வெளியூர் சென்று விட்டால் பிறகு அவரிடம் பணத்தைத் திருப்பி வசூலிப்பது முடியாது போய்விடும். வீட்டை விற்பதற்காகச் சதி செய்கிறார். இரகசியமாக ஏற்பாடு செய்துவருகிறார் என்று தகவல் கிடைத்திருக்கிறது. ஆகையால் கோர்ட்டாரவர்கள், வாங்கிய கடனைத் திருப்பித்தராமல், தவணைகள் சொல்லிக்காலத்தைஓட்டிக்கொண்டுவரும் நாண்டவராயருடைய வீட்டை என் கட்சிக்காரர், கடனுக்காகக் கைப்பற்ற உத்திரவிடக் கேட்டுக் கொள்கிறேன்.”

ஃ—ஃ—ஃ

கொடுத்தகடனைத் திருப்பித்தரச் சொல்லி கேட்பவன் தவணைகள் சொன்னால் கேட்டுக் கொள்ள வேண்டும், மரியாதையாகப் பேச வேண்டும், கடனைச் சிறு சிறு தொகைகளாகத் திருப்பிப் பெற்றுக் கொள்ளச் சம்மதிக்க வேண்டும், இல்லையென்றால் கடனையே திருப்பித்தர முடியாது என்று வாதாட சட்டம் இருக்கிறது என்று தமது மனைவியிடம் பேசிய வழக்கறிஞரையும் பார்க்கிறீர்கள். தவணைகள் கேட்டு வாங்கிக்கொண்டே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்து விட்டு, கடனைத் திருப்பித் தராமல் ஏமாற்ற நினைக்கும் பேர்வழி'யின் வீட்டைக் கைப்பற்ற உத்திரவு பிறப்பிக்கும்படி வாதாடும் வழக்கறிஞரையும் பார்க்கிறீர்கள்.

முன்னவருடைய பெயர் என்ன? மற்றவருடைய பெயர் என்ன? என்ற விவரம் தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறதல்லவா! ஒரு ஏமாற்றத்துக்குத் தயாராகி விடுங்கள். இருவர் அல்ல; பேசினவர் ஒருவரேதான்!

வீட்டில் பேசிய விசுவநாதர்தான் கோர்ட்டிலும் பேசியவர்!

வீட்டில் மனைவியிடம் பேசிய போது அவர் வெறும் விசுவநாதம்; கோர்ட்டிலே பேசியபோது வழக்கறிஞர் விசுவநாதம்.

குளித்துவிட்டு, உடலைத் துவட்டிக் கொண்டே வீட்டில் பேசினார்.

கோர்ட்டில், வழக்கறிஞருக்கான உடையில் வந்திருந்து பேசினார்.

உடை போட்டதும் உரைமாறி விட்டது!

வீட்டிலே விசாரமிக்க கணவர். கோர்ட்டிலே, வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசும் வழக்கறிஞர்.

ஒருவரைத்தான் காணுகின்றீர்கள்! ஆனால் இருவேறு நிலை!! இருவேறு நிலைகளில் இருவேறு உரை! இருவேறு உடை!!

இதிலே எந்த நிலையில் அவர் பேசியது நியாயம்? என்று கேட்பீர்கள். இரண்டிலும் நியாயம் இருக்கிறது. நியாயத்தை விட, அந்த இரு வேறு விதமாகப் பேச வேண்டிய 'தேவை' நிரம்ப இருக்கிறது.

வழக்கறிஞர் விசுவநாதம் தமது கட்சிக்காரருக்கு, அவர் கொடுத்த கடனுக்குச் சேதம் ஏற்படாமல் திருப்பிப் பெற்றிட வழி செய்து கொடுத்தாக வேண்டிய கடமை இருக்கிறதே, அதனைத் திறமையாகச் செய்கிறார்.

வசந்தாவின் கணவன் விசுவநாதம் வருவாய்க்கு மேல் செலவு செய்து விட்டதால், கடன்பட்டு, திருப்பித்தர முடியாத நிலை காரணமாக வேதனைப்படுகிறார்—அந்த வேதனையைப் போக்க வழியும் கூறாமல், அவர் வேண்டுமென்றே கடனைத் திருப்பித் தராமலிருப்பதாக பாவனை செய்து கொண்டு, எச்சரிக்கும் மனைவியிடம் பேச வேண்டியதை விசுவநாதம் வீட்டில் பேசினார்.

கடனைக் கண்டிப்பாகத் திருப்பித்தந்தாக வேண்டும், மேலும் தவணைகள் தர முடியாது என்று அடித்துப் பேசுகிறாரே வழக்கறிஞர் விசுவாதம், அது பயன் கொடுத்து, கடன் பட்டவர் கடன் கொடுத்தவருக்கு கடனைத் திருப்பிக் கொடுத்தால், விசுவநாதம் தான் பட்ட கடனுக்கு மேலும் தவணைகள் சொல்லாமல், தவணைகள் சொன்னால் கேட்டுக் கொள்ளத்தான்வேண்டும் என்று மனைவியிடம் 'பிரதாபம்' பேசாமல், கடனில் ஒரு பகுதியைத் திருப்பிச் செலுத்தலாம்.

விசுவநாதம் வீட்டிலே பேசியது, ''இயலாமை'' காரணமாக!

விசுவநாதம் கோர்ட்டிலே பேசியது, வீட்டிலே உள்ள 'இல்லாமை'யைப் போக்கிக் கொள்ள!

ஒருவரேதான்—இருவேறு நிலைமைகள்—இருவேறு பேச்சு!! உடையிலே ஒருவித மாற்றம்! அவர் உரையிலே தலைகீழ் மாற்றம்!!

ஃ—ஃ—ஃ

"இப்படியா போட்டு அடிக்கிறது குழந்தையை. கிடாமாடு! முதுகிலே விரல் விரலாத் தெரியுதே, இப்படியா அடிக்கிறது..."

"தப்பு செய்தா அடிக்கமாட்டாங்களா? நீங்க பெத்த அருமையான பிள்ளை செய்துவிட்டு வந்த காரியத்துக்கு, அடிக்காம திருஷ்டி கழிப்பாங்களா?"

"என்னடி அப்படி தலைபோகிற தப்பு செய்துவிட்டான், இப்படி அடிக்க- கண்மண் தெரியாம, குழந்தையாச்சேன்னு கொஞ்சம்கூடக் கவனிக்காம, இப்படிக் கொலைபாதகம் செயதிருக்கறியே"

"எத்தனை நாளைக்குச் சொல்றது புத்திமதி. கேட்டாத்தானே,"

"துளியாவது ஈவு இரக்கம், பரிவு பச்சாதாபம் இருந்தாத்தானே உனக்கு?"

"பிள்ளைகளை வளர்த்துப் பார்த்தாத்தான் தெரியும் அதிலே இருக்கிற கஷ்டம்."

"என்ன தப்பான காரியம் செய்தாலும், அன்பா, புத்திமதி சொல்லித் திருத்த வேணுமே தவிர, இப்படி முரட்டுத்தனமா, கொடுமைப்படுத்தக்கூடாது. உருட்டு மிரட்டிலே திருத்தலாம், இப்படியா! பத்ரகாளி! குழந்தை துடியாத் துடிக்கிறபடியாவா அடிக்கிறது..."

ஃ—ஃ—ஃ

"முட்டிக்கு முட்டித் தட்டி எடுக்கல்லேன்னு, பய நெஜத்தைச் சொல்லமாட்டான். மயிலே! மயிலே! இறகு போடுன்னு போடுமா!..."

"84! வேணும், ஆளு ரொம்ப நோஞ்சானு இருக்கிருன்; அடிதாளமாட்டான்; கண்ருவியா இருக்குது அவன் கதறுவதைக் கேட்டா..."

"சும்மா கிட 88! உனக்குத் தெரியாது இந்த ஆசாமிகளோட சுபாவம். ஒரு தட்டு தட்டன உடனே கத்துவானுங்க; உயிரே போயிட்டமாதிரி, துடிப்பானுங்க..."

"இல்லை! 84! உருட்டு மிரட்டிலேயே உண்மையை வரவழைத்து விடலாம். என்னமோ, பய, தெரியாமே, தப்பா நடந்துவிட்டான்......திருந்திவிடுவான்னு தோணுது..."

"இதுகளா? திருந்தும்னு எண்ணிக்கிட்டு உபதேசம் செய்யப்போறயா? பைத்யம்! இதுகளை ஈவு இரக்கம் பார்க்காமே கொல்லணும். உனக்குத் தெரியாது இதுகளோட விஷயம். புத்திமதி, நல்ல பேச்சு, இது வரையிலே எத்தனையோ பேர் சொல்லாமலா இருந்திருப்பாங்க. அதெல்லாம் இதுகளிடம்செல்லாது. பழமொழி இருக்குதே, 88, அடி உதவுவதுபோல அண்ணன் தம்பி கூட உதவமாட்டாங்கன்னு...டேய்! உள்ளதைச் சொல்லு, மண்டையைப் பொளந்து போடுவேன் பொளந்து; சொல்லு உண்மையை."

ஈவு இரக்கம் காட்டக்கூடாது என்று பேசி, பிடிபட்ட போக்கிரியை அடிக்கிறனே 84 — போலீஸ் கான்ஸ்டபிள்-பொன்னுரங்கம்—பார்க்கிறீர்கள். இப்படியா முரட்டுத்தனமாக இருப்பது, துளிகூட பச்சாதாப உணர்ச்சி இல்லாமல் என்று எண்ணுகிறீர்கள். இதே பொன்னுரங்கம்தான், முதலில் தன் மனைவி, குழந்தையை அடித்ததற்காகக் கண்டித்த கணவன்!

திருப்பூர் பனியனும் காஞ்சிபுரம் வேட்டியும், திருச்செந்தூர் விபூதியும், பழனி சந்தனப்பொட்டும் தெரிந்தது வீட்டில்—பேச்சில், பச்சாதாப உணர்ச்சி நியாய உணர்ச்சி தெரிந்தது.

காக்கி உடையும் சிகப்புத் தொப்பியும் அதிலே 84 என்ற எண்ணும், கையிலே பூண்போட்ட தடியும் தெரிகிறது, போலீஸ் கொட்டடியில். உடை மாறி இருக்கிறது. உரை? அடேயப்பா! தலைகிழான மாற்றம்!!

நல்ல புத்திசொல்லிக் குழந்தையைத் திருத்த வேண்டும் என்று மனைவிக்கு அறிவுரை சொன்ன பொன்னுரங்கம், பல ஆண்டுகள் குழந்தை இல்லாமலிருந்து தகப்பனுனவன் — அந்தப் பாசம் பேச்சிலே வழிந்தது.

போக்கிரியை அடக்க பலமான அடி கொடுத்தாக வேண்டும் என்று பேசிய பொன்னுரங்கம் 'ஏட்டு' ஆகப் போகிருர் என்று பலரும் பேசும் நிலையைப் பெற்றிருந்த போலீஸ்காரர்!

விட்டிலே இருந்த பொன்னுரங்கத்துக்கும் போலீஸ் கொட்டடியிலே இருந்த பொன்னுரங்கத்துக்கும், உடை வேறு வேறு; உரையும் வேறு வேறு!!

ஃ—ஃ—ஃ

"குழந்தையை அடித்துவிட்டதற்கு அவ்வளவு கோபித்துக்கொண்டாயே, அவன் என்ன செய்தான், ஏன் அடித்தேன் என்று கேட்டயா, நீ...?"

"சொல்லேன், கேட்பம்......என்ன அப்படிப்பட்ட அநியாயத்தைச் செய்துவிட்டான் என் மகன்."



"சொல்லவா, உன் செல்லப் பிள்ளை செய்ததை......பக்கத்து வீட்டுப் பையன் இல்லே, பக்தன் ...அவனைப்போட்டு அடிஅடின்னு அடிச்சுட்டான். முட்டிக்கு முட்டி தட்டணும்னு, உன்னுட்டமே கூச்சல் போட்டுகிட்டு, ஒரு மூங்கக்கழியை எடுத்து அடித்துவிட்டான்......"

"அடப் போக்கிரிப் பயலே! ஏன்? ஏன் அப்படிச் செய்தான்?"

"அந்தக் கூத்தையும் கேள் ...விளையாடலாம் வாடான்னு அந்தப் பையனைக் கூப்பிட்டு, நீ திருடன், நான் போலீஸ்காரன் என்று சொல்லி, அடிச்சி இருக்கருன்.'

அப்படியா செய்தான்! போலீஸ் வேஷம் போட்டு நாடக மாடினுை......அடப் போக்கிரிப் பய......"

"சிரிக்கிறிங்களா......அந்தப் பையனுேட அப்பாருக்கு எவ்வளவு கோவம் வந்திருக்கும்..."

"பயலைப்பார்த்தா, பூனைபோல இருக்கருன்..."

"அதுவா! ஒரு பழைய காக்கி சட்டையை மாட்டிகிட்டு, தலையிலே சிகப்புத் துணியை சுத்திகிட்டு, கழியைத் தூக்கிகிட்டு, அது நடக்கறநடையும், பார்க்கற பார்வையும், போடற கூச்சலும், அசல் உங்களை மாதிரியேத்தான் இருக்குது..."

"உடுப்பே போட்டுகிட்டானு பய, நம்மைப்போல!

"ஆமா......அந்த உடுப்பை போட்டுகிட்டதாலேதான், அந்த அடி அடிச்சுது. நீங்க மட்டும் என்னவாம், அந்த உடுப்பை போட்டுகிட்டா, ஆளே மாறிப் போய்விடறிங்க...உங்க பேச்சே மாறிடுது......போக்கே மாறி விடுது..."

"சே, போ! ஒரே அடியாக் கேலியும் கிண்டலும் செய்யறே"

ஃ—ஃ—ஃ

84, போலீஸ் உடையில் இல்லை! வீட்டு உடையில்! வீட்டு உடை! விட்டு உரை!!

உப்பு

"இந்தக்குற்றவாளிக்கு ஒருமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்."

"இவன் செய்த குற்றத்துக்காக இவனுக்கு 1000 வெண்பொற்காசுகள் அபராதம்."

"இவனுக்கு ஆறுதிங்கள் கடினகாவல்."

"இவ்விதமெல்லாம் குற்றம் புரிந்தோருக்கு, வழக்கு மன்றத் தலைவர், 'தண்டனைகள்' தருகின்றுரல்லவா,

ஆலந்திலும், ஸ்விடனிலும் விந்தையான, ஆனுல் பொருள் மிகுந்த, தண்டனை தரப்படுவது உண்டெனத் தெரிகிறது.

இந்தக் குற்றவாளியைச் சிறையில் தள்ளுங்கள், சிறையிலே இவனுக்கு உப்பில்லாத உணவு கொடுங்கள்.

என்பது தண்டனைகளிலே ஒருவகையானதாகக் கொள்ளப்பட்டிருப்பது விந்தையல்லவா.

ஸ்விடன் நாட்டில், இதுபோலத் தண்டனை பெற்ற ஒருவனுக்கு ஒரு திங்கள் உப்பில்லாத உணவே கொடுத்தார்களாம்; அவன் இறந்துவிட்டானும்.

உப்பில்லையேல் உயிரில்லை என்று கூறிடத்தக்க அளவு மதிப்பு மிக்க பொருள் உப்பு.

ஆப்பிரிக்காவில், மேற்கு, வடக்கு பகுதிகளில் சில இடங்களில். பொன் கொடுத்து உப்பு வாங்கும் பண்ட மாற்று முறை உண்டு என்கிருர்கள்.

உப்பு வாணிபம் நடாத்தும் இடமாம், டிம்பக்டு என்ற ஊர்-சகாரா பாலைவனத்தருகே - ஆப்பிரிக்காவில்.

உலகிலே ஆண்டொன்றுக்கு உபயோகப்படுத்தப்படும் உப்பின் அளவைக் கணக்கிட்டு ஒருவர் கூறியிருக்கிருர் 30,000,000 டன்கள் என்பதாக.

இங்கிலாந்தில் மட்டும் 2000,000 டன் உப்பு உபயோகிக்கப்படுவதாகக் கூறுகிருர்கள்.

கடலில் உப்பு கலந்துளது; இதனைப் பெற்ருல் எவ்வளவு இருக்கும் என்றுகூட ஒருவர் கணக்கெடுத்துக் காட்டியுள்ளார்.

எல்லாக் கடல்களையும் வற்றச் செய்து, ஆங்கு உள்ள உப்பினைக் குவித்துவைத்தால், ஐரோப்பா கண்டத்தைப்போல $14\frac{1}{2}$ மடங்கு பெரிய அளவினதாக இருக்குமாம்!

பத்தொன்பதாம் நூற்ருண்டு வரையில் இங்கிலாந்து நாட்டில் உப்பு வரி வாங்கப்பட்டு வந்தது.

முற்காலத்தில், திபெத், ஆப்கனிஸ்தானம், ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றில், உப்பு அடைகள் நாணயங்களாக உபயோகப்படுத்தப்பட்டன என்று தெரிகிறது.

ரோம் நாட்டுப் படைவீரர்களுக்கு சம்பளத்தில் ஒரு பகுதி, உப்பாகவே தரப்பட்டு வந்ததாம்!

இளங்கோ வழங்கிடும் இன்சுவை

ஒலி

அப்பப்ப என்ன 'சத்தம்' என்கிறோம், நமக்குப் பிடிக்காத ஒலியை. பிடித்தமான ஒலியை இசை என்கிறோம்; கூச்சல், என்றாலும், ஓசை என்றாலும் குரல் என்றாலும் எல்லாம் ஒன்றுதான். கேட்பவர்களையும், கேட்கும் மனநிலையையும் பொருத்தே எதுவும் பெயரும் சிறப்பும் பெறும். குழந்தை அழுதால் 'கத்துகிறதே' என்று கதறுகிறவர்களும் உள்ளனர். அதையே குழலினினும் யாழினினும் இனிய ஒலி என்கிறவர்களும் உண்டு.

நாம் விரும்புகிறோமோ, இல்லையோ, உலகத்தில் ஓசை இருக்கிறது. எங்கும் இருக்கிறது; எப்போதும் இருக்கிறது.

சம்பங்கோழி, நாரை, அன்னம், கொக்கு, கானுங்கோழி, நீர்க்காக்கை, உள்ளான், குளுவை, கணந்துள், பெருநாரை, ஆகிய பறவைகள் இரு பேர்அரசர்கள் போர்செய்யும்இடத்து எழும்ஒலிபோல் செய்யும்ஒலியும், சேற்றில் ஆழ்ந்துள்ள எருமையானது உடல்தினவைத் தீர்த்துக்கொள்ள அம்பாரத்தில் உராய, அதனால் நெற்புரி அறுந்து நெல் சிந்த, அதனால், அந்த எருமையை விரட்டுவோரின் ஒலியும், சேற்றில் நாற்று நடும் இளம்பெண்களின் பாடல் ஒலியும், நிலத்தை உழுவோரின் ஏர்ப்பாடல் ஒலியும், நெல் அரிந்தோர் பாடும் முகவை (அளவு)ப் பாட்டின் ஒலியும், பாணரின் இனிய கிணையின்ஒலியும் என்று பலவகையானஒலிகள் எழுந்தன புகார் நகரத்தில் என்கிறார் இளங்கோவடிகள்.

புகார் நகரத்தின் புறத்தில் இத்தனை ஒலிகள் கேட்டன என்பதை அறிந்த பின், மதுரையில் என்னென்ன ஒலிகள் கேட்டன என்பதையும் அறிய வேண்டாமா? வாருங்கள் மதுரைக்கு.

அரசனின் அரண்மனையில் முரசும் வேறு கருவிகளும் ஒலிக்கும் பேரொலி எழுகிறது; வேந்தன் செய்த சிறப்புக்களைப் பெற்ற வீரர்கள் தங்கள்தங்கள் தகுதிக்கேற்ப முரசு முதலிய கருவிகளைக் கொண்டு ஓசை எழுப்புகின்றனர்; பாண்டிய மன்னன் பகைவரை வென்று, அவருடைய யானைகளைக் கொண்டு வந்து கட்டிவைத்துள்ளான். அந்த யானைகளின் முழக்கமும், காட்டிலே வேட்டையாடிக் கொண்டுவந்துள்ள யானைகளின் முழக்கமும், வரிசை வரிசையாகக் கட்டப்பட்டுள்ள குதிரைகளின் கனைப்பு ஓசையும் வீரர்கள் கிணையைக் கொட்டும் ஒலியும்; ஆகிய இவ்வொலிகள் பலவும் சேர்ந்து கடலின் ஒலிபோல் பேரொலியாக இருந்தது என்கிறார்.

மதுரையில் கேட்ட ஒலிகள் இவை. சேர நாட்டில் என்னென்ன ஒலிகள் கேட்டன, அறியலாம்.

குன்றுகளில் வாழும் குறவர்கள் குரவைக் கூத்து ஆடியபோது பாடிய பாட்டின் ஒலியும், தினையைக் குற்றுவாரது உலக்கைப் பாட்டொலியும், தினைப்புனத்தில் கிளி முதலியவற்றை ஓட்டுதற்குப் பாடும் பாடலின் ஓசையும், தேன்கூட்டை உடைத்த குறவர்களின் முழக்கமும், பறைபோல் முழங்கும் அருவியின் ஒலியும், புலியுடன் போர் செய்யும் யானையின் முழக்கமும், மரத்தின் மீதுள்ள பரணிலிருந்து விலங்குகளை விரட்டுவோர் எழுப்பும் ஓசையும், குழியில் விழுந்த யானையைப் பிடிக்கும் யானைப்பாகரது ஒலியும், ஆகப்பலவகையான ஒலிகள் எங்கும் நிறைந்திருந்தனவாம்.

சோழ நாட்டில் மருதவளம் தெரிகிறது. பாண்டிய நாட்டில் அரசின் வாழ்வின் வளம் தெரிகிறது. சேர நாட்டில் குறிஞ்சி வளம் நிறைந்திருக்கிறது. அந்தந்த நிலப் பகுதிகளில் எழும் ஒலிகொண்டே வளம் தெரியும் வகையில் சிலப்பதிகார நடை அமைந்துள்ள நயம் பாராட்டுக்கு உரியது ஆகும்.

இப்போதும் எங்கும் ஒலியும் ஓசையும் நிறைந்து உள்ளது. இப்போது உள்ள ஓசையில் வளம் தெரிவது இல்லை; வறுமைதான் நிறைந்திருக்கிறது!

அதற்கும் இதற்கும் எத்தனை வேறுபாடு!

○

மலை

மலை என்றதும், வானை முட்டும் உயரமும், வளைந்தோடும் அருவியும் யாருக்கும் இப்போது நினைவுக்கு வருவது இல்லை. மலை என்றால் பக்கத்திலேயே வாழைப்பழம் என்பதைத்தான் சேர்த்துச் சொல்லத் தோன்றுகின்றது. அதனால்தான் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்கூட கல்வியின் சிறப்பைச் சொல்லும்போது 'மலைவாழை அல்லவோ கல்வி' என்று சொன்னார். சிறுமலைப்பழம் என்பது சிறப்பும் பெருமையும் உடையது அல்லவா? அந்தச் சிறுமலை, சிலப்பதிகாரத்திலும் இடம் பிடித்துக்கொண்டிருக்கிறது! புகாரிலிருந்து மதுரைக்குப் போகும்போது வழியில் உள்ள அம்மலையைப் பற்றி, வழி கூறுவோன் சொல்கிறான்: விரிந்த தலையையுடைய வெண்கடம்பு, காய்ந்த தலையையுடைய ஓமை, வாகை, மூங்கில், முதலிய மரவகைகள் உள்ள, காய்ந்த நீரற்ற இடங்களில், மான்கள் நின்று விளிக்கும் காடு காணப்படும், அதைக் கடந்து சென்றால், ஐவனவெண்ணெல்லும் இலையற்ற கணுக்களையுடைய கரும்பும், தினையும், வரகும், வெள்ளுள்ளியும், மஞ்சளும், கவலையும், வாழையும், கமுகும், தெங்கும், மாவும், பலாவும், ஆகிய இப்பழந்தரும் மரங்கள் ஒன்றையொன்று அடுத்தடுத்துள்ள தென்னவனின் (பாண்டியனின்) சிறு மலை தோன்றும்.

எவ்வளவு வளம் நிறைந்த மலை!

தமிழாக்கம்:—

மூலம்: இங்கர்சால்

மூடநம்பிக்கை என்றால் என்ன?

மூடநம்பிக்கை என்றால் என்ன?

சான்று கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஒன்றை நம்புவது!

ஒரு அதிசயத்திற்கு மற்றொரு அதிசயத்தைக் காரணம் காட்டுவது!

உலகம் அதிர்ஷ்டத்தால் அல்லது அந்தராத்மாவால் ஆளப்படுவதாக நம்புவது!

காரணத்திற்கும் காரியத்திற்கும் உள்ள உண்மைத் தொடர்பை அலட்சியப்படுத்துவது!

எண்ணத்தை, நோக்கத்தைக், குறிக்கோளை இயற்கைக்கு அப்பாற்பட்டதாக வைப்பது!

மனமானது பொருளை உற்பத்தி செய்கிறது, அதனை அடக்கியாண்டு வருகிறது என்று நம்புவது!

பொருளை விட்டுவிட்டு ஆற்றலை மட்டும் நம்புவது; அல்லது ஆற்றலை விட்டுவிட்டுப் பொருளை மட்டும் நம்புவது!

அதிசயச் செயல்கள், மந்திரங்கள், செபங்கள், கனவுகள், ஜோஸ்யங்கள், குறிகள் ஆகியவற்றை நம்புவது!

இயற்கைக்கு மீறிய ஆற்றலை நம்புவது!

மூடநம்பிக்கைக்கு உண்மையான அடிப்படை அறியாமையாகும்; நம்பிக்கையின்மீது அதன்கட்டிடம் எழுப்பப்படுகிறது; வெறும் ஆவல் அதன் கும்பமாகும். மூடநம்பிக்கை அறியாமையின் குழந்தையாகும்; துன்பத்தின் தாயாகும்.

கிட்டத்தட்ட எல்லோருடைய மூளையிலும் மூட நம்பிக்கை என்னும் புகைப்படலம் படர்ந்திருக்கவே செய்கிறது.

தட்டுகளைத் துடைத்துக்கொண்டிருக்கிற ஒருத்தி, துடைக்கும் துணியைத் தவறிக் கீழே விட்டுவிட்டால், அவள் உடனே கூறுகிறாள் "இன்று விருந்தினரின் கூட்டம் வரும்" என்று.

துணி கீழே விழுவதற்கும், விருந்தினர்கள் வருவதற்கும் நேரடியான தொடர்பு எதுவும் இல்லை என்பதைப் பெரும்பாலான மக்கள் ஒத்துக்கொள்ளவே செய்வர். கீழே துணிவிழும் தன்மை, எங்கேயோ இருக்கின்றவர்கள் உள்ளத்தில், இங்கே வருகை தர வேண்டும் என்ற விருப்பத்தை எவ்வகையிலும் உண்

டாக்க முடியாது என்பதைப் பலரும் உணருவர். துணியைக் கீழேபோட்ட குறிப்பிட்ட ஒருத்தியைப் பார்க்க, வருகை தரவேண்டும் என்ற விருப்பத்தை, மற்றவர்கள் உள்ளத்தில், எப்படி ஒரு துணி எழுப்பமுடியும்? கீழே துணி விழுவதற்கும், பின்னால் நிகழப்போகிற நிகழ்ச்சிகளுக்கும் நடைபெறக்கூடிய தொடர்பு, உறுதியாக, ஒன்றும் இருக்கமுடியாது.

ஒரு மனிதன், தற்செயலாகத் தன் இடது தோள் மேலாகத் திங்களைப் பார்க்கிறான் என்றால், அவன் உடனே கூறுகிறான், "இது எனக்குத் துர்அதிர்ஷ்டம்" என்று.

திங்களை இடது தோள் மேலாகப் பார்ப்பதோ அல்லது வலதுதோள் மேலாகப் பார்ப்பதோ, அல்லது அதனைப் பார்க்காமல் இருப்பதோ திங்களை எந்தவிதத்திலும் பாதிப்பதுமில்லை; உலகிலுள்ள பொருளிடத்துத் திங்களுக்குள்ள ஆக்கத்தையோ அல்லது ஆதிக்கத்தையோ எந்தவிதத்திலும் மாற்றப்போவதுமில்லை. இடதுதோளின் மேலாகப் பார்வையைச் செலுத்துவது பொருள்களின் இயற்கைப் பண்புகளை, உறுதியாகப் பாதிப்பதில்லை. இடதுதோளின் மேலாகத் திங்களைப் பார்ப்பவனின் வாழ்க்கையில், சாதாரணமாக ஏற்படக்கூடிய கெட்ட நிலைமைகளுக்கும், இடது தோளின் மேலாகப் பார்ப்பதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை நாம் நன்கு அறிகிறோம்.

ஒரு பெண், ஒரு பூவிலுள்ள இதழ்களை எண்ணுகிறாள்; எண்ணும்போது, "ஒன்று, அவன் வருகிறான்; இரண்டு, அவன் பார்க்கிறான்; மூன்று, அவன் காதல் புரிகிறான்; நான்கு, அவன் மணம்செய்கிறான்: ஐந்து, அவன் போய்விடுகிறான்" என்று சொல்லுகிறாள்.

உறுதியாக அந்தப் பூ, அந்தப் பெண்ணினுடைய காதலைப் பொருத்தோ அல்லது அவளது திருமணத்தைப் பொறுத்தோ, குறியாகக்கொண்டு வளரவில்லை; அதிலுள்ள இதழ்களும் அவைகளைப் பொருத்து அறுதியிடப்படவில்லை; அவள் அந்தக் குறிப்பிட்ட பூவைப் பறிக்கும்போது, எந்த 'அறிவும்' அவள் முன் வந்து நின்று, அவள் கைக்கு வழி காட்டியாக அமைவதில்லை. அதுபோலவே, ஒருவருடைய எதிர்காலம் இன்பகரமாக இருக்குமா, துன்பகரமாக இருக்குமா என்பதை, ஒரு ஆப்பிள் பழத்திலுள்ள விதைகளின் எண்ணிக்கை அறுதியிட்டுக் கூறுது.

ஆயிரக்கணக்கான மக்கள் அதிர்ஷ்ட—துர்அதிர்ஷ்ட நாட்கள், எண்கள், குறிகள், அடையாளங்கள், நகைகள் என்பவற்றில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

பெரும்பாலான மக்கள் வெள்ளிக்கிழமையைத் துர்அதிர்ஷ்டமான நாள் என்று கருதுகிறார்கள். பயணம் புறப்பட, திருமணம் செய்துகொள்ள, ஏதாவது தொழிலில் பங்குபோட அந்த நாள் மிகக் கெட்ட நாள் என்று கருதுகின்றனர். இதற்குச் சொல்லப்படும் ஒரே காரணம் வெள்ளிக்கிழமை துர்அதிர்ஷ்டமான நாள் என்பதாகும்.

கடற்பயணம் புறப்படுதல், காற்றுகளை அல்லது அலைகளை அல்லது நீர் உயர்தல்களை மற்ற நாட்களில் எந்த அளவுக்குப் பாதிக்கிறதோ, அந்த அளவுக்குக் குறைவாகவோ அதிகமாகவோ வெள்ளிக்கிழமை என்பதற்காகப் பாதிப்பதில்லை. அப்படியிருந்தும், வெள்ளிக்கிழமை துர்அதிஷ்டமான நாள் என்று கொள்ளப்படுவதற்கு இருக்கும்ஒரேகாரணம், 'அப்படிச் சொல்லப்படுகிறது' என்பதுதான்.

அதுபோலவே, பதின்மூன்றுபேர் உட்கார்ந்து சாப்பிடுவது மிக ஆபத்தானது என்று பெரும்பாலான மக்களால் எண்ணப்படுகிறது. அப்படிப் பதின்மூன்று என்பது ஆபத்தான எண் என்றால், இருபத்தாறு என்பது அதைப்போல் இருமடங்கு ஆபத்தானதாக ஆகவேண்டும்; ஐம்பத்திரண்டு என்பது நான்கு மடங்கு ஆபத்தானதாக இருக்கவேண்டும்!

பதின்மூன்று பேர் உட்கார்ந்து சாப்பிட்டால், அவர்களில் ஒருவர், ஓராண்டுக் காலத்திற்குள் இறந்துபடுவார் என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொருவருடைய உணவு செரிக்கும் தன்மைக்கும், உட்காருவோரின் எண்ணிக்கைக்கும் நேரடித் தொடர்பு எதுவும் இருக்கவில்லை; தனிப்பட்டவர்களின் நோய்களுக்கும்; எண்ணுக்கும் தொடர்பு இருக்கவில்லை என்பதை நாம் சாதாரணமாக இப்பொழுது அறிகிறோம். பதின்மூன்று பேர் உட்கார்ந்தால் ஒருவர் உறுதியாக இறந்துபடுவார் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு, எண்ணிக்கையை முக்கியமாக நாம் எடுத்துக்கொண்டோமென்றால், பதின்மூன்று பேர்களை விடப் பதினான்கு பேர்கள் என்பது இன்னமும் அதிகமான ஆபத்தைத் தருவதாகத்தானிருக்கவேண்டும்.

உப்பு வைத்திருக்கும் தட்டைக் கவிழ்த்துவிடுவது என்பது மிகவும் துர்அதிர்ஷ்டமானது; திராட்சைக் குழம்பைச் சிந்துவது என்பது அவ்வளவு துர்அதிர்ஷ்டமானது அல்ல என்று சொல்லப்படுகின்றது.

ஏன் உப்பு மட்டும் எதிரிடையானதாக மாறவேண்டும்; திராட்சைக் குழம்பு சாதகமாக இருக்கவேண்டும்?

படக் கொட்டகையில் ஒன்றரைக்கண்ணன் முதலில் நுழைந்தால், மக்களின் எண்ணிக்கை குறையும், படம் ஓடுவது தோல்வியுறும் என்று நம்பப்படுகின்றது.

முதலில் நுழையும் ஒரு மனிதனுடைய கண்பார்வைக் கோளாறு, ஒரு சமுதாயத்தின் நோக்கத்தை எப்படி மாற்றிவிடும்? அல்லது சமுதாயத்தின்நோக்கம் எப்படி ஒரு ஒன்றரைக் கண்ணனை முதலில் கொட்டகையில் நுழையும்படி செய்யும்? இவைகளுக்குத் தெளிவான விளக்கங்கள் ஒருபொழுதும் கொடுக்கப்பட்டதில்லை, இவ்வாறு சொல்லப்படும் காரணத்திற்கும்—காரியத்திற்கும் நாமறிந்தவரையில் எந்தவகைத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை!

வெள்ளைக்கல் அணிந்துகொள்வது துர்அதிர்ஷ்டத்தைத் தரும்; சிவப்புக்கல் அணிந்துகொள்வது, நலத்தை அளிக்கும் என்று நம்பப்படுகின்றது. எதிர்காலத்தை இந்தக் கற்கள் எப்படிப் பாதிக்கும்? அவை எப்படிக் காரணங்களை அழித்துக் காரியங்களைத் தோல்வியுறச் செய்யும்? இவற்றின் விளக்கத்தை யாரும் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை!

இப்படியாகப் பல்லாயிரக்கணக்கான அதிர்ஷ்ட—துர்அதிர்ஷ்டப் பொருள்கள், எச்சரிக்கைகள், சகுனங்கள், முன்னறிவிப்புகள் இருக்கின்றன. ஆனால் தெளிவுணர்வும், அறிவுக்கூர்மையும், பகுத்தறிவும் கொண்ட மக்கள் அனைவரும், இவை ஒவ்வொன்றும் அபத்தம் என்றும், முட்டாள்தனமான மூடநம்பிக்கை என்றும் அறிவார்கள்.

T'grams: ZUBFANCY T'phone: 21815

ZUBEIDA FANCY STORES

359, China Bazaar Road,
Opp: Law College, MADRAS-1.



For all kinds of
FANCY DRESS MATERIALS,
FASHIONABLE DESIGN
READY MADES IN UP-TO-DATE STYLES
FOR LADIES, GENTS *and* CHILDREN
Tailoring with Smart Cutting

Stockists of B&C and Mettur Mills Products

ZUBEIDA
READY MADE
SHIRTS & SUITS

★ *Latest Designs in Neck-Ties, Kerchiefs, socks etc,*

ZUBEIDA is the Hall Mark of Quality!

கதிரவனும் புக அஞ்சிப் பன்ஞள்
காணமலேகிடுவான்

காரிருள் சூழ்கானகம், கற்பாறை
மிகுந்த தஃது

கரடிபுலி ஓநாய்கள் கடுவன்கள்
பலவும் உண்டு

காட்டாறு புரண்டோடும், முதலே
ஆட்சி செய்யும்

கொத்தவரும் பெரும்பறவை
வல்லூறுகட்கும் குறைவு இல்லே.

இக்கொடுமைக் காட்டிற்குள்ளே
மானின் கூட்டம்.

செத்தபடி இருந்தது; எனினும்
மிச்சம் மீதி

இனம் பெருக்கி வந்தது; ஏன்?
இறைதாஞக!

அக்காட்டில், தாய்ப் புலிக்கு
அடங்காத குட்டி ஒன்று

அதன் போக்கில் அங்குமிங்கும்
அலேந்தபோது

தந்திரமாய்ப் பிடித்ததனேக்
கொண்டு சென்ருன்

தன் பிழைப்புக்கிது நடத்தும்
வேடுவன் தான்.

சிறிது பணம் கொடுத்தோர்ச்
சீமான் அதனே வாங்கி

கூண்டமைத்து மாளிகையில்
வளர்த்து வந்தான்.

ஆண்டுசில அவ்விடத்தில்
இருந்த குட்டி

அய்யோ என்றெவரும் அலறும்
வண்ணம்

ஓங்கி வளர்ந்து ஆங்கு
உறுமிக் கிடந்ததுகாண்.

சற்றுத் தொலேவினிலே நின்றபடி
சீமானும்

பாவம், இதன் தாயை மூன்றடியில்
கொன்றுவிட்டேன்

கதறிக் கிடந்ததிது கண்டு
கொண்டுவந்தே னென்று

அதரமதின் சிகப்பெல்லாம்
கண்கள் ஏறி

அலுத்துக் கிடந்திட்ட அழகி
தனக்குச் சொல்வான்.

விலைபேசி முடித்திட்ட வீரய்யன்
அங்கிருந்தான்.

இருந்தாலென்ன! விரும்பி அவர்
பொய் பேசும்போது

விழுந்தடித்துக் கொண்டுபோய்
உண்மை கூறலாமோ!

அவன் பெறும் ஊதியம் அவர் பொய்யை
மெய்தானென்று



கூசாமற் மகிழ்விக்கக்
கூறுதற்கும் சேர்த்துத்தானே!

குற்றேவல் புரிவதனைக் கற்றுத்
தேர்ந்தோன்; அறியானோ!
இருக்கும், இருக்கும், இதன்
தாயைக் கொன்றிருப்பார்
பிடிக்குள் அகப்பட்டார்
பிழைக்கும் வழிதான் ஏது
என எண்ணி இருந்திட்டாள்
விருந்தளித்தாள்
அறிவாளன்றோ அவர்
கொண்ட ஆற்றல்.
அணைப்பிலே சிக்கிக்கொண்டு
ஆவி போமுன்

எப்படியேனும் தப்பிச் சென்றிட
எண்ணும் தையலர்போல்

இப்புலியும் எப்படியும் தப்பிடவே
துடித்தபடி இருந்ததுகாண்.
கலைவல்லாள் காட்டிநின்ற
கடைஇடை எழில்தனிலே



கருத்தெல்லாம் செலவிட்டு
அலுப்புத் தீர
மதுமாந்தி மல்லாந்து அவன்
வீழ்ந்த அந்தப்போது
குடங்களிலே தளும்பினதைக்
குடித்தனர்காண் காவலர்கள்.

போதைஏறி புலிக்குரலைக் "குழலெனக்
கொண்டொருவன் ஆடுகின்றான்;
கூண்டிற்கு வெளியே நின்று
கொஞ்சுமொழி தன்னில்,

குமரியே! உடுத்தியுள்ள இந்த ஆடை
என்ன விலை?

பொன்னிழைத்த இப்புடவை
உனக்கேது?
எனக்கேட்டுக் குளறுகிறான்
வேறொருவன்;
மற்றொருவன் இத்தனை பேர்
நாமிங்கு இன்பமாய் இருக்கையிலே
அய்யோ பாவம், இதுமட்டும்
கூண்டினிலே இருத்தல் ஏனோ

எனக்கூறிக் கூண்டைத்
திறந்துவிட்டான்.
பாய்ந்தோடிச் சென்றது அடவி
புலியுந்தானே.
வந்ததை இருந்தவைகள் வரவேற்று
உபசரித்து
சென்றிருந்த இடத்தின் சிறப்பென்ன
எனக் கேட்க,

நரர்கள் வாழுமந்த நாடதனைக்
கண்டுவிட்டால்
கானகராம் நமக்குத் தலைகவிழும்
வெட்கத்தால்

என்னநம் ஆற்றல்! ஏதோ வயற்றுக்கு
வழி தேட
மோப்பம் பிடித்தறிந்து, மெல்ல
நடை நடந்து
இடம் பார்த்துப் பாய்கின்றோம்,
இடறியும் வீழ்கின்றோம்,
எத்தனையோ இன்னல்; பிறகே
இறைதனைப் பெறுகின்றோம்.
நான்இருந்த நாடதனில் இவ்வாறு?
இல்லை! இல்லை!
உழைக்காமல் உருசியான
பண்டம் பானமெலாம்
வேணமட்டும் உட்கொண்டு
வீணுக்கியும் போடும்
வித்தையினைக் கற்றவர்கள்
மாளிகையில் வீற்றுள்ளார்.
உறுமித் தொலைக்கின்றோம்
பகை, கோபம் காட்டிட நாம்
சிரித்தபடியே அவர்கள்
சித்ரவதை செயவல்லார்!
பல்லும் நகமும் கொண்டு
பலம் காட்டிக் கொல்கின்றோம்
சொல்லாலே சாகடிக்க
வல்லாரும் ஆங்குள்ளார்.
பசிதீர உண்ட பின்னர்
படுத்துறங்கிக் கிடக்கின்றோம்.
உண்டு மகிழ்வதுடன், ஊர்க்
குடியைக் கெடுப்பதற்கு,
விழித்துக் கிடக்கின்றார்
விபரீதம் விளைவிக்க;



சிற்சில வேளைதன்னில்
சச்சரவுகளிடுகின்றார்,
பெரிதும், பேதம் பகை
மூட்டி கச்சிதமாய் அழிக்கின்றார்.
அடங்கிக் கிடப்பவரை
ஆர்ப்பாட்டக்காரர் சிலர்,
கொன்றும் போடாமல்
குற்றுயிராய் வைத்துள்ளார்.
குயில்கள் இங்கும் கூவும்; நாம்
கூறி அல்ல அன்றோ!
கூண்டுக்கிளி குயிலும் கூப்பிட்ட
குரல் கேட்டு,
பாடிக் கிடந்திடு மாங்கு
காசு கட்டளைக் கேற்றபடி.
மயிலாடும் துறையொன்று
மாந்தோப்பருகே உளதன்றோ!
தோகை விரித்து மயில்
தொத்தோம் என்றாடுவது
நம்மை மகிழ்விக்க அல்ல
நாமறிவோம்;
ஆடும் அழகுமயில் ஆங்கு
ஆயிரம் உண்டறிவீர்!
தோகை பளபளப்பு போயினதால்
மெருகேற்றி
பாகையுடைச் சீமான் பள்ளி
அறைதன்னில்,
ஆடை நெகிழுமட்டும், அவர்
ஆசை தீருமட்டும்,
ஆடிடுவார், அவர்க்காவல்
எழும் வரையில்.''

கேட்ட விலங்கினங்கள், தம்
பெருமை குன்றவைக்கும்
ஆற்றல் படைத்த மாந்தர்
அடவியிலே இல்லாமல்
தொலைநாடுதனிலுள்ளார்,
பிழைத்தோம் என்றெண்ணி
இறைதேட விரைந்தன, அததன்
முறைதுறைக் கேற்பவே.
நாடேகி வந்த நல்லறிவு
பெற்ற புலி
நாளெல்லாம் மிகப் பலவாய்
எண்ணி எண்ணி
நாதனைக் கூப்பிட்டு நாமிதனைக்
கேட்டிடுவோம்
உண்மை உணர்ந்தவர்கள்
ஊமையாகி என்ன பயன்!
இந்தவிதம் எண்ணமிட்ட
அந்தப் புலியும் ஓர்நாள்,
ஏகாந்த இடம் சென்று
ஏகம்பனை நினைத்து,
கடுமையாய்த் தவமிருந்து
வந்ததுகாண் பக்தியுடன்.
பன்னாளாய்ச் செய்துவந்த
தவவலிமை தன்னாலே
கைலைவரை மணம் எட்டி
கண்ணுதலோன் மனம் கிளற,
புன்னகை செய்தபடி
புறப்பட்டான் மழுவேந்தி!
எதிர்வந்து நின்றது இருடபம்
பெம்மான் எழுந்தருள.
நான்போகும் இடந்தனக்கு
நீ வருதல் கூடாது
முற்றுந் துறந்தவர் முன்
மேனகை சென்று நிற்க
ஞானம் தவம் துறந்து
ஈனம் புரிந்துவிட்டார்
உனைக் கண்டால், தவமிருக்கும்
உத்தமர்க்கு
உள்ளத்தில் என்ன வெறி
மூண்டிடுமோ, யார் கண்டார்?
தவம் புரிந்து அழைப்ப தென்னை
கொல்புலி, அதனாலே
உணவாக வல்லநீ, உறங்கிக்கிட
இங்கு.
நான் சென்று வருகின்றேன்
வேலுண்டு, சூலம்தானு முண்டு.
சிவனாரும் சென்றாங்கு
காட்சி தந்தார் புலிக்கே!
மெச்சினேன் உன் தவத்தை
மேலானது செய்தாய்
இச்சை என்ன? கூறு!
இக்கணமே தந்திடுவேன்.

வரம் தரவே ஒப்பி அவர்
வாய்விட்டுச் சொன்னபோது
தவமிருந்த புலியுந்தான்
தாள் வணங்கிக்கூறிற்று.

மனம் குழம்பி, மகேசா! நான்
மருண்டு கிடக்கின்றேன்,
தெளிவளிக்க தேவரீரால்
இயலுமென்றே அழைத்தேன்,
அரனே! உன் தயவினால்,
அடியேனுக்கோர் குறைவில்லை
அகன்ற அடவி இது, உணவுக்குப்
பஞ்சமில்லை
பதுங்கிடமும் நிறம்ப இங்கு
பக்குவமும் யாம் அறிவோம்.
நெருங்கிவந்தெம்மைக் கொல்வார்
நெடுந்தொலைவில் உள்ளார்கள்,
அடியேனுக்கு ஆதலினால்
பொருள் ஏதும் தேவை இல்லை
பொருள் தெரிந்து கொள்ளுதற்கே
புனிதா! உமை அழைத்தேன்.
பதுங்கிப் பாயுவதும், பற்கள்
கொண்டு தாக்குவதும்
குருதி குடிப்பதுவும் கொன்று
தின்பதுவும்
எம் இயல்பு; எமக்கென்றே
ஏற்பட்ட முறையதாகும்.
ஆகவேதான் இருள் சூழ்ந்த
இடம் பெற்றோம்.
உழல்கின்றோம்; பணித்தீர்;
உண்மை; மறுக்கவில்லை.
துள்ளிடும் புள்ளி மானைத்
துரத்திப் பிடிக்கின்றோம்
கொன்று தின்கின்றோம்; தேவை;
அதனால், ஐயா!
எம்மைப்போல் இயல்புள்ள
இங்குள்ள விலங்கினங்கள்
இளைத்தாலோ நாங்கள் ஏமாந்து
இருந்தாலோ
எமை எதிர்த்துமே கொத்தும்
பிய்த்தும் போடும்.
திடுமென இடிவிழும்
சாவோம் சிலரும்
பெருமழையில் வெள்ளத்தில்
மூழ்கிப்போவோம்,
தீ கிளம்பி சிலவேளை எமை
தீய்த்துப்போடும்
பெருமரங்கள் சாய்வதனால்
உண்டாகும் பேராபத்து
வேடுவரும் கொல்லுதற்கு
வந்திடுவர் சிலநாளில்
இத்தனைக்கும் ஒப்பித்தான்
இங்கிருந்து வருகின்றோம்
இறைமுறையை மீறப்போமோ
என்பதனால்; மெய்யாய் ஐயா!
மருண்டவிழி மாதர்களை
அருகிழுத்து
அவர் கதறிட கத்தரிப்
பிடிபோட்டு
காமவெறியாளர் கசக்கிப்
போடுகின்றார், கன்னியரை,
கற்பினை அழித்த பின்னர்
கயவர் கூட்டம்.
நலிகின்றார் சிலபேர்கள்
நடைப்பிணமாய்!
நாராசந்தனில் சிலரும்
உழலுகின்றார்
சிலரோ, மானமழிந்தபின்
சாவுவேண்டி,
கூர்வாளோ, குளம் ஆறோ
கொடுவிஷமோ
இறுக்கி உயிர்பிரிக்கவல்ல
முழக்கயறோ தேடுகிறார்.
பசிக்காக இறைதேடும்
பாவிநாங்கள்; பரமனே! கேள்,
ஆங்கே, உருசிக்காகவே
புரிகின்றார், கொலைகளவு காமம்.
அடவியிலா ஐயனே! அவரெலாம்
இருக்கின்றார்?
குருதிகுடிப்பது கொன்று தின்பது
எமதியல்பு; மறுக்கவில்லை;
எம்இயல்பு மாறிட, நன்மை
தீமை உணர்ந்திட
அறமறிய அன்பு நெறிஅறிய
பண்பறிந்து ஒழுக,
அறிவுகொளுத்த நீர்
அனுப்பிய வள்ளுவர்,

நற்சுவைக்கும் நறுமணத்திற்கும்

அனைவரும் விரும்பி வாங்குவது

"தாம்சன் காபி"

தாம்சன் மானிபாக்சரிங் கம்பெனி,

71, நியூமார்க்கட் 2-வது லைன்,

தாம்பரம் (மேற்கு)

கடந்த 10 ஆண்டுகளாக

'காபி' உலகத்திலே ஓர் சக்கரவர்த்தி!

நற்சுவைக்கும் நறுமணத்திற்கும்

அனைவரும் விரும்பி கேட்டு

வாங்குவது

"அம்பாள் காபியே"

கடைத் தெரு, விருத்தாசலம் S. A.

Phone No. 23

நாங்கள் உய்ந்திட காடாவந்தார்!
நாட்டிடை நவின்றார்!!

கருத்திலே துளிர்த்திடும் தீயன
கருகி வீழ,
தக்கன கூறிடும் நூற்களைப்
படிப்பது, காட்டிலா? நாட்டினில்!
கட்டுதிட்டம் காத்திட
கண்ணீர் துடைத்திட,

அரசு அமைந்ததெங்கே?
நாட்டிலே!
ஐயனே! சென்று வருகின்றீர்
நல்வழி காட்டிட; அடிக்கடி.

அனுப்பி இருக்கின்றீர்
அடியார்கள் பற்பலரை!
இத்தனைக் கனிவு இவர்க்காக!
இத்தனை முயற்சி இவர்பொருட்டு!

இம்மி அளவேனும் எமக்காக
என்றுண்டா? கோபியாதீர்!
எமது இயல்பினை யாம்
தேடிப் பெறவில்லை; வந்தது.

ஆங்கவர்கள் நல்லியல்பு
பெற்றிட பெருமுயற்சி செய்கின்றீர்.

அவரோ, ஐயா! உமைத்
துளியும் மதியாமல்
உணர்ச்சிகள் ஆட்டிவிக்கும்
வழிப்படி எலாம் நடந்து,
ஏழை எளியோர்கள், நோயாளி
கொலையாளி,
விபசாரி, சூதாடி, கள்ளன்
கட்குடியன்

காமவெறி பிடித்தோன்
பொய்யன் புரட்டனெனும்,
பொல்லாத விலங்குகளாய்
ஆகிக்கிடக்கின்றார்!
பூஜைபல செய்கின்றார் என்பதற்கா
புனிதனே! இதை மறந்தாய்!
ஆடகப் பொன் மணி முத்து
தருகின்றாய் நீ
அதில் கொஞ்சம் உனக்கென்று
ஆக்குகின்றார்!
இந்த அபின் அன்புக்கா
அனீதி வளரவிட்டீர்?
காடெமக்கு நாடவர்க்கு
எனு முறை இனி இருக்கலாமோ!
ஏதோ, விலங்குகளாய்ப்
பிறந்துவிட்டோம்.
கொலைத் தொழிலில்
ஈடுபட்டோம் என்றுணர்ந்து
கூனி நடக்கின்றோம்,
கையையும் காலாய்க்கொண்டு.
அவர்கள் தாமோ நிமிர்ந்து
நிற்கின்றார்; அச்சமற்று.
என் செய்ய இனி எண்ணம்
என்றது புலியுந்தானே!
முப்புரம் எரித்த மூர்த்தி
முறுவலையும் இழந்து
கப்பிய கவலை யோடு
செப்பினன் இதனைத்தானே.
புலியே! உன் உணர்ச்சி
உரைதன்னைக் கேட்டேன்.
பொய்யல்ல! மெய்! அதனை
மறுப்பேன் அல்லேன்.
மானிடரின் லோகமது
நீ கூறியபடியே உளது
எத்தனையோ செய்து பார்த்தேன்
எதிலும் வெற்றி இல்லை;
தாமாக அழியட்டும் தரம் கெட்டு
என விட்டுவிட்டேன்,
இனி இதனைச் சற்றே
கேளாய், தவப்புலியே!
நாடுதான் என் வழி
நடவாதெனினும்
காடாகிலும் என் கட்டளை
கேட்டிடும் என்றே
கருத்திலே களிப்புடன்
கைலை உள்ளேன்.
இனிக் காடும்எனைக் கைவிடும்
என்றாகிவிட்டால்
கடவுள்எனு நிலை எதற்கு?
கவலை எனக்கதுவே.

காலத்தின் கோலம் என்ருர்
கண்களில் நீர் தளும்ப.

கால் வீழ்ந்து புலியும்
ஆங்கு கூறிற்று,

ஐய! அறிந்துருகுகின்றேன்
உமதுநிலை! அஞ்சற்க!
தெளிவுபெறக் கேட்டேன்;
கட்டினை மீற அல்ல
உள்ளொன்று புறமொன்று
இஃதுயாம் அறியா ஒன்று
உறுதியாய் உரைநம்பிக்
கைலை செல்லும்.

இனியும் காடது இருந்திடும்
உம் கட்டளைப்படியே.

காசுபணந்தான் இல்லை,
கோயில் குளம் அமைக்க!

புலியின் உரை கேட்ட
புனிதனவன் முகமலர்ந்து,
கவலைதீர்த்த கடும்புலியே வாழ்க!
நீடு வாழ்க!

நாடு கைவிடினும், காடுளது;
களிப்புற்றேன் மிகவும் என்ருர்

காடுடைப் பொடிஅலவோ
பூசிடுவதுமய்யா!

ஆடையும் எமதினம்
அளித்தது அன்ரு!

சிரித்தார் சிவனுர், சிரித்தேன்
நானும்

தூக்கத்தில் என்னடா இத்தனை
சிரிப்பென

கேட்டு என் அன்னை எனைத்
தட்டி எழுப்பினுர்;

அத்தனையும் கனவுதானு
ஆயினுமென் சுவைத்தேனே

பயனும் உண்டே சிந்தித்தால்
என்றெண்ணிச் சென்றேன்

பொழுது புலருமுன் எழுந்துசென்ற
பொற்கொடியின்,

விற்புருவம் விழி மலர்கள்
கனி இதழைக் காணத்தானே.

பிள்ளை மனம்

[சி. என். ஏ. பரிமளம்]

“சோலையகத்தினுள் அந்தக் கார் நுழைந்து ‘போர்டிகோவில்’ வந்துநின்றது! திரையுலகத்தாரகை நளினாதேவி காரிலிருந்து இறங்கினாள்!! அவள் பின், காரியதரிசி செட்டியாரும் இறங்கினார். அவள் கணவர் ராஜப்பாவும், அவள் வேலைக்காரி வள்ளியம்மையும் வரவேற்றார்கள். ஆனால் அவள் கண்கள் தன் மகள் மீனாவைத் தேடின......

மீனா இன்னும் கல்லூரியிலிருந்து வரவில்லை யெனத் தெரிந்துக்கொண்டாள். நேராக, தன் அறைக்குச் சென்று கட்டிலில் அமர்ந்தாள். சற்று முன்னர் நடந்த நிகழ்ச்சி அவள் மனப்பாரத்தை மிகவும் குறைத்திருந்தது. அவள் மகள் இந்த நிகழ்ச்சியைக் கேட்டால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவாள், என்று அவளுக்குத் தெரியும். சற்று நிம்மதியாகக் கண்ணை மூடிக்கொண்டாள்.

அவள் மகள்-மீனா-அவள்தான் அவளுக்கு உயிர்! எந்த நேரமும் தன் மகளைப்பற்றிய சிந்தனைதான் அவளுக்கு. எவ்வளவு புகழும் பாராட்டும் கிடைத்த பொழுதும், நிம்மதியில்லை. காரணம், அவள் மகள் மீனா தன்தாய் நடிகையாக இருப்பதை விரும்பவில்லை. அதற்குக் காரணம் அவளுக்குத் தெரியும். அவள் கல்லூரி செல்லும் நேரங்களில்–அதாவது அவள் வெளி உலகத்தை சந்திக்கும்போது அவள் காதில் விழும்படி பலர் பேசுவது--அவள் நடிகையின் மகள் என்பதால் அவள்மீது வீசப்படும் கேலிக் கணைகள், அந்த இளம் மனதை எவ்வளவு வாட்டும் என்பதை நளினா அறிவாள்.

என்ன செய்யமுடியும்! நிற்பது பனை மரத்தின்கீழ்! அவள் இருப்பது சினிமா உலகம்!! ஆனால் அவள் செய்த குற்றத்திற்கு அவள் மகள் என்ன செய்வாள்? இந்தப் பொல்லாத உலகம் அவள் மகளை ஏன் தூற்றுகிறது!

நடிகையின் மகள் என்பதாலா?

அவள் கணவனைப்பற்றி நினைத்துக் கொண்டாள். ராஜப்பா அவளுக்குக் கிடைத்த பெரும் புதையல்! அவளது மனம் கோண அவர்இதுவரை நடந்ததில்லை. வெளி உலகத்தைப்பற்றி அவர் கவலைப்பட்டதில்லை. அவருக்குத்தெரியும் தன் மனைவி எவ்வளவு தங்கமானவள் என்று! அவரைக் கணவனாகப் பெற தான் பெரும் புண்ணியம் செய்ததாக நளினா எண்ணினாள்;



“அம்மா, காப்பி சாப்பிடுங்கள்.”

வள்ளியம்மையின் குரல் கேட்டு நளினா எழுந்தாள்.

“வள்ளி, இன்று நான் எவ்வளவு நிம்மதியாகவும் குதூகலமாகவும் இருக்கிறேன் தெரியுமா?”

“அம்மா நீங்கள் திரையுலகத்தைவிட்டு விலகியது தெரிந்தால், மீனா எவ்வளவு மகிழ்ச்சியடைவாள்!”

“வள்ளி நான் திரையுலகை விட்டு விலகியது அவளுக்காகத்தானே; அதுசரி, நாகுவும் இன்னும் வரவில்லையா?”

“மீனாவும், நாகுவும் ஒன்றாகத்தானே வருவார்கள். நேரமாகிவிட்டது, நான் போய்ப் பார்க்கிறேன். நீங்கள் காப்பி சாப்பிடுங்கள்.”

அவள் போய்விட்டாள்.

வள்ளியை, நளினா வேலைக்காரியாக நடத்தியதில்லை. சொந்தத் தங்கையாகவே எண்ணினாள். வள்ளியின் பெண் நாகுவை தன் பெண்ணாகவே கருதினாள். அவளைக் கல்லூரியில் படிக்கவைப்பதும் அவள் தான்! ஆனால் நாகுவைப் பார்ப்பவர்கள் வள்ளியின் பெண் என்றே சொல்லமாட்டார்கள். மீனாவையும் நாகுவையும் பார்ப்பவர்கள், இருவரும் நளினாவின் பெண்கள் என்றே நினைப்பார்கள்! நாகுவுக்கும் வள்ளியம்மைக்கும் உள்ள வேறுபாடு பகலுக்கும் இரவுக்கும் உள்ள வேறுபாடு!

அன்னை உள்ளத்தில் பகல்! நிறத்தில் இரவு!!

மகள் நிறத்தில் பகல்! உள்ளத்தில் இரவு!!

நூலைப்போல்சேலை இருக்கலாம் ஆனால் தாயைப்போல் பிள்ளை என்பது இவர்களைப் பொருத்த வரையில் பொய்த்துவிட்டது.

நாகு அழகானவள், மீனாவைவிட. மீனா அடக்கமானவள். நடையுடை பாவனைகளில் நாகுதான் நடிகையின் மகள்போன்றிருப்பாள். வள்ளியம்மைக்கு மீனாவிடம்தான் ஆசை அதிகம். நாகுவின் போக்கு அவளுக்குப் பிடிப்பதில்லை.

ஆனல் நளினவுக்கு, நாகு இளம் வயதினள், சிறிது துடுக்குத்தனம் இருக்கும், போகப்போக மாறி விடும்-மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை. வள்ளியம்மை நெஞ்சத்திலோ "ஐந்தில் வளையாதது?" என்ற கேள்வி.

✲

"அம்மா" என்று இரு குரல்கள் ஒரே நேரத்தில் ஒலித்ததைக் கேட்டு நளின தலை நிமிர்ந்தாள். மீனவும், நாகுவும், எதிரில் நின்றுகொண்டிருந்தார்கள்.

"அம்மா, சேதியறிந்தேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சி."

"மீன உன் மன நிறைவுக்காகத்தானே அதைச் செய்தேன்."

"பெரியம்மா, நீங்கள் இவள் விருப்பத்திற்காகக் கலைஉலக வாழ்வைத் துறக்கலாமா? என்றும் நம்மைக்

குறைகூறுவதற்கென்றே நான்கு பேர்கள் இருப்பார்கள். அவர்களுக்காக நம் வாழ்க்கைப் பாதையை மாற்றிக்கொண்டால் நாம் வாழ்க்கையை ரசிக்க முடியாது. நம் சமுதாய அமைப்புக்காக, கட்டுப்பாட்டுக்குள் நம் வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்வது எனக்குக் கட்டோடு பிடிக்காது."

"என்னடி நாகு, பெரிய வேதாந்திபோல் பேசுகிருய். நேரமாகிறது போய் காப்பி சாப்பிடுங்கள்."

சிறிது நேரத்தில் இருவரும் மாற்று உடையணிந்து கொண்டு வந்தார்கள். நளின இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள். நாகு மீனவைவிட அழகுதான்.

தன் மகள் மீன-தான் வீட்டிலிருப்பதுபோல் இருந்தாள். ஆனல் நாகுவோ தான் படப்பிடிப்பு நிலையத்தில் இருப்பதுபோல் இருந்தாள்.

"அம்மா நாங்கள் இருவரும் கடற்கரைக்குச் சென்று வருகிறேம்" என்று சொல்லிவிட்டு இருவரும் பறந்தனர்-காரில்.

✲

கடற்கரையில் அவர்கள் வழக்கமாக அமரும் இடத்தில் சென்று அமர்ந்தனர். இருவரும் சேர்ந்து அமர்ந்து பேசுவது என்பது அபூர்வம். நாகு தன் காதலனைச் தேடிச் சென்றுவிடுவாள். மீன தனியாக அமர்ந்திருப்பாள். இன்று நாகுவின் காதலன் வரவில்லை போலும். அதனல் இருவரும் ஒன்ருக அமர்ந்து பேசலாயினர். நாகுவின் காதலனைப்பற்றி மீனவுக்கு ஒன்றும் தெரியாது. நாகு பலரிடம் சேர்ந்து சுற்றுவதாக, மீனவுக்கு சேதி வந்தது. நாகு மனநிலையைப் பற்றி அவளுக்குத் தெரியும். ஆனல் அதை அவள் வீட்டில் எவரிடமும் சொன்னதில்லை. மீனவுக்கு, நாகுவின் எண்ணம், போக்கு எதுவுமேபிடிப்பதில்லை. ஆனல் அவள் நாகுவை வெறுத்ததில்லை. அப்படி ஒரு பாசம்.

"என்ன நாகு, இன்றுஉன் காதலர் வரவில்லையா?"

"மீன, ஆண்களை நம்புவது பேதமை என்று உன்னிடம் நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். காதல் என்பதும் பொய்."

"நாகு, காதலித்துத் திருமணம் செய்துகொள்பவர்களை நாம் பார்க்கவில்லையா?"

"மீன, காதல் என்பதற்குப் பொருள் வெளி அழகைக் கண்டு மயங்குவதல்ல. உள்ளத்து அழகுக்கு முதலிடம் கொடுப்பதுதான் காதல். அந்தக் காதல் இப்போது இல்லை. வெளி அழகைக் கண்டு மயங்குவதுதான் இன்றைய காதல். சுருக்கமாகச் சொன்னல் காமம்தான் இன்றைய காதலாக இருக்கிறது. நாம் ஏட்டில் படிக்கும் காதல் எல்லாம் நம் முன்னேர்கள் காலத்தில்-அதாவது இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்திருக்கலாம். அப்படியே, இந்தக் காலத்தில் உண்மையாகக் காதலிப்பவர்கள் எவராவது இருந்தால் அவர்களுக்குக் காதலித்துத் திருமணம் செய்துகொள்ளும் துணிச்சலும், சூழ்நிலையும் அமையாது. நாகரீகம் வளரவளர காதல் என்ற சொல்லுக்கே பொருள் இல்லாமல் போகிறது. சினிமாவில்தான் 'காதலன்' 'வில்லன்' என்ற பாத்திரங்களைப் பார்க்கலாம். வாழ்க்கையில் எல்லோரும் 'வில்லன்கள்'தான்."

"நாகு, நீ சொல்வதை முழுதும் நான் எடுத்துக் கொள்ள முடியாது. நீ சொல்வதுபோல் ஒருசாரார் இருக்கலாம். யாவரும் அப்படியிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆனல் எனக்குக் காதலித்து திருமணம் செய்துகொள்வது என்பது பிடிக்காத ஒன்றுதான். காதலித்துத் திருமணம் செய்துகொள்வதால், இருவருடைய மனப்பான்மையும் ஒத்துப் போகிறது. பிறகு வாழ்க்கை சுவையாக அமையும் என்ற வாதத்தை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். ஒருவர் மனதை ஒருவர் புரிந்துகொண்டபோதும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருவரில் ஒருவருக்காவது இருந்தால்தான், திருமணத்திற்குப் பிறகு வாழ்க்கை சுவையாக அமையும். ஆனல் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருவரில் ஒருவருக்கு இருந்தால் காதலித்துத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றில்லை. அவர்களுக்குப் பெரியவர்கள் திருமணம் செய்துவைத்தால்கூட வாழ்க்கை சுவை

யாக அமையும். அதாவது காதலிக்காமல்கூட திரு மணம் செய்துகொள்ளலாம்.''

"மீனு காதலித்துத் திருமணம் செய்துகொள்வ தால் நாம் நம் பாதையை மாற்றிக்கொண்டு வாழ்க்கை யைச் செவ்வனே நடத்தலாம். ஆனுல் நம் வீட்டுப் பெரியவர்கள் செய்துவைக்கும் திருமணத்தில், நமக்கு வரப்போகிறவரைப்பற்றி தெரியாது. அவர் குணம், அவர் போக்கு ஒன்றும் தெரியாது. அதாவது சினிமா பாஷையில் அவருக்கு நாம் புதுமுகம், நமக்கு அவர் புதுமுகம். இரண்டு புதுமுகங்களும் முதலில்தான் பணி வாக இருக்கும். சிறிது நாளில் பெரிய நடிகர்கள் சில ருக்கு உள்ள குணம் வந்துவிடும். காதலிக்காமல் திரு மணம் செய்து கொண்டால் முதலில் ஒருவரை ஒருவர் நேசிப்பர், ஒருவர்மேல் ஒருவர் அன்பைப் பொழிவர். முதலில் வாழ்வில் பாலின் சுவை-நாளாகும்-புளிக்கும்.

"நாகு, கேள்விகள் கேட்கக் கேட்க பதில்கள் வந்துகொண்டிருக்கும். பதில்கள் வரவர கேள்விகள் எழுந்துகொண்டிருக்கும். இதுதான் வாழ்க்கை. காத லித்துத் திருமணம் செய்தாலும், காதலிக்காமல் திரு மணம் செய்தாலும், இரண்டிலும் நிறை, குறை இரண்டும் இருக்கும், அதற்காக......?''

"அதனுல்தான் மீனு நான் சொல்கிறேன் திரு மணமே செய்துகொள்ளக் கூடாதென்று! நாம் நினைத்தபடி நம் வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டும். எப்போதுமே ஒரு கட்டுப்பாட்டுக்குள் வாழக்கூடாது. வாழ்க்கையை முழுவதும் அனுபவிக்க வேண்டும்.''

"நாகு, என்ன முட்டாள்தனமாகப் பேசுகிருய்.: நீ பேசுகிற வாழ்க்கைத்தத்துவம், ஆண்களுக்கு வேண்டு மானுல் ஒருவேளை பொருந்தலாம். பெண்களுக்கு - நம் நாட்டுப் பெண்களுக்குப் பொருந்தாது. ஆண்களுக் கும், பெண்களுக்கும் உடற்கூறுபாட்டில், இயற்கை யால் ஏற்படுத்தப்பட்ட வேறுபாட்டின் விளைவு அது. நாகு, நாம் விளையாட்டாக பேச ஆரம்பித்து விபரீதத் தில் கொண்டுபோய் விட்டுவிட்டது. என் மனமே சரி யில்லை. நேரமாகிவிட்டது நாம் கிளம்புவோம்.''

வீட்டிற்குச் செல்லும் வழியெல்லாம் மீனுவுக்கு நாகுவைப்பற்றிய கவலைதான். அவள் எண்ணங்கள் அவள் மனதில் இருந்து எப்படிக் கொட்டின. அவளைப் பற்றி கேள்விப்பட்டதெல்லாம் உண்மை என்பதற்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும். அவள் வாழ்க்கை யில் வேகமாக சென்றுகொண்டிருக்கும் பாதையைப் பற்றி நினைத்தாலே பயங்கரமாக இருக்கிறது. அவள் இரவு நேரங்களில் நடக்கும்-ஆண் பெண் சேர்ந்து ஆடும் நடனங்களுக்குச்செல்கிருள் என்பதும் உண்மை யாகத்தான் இருக்குமோ? இப்படி எல்லாம் எண்ணிக் கொண்டே மீனு கலங்கிப் போனுள்.

*

"சேகர், சொன்ன நேரத்திற்கு நான் வந்துவிட் டேன். எத்தனை மணிக்கு விருந்து ஆரம்பம்.

நாகு, இன்னும் சிறிது நேரத்தில் விருந்து ஆரம்ப மாகிவிடும்.''

"ஹலோ சேகர்'' என்ற குரல் கேட்டு சேகர் திரும்பிப் பார்த்தான். அவனுடைய நண்பன் குமார். அவர்கள் அமர்ந்திருந்த மேசைக்கு அருகில் வந்தான்,

சேகர், குமாருக்கு நாகுவை அறிமுகப்படுத்தினுன் —நடிகை நளினுதேவிக்கு நெருங்கிய சொந்தமென்று.

குமார், சேகரை அழைத்துக்கொண்டு வெளியே சென்ருன். குமார், நடிகை நளினுதேவியின் வீட்டில் இருக்கும் செட்டியாரின் மகன்.

சற்று நேரத்திற்கெல்லாம் சேகர் திரும்பிவந்தான். அவன் முகம் கறுத்திருந்தது. சேகர், நாகுவை அழைத் துக்கொண்டு வெளியே கிளம்பிவிட்டான்,

"நாகு, உண்மையைச் சொல் நீ யார்?''

நாகுக்குப் புரிந்துவிட்டது.

"இதென்ன கேள்வி நான் ஒரு பெண்''

"ஆம் தவறிதான் பிறந்துவிட்டாய். நீ பெண்ணு அல்லவா என்பதல்ல கேள்வி, நீ யாருடைய பெண் என்பதுதான் கேள்வி.''

"..............''

"நீ வேலைக்காரியின் பெண்தானே.''

"..............''

"......உனக்கு வெட்கமாக இல்லை. நடிகைக் குச் சொந்தமென்று சொல்லிக்கொண்டு போலி வாழ்க்கை நடத்திக்கொண்டா இருக்கிருய். என்னைப் போல் பெரிய இடத்து ஆட்களை மயக்கத்தானே இந்த வேஷம்.''

அவன் சென்றுவிட்டான்.

நாகுவுக்கு அவன்மேல் கோபம் இல்லை. இதோ இவன் மூன்ருவதுஆள்—இந்தக் காரணத்தைச் சொல்லி விலகிப்போவது.

அவள் கோபம் எல்லாம் அவள் தாயின்மேல்தான்.

தன் சுதந்திர—சுகவாழ்வுக்கு நடுவில் நிற்பவள் தன் தாய்.



அன்றொருநாள், இப்படித்தான், ஒரு ஓட்டலில், சுகுமாரனுடன் அமர்ந்திருந்தாள். எதிர்பாராமல் அவள் தாயும், நளினாவும் அதே ஓட்டலுக்கு வந்திருக்கிறார்கள். ஒரு சர்வர் வந்து, உங்கள் தாயார் அழைக்கிறார் என்று சொல்லிவிட்டுப் போனான். இவள் எழுந்து சென்றுவிட்டாள். அதற்குள் அந்த சர்வர் இவளைப் பற்றி சுகுமாரனிடம் சொல்லியிருக்கிறான். நாகு திரும்பி வருவதற்குள் அவன் எழுந்தே போய்விட்டான்.

அவளுடைய கோபமெல்லாம் தன் தாயின்மேல் திரும்பியது.

✽

"அம்மா........."

தன் மகள் அழைக்கும் தொனியில் இருந்தே அந்த பெற்றெடுத்த புண்ணியவதிக்கு தெரிந்துவிட்டது—அவள் கோபமாக இருக்கிறாள் என்று-

"அம்மா, நான் நிம்மதியாக வாழ்வது உனக்குப் பிடிக்கவில்லையா? உன்னால் என் வாழ்க்கையே பட்டுப் போகும்போல் இருக்கிறது."

"நாகு, என்ன பேசுகிறோம் என்றே புரியாமல் பேசாதே—ஒரு தாய், தன் மகளுக்கு கெடுதல் செய்வாளா, அல்லது செய்யத்தான் நினைப்பாளா? நான் இப்போது உனக்கு என்ன தீங்கு செய்தேன்."

"நீ என்னை மகளாய் பெற்றாயே அது குற்றம். என்னை மகள் என்று அழைக்கிறாயே அதுவும் குற்றம். உன்னால் என் சுகவாழ்வு கெட்டுப் போகிறது. சுருக்கமாகச் சொன்னால் நீ தான் என் வாழ்க்கைக்கு எதிரி."

"அம்மா இன்று உனக்குச் சொல்கிறேன். நீ எனக்கு அம்மா, இல்லை, நான் உனக்கு மகளில்லை. இன்றிலிருந்து நீ என்னை மகளே என்று அழைக்காதே. நான் உன்னை அம்மா என்று அழைக்கமாட்டேன். இது சத்தியம். இதை நீ மீறினால் நான் தற்கொலை செய்து கொள்வேன்."

வள்ளியம்மைக்கு ஒன்றுமே புரியவில்லை. இந்த உலகமே சுழல்வதுபோல் இருந்தது.

பத்து மாதம் சுமந்து பெற்றேன். என்னை, அவள் அம்மா என்று அழைக்கமாட்டேன் என்று சொன்னது கூட பரவாயில்லை. நான் மகளே என்று அழைக்கக் கூடாதென்றும் சொல்லிவிட்டாளே. கடவுளே, நான் என்ன பாபம் செய்தேன், ஒரு மகள், தன் தாயைப் பார்த்து, மகளே என்று நீ அழைக்காதே, அம்மா என்று நான் உன்னை அழைக்கமாட்டேன் என்று சொல்வது என்னைத் தவிர எந்த 'புண்ணியவதி'க்கும் கிடைக்காத "பாக்கியம்." இதைக் கேட்டுக்கொண்டும் நான் ஏன் உயிர்வாழ வேண்டும். இதைக் கேட்டுக் கொண்டும் நான் உயிருடன் இருக்கிறேன் என்றால் என் மகளைவிட—இல்லை, இல்லை நாகுவைவிட நான் தான் கல்மனம் படைத்தவள். வள்ளியம்மை மயக்கத்துடன் கீழே சாய்ந்தாள்.

✽

"யார் அது, மீனாவா? நான் நாகு பேசுகிறேன். இங்கு 'ஹோட்டல் பார்க்'கிலிருந்து பேசுகிறேன், இங்கு நீ உடனே கிளம்பி வந்தால் இங்கிருந்து நாம் இருவரும் சினிமாவுக்குச் செல்லலாம். அந்தப் படம் இன்று கடைசி. உடனே புறப்பட்டு வா."

நாகு போனை வைத்துவிட்டாள். மீனா உடனே கிளம்பிவிட்டாள். மீனா ஓட்டலின்முன் இறங்கியதும் நாகு அவளை அழைத்துக்கொண்டு காப்பி சாப்பிட்டு விட்டுப் போகலாம் என்று ஓட்டலினுள் நுழைந்தாள். இந்த ஓட்டலினுள் நமக்குத் தெரிந்தவர்கள் வந்து தங்கியிருக்கிறார்கள் அவர்களைப் பார்த்துவிட்டு போகலாம் என்று சொல்லி ஒரு அறையை நோக்கி அழைத்துச் சென்றாள்.

மீனாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. நாகுவுக்கு பேச்சு ஏன் தடுமாறுகிறது? கால்கள் ஏன் பின்னுகின்றன? கண்கள் ஏன் சிவந்து இருக்கின்றன? இருவரும் அறையினுள் நுழைந்தனர். அந்த அறையினுள் இருவர் அமர்ந்திருந்தனர். அவர்களும் நாகுவின் நிலைமையிலேயே இருந்தனர். ஒரு மேசையின்மேல் மதுபான வகைகள் வைக்கப்பட்டிருந்தன. மீனாவுக்கு தன் இக்கட்டான நிலைமை புரிந்துவிட்டது! அத்துடன் நாகு வாழும் வாழ்க்கையின் நிலைமையும் புரிந்துவிட்டது.

மீனா உடனே நாகுவை தள்ளிக்கொண்டு வெளியே வந்துவிட்டாள்.

"நாகு, சீ...நீ இவ்வளவு மோசமானவளா. இவ்வளவு தூரம் உன் வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டாயா. அடிப்பாவி அம்மாவும், சின்னம்மாவும் இதையறிந்தால் எவ்வளவு துன்பப்படுவார்கள். நீ கெடுவதோடு—அல்லாமல் என்னை வேறு இங்கு அழைத்து வந்தாயே!"

நாகு சாய்ந்தாள். அதற்குள் உள்ளிருந்து ஒருவன் வந்து தாங்கிக்கொண்டு சென்றான். மீனாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. நேராக வீட்டை நோக்கி ஓடினாள்

✽

"அம்மா!"

"என்னம்மா, மீனா இது. தலைவிரி கோலமாக ஓடி வருகிறாய்."

"அம்மா, நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. அதனால் ஓடிவருகிறேன். அம்மா என்னால் சொல்லக்கூட முடியவில்லை. நாகு ஒரு ஓட்டலில் இருக்கக்கூடாத ஆட்களுடன் இருக்கக்கூடாத நிலையில் இருக்கிறாள்.

"என்னம்மா சொல்கிறாய். எனக்கு ஒன்றுமே புரியவில்லையே."

"அம்மா, நாகு யாரோ இருவருடன் நன்றாக குடித்துவிட்டு ஒரு ஓட்டலில் தங்கியிருக்கிறாள். அவளை நீதான் மீட்டு அழைத்துக் கொண்டு வரவேண்டும்."

"மீனா நீ கவலைப்படாதே. வள்ளியம்மை கட்டிலில் படுத்துக்கொண்டிருக்கிறாள். டாக்டர் வந்து ஊசி போட்டார். அன்றொரு நாள் மயக்கம் வந்ததுபோல் இன்றும் மயக்கம் வந்திருக்கிறது. இன்னும் மயக்கம் தெளியவில்லை. நீ வள்ளியை கவனமாகப் பார்த்துக் கொள் நான்போய் அவளை அழைத்து வருகிறேன்."

✽

445

Grams "YESYES" Phone No. 53

அன்பன்,

A. [illegible],

A. [illegible],

A. [illegible].

S. PRAKASAM & SONS

SILKS & SAREES

27, METTU STREET, KANCHEEPURAM.

"நாகு, நாகு கதவைத் திற."

கதவு திறக்கப்பட்டது. என்ன கொடுமை. என்ன காட்சி அது. நாகு விரசமான நிலையில். நாகுவின் உடைகள் அவள் உடலைவிட்டு நழுவிக்கொண்டிருந்தன.

"நாகு என்ன இது? அடிப்பாவி, எந்த நிலையில் உன்னை நான் பார்க்கிறேன். உன் தாய் அங்கு மயங்கி விழுந்திருக்கிறாள். நீயும்தான் 'மயங்கி' விழுந்திருக்கிறாய். ஐயா, உங்களுக்கு இது நன்றாக இருக்கிறதா. அவளோ சிறிய பெண் அவளைக் கொண்டு வந்து இப்படி..."

ஒருவன் உளறினான்.

"யாரது? ஓ...நளினாதேவியா! நீ எங்கு இங்கு வந்தாய். உனக்கு இந்த சூழ்நிலை ஒன்றும்புதிதல்லவே. என்னமோ வேஷம் போடுகிறாயே. இதுகூட படப்பிடிப்பு என்று நினைத்தாயா என்ன?

"அடப்பாவிகளா, இப்போது நீங்கள் இங்கிருந்து போகப்போகிறீர்களா அல்லது போலீசைக் கூப்பிடவா!"

"போலீசையா, கூப்பிடேன். இந்த நிலையில்—உன்னையும் எங்களையும்-உன் சொந்தக்கார பெண்ணையும் பார்த்தால் என்ன நினைப்பார்கள். தாராளமாக போலீசைக் கூப்பிடு."

"அடப்பாவிகளா!"

"என்னடி வேஷம் போடுகிறாய். உன் சொந்தக்காரப் பெண்ணை இங்கே அனுப்பிவிட்டு. இங்கு வந்து கூச்சல் போடுகிறாய். இதுஎன்ன புதுவகை மோசடி?"

நளினா வெளியேவந்துவிட்டாள். அவன் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தான். காரில் ஏறிக்கொண்டு வீட்டை நோக்கிச் சென்றாள்.

✻

"வள்ளி கவலைப்படாதே. உன் உடம்பு குணமாகிவிடும். டாக்டர் சொல்லியிருக்கிறார்."

"அம்மா, எனக்கா? குணமாவதா! வள்ளி சிரித்தாள். அவள் மனம்—குணமாக வேண்டியது—குணமாக்க—வேண்டியது நாகுவின் உள்ளம் என்று எண்ணியது.

"வள்ளி, உன் மனதில் உள்ளதை எங்களிடம் சொல்லக்கூடாதா?

"அம்மா அந்தப் பெண் வீட்டை விட்டுச் சென்று எத்தனை மாதமாகி விட்டது. விளையாட்டுப்போல் மூன்று மாதமாகிவிட்டது. அவள் என்ன செய்கிறாளோ, எப்படிச் சாப்பிடுகிறாளோ"

"வள்ளி நீ கவலைப்படாதே. நான் எப்படியாவது அழைத்து வருகிறேன்.

நளினாவும், மீனாவும் அந்த அறையைவிட்டு வெளியே வந்தனர்.

"அம்மா, அவர்களுக்கு நாகுவைப் பற்றிய கவலைதான் நோயில் தள்ளிவிட்டது. அந்தப் பெண் வராமல் அவர்கள் பிழைக்கமாட்டார்கள், நான்கூட அவளை பார்க்க முடியவில்லை. முடிந்தால் எப்படியாவது அவளை அழைத்துவருவேன்.

"மீனா அவளை எங்கே போய் தேடுவது. எப்படி அழைத்து வருவது. அவளும் அவள் பழக்கங்களும் ...."

மீனா கடற்கரையில் காரை நிறுத்திவிட்டு உட்கார்ந்திருந்தாள். அந்த உருவம்! யார் அது?

"நாகு, இதென்ன கோலம். உன்னை எனக்கு அடையாளமே தெரியவில்லை. அழுக்கேறி, கிழிந்த உடை. மெலிந்த உடல்—குழிவிழுந்த கண்கள். ஐயோ! என்ன கொடுமை இது."

"மீனா, என்னைப் பார்த்தாயா. எனக்கு வந்த நிலைமையைப் பார்த்தாயா. எனக்கு இதுவும்வேண்டும் இன்னமும் வேண்டும். உங்கள் புத்திமதிகளை கேட்காமல் இருந்ததற்கு நல்ல பாடம். எனக்குக் காசநோய். எனக்கு காசநோய் வந்ததும் என்னுடன் ஒட்டி இருந்த உலகம் என்னிடமிருந்து வெட்டிக்கொண்டது—இல்லை என்னை வெட்டிவிட்டது. அம்மா, பெரியம்மா யாவரும் எப்படி யிருக்கிறார்கள்."

"எல்லோரும் சுகமாகத்தான் இருக்கிறார்கள். வள்ளியம்மாவுக்குத்தான் சிறிது உடம்பு குணமில்லை. உன்னைப் பார்க்கவேண்டும் என்று ஏங்குகிறார்கள்."

"மீனா, என் அம்மாவின் முகத்திலும், பெரியம்மாவின் முகத்திலும் நான் எப்படி விழிப்பேன். ஐயோ, என்னை தயவுசெய்து அழைக்காதே. அவர்கள் என்னை இந்த நிலையில் பார்க்க வேண்டாம். என்னை இந்த நிலையில் பார்த்தால் அவர்கள் இன்னும் துன்பமடைவார்கள். தயவுசெய்து என்னை அங்கு அழைக்காதே."

"நாகு, நீ எங்கே தங்கியிருக்கிறாய் அதையாவது சொல்."

"வேண்டாம் மீனா, வேண்டாம். அதை நீ தெரிந்து கொள்ள வேண்டாம். நாளை இதே நேரத்திற்கு நான்

மனைவி:- கூந்தல் வளரும் தைலம், உயர்தரமானது

கணவன்:- எனக்கு ஏன்?

மனைவி:- உங்களுக்கு அல்ல! ஆபீசில் வேலை செய்கிறாளே அவளுக்கு தலைமயிர் கொட்டுகிறதுபோலிருக்கிறதே அவளுக்கு. உங்கள் கோட்டில் நிறையக்கிடந்தது; பார்த்தேன்.

இதே இடத்திற்கு வருகிறேன். அம்மாவின் உடம்பு எப்படி இருக்கிறது என்று சொல் நான் வருகிறேன்.'' மீனு அவள் உருவத்தையே பார்த்துக்கொண்டு நின்ருள். என்ன கொடுமை இது.

*

''வள்ளி, இப்போது எப்படியம்மா, இருக்கிறது. டாக்டருக்கு போன் செய்யவா?''

''அம்மா, டாக்டருக்கு போன் செய்து பயனில்லை நான் இன்னும் சிறிது நேரத்தில் இறந்துவிடுவேன். எப்படியாவது என் பெண்ணை அழைத்து வாருங்கள். அவள் என்னை அம்மா என்று அழைக்காவிட்டாலும், நான் அவளை மகளே என்று வாயாரா அழைத்துவிட்டு நெஞ்சாற சாகிறேன்.''

''மீனு இப்போது என்னம்மா செய்வது?''

''அம்மா எனக்கு அவள் இருக்கும் இடம் தெரியும், நான் அவளை அழைத்து வருகிறேன்.''

மீனு காரில் ஏறிக்கொண்டு கடற்கரையை நோக்கிச் சென்ருள். என்ன முட்டாள்தனம் செய்தோம். அவள் இருப்பிடத்தைக்கூடத் தெரிந்துகொள்ள வில்லையே! அவள் இன்னமும் கடற்கரைக்கு வராமல் இருந்தால்...!

நாகு அங்கு நின்றுகொண்டிருந்தாள்.

''நாகு, காரில் ஏறு. அம்மா மயக்கமாய் இருக்கிருர்கள். நிலைமை மோசமாக இருக்கிறது.'' இருவரையும் ஏற்றிக்கொண்டு கார் பறந்தது.

''அம்மா, நாகு வேகமாக ஓடினுள் அங்கே...!''

அவள்தாய்–பிணமாக!!

''அம்மா, அம்மா என்னை விட்டுவிட்டுப் போய் விட்டீர்களா அம்மா. என்னை இப்படிப் பழிவாங்கிவிட்டீர்களே அம்மா; இப்போது உங்களைப் பார்த்து அம்மா, அம்மா என்று கதறுகிறேன். ஆனல் நீங்கள் உயிருடன் இருக்கும்போது, அம்மா என்று அழைக்க மாட்டேன் என்று சத்தியம் செய்தேன். உயிருடன் இருக்கும்போது கூப்பிடாதவள் இப்போது—தாங்கள் இறந்தபிறகு அழைக்கிறேன்.

இவள் என்ன அம்மா என்று அழைப்பது என்று போய்விட்டீர்களா, அம்மா!

வள்ளியம்மை வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு இடுகாடுநேக்கிச் சென்றுகொண்டிருந்தாள்–'பிணமாக'. மகள்—நாகு, அம்மா, அம்மா என்று கதறியபடி நின்றிருந்தாள் 'நடைப் பிணமாக!

விற்பனையாகிறது

அண்ணுவின்

கருத்தோவியங்கள்

பாவையின் பயணம் ரூ. 1-50

அரசாண்ட ஆண்டி ரூ. 1-50

மதுரைக்கு டிக்கட் இல்லை ரூ. 2-00

கிடைக்குமிடம்:

பரிமளம் பதிப்பகம்,

சின்ன காஞ்சிபுரம்.

வழுக்கி விழுந்தவர்கள்

"போடா! சோமாரி! என்கிட்டவே "டூப்"பா! எவண்டா காலே ஒடிச்சுது, சொல்லுடான்னு ...."

"அடச்சே! நெஜத்தைச் சொன்னு நம்பாம, குத்திக்கிளறிக் கேக்கறியே. வழுக்கி விழுந்துட்டதாலே ஏற்பட்டது தாண்டா இது......"

"யாரடா நம்பச் சொல்றே...டேய்! சும்மா சொல்லுடா தம்பி......',

"உன்னேடு மாரடிக்க நம்மாலே முடியாதுடோய் ......சொன்னு நம்புவயா, பெரிய 'கிராஸ்' போடிறியே வக்கீல் மாதிரி. இரண்டு நாளா நல்ல சாப்பாடு கிடையாது......களைப்பு...ஒரு இடம் குறிபார்த்துவைத்திருந்தேன்...நாலடிதான் உயரம். சுவறு...சும்மா ஒரு எட்டு எட்டி மேலே தாவிட்டேன்......குத்துக்கால் போட்டு உட்கார்ந்து ஒரு நோட்டம் பார்த்தேன்...சாப்பாடு இல்லாத களைப்பு, ஒருமாதிரியா இருந்துது மயக்கம்போல; கால் தன்னுலே வழுக்கிவிட்டது; கீழே பாரேன் கருங்கல்லு, சனியனுட்டம்... முட்டி முகம் எல்லாம் இரத்த காயம்..."

"; அடப் புல்தடுக்கி! நாலடிக்கேவா இந்தக் கதி! காது வரைக்கும் வாய் இருக்குது..."

"உன்னேட சொல்றதுக்கு என்னடா... இப்ப பழைய மாதிரி வலிவு, தெம்பு, தைரியம் இருக்கறதில்லே..."

"கிழமாயிட்டயா! வயது என்னடா உனக்கு? ஒரு நாப்பது இருக்குமா?"

"அவ்வளவுதான் இருக்கும்... வயசு ஆயிடலேன்னுகூட இப்ப எனக்கு பழய தெம்பு இல்லே... அவளுக்கு போன மாசம்தான் மூணுவது பொறந்துது ராஜாக்குட்டி மாதிரி... ஆம்பளேப் பையன்... இவன் பொறக்கற வேளையாவது உனக்கு நல்ல புத்தி பொறக்கணும்னு வேறே சொன்னு என்னேட வூட்டுக்காரி......மனசு குழம்பிப்போச்சு. முன்னே ஒண்டிக்கட்டை...... என்ன ஆனுலும் பரவாயில்லேன்னு ஒரு தைரியம்... இப்ப நமக்கு ஏதாச்சும் ஆயிட்டா அவ கண்கலங்குவா, குடும்பம் அவதிப்படும், நாலுபேர் முகத்திலே எப்படி அவ முழிப்பா... அதை எல்லாம் எண்ணிக்கொண்டா மனசு 'பகீல்'னு ஆயிடுது. அதனுலே இந்தத் தொழிலுக்கே முழுக்குப் போட்டுடவேணும்னு ஒரு முடிவுக்கே வந்துட்டேன்..."

"அடச்சீ! பயந்தாங்கொள்ளி! போ! போ! எதாச்சும் குழைச்சிப் போடு காயம்பட்ட இடத்துக்கு. இந்தா எட்டணு இருக்கு, எதாச்சும் வாங்கித் தின்னு... ஏய்! என்னடா மடியிலே பணத்தை முடிச்சுப்போட்டுக் கொள்றே..."

"கொழந்தைகளுக்கு எதாச்சும் வாங்கிக்கிட்டுப் போய்க் கொடுக்கணும்பா...அப்பா வரட்டும், அது வாங்கிகிட்டு வருவாரு, இது வாங்கிகிட்டு வருவாருன்னு அவ சொல்லி அதுகளைச் சமாதானப் படுத்திகிட்டு இருப்பா...,....நான் வரட்டுமா..."

"போ! போ! பார்த்து நடந்து போ! வழியிலே வேறே வழுக்கி விழுந்துவிடப் போறே........."

O

"போருத வேளேங்க, போருத வேளே... இத்தனே காலமா ஏறலியா இறங்கலேயா... ஒரு நாளும் நேரிட்டதில்லேயே இதுபோல..."

"கல்லுசேறு தூக்கிகிட்டுமேலே கொண்டு போற சித்தாளுங்க சரியா வேலே செய்யணுமேன்னு, இப்படியா அன்ன நடை ஆமை நடை போடறதுன்னு சொல்லிகிட்டே ஏணியிலே ஏறினேன். பாதிதூரம் போயிருப்பேன், காலு வழுக்கிட்டுது, கட்டை மாதிரி விழுந்துட்டேன் ......பதறிப்போச்சுங்க வேலே செய்துகிட்டு இருந்ததுகளெல்லாம் ......"

"என்ன பதறிவிட்டாங்களோ மத்தவங்க இந்த மாதிரி எதுவும் ஆகக்கூடாதுன்னுதான் காலேயிலே பொறப்படறபோது சகுனம் பார்க்கச் சொல்றது......அந்தப் பேச்சை காதிலே வாங்கிக்கொள்ள மாட்டேங்கறிங்க...... இந்த கண்ருவியைஎப் படிச் சகிச்சிக்கச் சொல்றிங்க......கீழே விழுந்ததும் மொதலாளி வந்து பார்த்தாரா? என்ன சொன்ணுரு?"

"நல்ல கேள்விகேட்டயே...நல்லவேளேயா அவர் கண்ணிலே படலே......பட்டிருந்தா ......டேய் சின்னுன், உனக்கு வயசாயிடுச்சுன்னு தலேப்பாடா சொன்னு கேட்டாத் தானே... இனி நீமேஸ்திரி வேலேக்கு இலாயக்கில்லே, வேறே

மேஸ்திரியைப் பார்த்துக்கொள்றேன்...நீ கீழேவிழுந்து உயிருபோயிட்டா, என் தலைக்குத் தீம்பு வரும், இந்தா உன்னோட பணம் இருவது, போ! போ! நாளையிலே இருந்து, உன் வேலையை பொன்னன் பார்த்துக் கொள்ளட்டம்னு சொல்லி, நம்ம வயத்திலே மண்ணைப் போடுவானே மனஷன்..."

"மாடா உழைக்கறிங்க... வஞ்சகம் துளிக்கூட இல்லாம..."

"ஆமா... மாடு எலும்புந் தோலுமாயிட்டா அடிமாட்டுக்குத்தானே துரத்தறுங்க...அந்தக்கதிதான் நமக்கும்..."

"எதை எதையோ நினைச்சி மனதைக் கொழப்பிக் கொள்ளாதிங்க... ஏங்க! கேட்கறனேன்னு கோபம் செய்துகொள்ளாதிங்க... நெஜத்தைச் சொல்லுங்க, கண்பார்வை கொஞ்சம் மட்டுதானே உங்களுக்கு..."

"பழைய ராமாயணத்தை எடுத்துக்கிட்டயா... உன்னை எனக்கு முடிக்கக்கூடாது என்கிற கெட்ட எண்ணத்தாலே அந்தப் பட்டாபி கட்டிவிட்டான்கதை, எனக்கு மாலைக்கண்ணுன்னு... உங்க அப்பன்கூட முதலிலே நம்பிட்டாரு... பிறகு நான், சிரிசிரின்னு சிரிச்சி விஷயத்தை விளக்கினபிறகுதான் உங்க அப்பாருக்குப் பயம் போச்சி... கண்ணுக்கு ஒரு குறையும் கிடையாது எனக்கு..."

"என் வயத்திலே பால் வார்த்தீங்க... காலையிலே நல்ல டாக்டரிடம் காட்டி கட்டுப்போடுங்க... நாலு நாளிலே குணமாயிடும்"

"தலைக்குத் தீம்பு தேட அதைவிட வேறே வேண்டாம்... பைத்யக்காரப் பொம்பளே! எதையாவது ராத்திரிக்குத் தடவி, கட்டுபோட்டு, காலையிலே பல்லைக் கடிச்சிகிட்டு வேலைக்குப் போயாகணும்... எழுந்திருக்க முடியல்லேன்னு தீர்ந்தது, மனஷன் நம்மைச் சீட்டைக் கிழிச்சிடுவான்".

"இந்த வலியைப் பொறுத்துகிட்டு வேலைக்குப் போகணும்னு மனசு பகீல்னு இருக்குதுங்க..."

"உன் மனசு இருக்குது அதுபோல... முதலாளி மனசு எதுக்காகப் பகீல்னு ஆகப்போகுது..."

"நம்ம எழுத்து அப்படி. வேலைக்குப் போனுக்கூட உடம்பை அலட்டிக்கொள்ளாம இருங்க..."

"ஆகட்டும்! நீ எதுக்கும் போயி, நம்ம கோடி வீட்டிலே புதுசா ஒரு வைத்தியர் வந்திருக்கிறாராமே, அவரை கூட்டிகிட்டு வாயேன், காட்டுவம்..."

"இதோ கூட்டிகிட்டு ஓடியாந்துடறேன் ஒரு விநாடியிலே..."

O

"போடா, மடயா! இப்படியா ஓட்டை டின்களிலே எண்ணெயை ஊற்றி வைக்கறது... எவ்வளவு எண்ணெ பாழாகிப்போச்சி... இருக்குமேடா, பத்து இருவது ரூபா நஷ்டம்..."

"டின்னு ஓட்டை இல்லாங்க... எண்ணெயும் தன்னாலே ஒழுகிப்போகல்லே. நீங்க அவசரமா வந்ததாலே, எனக்கு விஷயத்தைச் சொல்லமுடியல்லை ... அதுக்குள்ளே நீங்க வழுக்கி விழுந்துவிட்டிங்க... ஏனுங்க! ரொம்ப வலிக்குதுங்களா... இந்தக் கோடி யிலே இருந்து அந்தக் கோடிக்குப் போயிட்டிங்களே கண்மூடி கண் திறக்கறதுக்குள்ளே..."

"ஏண்டா, காலை வைச்சதும் வழுக்கிட்டுதே! இங்கேதான் எல்லா இடமும் எண்ணெயாக்கிடக்குதே, எப்படிச் சமாளிக்கறது... நல்லவேளையா பீப்பாய்களை அந்தப்பக்கம் வைத்திருந்ததாலே அத்தோடு போச்சி. நீ ஒழுங்கா வேலை பார்க்கற இலட்சணமா இது. வலிக்குதான்னு கேட்டுவிட்டா என் உச்சி குளிர்ந்து போய்விடுமா... கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு, உன்னோட உருக்கம் உபசாரம் கிடக்கட்டும்; எதுக்காக இப்படி எண்ணெ இந்த அளவுக்குக் கீழே வழிந்து ஓடணும்..."

"ஓட்டையாலே கசியலிங்க......நானேதான் ஒரு அஞ்சாறு டின்கள்லே ஓட்டை போட்டு எண்ணெயை வழியவிட்டேன்..."

"அடப்பாவி! என் சொத்தை நாசமாக்கறதுன்னு தீர்மானித்துவிட்டயா.........டின்களிலே நீயேபொத்தல் போட்டயா..."

"போட்டதாலேதாங்க, நம்மசரக்கு-பிப்பாய்களுக்குக் கீழே இருக்கறசரக்கு–இன்ஸ்பெக்டர் கண்களுக்குப் படாதபோச்சு......வர இருந்த ஆபத்திலே இருந்து தப்பிக்கமுடிந்தது..."

"என்னடா என்னென்னமோ உளறிக்கொட்றே."

"உரக்கக் கூவாதிங்க. சிலோன் சரக்கு கீழே இருக்குதுங்களே பிப்பாய்க இருக்கிற இடத்துக்குக் கீழே..."

"ஆமா, இருக்குது அது எனக்குத் தெரியாதா... அதனாலே?..."

"எவனோ திருட்டுப்பய, இன்ஸ்பெக்டருக்கு 'வத்தி' வைத்துவிட்டிருக்கருன். நாலைந்து போலீசோடு வந்துவிட்டாரு, கிடங்கைச் சோதனை போடணும்னு...



பார்த்தேன்...உட்காருங்க...எதுக்கும் முதலாளிக்குப் 'போன்' செய்துட்டு வந்துவிடறேன்னு சொல்லிவிட்டு வந்தேன். திடீல்னு ஒரு யோசனை தோணிச்சி...... போலீசை இந்தப்பக்கம் வரவிடாமத் தடுத்தாகணும். மளமளன்னு குத்துக்கோலை எடுத்து அஞ்சாறு டின்களை ஓட்டைசெய்துவிட்டேன்...எண்ணெ குபுகுபுன்னு வழிய ஆரம்பிச்சுது. வாய்க்கால்போல வந்துது...இடம் பூரா ஒரே எண்ணெய்...வெளிப்பக்கம் சோதனையை முடிச்சிகிட்டு இந்தப் பக்கம் வந்தாரு......தரை முழுவதும் ஒரே எண்ணெய் மயம்......சேச்சேச் சேன்னு சொல்லிக்கொண்டே, இங்கே என்னய்யா இருக்குதுன்னு கேட்டாரு......இது அவ்வளவும் அனுமார் கோயில் அபிஷேகத்திற்கான எண்ணெய்னு சொன்னேன். ஒரே ஆத்திரம் அவருக்கு. ஏன்யா! இப்படித்தான் கோயில் கைங்கரியத்துக்கான எண்ணெயைப் பாழாக்கறதான்னு கேட்டாரு, கோபமா. கேட்டுவிட்டு, இப்படியும் அப்படியுமா பார்த்துவிட்டு, வெளியே போயிட்டாருங்க. இந்த எண்ணெதான் நம்மைக் காப்பாத்தி விட்டுதுன்னு சொல்லணும்...''

"அட அப்படியா! ஆபத்தான வேளையிலே உனக்கு இந்த யோசனை உதிச்சுதே அதைச் சொல்லு ......எண்ணெயிலே நடந்தா வழுக்கி விழுந்துவிடப் போகிறோம் என்கிற பயம் இன்ஸ்பெக்டருக்கு...அதனாலேதான் பிப்பாய்கள் இருக்கற பக்கம் சோதனை போடல்லே...''

"கோயில் அபிஷேகத்துக்கான எண்ணெய்ன்னு சொன்னதும் அவர் பயந்துவிட்டாருங்க......ஏன்னா, கோயில் அபிஷேகத்துக்கான எண்ணெயைக் காலாலே மிதிக்கக்கூடாது பாருங்க...பாவமில்லேயா! ......''

"ஆமாமாம்! நம்ம இன்ஸ்பெக்டருக்கு பக்தி அதிகம்; தெரியும்; உன்யுக்தி பரவாயில்லேய்யா......சரி, சரி; டின்களிலே உள்ள ஓட்டைகளை அடைத்துடு...... ஆகட்டும்...கீழே கிடக்கற எண்ணெயை ஒரு சொட்டு விடாம வழிச்சி எடுத்து தனியா ஒரு டின்னிலே போட்டுவை, சனீஸ்வரன் கோயிலிலே இலட்ச தீபமாமே, அதுக்கு நம்ம விலாசத்தின் பேர்லே அனுப்பிவை.........''

"ஆகட்டும்ங்க...வீட்டிலே இருந்து வேறே துணி சட்டை வரவழைக்கட்டுங்களா......''

"ஏன்! இதுக்கு என்னவாம். பரவாயில்லே...''

"வலி எப்படி இருக்குதுங்க, அடி பலமானதா இல்லிங்களே......''

"காலிலே இரத்தம் கசியுது; நெற்றியிலே வீக்கம் ....''

"உள்காயம் இருந்துவிடப் போகுதுங்க...உடனே கவனிக்க வேணும்......''

"டாக்டருக்கு ஒரு போன்போடு......பயந்துவிடப் போறாரு...சும்மா இலேசான காயம்தான்னு சொல்லு... எதுக்கும் உடனே வரச்சொல்லு. ஏன்யா! சிலோன் சரக்கு இராத்திரி போயிடுமேல்லோ...''

"ஆமாங்க...அந்த ஏற்பாட்டை நான் கவனித்துக் கொள்றேன்...நீங்க உடம்பைப் பார்த்துக்கொள்ளுங்க ...காலுக்கு ஒண்ணுமில்லிங்களே...''

"பரவாயில்லேய்யா!...எதுக்கும் ஒருவாரம் நர்சிங் ஹோமிலே இருக்கலாம்ன்னு பார்க்கறேன்''

ஏ! அப்பா!

சிலருக்குக் கிடைக்கும் வருவாயின் அளவு கேட்டால் ஏ! அப்பா. என்று கூறுகிறோம், ஆனால் இந்தச் சிலர் அந்த வருவாயை ஒரே தடவையில் பெற்றதில்லை.

ஒரே தடவையில், கேட்டவர் வியப்படையும் அளவு வருவாய் பெற்றவர்களும் உண்டு,

அமெரிக்காவில், ஒரு 'உயில்' வழக்கு. சிக்கல் மிகுந்தது. இந்த வழக்கை நடத்தி வெற்றி பெற்ற கீர்த்திமிக்க வழக்கறிஞர் கார்பீல்டு ஹேஸ் என்பவருக்கு அந்த வழக்குக்காகத் தரப்பட்ட கட்டணத் தொகை, 357,000 பவுன்களாம்!

அமெரிக்காவில் ஒரு பெரிய வணிகர்; சிக்கலான பிரச்னை அவருக்கு. சரி - அல்லது சரியில்லை, என்று ஒரே வார்த்தையில் பதில் கூறுங்கள் என்று மாக்ஸ் ஸ்டேர் எனும் வழக்கறிஞரைக் கேட்டாராம், பிரச்சினை விளக்கிக் கூறி,

வழக்கறிஞர், 'சரி' என்று பதில் அளித்தார், பிரச்சினையைப் புரிந்துகொண்டு.

அந்த ஒரு வார்த்தை சொன்னதற்கு அந்த வழக்கறிஞருக்கு வணிகர் 200 பவுன்கள் கட்டணம் கொடுத்தார்,

"தங்கமான யோசனேங்க. நானே சொல்லலாம்னு, வாலிப வயசல்ல பாருங்க. ஒருவாரம் என்னங்க, உடம்பு சரியாகறவரைக்கும் இருக்கறது. நம்ம உடம்புக்கு மிஞ்சியா, மத்தது......"

"ஒருவாரம் போதும்யா...இந்த வாரத்திலேதான் காலேஜ் நிதிக் கமிட்டிக் காரனுங்க, பணம் தண்டக் கிளம்பருனுக......உசிரை வாங்கிடுவானுங்க நம்மை. கூடச் சுத்தச்சொல்லி. இப்ப அந்தத் தொல்லே இருக் காது. நிம்மதியாச்சி......"

"டாக்டருங்க! மோடார் சத்தம் கேட்குது..."

○

மூன்றுபேர் வழிக்கு விழுந்துவிட்ட சம்பவங்களைத் தொடர்ந்து மூன்று நிகழ்ச்சிகள்.

முதலாவது நிகழ்ச்சி போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுத்துரை, மூன்று போலீஸ்காரர்களைக் கூப் பிட்டு உத்திரவு பிறப்பித்தது.

> கேடி கண்ணன் கொடுத்த உளவினலே கன்னக்கோல் குப்பன் நேற்று இரவு கலியப் பெருமாள் வீட்டுச் சுவற்றின்மீது ஏறி கீழே வழுக்கி விழுந்துவிட்டிருக்கிருன் என்று தெரி கிறது. உடலிலே காயம் ஏற்பட்டிருக்கிறது. உடனே போய் அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து கொட்டடியில் போட வேண்டும்.
>
> கலியப்பெருமாள் வீட்டு தோட்டச்சுவற் றிலே குப்பனுடைய கை அடையாளம் விழுந் திருக்கும். அதை போட்டோ படம் எடுத்துக் கொண்டு வரவேண்டியது.

இரண்டாவது நிகழ்ச்சி கட்டடக் காண்ட்ராக்டர் திண்ணயிரம், தம்முடைய காரியக்காரன் கொண்டய் யாவுக்கு எழுதி அனுப்பிய அவசரக் கடிதம்.

> நாளையிலே இருந்து மேஸ்திரி சின்னன் வேலைக்கு வரவேண்டியதில்லை. வேலையும் சுத்தமில்லை. ஆளுக்கு வலிவும் இல்லை: புத்தி யும் இல்லை. நேற்று ஏணியில் ஏறும்போதே கால் நடுக்கம் ஏற்பட்டு கீழே விழுந்துவிட் டான் என்று தெரிகிறது. இப்படிப்பட்டது களை வேலைக்கு வைத்துக்கொண்டால் நம்முடைய திட்டப்படி கட்டடம் பூர்த்தி யாகாது. அவனுக்குத் தரவேண்டியதைக் கொடுத்துவிட்டு, பொன்னனைமேஸ்திரியாகப் போட்டுக்கொள்ளவும். உடனே அவசரம்.
>
> திண்ணயிரம்.

மூன்ருவது நிகழ்ச்சி, "திருக்கோயில்" என்ற பத்திரிகையின் நிருபர், தமது பத்திரிகைக்குச் செய்தி அனுப்பியதுடன், 'தர்மதாதா' என்ற பத்திரிகைக்குத் தந்த (தனிக்கட்டணம் பெற்றுக்கொண்டு) விசேஷச் செய்தி.

> சிறந்த பக்திமானும் தர்ம சிரேஷ்டரும், பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவருமான, எண்ணெய் வியாபாரம் ஏகாம்பர பாரதியார் (ஜாதிப் பெயரை விட்டு விட்டு அனைவரும் இந்தியர் என்ற தேச பக்திக்காகத் தம்மு டைய ஜாதி, பாரதியார் ஜாதி என்று கூறிக் கொண்டவர்) அனுமார் கோயில் அபிஷேக சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது கால் வழுக்கிக் கீழே விழுந்துவிட்டார். ஆபத்து இல்லை என்ருலும் பாரதியார் (செட்டியார்) ஒரு வார காலமாகிலும் படுக்கையில் இருந்தாக வேண்டுமென்று டாக்டர் சுந்தரம் கண்டிப் பாகக்கூறிவிடவே, சுந்தரா நர்சிங் ஹோமில் சேர்க்கப்பட்டிருக்கிருர்.
>
> எனக்கு உள்ள ஒரே கவலை காலேஜ் நிதி சேர்க்கும் சிலாக்கியமான காரியத்திலே பங்கு எடுக்க முடியாமல் போய் விட்டதே என்பதுதான் என்று செட்டியார் (பாரதியார்) அவர்கள் நம் நிருபரிடம் சொன்னது மனதை உருக்குவதாக இருந்தது.
>
> எக்ஸ்ரே எடுக்கப்பட்டிருக்கிறது, அதுபற்றிய விவரம் நாளைய இதழில் வெளி வரும்.

★

பெர்ஷியன் கடிதங்கள்

பெர்ஷியாவில் எழுதப்பட்ட கடிதங்கள் அல்ல; தலைப்புதான் அவ்விதம். மாண்ட்டெஸ்க்யூ எனும் பிரன்ச்சு அறிவாளர் எழுதிய புத்தகம்.

பிரான்சு நாட்டைக் கண்டு, அங்கு உள்ள நிலைமைகளைப்பற்றி, பெர்ஷிய நாட்டு பிரயாணிகள் இருவர் பேசிக்கொள்வதுபோன்ற வடிவம்கொடுத்து மாண்ட்டெஸ்க்யூ எழுதிய புத்தகம், அந்த நாட்களில் ஐரோப்பாவின் அறிவாளர்களையே உலுக்கி விட்டது.

பிரன்ச்சு நாட்டு மன்னன், சீமான்கள், சீமாட் டிகள் ஆகியோரின் போக்கு குறித்து இந்த ஏட்டிலே நையாண்டி நடையில் எழுதப்பட்டிருந்தது. இந்த ஏட்டினைப் பெற்றுப் படித்தவர்களும் படித்தவர்கள் சொல்லக்கேட்டவர்களும், வயிறு குலுங்கச் சிரித் தது மட்டுமல்ல; இத்தகைய அரசு முறையை அழித்தாகவேண்டும் என்ற துடிப்பும் பெற்றனர்.

சுமார் சுப்பையா

“மணி என்ன இருக்கும்? நீ புறப்பட்டபோது?”

“சுமார் 11 மணி இருக்கும்ங்க...”

“எவ்வளவு தூரமய்யா, நீ போன இடம்”

“இருக்குமுங்களே, மூணு மைல் சுமாருக்கு”

“இப்ப என்ன மணி?”

“சுமார், 1 மணின்னு நினைக்கிறேனுங்க.”

முதலாளிக்குக்கோபத்தை அதற்குமேல் அடக்கிக் கொள்ள முடியவில்லை. “யார்யா சுத்த மண்டுகமா இருக்கறே. எதுக்குக் கேட்டாலும், என்ன கேட்டாலும் சுமார்! சுமார்! சுமார்! இதுதானு பதில். ஒரு திட்ட வட்டமான பதில், பட்டு வெட்டினபடி, கரக்டான பதில் வருதா உன் வாயிலே இருந்து. தலை நரைச்சுட்டுது, பார்த்தா பரிதாபமாவும் இருக்குது ஆனு, உன்னுடை போக்கு கொஞ்சம் கூட சரியா, திருப்தியா, தரமா இல்லையே,

“என்ன வயசாகுதய்யா உனக்கு?” “சுமார் ஐம்பத்திரண்டுங்க...” “அதுக்கும் அந்தப்பாழாப்போன சுமார் தானு! பெரிய சனியனுப் போச்சு. எத்தனை கை எத்தனை காலுன்னு கேட்டாக்கூட, சுமார் இரண்டுன்னு சொல்லுவே போல இருக்குது. உன்னுடை மாரடிக்க முடியல்லையா. நெஜமாத் தான் சொல்றேன், நீ என்னுடை பொறுமையை ரொம்பத்தான் சோதிக்கறே. போய்யா, இந்தச் சுமாரு சுமாருன்னு அழுகறதை நிறுத்திக்க. ஆமா, கரெக்டா இருக்கோணும் பதில். தெரியுதா. போ! போ! இந்த மாதிரி கோணமாணலுகளை நான் கட்டி மேய்க்கறதுக்குள்ளே பாதிப்பிராணன் போயிடுது.”

நிலபுலம், தோட்டம் துரவு, துணிக்கடை இவ்வளவுக்கும் மேலாக கோயில் தர்மகர்த்தா வேலை எல்லாம் உருண்டு திரண்டு ஒரு உருவமாகி, வேலாயுதம் பிள்ளை என்ற பெயருடன் அந்த ஊரில் ஒரு பெரிய புள்ளியாக ஒருவர் இருந்து வருவது, விவர மறிந்தவர்களுக்குத் தெரியும். அவருடைய, நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டுமென்று ‘நாய்படாத பாடு’ படுவதாகச் சொல்லிக் கொண்டு, வேலை பார்க்கும் முதியவர்தான், ‘சுமார் சுப்பைய்யா; அப்படி ஒரு சிறப்புப் பட்டமே கட்டிவிட்டார்கள் ஊரார், சுப்பைய்யா எதற்கெடுத்தாலும், சுமாராக-சுமாராக-என்று பேசி வந்த காரணத்தால். அப்படி ஒரு பழக்கம் என்பது அல்ல, அப்படி ஒரு பயிற்சி சுப்பையாவுக்கு. வேலாயுதத்திடம் வேலைக்கு வருவதற்கு முன்பு, சுப்பைய்யா வேலை பார்த்த இடத்திலே ஏற்பட்ட பழக்கம், பயிற்சி. அந்த முதலாளியின் பெயர் முத்துச்சாமி. அவர் ஒரு முறை பசு மாடு வாங்கும் வேலையாக, சுப்பைய்யாவை அனுப்பி வைத்திருந்தார். வேளைக்கு $1\frac{1}{2}$ படி பால் கறக்கும் என்று மாட்டுத் தரகன் சொன்னதை நம்பி சுப்பைய்யா, தன் முதலாளியிடம் கூறியபோது, முதலாளி, ஒரு தடவைக்கு நாலுதடவை கேட்டார், “சரியாச் சொல்லு, $1\frac{1}{2}$படி! வேளைக்கு? அப்படித்தானே! என்று. ஆமாங்க! வேளைக்கு $1\frac{1}{2}$படி கறக்கும்ங்க. நான்தான் சொல்றனே; தெரிஞ்சிதானுங்க சொல்றேன்” என்று விளக்கம்கொடுத்தார்,சுப்பைய்யா. பசு வேளைக்கு $\frac{1}{2}$ படி கறப்பதே ‘உன்னைப்பிடி என்னைப்பிடி’ என்று ஆகிவிட்டது. முதலாளிக்குக் கோபம் தாங்க முடியவில்லை. “ஏய்! சுப்பா! இங்கே வா!” என்று மிரட்டும் குரலில் அழைத்து அருகே வந்ததும், காதைத்திருகியபடி, “வேளைக்கு



1½ படி! 1½ படி! அளந்து பார்த்தவர் போலச் சொன்னயே! போய்ப்பாரு, பசுவோட இலட்சணத்தையும் உன் பேச்சோட அர்த்தத்தையும். சுமார் 1 படி கறக்கும்னு கூடச்சொல்லலியே, 1½-படி. அளந்து பார்த்த ஆசாமி போல அல்லவா சொல்லி என்னை ஏமாத்தினே...'' என்று ஏசினர். அதிலிருந்து சுப்பையா, முதலாளியிடம் பேசும்போது பயந்து, எதற்கும் 'சுமாராக' என்று சேர்த்துப் பேச ஆரம்பித்து, பழக்கமும் பயிற்சியுமாகி விட்டது. அந்த வாடிக்கை, வேலாயுதத்திடம் வேலைக்கு வந்த பிறகு எப்படிப்போய் விடும்? எதற்கும், சுமார்! சுமார்! என்ற இணைப்பு வைத்தே பேசி, முதலாளியின் கோபத்தை அதிகப்படுத்தி விடும் நிலை ஏற்பட்டு விட்டது.

உனக்கு திட்டவட்டமா, சரியாத் தெரிஞ்சா, சொல்லணும், இல்லே, சுமாரா இப்படி இருக்கும்னு சொல்லணும், தெரியுதா?

என்று முன்னுள் முதலாளி பாடம் சொல்லி வைத்தார்; அதுபழக, அதிலே தேர்ச்சிபெற, நாளாயிற்று; ஆனல் அதிலே நல்ல தேர்ச்சி பெற்று அப்படிப் பேசுவது இயல்பிலேயே ஒரு பகுதி என்று ஆகிவிட்ட பிறகு, "அதை விட்டுத் தொலே. எதையும் திட்டவட்டமாக கரெக்டா, சொல்லு'' என்கிருர் புதிய முதலாளி-பத்து ரூபாய் சம்பளம் அதிகம் கூடக் கொடுத்திருக்கிருர்—உறவினர் கூட. ஆனல் அந்த 'சுமார்' என்ற பதத்துடன் சுப்பையா ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு இலேசிலே போக மறுத்தது.

இவ்வளவு சொல்லியும் கூட, அன்று மாலே, முதலாளி, சுப்பையாவைக் கூப்பிட்டுத் தன்னேடு பேசிக்கொண்டிருந்த ஒருவரிடம் காட்டி, "நான் சொன்ன சுப்பையா இவருதான். எனக்கு பெரியப்பா முறை. சொந்தம்தான். எல்லாம் சோளிங்கபுரத்து வழிதான்.'' என்று அவரிடம் கூறிவிட்டு, "ஏன்யா, பையன், உன் மகன், நல்ல அழகு இல்லேயா?'' என்று கேட்டார், சுப்பையா, 'சுமாரா இருப்பானுங்க,'' என்றுதானே பதில் சொல்ல முடிந்தது! வந்திருந்தவர் பத்து ஏகர் பூமிக்கு உடையவர்,—அவர் பெண்ணைத் தர ஏற்ற இடம் தேடி வந்திருக்கும் நேரம்; அப்போதும் அந்த பாழாய்ப்போன 'சுமார்'! "போய் வேலையைக் கவனி...'' என்று முதலாளி, சிறிது பதட்டமாகவே கூறி அனுப்பி விட்டார், அவர், பாவம், சுப்பையா மகனுக்கு, நல்ல இடத்துச் சம்பந்தம் கிடைக்கட்டும் என்ற நல்ல எண்ணம் கொண்டுதான், பேசிக் கொண்டிருந்தார். 'சுமார்' வந்ததே, அவர் திட்டத்தைக் கெடுக்க!!

சுப்பையாவுக்கு, இந்த 'சுமார்' என்ற பதம் பழக்கமாகி விட்டதற்கு வேருேர் காரணமும் உண்டு. உண்மையே பேச வேண்டும். எதையும் சரியாகத் தெரிந்துகொண்டு பேச வேண்டும் என்பதிலே, மிகுந்த அக்கறை சுப்பையாவுக்கு. நமக்கென்ன தெரியும்—நமக்கெங்கே தெரியப் போகுது—என்ற எண்ணம் வேறு. அந்தப்பாவி, மாட்டுத்தரகன் 1½ படி என்று சொன்னுன், சரியா என்று பார்க்காமல், அளந்து காட்டு என்று கேட்காமல், எல்லாம் தெரிந்த மேதாவி போல, ஏஜமானிடம் உளறியதாலேதானே அவருக்கும் நஷ்டம், நமக்கும் கஷ்டம் என்று நினைத்து நினைத்து, எதையும் திட்டவட்டமாகச் சொல்லக்கூடாது என்ற முடிவுக்கு வந்ததன் விளைவு இந்த 'சுமார்.'

வந்தவர் போன பிறகு, வேலாயுதம், சுப்பையாவைக் கூப்பிட்டு "அய்யோவ்! நீ உருப்படமாட்டே. ஆமாம். உன் பிள்ளைக்குப் பெண்தர, பாதிச் சம்மதம் சொன்னுன் சோளிங்கபுரத்தான்-கெட்டதே. உன்னுேட 'சுமார்' வந்து கெடுத்துதே. என்று கூறினர். சுப்பையாவுக்கு வருத்தமாக இருந்தது. ஆனல், மகன் அழகு தான் என்று எப்படிச் சொல்ல முடியும், நம்முடைய கண்ணுக்கு அவன் அழகாகத்தான் இருக்கிருன், முதலாளியோட எண்ணம் எப்படியோ? அதைத் தெரிந்து கொள்ளாமல், நாம் எப்படி திட்டவட்டமாகச் சொல்ல முடியும், அதனுலேதான், சுமாரா இருப்பான் என்று சொல்லி வைத்தேன், கோபிக்கிருர்; நான் என்ன செய்ய! என்று முணு முணுத்தபடி வீடு சென்று, சோகமாகப் படுத்து விட்டார். தன்னைவிட வயதிலே குறைந்தவன்தான் குப்புசாமி, துணிக் கடையில், எவ்வளவு சாமர்த்தியமாக நடந்து கொள்கிருன். அதையுந்தான் அவர் பார்க்கிருர்; பார்த்து? என்ன முயற்சி செய்தாலும் அந்த புத்தி கூர்மை வர மறுக்கிறதே. என்ன செய்வார். நாணயமானவர். அடக்கமானவர். இருந்து? அதோ குப்புசாமியைப் பாருங்கள்,

"ஏம்பா! சாயம் எப்படி?

"நம்ம கடையிலே வந்து, நீங்க இந்தக் கேள்வி கேட்கலாமா!''

அதிர்வேட்டுச் சிரிப்புடன் புடவையைக் காகித உறைக்குள்ளே போட்டு, வந்தவரிடம் கொடுத்துவிட்டு காதின் இடுக்கிலே உள்ள பென்சிலெடுத்து, 17-30 என்று 'பில்' போட்டுக் கொடுத்துவிட்டு மற்றவர்களைக் கவனிக்கிருன்.

"ஏம்பா! சாயம் போகுதே உங்க கடை சேலே!''

"எங்க கடை சேலையிலே குத்தம் கிடையாதுங்க. நீங்க வெளுக்கப்போட்ட இடம் அப்படி இருக்குது, நாங்களா பொறுப்பு அதுக்கு.''

"வெளுக்க எங்கேயும் போடலியே, நாங்களே வீட்டிலேயேதான் தோய்த்துப் பார்த்தோம்''

"என்ன சோப்பு போட்டிங்க?''



"மல்லிமார்க் சோப்புதான்."

"அப்படிச் சொல்லுங்க. நான் திகைச்சிப் போனேன், கெட்டிச் சாயமாச்சே அது எப்படிப் போகும்னு. அம்மா! புடவை விலை போட்டு வாங்குவது மட்டும் போதாது. சோப்பு, தரமானதா இருக்கணும். இருங்க... டேய்! பையா! டேய்! கிட்டு! அம்மாவுக்கு அல்லிமார்க் சோப் ஒரு பெட்டி வாங்கி வந்து கொடு. மூணு ரூபா கொடுங்கம்மா. இதைப் போட்டுப்பாருங்க, சாயம் கக்கு தான்னு"

வந்தவர்கள் திருப்தியாகப் போகிறார்கள். அல்லிமார்க் சோப்புக்கு, குப்புசாமிதான் அந்த ஊர் முழுதுக்கும் ஏஜண்ட்! ஒரே கல், இரண்டு மாங்காய்!!

இதையெல்லாம் பார்க்கிறார் சுப்பைய்யா, ஆச்சரியத்தால் வாய் பிளந்து நிற்கிறாரே தவிர, எப்படி குப்புசாமி இத்தனை 'வித்தை'களை கற்றுக்கொண்டான் என்பதே புரியவில்லை. தனக்கு அந்த 'வித்தை' வராது என்று எண்ணுகிறார்; அதுமட்டுமல்ல, அந்த 'வித்தை' தனக்கு வேண்டாம், அது பாபம், கேவலம் என்றும் எண்ணுகிறார்.

சுப்பைய்யாவின் சுபாவம், அவருக்கு வாழ்க்கையிலே பல கட்டங்களில் தொல்லை கொடுத்தது, ஆனால் ஒரு முறை அவருக்கு ஆபத்தையே உண்டாக்கி விட்டது அந்தச் சுபாவம்.

ஊரிலே பெரிய வம்புக்காரன் சிகப்பன். அவன் ஒருநாள், கடையில் கலகம் செய்து, முதலாளியைத் தாக்கி விட்டான்-அங்கு இருந்த கத்திரி கொண்டு குத்தவும் முயற்சித்தான். வழக்கு நடந்தது. சிகப்பனுக்கு வக்கீலாக வந்தவர், சாட்சிகளை மிரட்டித்திணற அடிப்பதில் வல்லவர்; எப்போதும், அடிதடி, கத்திக் குத்து, தீ வைத்தல் போன்ற வழக்குகளில் அவர்தான் முன்னால் நிற்பார், குற்றவாளிக்கு வாதாட. வெற்றி கிடைக்கிறதோ இல்லையோ, வழக்கு மன்றத்திலே, அவருடைய 'வாண வேடிக்கை' யைப் பார்க்கப் பலர் கூடுவார்கள். சிகப்பன் தாக்கியதற்குச் சாட்சி கூற குப்புசாமி மட்டும் போதும், அவன் சமாளிப்பான்; ஆனால் கலகம் நடந்த தினத்தில், குப்புசாமி, குல தெய்வத்துக்குக் கும்பாபிஷேகம் என்று கோடியூர் போய் விட்டிருந்தான். அன்று கடையில் இருந்தவர்களில் முக்கியமானவர் சுப்பைய்யா. முதலாளி தன் வக்கீலிடம், இந்த ஆளை மட்டும் சாட்சிக்கூண்டிலே போடாதிங்க. உளறிக்கொட்டி, வழக்கைக்கெடுத்து விடுவான் என்று சொல்லி வைத்திருந்தார். சுப்பைய்யாவுக்குங் கூட நிம்மதியாகவே அந்த ஏற்பாடு தென்பட்டது. ஆனால் வழக்கைப்பதிவு செய்த போலீசார், சுப்பைய்யா கடையில் இருந்ததைக் குறிப்பிட்டிருந்தார்கள் சிகப்னுடைய வக்கில் கழுகாசலம், இதை 'மோப்பம்' பிடித்து சுப்பைய்யாவைச் சாட்சிக் கூண்டுக்குக் கொண்டு வந்து விட்டார். நடுக்கம் சுப்பைய்யாவுக்கு

"உம்மோட பேர், சுப்பைய்யா?"

"ஆமாம்"

"எவ்வளவு வருஷமாக வேலை பார்க்கிறீர்"

"சுமார் ஏழெட்டு ஆகுதுங்க..."

"ஏஜமானவர் நல்லவர்-இல்லையா?"

"தங்கம்-தங்கமானவரு..."

"உரக்கச் சொல்லாதய்யா, இது தங்கக் கட்டுப்பாடு காலம்! நல்லவர்."

"ஆமாங்க"

"சம்பளம் போதுமான அளவு கிடைக்குதா?"

"சுமாரா..."

"உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வது பாவமில்லையா?"

"பாவந்தானுங்களே"

"உப்பிட்டவர்களை உள்ளளவும் நினைக்க வேணுமில்லையா?"

"அதுதானுங்களே நியாயம், தர்மம்"

"ஆகையினாலே நீ உன் எஜமானருக்குத் துரோகம் செய்யமாட்டே..."

"மனசு வருங்களா..."

"எஜமானருடைய நன்மை எதுவோ அதுக்கு அக்கறை காட்டுவே?"

"உள்ளதுதானுங்க..."

"அதனாலேதான், இப்ப, உன்னோட எஜமானர் கொடுக்கிற சம்பளத்துக்காக அவர் சார்பிலே, பொய் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன்னு நான் சொல்றேன்"

"அப்படிச் சொல்லாதிங்க...நான் பொய் பேச மாட்டேனுங்க...தெரியாதுங்க...பழக்கமே கிடையாதுங்க..."

"தெரியப்போகுது பார் உன்னோட சொரூபம். சரி. கடையிலே கலகம் நடந்ததாச் சொல்றிங்களே, அப்ப மணி என்ன?"

"மணி வந்துங்க......பனிரெண்டு இருக்கலாம்ங்க...சுமாரா..."

"இதோ பாரய்யா இது கோர்ட். நிஜம் தான் பேசணும். இழுத்துப் பேசறது, மழுப்பறது கூடாது. மணி என்ன?"

"சுமார் பன்னெண்டு"

"சுமார் பன்னெண்டுன்னு ஒரு கணக்கு இருக்குதா. சரியாச் சொல்லுமய்யா, மணி பனிரண்டு அடிச்சுதா, அடிக்க கால் மணி நேரம் இருந்ததா, அடிச்சி அரை மணி நேரமாச்சா..."

"எப்படிங்க அப்படிச் சொல்ல முடியும் ...சுமாரா பன்னெண்டு இருக்கும்"

"கடியாரத்தைப் பார்த்தீரா?"

"இல்லிங்க"

"கடியாரத்தைக் கூடப் பார்க்காம மணி தெரியுதா உமக்கு"

"இலேசா பசி எடுத்துதுங்க அதிலே இருந்துதாங்கச் சொல்றேன், சுமார் 12 இருக்கும்னு"

"ஓஹோ! உன் கடிகாரம் வயத்திலே இருக்குதா. இருக்கட்டும், இருக்கட்டும். கடியாரத்தைப் பார்த்து மணி சொல்லலே?"

"ஆமாங்க"

"ஆகையாலே, கலகம் நடந்த நேரம், மணி, உனக்கு திட்டவட்டமாத் தெரியாது."

"ஆமாங்க."

"உனக்கு திட்டவட்டமாகத் தெரியாத ஒரு விஷயத்தை கோர்ட்டிலே சத்தியம் செய்து கொடுத்துவிட்டுப் பேசறியே, பேசலாமா! போகட்டும். அடிதடி நடந்தது, அப்படித்தானே?"

"வந்துங்க, சிகப்பன், சிகப்பன்..."

"கதாகாலட்சேபம் கூடாது. கேள்விக்குப் பதில். அடிதடி நடந்துதா?"

"நடந்துதுங்க."

"யார், யாரை அடிச்சது?"

"சிகப்பன் எஜமானரைத் தாக்கினரு."

"இரண்டு கையாலேயா ஒரே கையாலேயா?"

"அதைக் கவனிக்கலிங்க. பளார், பளார்னு சத்தம் கேட்டுது."

"கேட்டதும், உமக்குப் பயம் ஏற்படலியா?"

"பயந்தாங்க...உடலே நடுங்கிப் போச்சுங்க...கைகால் ஓடலிங்க...கண்ணை கெட்டியா மூடிக்கொண்டேனுங்க."

"கண்ணை மூடிக்கொண்ட நீ சிகப்பன் தான் எஜமானரை அடிச்சான் என்று எப்படிச் சொல்லலாம்?"

"சத்தம் கேட்டுது..."

"நீ கண்ணுலே பார்த்தயா?"

"இல்லிங்க..."

"சிகப்பன் கத்திரியாலே குத்தவந்தான்னு சொல்றுங்களே..."

"ஆமாங்க......எஜமானரு பதறிக் கூவினருங்க...கத்திரி! கத்திரின்னு"

"கத்திரி! கத்திரின்னு கூவினரே தவிர, சிவப்பன், என்னைக் கத்திரியாலே குத்த வர்ரான்னு சொன்னரா?"

"அப்படிச் சொல்லலிங்க..."

"அந்தக் கடையிலே, மூட்டை தூக்கிப் போடற பையன் ஒருத்தன் உண்டா?"

"மூனுபேருங்க..."

"அதிலே ஒருத்தன்பேர், கத்திரி. இல்லையா?"

"ஆமாங்க..."

"நான் சொல்றேன். உன் எஜமானரு, சிகப்பனை அடிக்க, கத்திரி என்ற வேலையாளைக் கூப்பிட்ட குரல்தான் உன் காதிலே கேட்டதுன்னு, என்ன சொல்றே..."

"நான் என்னங்க சொல்ல முடியும். என் காதிலே, எஜமானர் கூவினது கேட்டுது."

"உன் கண்மூடி இருக்குது—மணி தெரியாது — காதிலே சத்தம் விழுது — இது போதும்னு நினைச்சு சாட்சி சொல்ல வந்து விட்டயா."

"நான் மாட்டேன் மாட்டேன்னு தலைப்பாடா அடிச்சிகிட்டேனுங்க."

வழக்கு சிவப்பன்பக்கம் வெற்றியாகிவிட்டது; சுப்பையாவுக்கு வேலைபோயிற்று. வீட்டிலே, மனைவி, மெத்த வருத்தத்துடன், எதையும் தெளிவாப் புரிந்துகொள்ளணும், திட்டவட்டமாச் சொல்லணும், இப்படி இருந்தாலொழிய யாருங்க உங்களை வேலைக்கு வைத்துக் கொள்ளுவாங்க என்று கூறினள்.

"உண்மைதான் கண்ணுத்தா! புரியுது, பழக்கமாக ணுமே. இனி எதையும் திட்டவட்டமாத் தெரிந்து கொண்டுதான் பேசணும். இனிமேல்பட அதேவேலை தான் எனக்கு. பாரேன்'' என்று தைரியம் கூறினர். அன்றுமுதல், அதே நினைப்பு. அந்த முறையைப் பயில ஆரம்பித்தார். ஆறுமாதத்துக்குப் பிறகு, கார்மேகம் என்பவரிடம் வேலைக்கு அமர்ந்தார்.

"சுப்பையா, போயி பொன்னியம்மன்
கோயில் தெருவிலே இருக்கற கன்னியப்பன்
தரவேண்டிய பாக்கியை வாங்கிகிட்டு, வா''

என்று கார்மேகம் கூறுவார். உடனே, ஒரு சிறு குறிப்புப் புத்தகம் எடுப்பார் சுப்பையா, கடிகாரத்தைப் பார்த்து 10-25 என்று குறித்துக்கொள்வார், கடையை விட்டு இறங்குவார், திரும்பி வருவார். "பாக்கி எவ்வளவுங்க?'' என்று கேட்பார். கடைக் கணக்கப் பிள்ளை, "இங்கே வாய்யா, நீ போன உடனே அவன் கொடுத்துவிடப் போறவன்போல 'கரெக்டா' கணக்கைக் கேட்கறியா! போய்யா, போயி, பாக்கிப் பணம் கொடுன்னு கேள்!'' என்பார். சுப்பையா விடமாட்டார், "இல்லிங்களே. 'கரெக்டா' கணக்கு தெரியணும் பாருங்க. ஏன்னு, என்ன பணம் சேரணும்னு அவன் கேட்டா, நான் சொல்லணுமேல்லோ'' என்பார். கணக்கப் பிள்ளை, ஏட்டைப் பார்த்து 80 ரூபா 60 பைசா என்பார், அதைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக்கொண்டு தான் கிளம்புவார். பாதிவழி போகும்போதே யோசனை வந்துவிடும், பொன்னியம்மன் கோயில் என்று மட்டுந் தானே சொன்னர்கள், வீட்டு எண் கேட்க மறந்து விட்டோமே என்று. பலரை விசாரித்து, வீடு கண்டு பிடிப்பார். முதல் வேலையாக, குறிப்புப் புத்தகம் எடுத்து வீட்டு 'நம்பர்' இன்னது என்று குறித்துக்கொள்வார், உள்ளே உடனே போய்விடமாட்டார், தான் அங்கு வந்ததையும், கன்னியப்பன் வீட்டுக்குள் போனதையும் நாளைக்குத் தேவைப்பட்டால், மெய்ப்பிக்கக்கூடிய முறையில், தனக்குத் தெரிந்தவர் யாராவது வருகிருரா என்று காத்திருந்து, அப்படி ஒருவர் வந்ததும், அவருடைய பெயரை எழுதிக்கொள்வார். அது முடிந்ததும் யாரையாவது கேட்டு, மணி என்ன என்று குறித்துக் கொண்டு, பிறகுதான் உள்ளே போய், கன்னியப்பனைப் பார்த்துப் பேசுவார்,

"நீ கார்மேகத்தோட கடையா?''

"ஆமாம்,''

"கணக்கப்பிள்ளையா?''

"ஆமாம்.''

"பாக்கி வசூல் பார்க்கவந்தயா?''

"ஆமாம்''

"நீ, கார்மேகம் கடை ஆள்தான் என்று
எப்படி எனக்குத் தெரியும். எழுதி இருக்கா உன்
நெத்தியிலே.''

இதற்குப் பதில் சொல்ல, குப்புசாமி அல்லவா வேண்டும்; சரி. இனி, பாக்கி வசூல் செய்யப் புறப்பட்டால், எஜமானரிடமிருந்து ஒரு அடையாளச் சீட்டு வாங்கிக்கொண்டுதான் வரவேண்டும் என்ற முடிவுடன் கடை திரும்புவார்.

இப்படி ஒவ்வொரு விஷயத்திலும், மிக முன்னேற்பாடுடன் நடக்க ஆரம்பித்து, அந்தப் பயிற்சி முற்றி, அது சுப்பையாவின் சுபாவமாக வளர்ந்துவிட்டது. அதன் பலனாக, எந்தக் காரியமும் காலதாமதமின்றி நடப்பதில்லை.

"மத்தவன் சிட்டா பறந்துபோய் காரி
யத்தை முடிக்கருன். நீயும் இருக்கறயே ஒரு
மனஷன், ஆமை மாதிரி. எதுக்கெடுத்தா
லும் விவரம் தெரியணும், ஒரு நோட்டுப் புத்த
கத்திலே குறிக்கணும் — செச்சேச்சே! நீ
உருப்படமாட்டய்யா, ஆமாம்''

என்றுகூறி, கார்மேகமும் சுப்பையாவை வேலையை விட்டு நீக்கிவிட்டார்.

✽

விந்தை நிகழ்ச்சி

ஏலேல சிங்கன் பொருள் ஏழுகடல் போனாலும் திரும்ப அவனிடமே வந்து சேரும் என்ருேர் பழமொழி உண்டு. வின்ஸ்டன் சர்ச்சில் வாழ்க்கையில் இதற்கொப்பான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. அவர் கையைவிட்டுப் போய்விட்ட ஒரு கைக்கடிகாரம் — தங்கத்தால் செய்யப்பட்டது — அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பவும் அவரிடம் வந்து சேர்ந்தது. விந்தை, ஆனல் உண்மை,

1893ம் ஆண்டு, சர்ச்சில் தங்கத்தாலான ஒரு கைக்கடிகாரத்தை பட்டாளத்தில் தன்னுடன் பணியாற்றிவந்த வால்டன் என்பவருக்குப் பரிசாகக் கொடுத்தார்,

வால்டன், சர்ச்சில் கொடுத்த அந்தப் பரிசுப் பொருளை தன் இறுதிநாள் வரையில் வைத்துக் கொண்டிருந்தார் — பெருமையுடன்.

வால்டன் இறந்தபிறகு அந்தக் கடிகாரத்தை, அவன் மனைவி, விற்றுவிட்டாள் — ஏலக்கடை மூலம்.

சர்ச்சில் கொடுத்த கடிகாரம் என்பதால், அதற்கு ஏகப்பட்ட கிராக்கி — சர்ச்சில் உலகப்புகழ் பெற்றவர் என்பதால்.

எனவே. அந்தக் கடிகாரத்தை 420 பவுன் விலை கொடுத்து மாரிஸ் பென்ஜமின் என்பவர் வாங்கினர். இது 1960ல் நடைபெற்றது.

பென்ஜமின், தான் வாங்கிய கடிகாரம் சர்ச்சிலுடையது என்பதை அறிந்து மகிழ்ந்ததுடன், சர்ச்சிலை மகிழ்ச்சிகொள்ளச் செய்யவேண்டுமென்று, அதே கடிகாரத்தை சர்ச்சிலுக்கே! பரிசாகக் கொடுத்தார்,

ஆக 1893ல் கையைவிட்டுப் போன பொருள் 1960ல் மறுபடியும் சர்ச்சிலின் கரத்துக்கே வந்து சேர்ந்தது,

கல்லும் கண்ணாடித் துண்டும்

கோயிலில் கொலு வீற்றிருக்க வேண்டிய நான் குப்பைமேட்டுக்கு வந்து சேர்ந்தேன்—குற்றம் ஏதும் நான் செய்யவில்லை—சிற்பி செய்த குற்றம் என்னை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டது என்துன்பக் கதையைக் கேட்க எந்த மனிதருக்கும் நேரம் இருக்காது — நீயாவது கேள்—உன் கதியும் என் கதிபோல் இருப்பதால் உன்னிடம் சொல்லுகிறேன். கேவலம் ஒரு கல் கதை சொல்வதா அதை நாம் கேட்பதா என்று நீ சொல்லமாட்டாய்—நீ உடைந்துபோன கண்ணடித் துண்டல்லவா! என்னை உடைத்துத் தூளாக்கியதுமல்லாமல், உன் கதையை வேறு கேட்கச் சொல்லுகிருயா? என்ன துணிவு உனக்கு? என்று கோபித்துக் கொள்ளாதே, உண்மையைச் சொல்லுகிறேன், என்மீது ஒரு குற்றமும் இல்லை; உனக்குத் தீங்கு இழைக்க வேண்டுமென்று நான் துளியும் எண்ணியதில்லை. நான் எனக்கு நேரிட்ட கதியை எண்ணி ஏக்கத்தோடு தெருஓரத்தில் கிடந்தேன்; அந்த முரடன் எடுத்து வீசினன் குறி பார்த்து; நீ உடைந்துவிட்டாய்! நடந்தது அது. என்மீது என்ன குற்றம்? என்ருல் உனக்கு இந்தக் கதி நேரிட்டதே என்று நான் உள்ளபடி வருத்தப் படுகிறேன், துயரம் எனக்கும் தெரியும்—எத்தனையோ தொல்லைகளை நான் அனுபவித்திருக்கிறேன்.

நூற்றுக்கால் மண்டபம் கட்ட இந்த ஊரில் ஒரு முயற்சி நடந்தது — உளிகொண்டு சிற்பி தூண்களைச் செதுக்கும்போது எனக்குக் கொள்ளை ஆனந்தம். நாம் கோயிலிலே கொலுவிருக்கப் போகிறேம்; ஆயிரக்கணக்கான மக்கள் நமது அழகைக் கண்டு மகிழப்போகிருர்கள்: பத்திரிகைகளிலே படம்கூடப் போடுவார்கள்; வெளிநாட்டுக்காரர்கள் பார்த்து ஆச்சரியப்படுவார்கள்; படம் எடுத்துக்கொண்டுபோய்த் தங்கள் நண்பர்களுக்கெல்லாம் காட்டுவார்கள்; நமது புகழ் பல நாடுகளிலே பேசப்படும் என்றெல்லாம் எண்ணி எண்ணிக் களிப்படைந்தேன். அந்தக் களிப்புக் காரணமாகத்தான், உளியால் ஏற்பட்ட வேதனையைக் கூடப் பொறுத்துக்கொண்டேன். ஆனல் எனக்கு அந்தப் பாக்கியம கிடைக்கவில்லை. இத்தனைக்கும் நான் ஒரு தவறும் செய்யவில்லை. சிறபியின் உளியின் கூர்மையைத் தாங்கிக்கொண்டுதான் இருந்தேன், அவனுக்கு என்ன மனச்சங்கடமோ தெரியவில்லை, வேலையில் பழுது ஏற்பட்டுவிட்டது; என்னைத் தூக்கிக் கீழே எறிந்துவிட்டு தூண் அலங்காரத்துக்கு வேறு கல்லைத் தேடிக் கொண்டான், தேவாலயத்துக்குச் செலலவேண்டிய நான தெருச்சுற்றியாக்கப்பட்டேன். பல காலம் கஷ்டப்பட்டேன; இளைத்து களைத்து உருமாறிப் போய்விட்டேன். எண்ணிய எண்ணம் ஈடேறவில்லையே என்ற ஏக்கம்; எதற்கும் பயனற்றுப் போனேமே என்ற வருத்தம். என்னேடு இருந்த மற்ற கற்கள் எத்தனையோ மேலான நிலையில் இருக்க நான் இந்த நிலை அடைந்தேன். நாமென்ன தவறு செய்தோம் நமக்கு இந்தக் கதி ஏற்பட என்று எண்ணிக்கொள்வேன், யாரிடமாவது கூறலாம் என்று ஆவல் ஏற்படும்; ஒரு கல் சொல்வதைக் கேட்க யாா முன்வருவார்கள், துக்கத்தை அடக்கிக்கொண்டு, தேவாலயத்தில் கொலுவிருக்கும் நிலை கிடைக்காவிட்டாலும் வேறு ஏதாவது ஒரு தகுதியான நிலை, நாலுபேர் பார்தது மெச்சக்கூடிய நிலை கிடைக்காதா என்று ஆவலுடன் சந்தர்ப்பத்துக்காகக் கார்த்துக் கிடந்தேன். வெகுகாலத்திற்குப் பிறகு ஒரு வாய்ப்புக் கிடைத்தது, நல்ல வாய்ப்புத்தான் நாட்டிலே ஏதோ ஐந்தாண்டுத் திட்டம் போடுகிருர்களாமே. அதனுலே எனக்கு ஒருவாய்ப்பு கிட்டிற்று. ஊரிலே உள்ள பெரிய மனிதர்கள், படித்தவர்கள், ஆட்சியிலே உள்ளவர்கள் இவர்களெல்லாம் சேர்ந்து பாதை ஒன்று புதிதாகப் போட்டார்கள், சாதாரணமாக, பாட்டாளிகள் பாதை போடுவார்கள்—எட்டணு ஒரு ரூபாய் கூலி வாங்குபவர்கள். அப்படிப்பட்டவர்கள் அல்ல என்னைத் தொட்டு எடுத்தவர்கள்! அதிலும் என்னைத் தொட்டு எடுத்தவர், தம்முடைய கைவிரலில் இருந்த வைர மோதிரங்களை முன்னெச்சரிக்கையாகக் கழற்றி பத்திரப் படுத்திக்கொண்டு என்னைத் தொட்டு எடுத்தார், போட்டோ கூட எடுத்தார்கள்! புதிய பாதையில் நான் இடம் பெற்றேன். மந்திரியே வந்திருந்தார் பாதையைத் திறக்க! புதிய புதிய மோடார்கள், ஊர்வலம்! மேளக்கச்சேரி! பூமாரி! பெரிய கொண்டாட்டம்! கோயிலிலே இடம் கிடைக்காவிட்டால் என்ன! அங்கு என்ன பக்தர்கள் மட்டுமா வருகிருர்கள்! பக்தர்களை விடப் பகல் வேடக்

காரர் அல்லவா அதிகம்; அதைவிட அதிக அளவில் வௌவால்களல்லவா வட்டமிடுகின்றன; அப்படிப்பட்ட இடத்திலே இருப்பதைவிடமந்திரிகளும், ராஜதந்திரிகளும், மிராசுதார்களும், மிட்டாதாரர்களும், பட்டம் பெற்றோரும் பதவி வகிப்போரும் நடமாடி பாராட்டிடும் இடமல்லவா கிடைத்தது என்றெண்ணி மகிழ்ச்சி அடைந்தேன், கர்வம் என்றுகூடச் சொல்லலாம். இந்த மகிழ்ச்சி நீடித்ததா— அதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா! பெரிய பெரிய தலைவர்களுடைய பாராட்டுதல் பெற்ற அந்தப் பாதை மூன்றே மாதத்தில் பழுதாகிவிட்டது, முத லில் பாதையை விட்டு வெளியே கிளம்பியது நான்தான்! என்மீது தவறு இல்லை, என்னைச் சரியானபடி அழுத்தி வைக்கவில்லை; பாதை போட்டவர்கள்; படம் எடுக்கிறார் களா, படம் எடுக்கிறார்களா என்று பார்த்துக்கொண்டிருப் பதிலே காட்டிய அளவு அக்கரை, போதுமான அளவு பள்ளம் தோண்டினோமா, போடவேண்டிய அளவு மண்ணைப் போட்டோமா, அழுந்தவேண்டிய அளவு அழுத்தி விட்டோமா, கல் சரியாகப் பதிந்ததா வெளியே வந்து விடாதபடி பக்குவம் செய்திருக்கிறோமா என்பதிலே அக்கரை காட்டவில்லை, பாவம், அவர்கள் பாதை போட்டுப் பழக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களுக்கு மிட்டா மிராசு, கோர்ட்டு கோட்டை, கடைகண்ணி, இவைகளிலே பழக்கம்! ஐயாயிரம் செலவிட்டுப் போடவேண்டிய பாதையை இரண்டு ஆயிரம் ரூபாய் செலவில் போட்ட 'பெருமை'யைப் பெற்றார்கள். இரண்டே மழைக்கெல்லாம் நான் வெளியே கொண்டுவந்து விடப்பட்டு விட்டேன். இருந்த இடமும், கிடைத்த நிலையும் போய்விட்டது; மறுபடியும் ஊர்சுற்றி ஆக்கப்பட்டுவிட்டேன். நீயே சொல்லு! இதிலே நான் செய்த குற்றம் ஏதாவது இருக்கிறதா? உதைபட்டேன், வீசி எறியப்பட்டேன், மழைத் தண்ணீரால் உருட்டப்பட்டேன்; யாரிடம் சொல்லி என் குறையைப் போக்கிக்கொள்ள முடியும்; படாத பாடுபட்டுக் கொண்டு பக்கிரியாகிக் கிடந்தேன். பல நாட்கள், கோயிலிலும் இடம் கிடைக்கவில்லை, ஆட்சிக் கொலு இருப்போர் அமைத்த பாதையிலும் இடம் இல்லை; நமக்கு இனி என்னதான் கதிஎன்று ஏங்கிக் கிடந்தபோது, என்னையும் என் போன்ற வேறு கற்களையும் குவித்து, சேறு போட்டுக் குழைத்து, ஒரு குடியானவன் தன் தோட்டத்துக் குடிசையின் மண் சுவற்றில் ஏற்பட்டுப் போயிருந்த வெடிப்புக்குப் போட்டு அடைத்தான், முதலிலே வருத்தமாகத்தான் இருந்தது. கோயிலில் கொலுவிருக்க எண்ணினோம். கடைசியில் குடிசைக்கு வந்து சேர்ந்தோம்; இதுதானா நமக்கு வாய்த்த இடம் என்று துக்கபபட்டேன். பிறகு நானாக மனதைத் தேற்றிக்கொண்டேன். கோயிலாகட்டும் கோட்டையில் கொலுவிருக்கும் மந்திரிகளாகட்டும், குடிசைகளில் உள்ள ஏழை மக்கள் கொடுக்கும் காணிக்கை, வரிப்பணம் இல்லாமல் வாழ முடியுமா, வளர முடியுமா! ஆகவே எல்லாவற்றுக்கும் ஆதாரமாக விளங்கும் ஏழையின் குடிசையிலே இடம் பெற்று இருப்பது, உண்மையான மேல்நிலையாகும் என்று நினைத்துக்கொண்டேன். மனதுக்கு ஒரு நிம்மதிகூட ஏற்பட்டது. ஆனால் அந்த மகிழ்ச்சியும் நிம்மதியுமாவது நிலைத்ததா என்றால் அதுதான் இல்லை, அந்த உழவன் மாடாக உழைத்து ஓடாகிப் போனான், ஆனால் வாழ முடியவில்லை; வறுமை; உழவுச் செலவுக்குப் பட்ட கடனைக் கூடத் திருப்பித் தர முடியாத நிலை ஏற்பட்டு ஊரைவிட்டே ஓடிவிட்டான், பட்டணத்திலே கூலி வேலை செய்து வயிற்றைக் கழுவ! நான் அனாதையானேன், குடிசையைக் கவனிப்பார் இல்லை; கலனாகிவிட்டது; மறுபடியும் வெடிப்பு ஏற்பட்டு விட்டது; நான் வெளியே வந்துவிட்டேன்; மறுபடியும் பலருடைய காலுக்குப் பந்தானேன். உலகத்தின்மீதே கோபம் கோபமாக வந்தது. ஒரு குற்றமும் நாம் செய்யவில்லை; சிற்பியின் கவனக் குறைவால் கோயிலில் இடம் பெற முடியாமல் போயிற்று; பாதை போடத் தெரியாதவர்களிடம் சிக்கியதால் பாதையில் நிலைத்து நிற்க முடியாமல் போய்விட்டது; உழவனை வாழவைக்க அரசாள்பவர் தவறிவிட்டதால் குடிசையில் இருந்த இடமும் போய் விட்டது—இனி நாம் பயன்படுவதானால் கொடுமையை ஒழிக்க அக்ரமத்தை அடக்க இப்படி ஏதாவதொரு நல்ல காரியத்துக்குப் பயன்படவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் நானே ஒரு கல்! நானாக ஒரு காரியமும் செய்ய

எமது வாடிக்கைக்காரர்களுக்கும், பொதுமக்களுக்கும்

எனது பொங்கல் வாழ்த்து

வாலிப வயது, மணவாழ்க்கைக்கு ஏற்ற வயது வந்தும் நாம்ஏன்? சகலவற்றிலும் வெறுப்பும், பலஹீனமும், சோர்வும், தளர்ச்சியும், உணர்ச்சியற்றும், திரேகம், முகம் அவயவங்கள் மாறுதல்களும். கண் எரிச்சல், கண் பார்வை குறைந்து வருவதும், தலைவலி, இருமல், இளைப்பு, இடுப்பு, முதுகுவலி, ஞாபக மறதி, தூக்கமின்மை, அதிக தூக்கம், பசி யில்லாமை; மலச் சிக்கல், மனதில் பயம் வெட்கம், சோம்பல், மணவாழ்க் கைக்கு பெற்றோர்கள் முயற்சித்தும் எனக்கு இப்போது கல்யாணம் வேண்டாம் என்று சொல்வதும்,, ஒரு சிலர் பெற்றோர்களின் வற்புறுத்த லின் பேரில் மணம் செய்துகொண்டு, இல்லறத்தில் ஈடுபட முடியாமல், மனைவியின் வெறுப்பைப் பெற்று வருபவர் களும், நம்முடைய பலஹீனம் இப்படி இருக்கிறதே என்று சிந்திக்காமல் நம் மனைவி ஏன், நம்மீது வெறுப்பாக நடந்துகொள்ளுகிறார்கள், என்று தன் மனதில் தப்பு எண் ணம் உண்டாக்கிக் கொள்பவர்களும், நம் சமுதாயத்தில் நிறைய இருந்து வருகிறார்கள்.

இதன் காரணம் என்ன? எதனால் இப்படி வாழ்க்கையில் பலஹீனம் ஏற்பட்டது என்பதைத் தெரிந்தவர்களும், காரணம் தெரியாதவர்களும் அதிகம் இருக்கிறார்கள்.

இப்படி பலஹீனப்பட்டவர்கள், சிகிச்சைக்காக ஓரிரண்டு மாதங்கள் மருந்துகள் உபயோ கித்தவுடன் குணமாகிவிடாது, என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

தமக்கு ஆரம்பத்தில் எப்படி கொஞ்சம் கொஞ்சமாக திரேகத்திலுள்ள சக்தி வெளியாகி வர வர வருஷ கணக்கில், எப்படி எப்படியோ மாறி, கடைசியாக திரேகம் ஒரே கொதிப்படைந்து, எவ்வளவு நல்ல ஆகாரங்களோ, டானிக்குகளோ சாப்பிட்டாலும் சக்தி பெருமல் உறுப்புகள் தளர்ச்சி யடைந்து மனதை சங்கடப்படுத்தி வருகிறதே அந்தக் காலத்தை நினைத்துப் பார்க்கவேண்டும்.

அப்போதுதான் சிகிச்சைக்குரிய நீண்டநாள் (சில மாதங்கள்) சிகிச்சையைப் பற்றி உணர்ந்து, சிகிச்சை பெற மனது திருப்தி அளிக்கும்.

குறிப்பு :—மேலே சொன்ன காரணங்களை நன்ருகப் படித்துப் பார்த்து. மனதில் திருப்தி கொண்டவர்கள் மட்டும், என்னிடம் சில மாதங்கள் சிசிச்சை பெற்று, மீண்டும் வர்ழ்க்கையில் வெற்றி பெற விரும்புபவர்களை மட்டும் அழைக்கிறேன். தொடர்பு கொள்க.

---

1 மாதம் உபயோகிக்கும் மருந்துகள்.

ஸ்பெஷல் செட்	1 நெ. செட்	2 நெ. செட்	போஸ்டேஜ் (ரூ. 4-00)
ரூ. 45-00.	ரூ. 35-00.	ரூ. 25-00	தனிச் செலவு:

-: நேரில் சந்திங்குமிடங்கள் :-

பிரதி ஆங்கில மாதம்		
1-ந் தேதி 2 ,, 3 ,, 4 ,,	சென்னை :	ராமச்சந்திரா லாட்ஜ் (போன் : 83353) 6 அத்திப்பட்டன் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை 2. (P. O. R. R. & சன்ஸ்) பெட்ரோல் பங்க் சமீபம்.
9-ந் தேதி 10 ,,	திருச்சி :	அசோக் பவன் (போன் : 383) ஜங்ஷன் சமீபம். காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.
11-ந் தேதி 12 ,, 13 ,,	கோவை :	மனோகரா லாட்ஜ் (மேல்மாடி) (ஐந்துமுக்கு) ராஜவீதி, போன் 3278) காலை 7 மணி முதல் இரவு 8 மணிவரை.
17-ந் தேதி 18 ,, 19 ,,	சேலம்:	ஹெட்டாபீஸ்:- சிவராஜ் சித்த வைத்தியசாலை. (சேலம் To சித்தர்கோயில் வழி) ஊர்: சிவதாபுரம் காலை 7 மணி முதல் மாலை 4 வரை.
21-ந் தேதி 22 ,, 23 ,,	மதுரை:	மணீஸ் கேப் 5, டவுன்ஹால் ரோடு மதுரை காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை.

கேட்லாக் இலவசம் எழுதவும்

ஹெட்டாபீஸ்: சிவராஜ் சித்த வைத்தியசாலை, சிவதாபுரம் P. O, சேலம்-2.



முடியாது, என்னைத் தக்கவிதத்தில் பயன்படுத்த, தக்கவர் வரவேண்டும், வருவார், வருவார் என்று தவம் கிடந்தேன்! வந்தான் பனிரெண்டு வயதுச் சிறுவன் ஒருவன், "ஐயோ! பாம்பு; பாம்பு! என்று அலறியபடி என்னை எடுத்துக் குறிபார்த்து பாம்பின்மீது வீசினான். துள்ளி விழுந்தது பாம்பு—அசையவில்லை, எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஒன்றுக்கும் உதவாதது என்ற கெட்ட பெயர் இனிஇல்லை! அக்ரமத்தை ஒழிக்கப் பயன்பட்டோம்—பாம்பு செத்தது—நம்மால்! — நம்மாலான உதவியை உலகத்துக்குச் செய்தோம் என்ற மகிழ்ச்சி: பெருமைகூட! அந்தச் சிறுவனும் மகிழ்ச்சியால் துள்ளினான். "பெரியப்பா! பெரியப்பா என்று கூவினான்; ஒரு முதியவர் வந்தார். "பாரு! பாம்பு! கல்லாலே அடித்தேன்! செத்துப் போச்சி! பெரிய பாம்பு! அதோ, அந்தாலே! வேலிப் பக்கம்'" என்று கூவினான். பெரியவர் 'கடகட'வெனச் சிரித்தார், சிறுவன் முதுகைத் தட்டிக் கொடுத்து "அட என் சூரப்புலி! அதோ அந்த கட்டுவிரியனைத்தானேடா சொல்றே. அட என் சிங்கக் குட்டி' அதை நான் ஒரு அரை மணி நேரத்துக்கு முந்தி, கைத்தடியாலே ஒரு தட்டு தட்டிக் கொண்ணு போட்டு தூக்கி எறிஞ்சேன். செத்துப் போன பாம்பை நீ சாகடிச்சயா!!" என்று சொல்லி, மேலும் சிரித்தார், சிறுவன் வெட்கிப்போனான்—அவன் மட்டுமா! எனக்கே வெட்கமாகிப் போய்விட்டது. ஒரு நல்ல காரியமாவது செய்து முடித்தோம் என்று திருப்திப்பட்டோம்; கடைசியில் பார்த்தால் பாம்பு நம்மாலே சாகவில்லை; செத்த பாம்பின்மீது நாம் விழுந்தோம்; அவ்வளவுதான்; என்பது தெரிந்தது. எனக்கு அந்தப் பாம்பை பார்க்கக்கூடப் பிடிக்கவில்லை. கேவலமான நிலை ஏற்பட்டுவிட்டதே என்று எண்ணி மெத்த வருத்தப்பட்டேன். பலநாள் கழித்து நான் இருந்த இடத்தில் ஒரே பரபரப்பு; போலீசாரின் நடமாட்டம்; அதிகாரிகளின் கண்ணோட்டம்; உழவர்கள் கூட்டம் உழவர்களுக்கும் மிராசுதாரருக்கும் பெரிய தகராறு மிராசுதாரர் தம்முடைய மூன்றாவது மகளுடைய திருமணத்துக்காக வைர நகைகள் வாங்கி வரச் சென்றாராம். அந்தக் காரியத்தை முடித்துக்கொண்டு கிராமம் வந்திருக்கிறார். உழவர்கள் பட்டினி—விளைச்சல் சரியில்லாததால். பணம் கேட்கப் போயிருக்கிறார்கள், முடியாது, கிடையாது என்று சொல்லி இருக்கிறார். உழவர்களில் ஒருவன், 'இதற்கெல்லாம் கிடைக்குமா! வைர நகை வாங்கப் பணம் கிடைக்கும் என்று பேசிவிட்டான், அவனைக் கட்டி வைத்து அடித்து விட்டார், மிராசுதார். உழவர்கள் திரண்டு விட்டார்கள், படை எடுப்பதுபோல. ஊருக்கே ஆபத்து என்று மிராசுதார் சேதி அனுப்பவே போலீஸ் படை வந்துவிட்டது. போலீசுடன் மோதிக்கொள்ளக் கூடாதுஎன்று உழவர்கள் ஒதுங்கிக்கொண்டார்கள், அமைதி நிலவிற்று மிராசுதாரருக்கு இது பிடிக்கவில்லை. பயல்களுக்குச் சரியான பாடம் கற்பித்தாகவேண்டும்; என்று திட்டமிட்டார். அதன்படி அவருடைய 'எடுபிடி' ஒருவன் போலீசார் தங்கி இருந்த இடத்தின்மீது கற்களை வீசினான். அந்தப்பாவியிடம் முதன் முதல் சிக்கியது நான்தான்; இரும்புத்தொப்பி மீது விழுந்தேன், போலீஸ்காரர் தலைமீது கூட அல்ல, போலீஸ் பதறிற்று, ஊதுகுழல் சத்தம் கிளம்பிற்று, குடிசைகளுக்குள் நுழைந்தார்கள். தடியடி துப்பாக்கி, எல்லாம் ஒரு மணி நேரத்தில் ஊரே அமளிதுமளி, போலீசார் மீது கற்களை வீசிக் கலகம் செய்ததாக பல உழவர்கள் கைது. வழக்கு நடந்தது வீசப்பட்டக் கற்கள் வழக்கு மன்றத்தலைவர் முன்பு வைக்கப்பட்டன. நானும் இருந்தேன். என்னை அவர் தொட்டுக்கூடப் பார்த்தார்! உழவர்கள்தான் என்னை எடுத்து போலீஸ் மீது வீசினார்கள் என்று சொல்லுகிறார்கள். என்னை எடுத்து வீசியவனோ மிராசுதாரனின் அடியாள்! தெரியும் எனக்கு! சொல்ல முடியுமா! அவ்வளவு பெரியவர்கள், கேவலம் ஒருகல் சொல்லுவதையா கேட்டுக் கொண்டிருப்பார்கள்!! கல் உருவில் இருக்கும் கடவுளே, பேசுவதில்லையே! நானோ வெறும் கல்! கோயிலுக்குக்கூடப் பயன்படாத கல்!!

மிராசுதார் பக்கம் பேச வந்த வக்கீல் பெரிய பெரிய படிப்பெல்லாம் படித்தவராம்... ஆயிரம் ரூபாயாம்

அவருக்கு! அவருடைய பேச்சு எடுபடுமா, ஒரு கல்லுடைய பேச்சு செல்லுமா!! வாய் மூடிக்கிடந்தேன். பலர் தண்டிக்கப்பட்டார்கள். என்னைப் போலத்தான் அவர்களும்! செய்யாத குற்றத்துக்காகத் தண்டனை. அக்ரமம் நம் கண்முன்னாலே நடக்கிறது. தடுக்க முடியவில்லையே, நியாயத்துக்காக வாதாட முடியவில்லையே என்று நான் எண்ணி துக்கப்பட்டு என்ன பலன். நானாவது கேவலம் கல். பெரிய பெரிய மனிதர்கள், படித்தவர்கள், இந்த அக்ரமம் நடப்பதைப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார்கள். அவர்களாலேயே அக்ரமத்தைத் தடுக்க முடியவில்லை என்றால் நான் என்ன செய்ய முடியும் சிறு கல்!

இனி எக்கேடு கெட்டாலும் சரி என்று எண்ணிக் கொண்டேன். அவ்வளவு வெறுத்து விட்டது, வாழ்க்கை. மறுபடியும் தெருச் சுற்றியானேன். இனி ஒரு நல்ல நிலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்து விட்டேன். இந்த உலகில் நல்லவர்களுக்கு இடம் இல்லை என்று கண்டு கொண்டேன். யார் எடுத்து எங்கே வீசினாலும் அங்கே விழுந்து கிடப்பது என்றாகி விட்டது என் நிலை,

இந்தச் சமயத்தில்தான் ஏதோ காட்டுக் கூச்சல் போட்டுக்கொண்டு ஒருவன் ஓடிவந்தான். பலர் அவனைத் துரத்திக்கொண்டு வந்தார்கள். பைத்தியம்! பைத்தியம்! என்று கூவினார்கள். பாவம்! என்னென்ன தொல்லைகளைக் கண்டவனோ. எந்தத் தொல்லையால் அவன் மனம் குழம்பி விட்டதோ, யார் கண்டார்கள். திடீலென்று அவன்தான் என்னை எடுத்தான். இந்த வீட்டின் மீது வீசினான், ஜன்னல் திறந்திருந்ததால் நான் நேராக உன்மீது வந்து விழுந்தேன்; நீ சுக்குநூறாகிவிட்டாய். நடந்தது இது. என்மீது கோபித்துக்கொள்ளாதே என்னை இந்த உலகம் இந்தக்கதிக்கு கொண்டு வந்து சேர்த்துவிட்டது. நான் ஒருகுற்றமும் செய்ததில்லை. என்னை மன்னித்துவிடு! உனக்கு ஆத்திரமாக இருந்தால் என்னை ஏசுவதாக இருந்தாலும் ஏசு, நான் பொறுத்துக்கொள்கிறேன். எத்தனையோ இழிவுகளை, தொல்லைகளைத் தாங்கிக் கொண்ட எனக்கு நீ மனம் நொந்து நாலு வார்த்தை பேசுவதைத் தாங்கிக்கொள்வது கடினம் அல்ல எதற்கும் என் கதையைச் சொல்லிவிட்டேன். இரக்கம் காட்ட முடியாவிட்டாலும் என்னைப் புரிந்து கொண்டாலே போதும் நான் கொடுமை செய்பவன் அல்ல— கொடுமைக்கு ஆளானவன்!





கல், தன் கதையைச் சொல்லி முடித்ததும், கண்ணாடித்துண்டு, பரிதாபத்தோடு கல்லைப் பார்த்து,

“உண்மையிலே எனக்கு உன்மீது கோபம் இல்லை. நான் உடைபட்டு துண்டு துண்டாகப் போனது பற்றி எனக்கு வருத்தம் கூட இல்லை. ஒருவிதத்தில் சொல்லப்போனால் நான் உடைபட்டு துண்டு துண்டாகிப் போவதுதான் முறை. எனக்கு என் வாழ்க்கையே வெறுத்துவிட்டது. இனி இருக்கக்கூடாது என்று நான் எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில் உடைத்தெறிந்து விட்டாய். உனக்கு நன்றிகூடக் கூறவேண்டும்” என்று சொல்லிற்று.

கல் திகைத்தது! “இவ்வளவு வெறுப்பு உனக்கு ஏற்படக் காரணம் என்ன? நான் காடுமேடு கிடந்தவன், கலக்கமடைந்தேன். நீயோ மாடி வீட்டில் இருக்கிறாய்; மேனி மெருகுடன் வாழ முடிகிறது. உனக்கு இத்தனை வெறுப்புக்குக் காரணம்? என்று கேட்டது. கண்ணாடித்துண்டு, ‘ஒரு குறைவுமின்றித்தான் நான் வாழ்ந்து வந்தேன். பதினெட்டு வயதுப் பாவை, பத்தரைமாற்றுத் தங்கம் உடல், உள்ளம், இரண்டும்; எப்போதும் கலகலப்பான சிரிப்பு அப்படிப்பட்ட சட்டழகிக்குத் துணையாக இருந்துவந்தேன். ஒருநாளைக்கு இருபது முறையாவது அந்தப்பூங்கொடியாள் என எதிரேநிற்பாள். முகத்துக்கு ‘பவுடர்’ போதுமா? நெற்றிக்குப் பொட்டு சரியாகஇருக்கிறதா? புருவத்துக்கு‘மை’ அளவாகஇருக்கிறதா? என்று என்னிடம் வந்துதான் தெரிந்துகொள்ளுவாள். புதுச்சேலை கட்டிக்கொண்டால் முதலில் என்னைத்தான் வந்து பார்ப்பாள். அவ்வளவு அன்பு என்னிடம். எனக்கும் அவளுக்கும் அவ்வளவு நேசம். அப்படிப்பட்ட பொற்கொடியாள் என்ன கதி ஆகிவிட்டாள் தெரியுமா! நான் கண்ணாடி! நீயோ, கல்! நமக்கு நேரிட்டுவிட்ட சதியை எண்ணிக் கலக்கமடைகிறோம் நீ கதையே சொல்லிவிட்டாய். அந்தக் காரிகையோ பூவிழந்தாள், புன்னகை இழந்தாள், பொட்டிழந்தாள். எந்தக் கண்கள் மலர்போல் இருந்தனவோ அவைகளிலிருந்து இரத்தக் கண்ணீர் குபுகுபுவென வழிகிறது இளமையையும் அழகையும், அலங்காரத்தையும் அகமகிழ்ச்சியையும் கண்டு கண்டு களிப்படைய நான் அவளுக்குத் துணையாக இருந்தேன். அப்படிப்பட்ட நான், அவளுக்கு அவளுடைய விதவைக் கோலத்தை, வேதனையை எடுத்துக் காட்டும் செயலை, எப்படிச் செய்ய மனம் ஒப்புவேன், துள்ளிக் கொண்டு

வந்து நிற்பாளே நம் எதிரில் அந்த மான் விழியாள். இனி அவள் வருவாளா, வந்து என் எதிரே நின்ருல் மனம் என்ன பாடுபடும்...

அழகை எடுத்துக் காட்டி வந்த நான் அவதியைக் காட்டவா இனி இங்கு இருக்கவேண்டும். கூடாது! கூடாது! என்று எண்ணி வேதனைப் பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளை என் வேதனையை நீக்கவே வந்தது போல, நீ வந்தாய், நான் உடைபட; சிதறுண்டு போக! மணளனைப் பெற்று மகிழ்ந்திருந்த அவளுக்கு நான் தேவையாக இருந்தேன், அவளோ விதவையானள்—இனி அவளுக்கு நான் ஏன்! விதவை இருக்கும் இடத்தில் இருந்துகொண்டு. அவள் சிறுமியாக, கன்னியாக, மணப் பெண்ணுக, மணளனை முதன் முதல் சந்தித்தபோது, வெட்கித் தலைகுனிந்த பாவையாக......இப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் கண்டுவந்த நான், அவள், இளைத்து, கருத்து, ஏங்கி பெருமூச்செறிந்து, கண்ணீர் வடித்துக் கலங்கும் நிலையைக் காணவும் வேண்டுமா! காட்டவும் வேண்டுமா! வேண்டாம்! வேண்டாம்! உடைந்து போனது தான் முறை! என் வாழ்க்கை முடிந்து விட்டது-அதுவே நான் விரும்பியது-எனக்கு நீ பெருத்த உதவிதான் செய்திருக்கிருய்" என்று சொல்லிற்று.

கல், ஏதும் பதில் பேசமுடியாத நிலையில் திகைத்துக் கிடந்தது.

வீட்டுப் பெரியவர் வேலைக்காரியை அழைத்து, "என்ன செய்வது! அப்படிப்பட்ட மாப்பிள்ளையே போய் விட்டான். இந்த நிலைக்கண்ணுடி போனதுதாஞ பிரமாதம்; கூட்டி எடுத்துக் கொண்டுபோய், சாக்கடைக் குழியிலே போடு" என்ருர்.

கல்லும் கண்ணுடித் துண்டும் சாக்கடைக் குழியிலே போடப்பட்டன

எமது இதயம் கனிந்த

பொங்கல் வாழ்த்துக்கள்

MAMALLAN HOUSE BUILDING CO-OPERATIVE SOCIETY LTD. No. G. 2085

தமிழனின் தனிப்பெரும் திருநாள்
தைப் பொங்கலன்று
தமிழ்ப் பெருமக்களுக்கு
எங்கள் உளங்கனிந்த
வாழ்த்தும் வணக்கமும்
உரித்தாகுக!

கண் பார்வைக்கும் கண் குளிர்ச்சிக்கும்
உயர்ந்தரக கண், கண்ணாடிகள்
தற்காலத்திற்கேற்ற நவ நாகரீக
நவீன பிரேம்களுடன் மலி
வான விலையில் கிடைக்கும்

ராமன் ஆப்டிகல் அவுஸ்
(அப்பா பில்டிங்ஸ்)
286, சைனாபஜார்,
சென்னை-1

Actual users

Holding import licences

For newsprint & Other Papers

Contact:

THE SOUTH INDIA PAPER IMPORTING CO

67 PHILIPS STREET MADRAS 1

for their requirements

★

AGENTS FOR SOUTH INDIA

OF

AKTIEBOLAGET JAN LIEBIG LTD.,

SWEDEN

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால்
அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.

465

தமது
வெள்ளி விழா வருடத்தில்

ஜெமினி

தமிழ் நாட்டுக்கு அளிக்கும்
மகத்தான தமிழ் சித்திரம்

வாழ்க்கைப் படகு

கூடிய சீக்கிரம் வெளிவருகிறது



நாகிரெட்டி - சக்ரபாணி
அளிக்கும்

விஜயா
கம்பைன்ஸ் புரொடக்ஷன்ஸ்

எங்க வீட்டுப் பிள்ளை

ஈஸ்ட்மென் கலர்

ELEGANT

டைரக்ஷன் சாணக்யா